கல்கி

KALKI 5-8-79
75 காசு



ஆண்டு மலர்

Welcome to the Stereo Super Market

Unbeatable HMV sound technology now brings you the finest range of integrated stereo systems at the fairest prices.



HMV SONIC IV TUNER



COMPLETES YOUR SOUND SYSTEM

A solid state 4-Band tuner that plays through your amplifier and speakers for better and clearer radio reception.

HMV STEREO 3131 SUPERTRACK
60 watts stereo power. Separate amplifier with controls for balance, bass, treble and volume. Rumble, scratch and presence selectors. Tape in/tape out. Tuner input.

HMV STEREO 1010
12 watts stereo power. Separate controls for balance, volume, bass and treble. Separate sockets for tuner and tape input. Auto-stop.

HMV STEREO 1515
30 watts stereo power, controls for balance, volume, bass and treble. Push-button input selection—pres. aux. tuner. tape. phono. Precision counter-balanced pick-up arm and superior turntable with autostop. Special headphone socket.

HMV STEREO POPULAR II
5 watts stereo power. Separate controls for balance, tone and volume. Convenient tape-out DIN socket.

HMV STEREO SYSTEMS

EMI

HMV

His Master's Voice

We know how to make sound sound best

புன்னகை அரசிக்குப் பிடித்த புன்னகைகள்!

காற்றுக்கும் தென்றலுக்கும் எப்படி வித்தியாசமிருக்கிறதோ, அது போலச் சிரிப்புக்கும் புன்னகைக்கும் வித்தியாசம் உண்டு.

புன்னகையா, இல்லை வெறும் இதழ் விரிப்பா? இந்தச் சர்ச்சை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஒரு சாரார் அது புன்னகை தான் என்று அழுத்தமாய்ச் சொன்னார்கள். மற்றொரு சாரார் இல்லை என்றார்கள். எனக்கென்னவோ அதைப் புன்னகை இல்லை என்று சொன்னாலே கோபம் வரத்தான் செய்கிறது. ''மோனலிஸா'' வின் புன்னகை உலகப் பிரசித்தி பெற்றது.

பொக்கைவாய் புன்சிரிப்புக் காந்தித்தாத்தா
பொன்னுருக்கு வார்த்த மேனி காந்தித் தாத்தா

என்று ஒரு கவிஞர் பாடினார். நமது தேசத் தந்தை காந்திஜியின் சிரிப்பில் மயங்காதவர் இருக்க மாட்டார்கள். கள்ளமில்லாத புன் சிரிப்பு. ஒடிசலான உருவம், நடப்பதிலே தனி வேகம், கண்களிலே ஒரு தீட்சண்யம். இவை எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்தது அந்தச் சிரிப்பு!

பெண்களே அழகு. அவர்கள் கண்களிலே அழகின் தெளிவு. இந்த அம்சங்களுடன்


நர்கிஸ்


மோனலிஸா


கார்ட்டர்


காந்தி


எம்.ஜி.ஆர்.


ஹேமலதா


கே.ஆர். விஜயா



காலமெல்லாம் காத்திருப்பேன்

''ஏண்டா கோபு! தையற்கடையிலே போய் என் ஷர்ட்டை வாங்கிக் கொண்டு வந்தாயா?''

''போனேன் அப்பா! 'கூலியைக்கொண்டு வந்தால் தான் சட்டையைத் தருவேன்' என்று சொல்லி விட்டான்.''

'' 'நான் சின்னப் பையன் என்னிடம் பணம் கொடுத்து அனுப்ப மாட்டார்கள்' என்று சொல்வது தானேடா!''

''சொன்னேன் அப்பா! 'நீ பெரியவனான பிறகு கூலியைக் கொண்டுவந்து கொடு. சட்டை இங்கே பத்திரமாக இருக்கும்' என்று சொன்னான்.''

—மோனு

◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆◇◆

இனிமையான கவர்ச்சி மிக்க புன்னகையும் இணைந்து விட்டால்? நர்கீஸிடம் நான் இவ்வளவையும் ஒருங்கே கண்டேன். அவர் படங்களின் மேல், அவரது புன்னகையின் மேல் தணியாத காதல் கொண்டேன். அவர் நடிப்பாற்றலுக்காக மட்டுமின்றி இந்தப் புன்னகைக்காகவும் அவர் நடித்த படங்களைப் பார்க்கப் போவேன்.

புன்னகை செய்பவர்களுக்கு இன்றியமையாத தேவை முத்துச் சரம் கோத்தாற்போல் சீரான பல் வரிசை. அதைத் திறந்து காட்டும் பெட்டகம்தான் உதடுகள். இந்தச் சிறப்பினை மட்டுமல்ல. எல்லாவிதச் சிறப்புக்களையும் ஒருங்கே பெற்றவர் தமிழக முதல்வரான மாண்பு மிகு எம். ஜி. ஆர். அவர் புன்னகை என்னை மட்டுமா கவர்ந்தது? நாலரைக் கோடி தமிழ் மக்களையும் அல்லவா கவர்ந்திருக்கிறது?


எனக்குப் பிடித்த, மற்றொரு புன்னகை உலகப் புகழ் பெற்றது.

ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு ஸ்டைல்—மானரிசம் உண்டு. கார்ட்டருக்குப் புன்னகையே இயல்பான மானரிஸம். அமெரிக்க ஜனாதிபதி ஆரம்ப காலத்தில் ஒரு வேர்க்கடலை வியாபாரி, உழைப்பாளி. ஆரோக்யமான புன்னகை என்றுமே அழகாகத்தான் இருக்கும் என்பதற்கு உதாரணம் இவரது புன்னகை.

பால் மணம் மாறாக் குழந்தைகளுக்கு இரண்டே விஷயங்கள்தான் தெரியும். பசித்தால் அழுவது, அல்லது புன்னகைப்பது. என் மகள் ஹேமலதா குழந்தையாக இருக்கும்போது பல நாட்கள் நான் ஊன்றிக் கவனித்திருக்கிறேன். தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தை தானே சிரிப்பதுண்டு. புன்னகையின் முழு அர்த்தத்தை அப்போது நான் தெரிந்து கொண்டேன். சிலர் சொல்வார்கள், ஆண்டவன் சிரிப்பூட்டுகிறான் குழந்தை சிரிக்கிறது என்று. நான் அதை ஒப்புக் கொள்ள மாட்டேன். மழலைச் செல்வமே மகேசன்தான். அவன் எப்படித் தனியாகப் போய்ச் சிரிப்பு மூட்டுவான்? ஆம், மழலையின் சிரிப்பில் நான் மகேசனைக் காண்கிறேன்.

கே. ஆர். விஜயாவைப் பேட்டி கண்டவர்:

ருக்மிணி ராமச்சந்திரன்



வாசகர்களுக்கு அதிர்ஷ்டப் பரிசுத்திட்டம்

இந்தப் பக்கத்தில் ஒரு ஜோடி விழிகளையும் ஒரு கவிதையையும் காண்கிறீர்கள்.

இதே போன்று அடுத்த ஐந்து வாரங்களுக்கு ஒரு ஜதை விழிகளையும் ஒரு கவிதையையும் பிரசுரிக்கவிருக்கிறோம். ஒவ்வொரு வாரமும் வெவ்வேறு நட்சத்திரத்தின் கண்கள்; வெவ்வேறு கவிஞருடைய கவிதை.

ஆனால் ஒவ்வொரு வாரமும் விழிகளும் கவிதைகளும் பொருத்தம் பார்த்துப் பிரசுரிக்கப்படவில்லை. மாறிப் போயிருக்கின்றன.

ஆறு ஜோடி விழிகளையும் ஆறு கவிதைகளையும் கவனித்து யோசித்துப் பொருத்தம் பார்த்து நீங்கள் இணை சேர்க்க வேண்டும். ஆறாவது வாரத்தில் —செப்டம்பர் 9-ந் தேதி இதழில் — இடம்பெறவிருக்கும் கூப்பனில் உங்கள் முடிவை, கவிஞர் பெயரையும் எதிரே நட்சத்திரத்தின் பெயரையும் எழுதுவதன் மூலம் தெரியப்படுத்த வேண்டும். தனித் தாளில் எழுதி அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.

ரயில் ராதிகா இந்த ஆறு கவிதைகளையும் ஆறு ஜதைக் கண்களையும் பொருத்தம் பார்த்து இணை சேர்த்து எங்களிடம் ஒரு விடை தந்திருக்கிறார். அந்த விடை எந்த வாசகருடைய விடையுடன் ஒத்துப் போகிறதோ அவருக்கே முதல் பரிசு. இரண்டாவது மூன்றாவது பரிசுகளும் ஆறுதல் பரிசுகளும் உண்டு.

பரிசு விவரம்:

முதல் பரிசு: பிரஸ்டீஜ் பிரஷர் குக்கர்
2-ம் பரிசு: விஐபி பிரீஃப் கேஸ்
3-ம் பரிசு: அலாரம் கடிகாரம்
ஆறுதல் பரிசுகளாக 200 கல்கி தீபாவளி மலர்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் வந்தால் பரிசுப் பொருள்களின் மதிப்பைக் கணக்கிட்டு அத்தொகை பகிர்ந்தளிக்கப்படும்.

200க்கு அதிகமான ஆறுதல் பரிசுகள் தரவேண்டிய நிலை ஏற்பட்டால் சீட்டுக் குலுக்கல் முறையில் இருநூறு பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

முடிவு தேதி: செப்டம்பர் 15

உறையின் மேல் 'அதிர்ஷ்டப் பரிசுத் திட்டம்' என்று குறிப்பிட்டு, ஆசிரியர் கல்கி சென்னை-32 என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

வேறு கடிதப் போக்குவரத்துக் கிடையாது.

சந்தேகம் எழும் விஷயங்களில் ஆசிரியரின் தீர்மானமே முடிவானது.

இந்த வார விழிகள்:



இந்த வாரக் கவிதை:

கொல்லும் வேலும் கூற்றமும் என்னும்
இவை எல்லாம்
வெல்லும் வெல்லும் என்னுமதர்க்கும்விழி
கொண்டாள்.

— கம்பன்



தீபா

Kalki Shopping Page







Kalki Shopping Page

குளோஸ்அப்

திரு ஜி. உமாபதி

ஒன்பது வயதில் பள்ளிப் படிப்பை விட்டு விட்டு அச்சகம் ஒன்றில் ஆறு ரூபாய்ச் சம்பளத்தில் வேலைக்குப் போனவர் திரு ஜி. உமாபதி. சிறு வயதிலிருந்தே தாழ்வு மனப்பான்மை இல்லாதிருந்ததும், தன்னம்பிக்கையுமே தம் முன்னேற்றத்துக்கான காரணங்கள் என்கிறார்.

உயர்ந்த முறையில் லட்சிய நோக்கில் ''உமா'' என்ற தமிழ் மாத இதழைப் பதினைந்து ஆண்டுக்காலம் நடத்தினார். உமா இதழைத் தொடங்கி வைத்த அமரர் கல்கி, ''உன்னுடையதன்னம்பிக்கை வெற்றி தரும்'' என்று வாழ்த்தினார்.

தென்னகத்திலேயே அழகு வாய்ந்த முதல் தியேட்டர் சாந்தி. லிஃப்ட் வைத்த முதல் தியேட்டர் விட்டில் ஆனந்த். முதல் தமிழ் சினிமாஸ்கோப் படம் ராஜராஜ சோழன். முதல் டாப் தியேட்டர் மினி ஆனந்த். இப்பெருமைகளுக்குக் காரணமான இவர், விடுதலை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார்.

திரு கே. ராதாகிருஷ்ணன் ஐ. பி. எஸ்

தஞ்சை மாவட்டம் மெலட்டூர்க்காரரான இவர் மண்ணியலில் ஆனர்ஸ் பட்டம் பெற்றார். பலவித அலுவல்கள் பார்த்து விட்டுக் காவல்துறையில் சேர்ந்தார். சிறப்பான பணிகளுக்காக 1975-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் பதக்கமும் இவருக்குக் கிடைத்தது.

''Traffic control in India'' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதி, அது முடிவடையும் நிலையிலுள்ளது.

இன்று பல்லவன் போக்குவரத்தின் தலைவரான இவர் சாலைவிபத்துக்களில் சம்பந்தப்பட்ட பல்லவன் பஸ் ஓட்டுநர்களை அழைத்து, வாரம் இரண்டு முறை ''சேப்டி கிளினிக்'' என்னும் பாதுகாப்புப் பயிற்சி வகுப்பு நடத்துவது குறிப்பிடத் தக்க செய்தி.

திரு கே. குருமூர்த்தி

மாயவரத்தில் பிறந்த திரு. குருமூர்த்தி சுதந்திரப் போராட்டச் சூழலில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் உடனிருந்தவர் காமராஜ்.

அப்போது பாதியில் விட்ட படிப்பை, விடுதலையான பின், தொடர்ந்தார். 1944ல் சிம்ஸனில் குமாஸ்தாவாகச் சேர்ந்த இவர், அந்த அலுவலகச் சிப்பந்திகளுக்காக ஒரு யூனியன் தொடங்கினார்.

1948-ல், சிம்ஸன் குரூப் கம்பெனியின் எல்லாத் தொழிலாளர்களின் நலன்களுக்காகவும் பாடுபட முன்னாள் அமைச்சர் ஆர். வி. தலைமையில் தனிச் சங்கம் ஏற்பட்ட போது திரு குருமூர்த்தி அதன் துணைத் தலைவரானார். பின்னர் 1958-ல் ஆர். வி. அமைச்சர் பொறுப்புக்குப் போனதும் இவரே தலைவரானார். 1971-ஆம் ஆண்டில் இவர் அந்தத் தலைமைப் பதவியை விட்டு விலகியபோது, சிம்ஸன் யூனியனின் பொது நிதியில் சேர்ந்திருந்த 20 லட்சம் ரூபாய்களையும், தொழிலாளர்களுக்கு உரிய முறையில் பிரித்து வழங்கி விட்டு விலகினார்.

1953-ம் ஆண்டில் ஏவி விடப்பட்ட சில ரவுடிகள் தாக்கிய போது இவருக்கு இடது கண் பார்வை போயிற்று.

திரு பகவன்தாஸ் கோயங்கா

எட்டு வயதுச் சிறுவன் பகவன்தாஸ் காயம் பட்டுக் கொண்டு வந்து நின்றபோது பிரபல மருத்துவராய் இருந்த டாக்டர் ரங்காச்சாரியிடம் அழைத்துப் போனார்கள். ஊசி போட்டுக் கொண்டே, குறும்புச் சிறுவனிடம் ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார் டாக்டர். ''உங்கள் ரோல்ஸ்ராய்ஸ் காரைக் கொடுங்கள்'' என்று பளிச்சென்று பதில் வந்தது. ''அப்புறம் என்னவேண்டும்?'' என்று டாக்டர் கேட்ட போது, ''நீங்கள் வைத்திருக்கும் பிளேன் வேண்டும்'' என்று தயங்காமல் கேட்டான் பகவன்தாஸ்!

பகவன்தாஸின் லட்சியங்கள் அந்த வயதிலேயே அப்படியிருந்தன!

''இந்தியன் எக்ஸ்பிரஸை'' மிகவும் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்று களைப்பில்லாமல் உழைத்தார். புதிய கட்டடத்தில், புதிய ஆப்செட் இயந்திரங்கள் பூட்டும் வேலை முடிவடையப் போகிறது. இந்த நிலையில் திரு பி.டி. கோயங்கா திடுமென்று காலமாகி விட்டார்.

சென்ற ஜூனில் , அமெரிக்கா சென்று, சர்வதேசப் பத்திரிகை வெளியீட்டாளர் மாநாட்டில் கலந்து கொண்டு அவர் ஆற்றிய உரை மிகப் பிரபலமடைந்தது.

எக்ஸ்பிரஸ் துணை ஆசிரியர் திரு சி. பி. சேஷாத்ரி கூறியவை.

—யெஸ்பாஸ்

பகவன்தாஸ்



கே. குருமூர்த்தி





கே. ராதாகிருஷ்ணன்



ஜி. உமாபதி




புதிய பிரதமர்

"எனது வாழ்நாளின் ஆசை நிறைவேறி விட்டது" என்று கூறியிருக்கிறார் சரண் சிங், பிரதமரானதும். "ஆசைப்படுவதில் தவறில்லை, அதை அடைகிற மார்க்கம் சரியானதாக இருக்க வேண்டும்" என்றும் கூறியிருக்கிறார்.


பிரதமர் பதவியை அவர் அடைந்த மார்க்கம் சரியானது என்று நாம் கருதவில்லை. பதவிக்கு ஆசைப்படுவதில் தவறில்லை என்று அவர் கூறுவதையும் நாம் ஏற்கவில்லை.

அது எவ்வாறாயினும் இன்று அவர் நமது பிரதமர். மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய அவரை வாழ்த்துகிறோம். எப்படிப் பதவிக்கு வந்தார் என்பதை மக்கள் மறந்து மன்னித்தும் விடுவார்கள், நல்லாட்சியை அவரால் வழங்க முடியுமானால். வாய்ப்புத் தந்து பொறுத்திருந்து பார்ப்போம்.

ஒரே ஒரு கோரிக்கை: காந்தி சமாதிக்கு முன்னால் சத்தியப் பிரமாணங்கள் எதுவும் எடுத்துக் கொள்ள வேண்டாமே, தயவு செய்து.



கூட்டணி அரசு
சவான்ஜி! சௌத்ரி சாஹப் குல்லாய்க்குள்ளே உங்க தலையை நுழைச்சுக்குங்க!
எதுக்கும் நம்ம சொந்தக் குல்லாவை பத்திரமா வெச்சுக்குவோம்!
இதை மட்டுமாவது கையோடு வெச்சுக்குங்க. மழைக்கோ வெயிலுக்கோ உதவும்!
எம்.பி. பதவி
ஜனதா



18ம் படி கருப்பன்!
18 அ.இ.அ.தி. எம்.பி.க்கள்
உனக்கு ஆதரவு.. உனக்கு ஆதரவு.. நீ போய் இன்னொருத்தன் வந்தால் அவனுக்கும் ஆதரவு.. அவனுக்கும் ஆதரவு!

கல்கி
1979 ஆகஸ்டு 5
சித்தார்த்தி ஆடி 20
மலர்: 38 இதழ்: 1



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

மனம் விட்டுப் பேசுகிறோம்!

கல்கி பத்திரிகை தனது 37 ஆண்டு பணியை முடித்துக்கொண்டு 38ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. வாசகப் பெருமக்களின் நல்வாழ்த்துக்களையும் ஆசிகளையும் பூரண ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம். தமிழர் இல்லங்களிலெல்லாம் சகல சௌபாக்கியங்களும் பெருகி மகிழ்ச்சி நிலவ வேண்டும் என்று இந்த நன்னாளில் பிரார்த்திக்கிறோம். தேசத்தில் ஸ்திரமான நல்லாட்சி உருவாக இறையருளை வேண்டுகிறோம்.

சென்ற ஆண்டு மறுபிறவி எடுத்த கல்கியில் பல மாறுதல்களைக் கண்டு நேயர்கள் வாழ்த்தி வரவேற்றிருக்கிறார்கள். சில குறைகளைச் சுட்டிக்காட்டி வருவோரும் உண்டு. இரு சாராருக்கும் கரம் கூப்பி நன்றி கூறுகிறோம். குறைகளை நீக்கவும் மேன்மேலும் வாசகர்களை மகிழ்விக்கவும் உறுதி பூணுகிறோம்.

கல்கியின் 38வது பிறந்த நாளில் உங்களுக்கெல்லாம் இரட்டிப்பு மகிழ்ச்சி தர, சாண்டில்யன், சுஜாதா ஆகிய இருவரது தொடர்கதைகளும் ஆரம்பமாகின்றன. வெகு விரைவில்—ஆகஸ்டு 26ந் தேதி இதழில்—'லக்ஷ்மி' எழுதும் 'பூக்குழி' என்ற தொடர்கதை ஆரம்பமாகி உங்கள் ஆனந்தத்தை மும்மடங்காக்கப் போகிறது. அகிலன் அவர்களின் 'ரஷ்யப் பயணத் தொடர் இந்த இதழிலேயே ஆரம்பமாகி கல்கி பத்திரிகைக்கு மேலும் கௌரவம் சேர்க்கிறது. இவ்விதம் நான்கு 'ஸ்டார்' எழுத்தாளர்களின் தொடர் அம்சங்கள் ஒரே காலகட்டத்தில் ஒரு பத்திரிகையில் வெளிவருவதே பத்திரிகை உலக சரித்திரம் காணாத ஒரு புதுமை!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியின் முடிவு இந்த இதழில் பிரசுரமாகியுள்ளது. இந்தப் போட்டியில் பங்குபெற எல்லா எழுத்தாளர்களுமே வரவேற்கப்படுகிறார்கள் என்றாலும் போட்டியின் விளைவாக ஒரு சில புதிய எழுத்தாளர்கள் அறிமுகமானால் நாம் அடையும் மகிழ்ச்சியே அலாதிதான்.

இந்த ஆண்டு இந்த ஆனந்தம் ஒரு வகையில் அளப்பரியதாகிறது. சில புதிய எழுத்தாளர்கள் அறிமுகமாகிறார்கள் என்பது மட்டுமல்ல, முதல் பரிசு பெற்றுப் பெருமை அடைபவரே ஓர் அறிமுக எழுத்தாளர்தான் என்பதில் அவரைப் போலவே நாமும் பெருமை கொள்கிறோம். முதல் பரிசுக் கதையைப் படிக்கப் போகும் நேயர்கள் கண் கலங்க நேரிட்டாலும், அதன் இலக்கியத் தரம் உணர்ந்து மகிழ்வார்கள். சிறந்த கதைகளைப் பரிசுக்குத் தேர்ந்தெடுக்க உதவிய அகிலன், லக்ஷ்மி, பி.வி.ஆர்., ஸோமாஸ், எஸ். வி. எஸ்., ஆகியோருக்கு நன்றி கூறிக் கொள்கிறோம்.

'செம்பியன்' எழுதும் முழுநீள நாவல் இந்த மலரில் போனஸாக உங்களுக்குக் கிடைக்கிறது. விறுவிறுப்பான நடையில் அமைந்த, ஒரு 'போல்ட் தீம்' உள்ள கதை. வாசகர்களுக்கான அதிர்ஷ்டப் பரிசுத் திட்டம் பற்றிய விவரங்களையும் இந்த ஆண்டு மலரில் காணலாம்.

ஆகஸ்ட் 19ந் தேதி கல்கி சிறுகதைச் சிறப்பிதழாக உருவாகி வருகிறது. மரபு வழி வந்த எழுத்தாளர்கள் மட்டுமின்றி நவயுக எழுத்தாளர்கள் பலரும் நவரசக் கதைகளை வழங்குகிறார்கள்.

இவ்வளவெல்லாம் செய்தும் எங்களுக்குத் திருப்தி இல்லை. இன்னும் நிறைய வாசகர்களுக்காகச் செய்ய வேண்டும், மேலும் அவர்களுக்காக உழைக்க வேண்டும் என்றே ஆசைப்படுகிறோம்.

எங்கள் உழைப்பும், வாசகர்களிடம் நாங்கள் வைத்துள்ள நம்பிக்கையும் வீண் போகாது எனக் கருதிப் பரிசுத்தமான உள்ளத்துடன் காவல் தெய்வமாம் விநாயகப் பெருமானை அருள்பாலிக்க வேண்டுகிறோம்.

பொழுது புலர்ந்து பத்து நாழிகைகள் ஓடிவிட்ட போதிலும் பங்குனியின் பின்பனி மூட்டம் சிறிதும் விலகாமல் அலைகடலை அளவுக்கு மீறியே உறையச் செய்திருந்தும் சிந்து துர்க்கத்தின் கரிய பெரிய கூரிய மலைப் பாறைகள் பேய்களைப் போல் பயங்கரமாக எழுந்து நின்று மிரட்டியும், பனியில் குளிர்ந்தாலும் மனம் குளிராத அரபிக்கடல் காற்றில் சீறி எழுந்திருந்து அலைக் கரங்களால் புரட்டியும்கூட, எதற்கும் மசியாத அந்த யுவதி மிக அலட்சியமாக அலைகளின் மீது தாவியும் புரண்டும், தனது நீண்ட கரங்களை வீசியும் நீந்தி நீந்தித் துளைந்து விளையாடினாள். கடலிருந்த பயங்கரத்தின் காரணமாகச் சிந்து துர்க்கத்தின் படகுகள் கூடப் பக்கத்தில் கடல் குடைந்து விட்டிருந்த மலையின் சுழற்சியில் பதுங்கிக் கிடந்ததால், கடலில் அவளைத் தவிர வேறு யாரும் இல்லாததால், அவள் சுதந்திர ராணியாக அலைகளில் வெகு வேகமாக நீந்தினாள். அலைகளின் வீச்சில் அவள் சில வேளைகளில் எழுந்தாலும் பெரும்பாலும் மூழ்கியே சென்றதால், எழுந்திருந்த சமயங்களிலாவது அவளது லாவண்யத்தைக் காணலாம் என்ற ஆசையின் விளைவாகக் கதிரவன் திருட்டுத்தனமாகத் தனது கிரணங்களில் ஒன்றிரண்டைப் பனி மூட்டத்தில் லேசாகச் செலுத்தினான். அதற்கு அவளிடமிருந்தோ, கடலிடமிருந்தோ, எதிர்ப்பு ஏதும் வராததால், இடம் கொடுத்தால் மடம் பிடுங்கும் கதையாகப் பனித்திரையைப் பல இடங்களில் நன்றாகவே பிளந்து கதிரவன் அவளைத் தனது கிரணங்களால் தழுவலானான்.

கிரணங்களால் ஒளி பெற்ற அலைகள்கூட அற்பனுக்கு ஐசுவரியம் கிடைத்தது போல நீந்திய அவளைச் சுழற்றிச் சுழற்றி அடித்துத்



1 அலைகடல் தாமரை



கடல் ராணி

சாண்டில்யன்

தங்களுக்கும் வல்லமை உண்டு என்று காண்பித்தன. இயற்கையின் இத்தனை போராட்டமும் இந்திர ஜாலமும் அவளை மட்டும் சிறிதும் பாதிக்காததைக் கண்ட இரண்டு கருடன்கள் சிந்து துர்க்கத்தின் கோட்டைப் பாறைகள் இரண்டின் மீது உட்கார்ந்து ஒன்றையொன்று அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டன. தூரத்தே எழுந்த ஸஹ்யாத்ரி மலைத் தொடரின் பெரிய உச்சிகளின் மரங்களும் காற்றில் பெரிதாக ஆடிக் கடலின் தோல்வியைப் பரிகசிப்பன போல் மலர்களைக் கலகலவென உதிர்த்தன. அதுவரை பனிக்குப் பயப்பட்டுப் பதுங்கிக் கிடந்த கடல் நாரைகள் சில ஜிவ்வென்று ஆகாயத்தில் கிளம்பி அந்தப் பெண்ணிருந்த இடத்தை நோக்கி வட்டமிட்டன.

கதிரவன் கிளம்பிவிட்ட காரணமோ, அல்லது இனி இவளை அலசிப் பயனில்லை என்ற தோல்வி மனப் பான்மையோ தெரியாது, அலைகள் சிறிது மந்தப்படவே செய்ததால் அவள் மல்லாந்து நீந்தினாள் கடலின் மீது. நீச்சலுக்காகச் சிற்றாடையைப் புனைந்து மகாராஷ்டிரப் பாணியில் இறுகக் கச்சமாகவும் கட்டியிருந்ததால் மல்லாந்த நிலையில் அவள் மிக மனோகரமாக விளங்கினாள். அதுவரை அவளைப் புரட்டியடித்த அலைகள், கதிரவன் காலை ஒளியில் மின்னி எழுந்த அவள் அழகிய மார்பகத்தை லேசாகத் தழுவிச் சென்றன. சிற்றிடையில் பிணைந்து கீழே சரேலென்று இறங்கிய சிற்றாடை, கால்களின் பரிமாணத்தையும் உடல் சுழற்சியையும் தெளிவாக்க முயன்ற நிலையில் ஏதோ தேவ கன்னிகை காலத்தால் கடலில் வந்து விழுந்து விட்டது போன்ற பிரமையை உண்டாக்கியது.

இரவாயிருந்தால் அவள் முகத்தைச் சந்திரனுக்கு ஒப்பிடலாம். ஆனால் பகல் நன்றாகவே பிறந்து விட்டதால் கடலில் முளைத்த தாமரை போல் முகத்தைத் தெரியச் செய்யும் நோக்கத்துடன் அவள் மல்லாந்த உடலை நீரில் மறைத்துத் தலையை மட்டும் வெளியில் தெரியச் செய்து, கீழே கால்களை உதைத்துத் தாமரைக் கொடியென நின்றாள். அப்படிக் கொடி முனையில் நின்ற தாமரையை மேலும் மலரச் செய்யக் கதிரவன் தன் கிரணங்களை அதிகமாகவே ஏவினான். ஆனால் முகம் மலர்ந்த தாமரையென்றால் மற்ற லட்சணங்களைப் பற்றி என்ன சொல்வாய் என்று கதிரவனைக் கேட்பது போல் அவள் மீண்டும் மல்லாந்து நீந்தித் தரையை நோக்கிக் கால்களை உதைத்துச் சென்றாள். அந்த நிலையில் அழகிய மார்புத் தாமரை மொட்டுக்கள் வேகமாக அசைந்தன. காளிதாஸன் மட்டும் முன்பாக சகுந்தலையைப் பார்க்காமல் இவளைப் பார்த்திருந்தால் *''தாமரை மொட்டுகள் மேல் வண்டுகள் உட்கார்ந்த அழகை அவள் இரட்டை அழகுகள் அலட்சியம் செய்தன'' என்று எழுதியிருப்பான். கவி யில்லாததால் அந்தப் பணியைத் தானே செய்யலாமென்று அலைகள் அவள் ஆடையை லேசாக அகற்ற முயலவே, அவள் சிரித்துப் புரண்டு மறுபடியும் அழகை நீருக்குள் மறைத்துக் கரையை நோக்கி வேகமாகக் கைகளை மாற்றிப் போட்டு நீந்தினாள். ஒரு பெண் மீனாக மாற முடியும் என்பதற்கு அத்தாட்சி காட்டுவது போல் அவள் கால்களையும் உடலையும் வளைத்து அழகாக நீந்தி, பாறைகள் குச்சி குச்சியாக எழும்பி சிந்து துர்க்கத்துக்குக்கரை அமைத்திருந்த இடத்தை அடைந்தாள். கரையை அடைந்த பின்பு நீர் சொட்டிக் கொண்டிருந்த தனது நீண்ட கருங்குழலை எடுத்து அரை குறையாக முடித்துக் கொண்டு சற்று எட்ட இருந்த பெரிய மலைப் பாறையின் மறைவை நோக்கிச் சென்றாள். அப்பொழுது சிந்து துர்க்கம் துயிலெழுந்து விட்டதால் கோட்டைக்குள் எங்கும் அரவம் கேட்டதன் விளைவாக அவள் சிறிதும் தாமதிக்காமல் கோட்டைக்கு வெளியே இருந்த சிறு மலைப் பாறைகளில் வெகு வேகமாகவும் அலட்சியமாகவும் மலைக்காட்டு மானைப்போல் துள்ளித் துள்ளி ஏறினாள்.

அப்படி ஏறியவள் நேராகச் சிந்து துர்க்கத்தின் கோட்டை வாயிலுக்குச் செல்லாமல் பெரிய மலைப் பாறையின் மறைவுக்குச் சென்று அதன் சரிவிலிருந்த சிறு கட்டிடத்தை நோக்கி நடந்தாள். அவள் சென்ற பாதை மிக்க கடுமைதான். மலைக் கற்கள் அவள் பாதங்களைக் குத்தவே செய்தாலும், பக்கத்திலிருந்த ஓரிரு புதர் முட்கள்கூடக் காலில் பட்டாலும், அவற்றைப் பற்றிக் கவனிக்காமலே அவள் அந்தச் சிறு கட்டிடத்தை நோக்கி

---

* இரச்சகார ப்ரமராபி வினயோ:
ஸுஜாதயோ: பங்கஜ கோசயோ:
ச்ரியம் — ரகுவம்சம் — ஸர்க்கம் 3



மலைச் சரிவில் ஏறிச் சென்றாள். கட்டிடத்தின் உட்புறத்தில் அவள் தன் ஆடைகளை வைத்திருந்ததால் அவற்றைச் சீக்கிரம் அணிந்து கொண்டு இல்லம் செல்ல வேண்டுமென்று மனம் எடுத்துக் கூறிய துரிதம் அவள் நடையிலும் இருந்தது.

வெகு சீக்கிரம் அக்கட்டிடத்தை அடைந்த அவள் அதைப் பார்த்துக் கொண்டே சிறிது நேரம் நின்றாள். கட்டிடம் பல இடங்களில் பாழ்த்துக் கிடந்தது. மீதியுள்ள சுவரை ஒழுங்காக வைப்பது இந்து தர்மத்துக்கு ஒவ்வாது என்ற காரணத்தால் இரண்டு இடங்களில் அரசு முளைத்துத் தங்கள் ஆட்சி வேரை உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தது. அதனால் ஏற்பட்ட பிறைகளிலிருந்து வழலைப் பாம்புகள் இரண்டு தலை நீட்டி மீண்டும் உள்ளே பதுங்கின. இவை அனைத்தும் மிக இன்பமாயிருந்தது. அந்த யுவதியின் உள்ளத்துக்கு. அந்தக் கட்டிடத்தை அவள் பல சமயங்களில் தனக்கு ஒப்பிட்டிருக்கிறாள். கட்டிடம் கடலுக்குத் தனது முதுகைக் காட்டிக் கொண்டிருந்தது. தானும் அப்படிக் கடலை அலட்சியம் செய்வதால் தானும் கட்டிடமும் ஒன்று என்று நினைத்தாள் அவள்.

அந்த எண்ணத்தால் மலர்ந்த உள்ளத்துடன் கட்டிடத்தைச் சுற்றி அப்புறமிருந்த வாயிலை அடைந்த அந்தப் பெண் வாயிலிருந்த நிலை கண்டு பிரமை பிடித்து நின்றாள். வாயிற் கதவு திறந்து கிடந்தது. அதற்கு நேராகக் கிழிந்த ஆடை அணிந்த ஒருவன், நீண்ட நாளாகத் தனக்கென்று போட்டிருந்த மஞ்சத்தில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டிருப்பதைக் கண்டாள். அது மட்டுமின்றித் தன் ஆடைகளில் ஒன்றைச் சுருட்டி அவன் தலைக்கு உயரம் வைத்துக் கொண்டிருந்தது அவள் சீற்றத்தை எல்லை மீறச் செய்ததால் வெளியே நின்றபடியே, ''டேய்! யாரது?'' என்று தணலை விடச் சுட்ட சொற்களால் அழைத்தாள்.

அவன் மெல்லக் கண்களை விழித்தான். பிறகு மஞ்சத்தில் உட்கார்ந்து கைகளைத் தூக்கி இரு முறை சோம்பல் முறித்தான். கைவிரல்களைச் சொடுக்கிக் கொண்டான். அரைத் தூக்கக் கண்களை வெளியே ஓட்டி, ''என்ன வேண்டும்? யார் நீ?'' என்று கேட்டான்.

தான் கேட்க வேண்டிய கேள்விகளை அவன் கேட்பதைக் காதில் வாங்கிய அந்தப் பெண்ணின் கோபம் முன்னை விட அதிகமாகியதால் அவள் அவனை உற்று நோக்கினாள்.



அவன் வயது இருபத்தி நான்குக்கு மேல் இருக்க முடியாது என்பதை அவன் முகமே எடுத்துக் காட்டியது. அது மிகவும் அழகான முகமானாலும் கண்களில் ஒரு மந்தமும் முகத்தில் ஒரு சோர்வும் காணப்பட்டதை அவள் உணர்ந்தாள். வாழ்க்கையில் அவனுக்கு ஏதோ பெரும் ஏமாற்றமோ துன்பமோ ஏற்பட்டிருக்க வேண்டும் என்று அவள் ஊகித்தாள். கிழிந்து விலகிக் கிடந்த அவன் சட்டையின் மூலம் தெரிந்த கழுத்தும் மார்பும் மிக உறுதியாக இருந்ததாலும், அவன் உடல் ஒல்லியாகவும், வாளிப்பாகவும் இருந்ததாலும், இடுப்புக் கச்சையில் இரண்டு கைத்துப்பாக்கிகள் காட்சியளித்ததாலும் அவன் வீரன்தான் என்பதையும், ஆனால் யாருக்காகவோ மறைந்து திரிகிறான் என்பதையும் அவள் நிச்சயம் செய்து கொண்டதால் ''வா வெளியே'' என்று அதட்டினாள்.

அவன் மெதுவாக மஞ்சத்திலிருந்து எழுந்து ஆடி ஆடி வெளியே வந்தான். அவளை ஒரு விநாடி உற்று நோக்கினான். பிறகு கேட்டான்: ''நீ இந்த இடத்தின் சொந்தக்காரியா?'' என்று.

''ஆம்'' என்றாள் அவள்.

''நான் இந்தக் கதவுக்கு வெளியிலேயே உட்கார்ந்து உறங்கலாமா?'' என்று அவன் கேட்டான் மரியாதை நிரம்பிய குரலில்.

''அத்தனை தூங்குமூஞ்சியா நீ?'' என்று அவள் வினவினாள்.

''ஆம்.''

''ஏன்?''

''வேறு வேலை இல்லை.''

''வேலை இல்லையா? வேலை செய்ய இஷ்டமில்லையா?'' என்று அவள் கேட்டாள் எரிச்சலுடன்.

''எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்'' என்று ஏக வசனத்தில் அசட்டையாகப் பேசிய அவன் வெளியே வந்து கதவின் பக்கத்தில் உட்கார்ந்து சுவரில் நன்றாகச் சாய்ந்து கொண்டு, கால்களை நீட்டி, கண்களையும் மூடிக் கொண்டான்.

அவனை வெறுப்புடன் நோக்கிய அவள் வேகமாக உள்ளே சென்று கதவை மூடித் தாளிட்டாள். அவள் உள்ளே நடமாடியதால் இருமுறை கண் விழித்து அலுத்துக் கொண்ட அந்த வாலிபன், அவள் நனைந்த ஆடையை அவிழ்த்துத் தரையில் போட்டபோது ஏற்பட்ட 'சொத்' என்ற சத்தத்தையும், பிறகு புத்தாடை புனைந்தபோது ஏற்பட்ட சரசர வென்ற ஒலியையும் கேட்டுத் தனது இதழ்களில் ஒரு விநாடி இள நகை படர விட்டுக் கொண்டான். அடுத்த விநாடி மீண்டும் கண்களை மூடினான்.

கண்களை அப்படி அவன் மூடியிராவிட்டால், முழுச்சோம்பேறியாயில்லாவிட்டால், அதே கட்டிடத்தை நோக்கி இரு வெள்ளையர் வருவதைக் கவனித்திருப்பான். வந்தவர்களும் நல்ல எண்ணத்தோடு வரவில்லை என்பதையும் புரிந்து கொண்டிருப்பான். ஆனால் தூக்கம் தெளியாததால் வந்த இருவரில் ஒருவன் பூட்ஸால் தன்னை உதைத்த பிறகே லேசாகக் கண்களைத் திறந்தான். இன்னொரு வெள்ளையன் அந்த சமயத்தில் கட்டிடக் கதவைத் தடதடவெனத் தட்ட உள்ளிருந்த பெண் வெளியே வந்ததையும், வந்த உடன் வெள்ளையனின் கைத் துப்பாக்கி அவள் மார்புக்கு நேரே நீட்டப்பட்டதையும் உணர்ந்தான்.

''இன்று நீ தப்ப முடியாது. எங்களுடன் வந்துதான் ஆக வேண்டும்'' என்றான் கைத் துப்பாக்கியை நீட்டியவன்.

அதே சமயத்தில் வாலிபனைப் பூட்ஸால் உதைத்தவனும் ''என்னுடைய கைத் துப்பாக்கியும் உன் மார்பை நோக்குகிறது'' என்று அறிவித்து, தான் ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்து விட்டது போல் நகைத்தான் குரூரமாக.

பூட்ஸ் காலால் உதைக்கப்பட்டும் எழுந்திருக்காத அந்த வாலிபனைப் பார்த்து அந்தப் பெண், ''நீ வீரன்தானே! உன் கச்சையி

விருப்பதும் கைத் துப்பாக்கிதானே?'' என்று இகழ்ச்சியுடனும் சீற்றத்துடனும் வினவினான்.

''அவன் உதவியை நீ எதிர்பார்த்துப் பயனில்லை. இந்தச் சோம்பேறியைக் காவல் வைத்தது உன் மடத்தனம்'' என்றான் பிஸ்டலை அவனை நோக்கி நீட்டிக் கொண்டிருந்த வெள்ளைக்காரன்.

இதைக் கேட்ட வாலிபன் மிக மெதுவாகக் கண்களை விழித்தான். ''அவள் அப்படியொன்றும் முட்டாளல்ல'' என்றும் கூறினான்.

''அட! காவலர் நம்மைக் கொன்றுவிடுவார் போலிருக்கிறது'' என்றான் இரண்டாவது வெள்ளையன்.

''அது என் உத்தேசமல்ல'' என்று கூறினான் அரைவாசி கண்ணை விழித்துக்கொண்டிருந்த வாலிபன்.

''வேறு என்ன செய்ய உத்தேசமோ?'' என்று கேட்டான் முதல் வெள்ளைக்காரன்.

பதில் வெகு துரிதமாக வந்தது வாலிபனிடமிருந்து. முதல் வெள்ளையன் பிடித்திருந்த பிஸ்டல் சட்டென்று நிலத்தில் விழுந்து நானா வித ஒலிகளுடன் மலைப்பாறைகளில் உருண்டோடியது. அவன் தன் கையை இறுக்கப்பிடித்துக் கொண்டு பெரிதாக அலறினான். பூட்ஸ் காலால் உதைத்தவன் தன் முழங்காலைப் பிடித்துக் கொண்டு ஏதோ நொண்டியாட்டம் ஆடுபவனைப் போல் இருமுறை சுற்றினான். வாலிபன் தன் கையிலிருந்த துப்பாக்கியிலிருந்து கிளம்பிய புகையை மெதுவாக வாயால் ஊதி மீண்டும் கச்சையில் செருகிக் கொண்டான்.

அவனை நன்றிக் கண்களுடன் பார்த்தாள் அந்தப் பெண். ''ஐயா! நீங்கள் யார்?'' இம்முறை மிக மரியாதையாகக் கேட்டாள்.

''நீ யார்?'' என்று பழைய கேள்வியை மீண்டும் திருப்பினான் வாலிபன்.

பதில் அவளிடமிருந்து வரவில்லை. கையில் ரவை பாய்ந்த வெள்ளையன் சொன்னான், ''முட்டாள்! அவள்தான் ராணி!'' என்று.

''ராணி என்றால்?'' குழப்பத்துடன் வினவினான் வாலிபன்.

''கடல் ராணி!'' என்று நொண்டியடித்துக் கொண்டிருந்தவன் கூறினான். (தொடரும்)

நுண்ணலை அடுப்பு

நெருப்புக்கு அடுத்தபடி மிகப்பெரிய கண்டுபிடிப்பு என்று போற்றப்படும் நுண்ணலை அடுப்பினால் சமையல் எளிதாகவும், விரைவிலும் தயாராகிறது.

ஜப்பானில் மட்டும் ஒரு வருடத்திற்கு 8,00,000க்கு மேல் இந்த அடுப்புகள் தயாரிக்கப்படுகின்றன.

இது பார்ப்பதற்கு ஒரு டி.வி. செட்டைப் போலிருக்கும். இதன் முக்கியமான அம்சம் வேகம் தான்-சில நிமிடங்களிலேயே உணவு தயார். மேலும் இது சமையலறையைச் சூடாக்குவதில்லை; சக்தியை மிச்சப்படுத்துகிறது; பாத்திரங்களும் அதிகம் துலக்கப்பட வேண்டியதில்லை.

சமைக்கப்படும் பண்டத்தின் அளவைப் பொறுத்திராமல் சக்தி அதனால் இரைக்கப்படுமாறு இந்த உபகரணம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த முறைச் சமையலில் ருசியும் அதிகம்-ஏனெனில் இது வேகமாகவும், அதே சமயம் மிகக் குறைவான நீரோடோ அல்லது நீரேயில்லாமலோ சமைக்கிறது. பண்டங்களின் உண்மையான நிறமும் பாதுகாக்கப்படுகிறது.

இது கண்டுபிடிக்கப்பட்ட விதமும் மிகவும் சுவாரசியமானதே! 1945ல் ஒரு நாள் மாஸ்' பெர்ஸி ஸ்பென்டர் என்ற அமெரிக்க விஞ்ஞானி ஒரு சாக்லேட் துண்டைத் தான் பரிசோதித்துக் கொண்டிருந்த ஒரு ராடார் வெற்றிடக் குழாயின் அருகில் வைத்தார். சில நொடிகளில் அது குழம்பாகிவிட்டது. அவருக்கு உடனே ஒரு முதல்தரமான ஐடியா தோன்றியது. சில சோள மணிகளை ஒரு radar horn antenna க்கு முன்பு வைத்தார். அவை பெரிய வெள்ளை பாப்கார்ன் ஆயின. இதுதான் அவரை நுண்ணலை அடுப்பைக் கண்டுபிடிக்கத் தூண்டியது.

இந்த அடுப்புகளின் மொத்த சமையல் நேரம் மூன்றே நிமிடங்களாதலால், இந்தியாவில் சில பெரிய ஹோட்டல்களிலும், கேட்டரிங் இன்ஸ்டிட்யூட்களிலும் இவை வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவை இந்தியாவிலேயே தயாரிக்கப்படும் நாள் வெகு தொலைவிலிருக்கிறது.

—'The Weekly Sun' இலிருந்து

தகவல்: திருமதி சாவித்திரி சந்திரசேகர்

மகிழ்ச்சி பொங்கட்டும்!


கல்கி பத்திரிகை தனது பிறந்த நாளைக் கொண்டாடும் இச்சமயத்தில் இப்பத்திரிகையின் வாசகர்களின் இல்லங்களில் எல்லாம் மகிழ்ச்சி பொங்கட்டும் என வாழ்த்துவது போல் இவ்விதழ் மேலட்டை அமைந்திருக்கிறது.

திரைப் பட வானில் 'ஊர்வசி'யாக ஜொலிக்கும் லக்ஷ்மியின் புன்னகைப் படத்தை எடுத்தவர் ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி மாணவர் மகேசுவரன். இவரது இன்னொரு புகைப்படம் 'சூரியோதயத்தில் மீனவன்!' அகில இந்திய இண்டர் மெடிகல் புகைப்படப் போட்டியில் முதல் பரிசு பெற்றது.

அட்டைப்படம்:



வேஷக்காரர்கள்



மணிப் புறாக்கள் கூட்டமாய்க் கூடித் தரையில் சிதறிக் கிடந்த தானிய மணிகளை மேய்ந்து கொண்டிருந்தன. மரக் கிளை யொன்றில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த கிழட்டுக் காகம் ஒன்று மெல்லக் கீழே இறங்கியது. அதற்கு நல்ல பசி. தானிய மணிகளை மேயலாம் என்றால் புறாக் கூட்டம் காகத்தைக் கிட்டே வரவிடாமல் விரட்டி விடும் என்கிற அச்சம்.

காகம் சற்று நேரம் யோசனை செய்த போது கீழே ஒரு மூலையில் சாம்பல் குவித்திருந்தது அதன் கண்ணில் பட்டது. காகத்தின் மூளை வேலை செய்தது. அந்தச் சாம்பல் குப்பையில் விழுந்து புரண்டது. நன்றாக உடம்பு முழுவதும் சாம்பலை அப்பிக் கொண்டது. தன்னைத் தானே திரும்பிக் கழுத்தை வளைத்துப் பார்த்துக் கொண்டது.

தைரியமாக மெல்லத் தாவிச் சென்று புறாக் கூட்டத்தின் நடுவில் போய் நின்று கொண்டது. அதுவும் புறாக்களோடு புறாவாக மணிகளை மேயத் தொடங்கிற்று. அதன் கறுப்பு நிறம் மாறிய சாம்பல் நிறம் முதலில் புறாக்களுக்குச் சந்தேகம் தரவில்லை.

சற்று நேரம் கடந்து புறாக்கள் காகத்தின் நடவடிக்கைகளைப் பார்த்துச் சந்தேகப்பட்டன. ''இவன் என்ன புது மாதிரியாய் நடக்கிறான்? எப்படியோ கழுத்தை வளைக்கிறான்? எப்படியோ கண்ணை உருட்டுகிறானே?'' என்றும் தங்களுக்குள் பேசிக் கொண்டன. என்றாலும் தங்களைப் போன்றே காகமும் சாம்பல் நிறத்தில் இருந்ததால், ஒருவாறு சமாதானப்பட்டு, ''இதுவும் புறா தான்.... உடம்பு சரியில்லை போலிருக்கிறது'' என்று பேசிக் கொண்டு தம் பாட்டில் இரை எடுக்கத் தொடங்கின.

காகம் தன்னுடைய வேஷம் வெளிப்படவில்லை என்கிற தைரியத்தில் தானிய மணிகளை மேய்ந்து கொண்டிருந்த போது திடீரென்று அது நடந்து விட்டது. மேலே பறந்து போன பருந்தோ எதுவோ நழுவ விட்ட செத்த எலி ஒன்று பொத்தென்று அங்கே விழுந்தது.

அதுவரை இரை எடுத்துக் கொண்டிருந்த காகத்தின் புத்தி மாறியது. தானியத்தை விட்டு விட்டுச் செத்த எலியின் மீது பாய்ந்து அதை உண்ணத் தொடங்கியது.

புறாக்கள் இப்போது புரிந்துகொண்டன. காக்கைப் பயல் வேஷம் போட்டு நம்மை ஏமாற்றி விட்டான் என்று ஆத்திரப்பட்டு அதைக் கொத்தி விரட்டின.

வெளி வேஷங்களினாலே ஒருவன் தேவனை அடைய முடியாது. முழுவதுமாய் மனம் ஈடுபட்டுத்தான் பக்தி செய்ய வேண்டும். சலனப்படுகிறவர்கள் இந்தக் காகம் மாதிரி வேஷம் வெளிப்பட்டுச் சங்கடப்படுவார்கள்.

கிறிஸ்துவ மதப் பிரசாரகர் பில்லி கிரகாம் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து: **சுப்ரபாலன்**



கடல் முயல் என்று ஒருவகை விலங்கு நான்கு மாதங்களில் 48 கோடி முட்டைகளை மாலை போன்ற சங்கிலித் தொடராகப் போடும்!
— அ. இராமச்சந்திரன்

இசை உலகுக்கு இவர்களது சேவை....

ஆக்கபூர்வமான எண்ணங்கள் என்பது வேறு. அவற்றை நிறைவேற்றுவது என்பது வேறு. இவை இரண்டுக்கும் இடையே உள்ள இடைவெளியை இட்டு நிரப்புவதுதான் சாதனை. சங்கீத கலாநிதி செம்மங்குடி ஸ்ரீனிவாசய்யரின் சீடர்கள் பலரும் ஒன்று சேர்ந்து தங்களது குருவின்சங்கீத சேவையைப் பாராட்டும் விதமாக அவர் பெயரில் ஒரு டிரஸ்ட் அமைத்து நன்கொடைகள் வசூலித்து அதன் மூலம் பல நற்பணிகளைச் செய்ய முன்வந்துள்ளது கர்னாடக சங்கீத வரலாற்றில் முக்கிய இடம் பெறுகிறது. இந்த யோசனைக்கு வித்திட்டவரும், திரு செம்மங்குடியின் சீடர்களுள் ஒருவருமான திரு வி. சுப்பிரமணியம், தனியார் நிறுவனமொன்றில் உயர் பதவியில் இருப்பதால் சங்கீதத்தை முழு நேரத் தொழிலாகக் கொள்ளாவிடினும் அதில் ஆழ்ந்த ஈடுபாடும் அசாதாரண ஆற்றலும் உடையவர். தாம் செய்யும் கச்சேரிகள் மூலம் வரும் பணத்தின் பெரும் பகுதியை இந்த டிரஸ்டுக்கும், மீதியைக் கோவில்களுக்கும் நன்கொடையாக அளிக்கிறார் என்பதை அறியும்போது, கர்னாடக சங்கீதம், அதனை உபாசிப்பவர்கள், ரசிகர்கள், தமது குரு ஆகியோரிடம் இவர் கொண்டுள்ள பற்றுதல் நன்கு புலனாகிறது. இவருக்கு உறுதுணையாகப் பிரபல வித்துவான்களும் செம்மங்குடியின் இதர சீடர்களுமான டி. எம். தியாகராஜன், டி. என். கிருஷ்ணன், பி. எஸ். நாராயணசாமி, வி. ஆர். கிருஷ்ணன் ஆகியோர் இந்த டிரஸ்டுக்காக உழைக்கிறார்கள். செம்மங்குடி சீனிவாஸய்யர் டிரஸ்டினர் தங்களைச் சில நல்ல காரியங்களில் ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றி வருகின்றனர்.

கர்னாடக சங்கீதத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு பயிலும் மாணவர்களில் தகுதியானவர்களுக்கு உதவிப் பணம் அளிப்பது. திறமை வாய்ந்த மூத்த வித்வான்கள் சிரம தசையில் இருந்தால், அவர்களுக்கோ அல்லது வித்வான்களின் மறைவினால் வறுமையில் வாடும் அவர்களது குடும்பங்களுக்கோ உதவிப் பணம் அளித்து உதவுவது, செம்மங்குடி போன்ற தலைசிறந்த வித்வான்களின் சங்கீத ரிக்கார்டுகளைச் சேகரித்து வைப்பது, கர்னாடக சங்கீதம் சம்பந்தப்பட்ட சிறந்த புத்தகங்களைத் திரட்டிச் சிறப்பான நூலகம் அமைப்பது, கர்னாடக சங்கீதக் கச்சேரிகளுக்காக ஓர் அரங்கம் கட்டுவது போன்ற நோக்கங்களைக் கொண்டு இந்த டிரஸ்டினர் செயல்படுகின்றனர்.

வயது குறைந்த நிலையில் இருக்கும் இரண்டு சங்கீத வித்வான்களுக்கும், காலஞ்சென்ற மூன்று வித்வான்களின் குடும்பங்களுக்கும் தற்போது மாதா மாதம் உதவிப் பணம் கொடுத்து வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் செம்மங்குடி சீனிவாசய்யரின் பிறந்த நாள் சமயம் சங்கீதக் கச்சேரிகள் ஏற்பாடு பண்ணி ரசிகர்களுக்கு இலவச இசை விருந்து அளித்து வருகின்றனர்.

இவ்வாண்டு நிகழ்ச்சிகளின்போது, கர்நாடக சங்கீதத்துக்குத் தொண்டாற்றி வரும் வித்வான் கே. ஆர். குமாரஸ்வாமி அவர்களை இவர்கள் கௌரவித்து உள்ளனர். இனி ஒவ்வொரு ஆண்டும் கர்னாடக சங்கீதத்துக்குத் தொண்டாற்றுபவர்களில் ஒருவரை இக்கச்சேரிகளின் போது கௌரவிப்பதாக உத்தேசம் கொண்டுள்ளனர்.

வித்வான் கே. ஆர். குமாரஸ்வாமி செம்மங்குடியின் மூத்த சிஷ்யர் ஆவார். ஆரம்பத்தில் மேசேரி சுந்தர சாஸ்திரிகளிடம்பதினைந்து ஆண்டுகள் சிட்சை பெற்று, பிறகு செம்மங்குடியிடமும் பயின்ற இவர், திருவனந்தபுரத்தில் உள்ள சுவாதித் திருநாள் சங்கீதக் கல்லூரியில் சங்கீத ஆசிரியராகவும் பிறகு முதல்வராகவும் சுமார் 28 வருடங்கள் பணியாற்றிக்கர்னாடக சங்கீதத்துக்குப்பெரும்தொண்டு ஆற்றியவர். தமது அற்புதமான கானத் திறமையால் ரசிகர்களின் மனத்தை வசிகரம் செய்யும் ஆற்றல் பெற்றுள்ள திருகுமாரஸ்வாமியை, செம்மங்குடி டிரஸ்டினர் தேர்ந்தெடுத்துக் கௌரவித்ததை விட அதிகமாகச் செம்மங்குடிக்கு வேறெதுவும் திருப்தியை அளித்திருக்க முடியாது என்பது நிச்சயம்.

—ரங்கா

✱ செம்மங்குடி ✱ வி. சுப்பிரமணியம் ✱ கே. ஆர். குமாரஸ்வாமிக்கு நீதிபதி ராமபிரசாத் ராவ் பொன்னாடை போர்த்துகிறார்!







பாட்டிமார்களும் பேத்திமார்களும்

ஜெயகாந்தன்

6. அமுதுவின் ஆசை!

கோதை பெரிய வீட்டின் பழைய காலச் சாமான்களையும், கலைப் பொருட்களையும் சூறை போகாமல் காப்பாற்றுவது இந்தக் குடும்பத்துக்குத் தான் செய்து தீர வேண்டிய கடமை என்று உணர்ந்தாள்.

ஒரு காலத்தில் தாய் தந்தையற்ற அநாதைச் சிறுமியாக, யாரோ உறவினர் வீட்டின் மாட்டுத் தொழுவத்தில் வாழ்ந்த தன்னைக் கைப்பற்றி அழைத்து வந்து இவ்வளவு செல்வச் செழிப்பில் ஒரு சீமாட்டியாக்கி விட்டுப் போன மருதேசன் பிள்ளையின் குடும்பமும் வீடும் தரை மட்டமாய் விழுந்து நொறுங்கிக் கொண்டு இருக்கும்போது என்பங்குக்கு வந்த சொத்தை நான் காப்பாற்றிக்கொண்டேன் என்று வாழ்கிற இந்த மனிதர்களின் வகையற்ற நியாயம் கோதைக்கு உடன்பாடா யில்லை. ஆயினும் அதற்காக அவள் சிங்காரத்திடம், தான் வளர்த்த இந்தச் சிறுபயலிடம் அவமானப்படுவது கூடாது என்ற உறுதியுடன் பணத்தைக் கொடுப்பதற்கும்; சாமான்களை வாரிக் கொண்டு போக வந்த அடவிக்காரர்களுக்குக் கூலி கொடுத்து அனுப்புவதற்கும் அவள் சாமியாரையும், வைத்தியையும் அடிக்கடி ஏவிக் கொண்டிருந்தாள்.

அவர்களுடன் கூடவே காந்திமதியும் ஓடிக் கொண்டிருந்தாள். சிங்காரம் குனிந்த தலையுடன் வீட்டு முன் திண்ணையில் யாரையும் எதிரிட்டுப் பார்க்காமல் யோசித்துக் கொண்டிருந்தான். வைத்தி கோதையிடமிருந்து கொண்டு வந்த பணத்தை அவன் முன்னால் வைத்தான். சிங்காரம் அதைத் தொடக்கூட இல்லை.

''சரி சரி இதை நீயே வெச்சுக்கோ. காந்தியக்கா 'இந்த வீட்டிலே ஒரு மணி அரிசி கூட இல்லை. அடுப்பிலே பூனை தூங்குது'ன்னு விளக்குச் சாமிகிட்டே போய்ப் புலம்பிக்கிட்டு இருந்திச்க, இதைக் கொண்டு போயி எல்லாம் வாங்கிப் போட்டுக்கச் சொல்லு. அது சரி. நாளைக்கு வந்துடுவானே துபாஷ் - 'டும்டும்'னு தமுக்குத் தட்டிக்கினு 'ஏலத்திலே எடுத்துக்கினு போறேன் – மருதேசன் வீட்டுக் குடும்பத்துப் பெருமையை எல்லாம்'னு வரப் போறானே, அப்ப என்ன பண்ணுவாளாம் இந்த விக்டோரியா மகாராணி?...'' என்று எரிச்சலுடன் கையிலிருந்த பீடியைத் தூக்கி எறிந்தான் சிங்காரம்

''நாளைக்கேவா மாமா ஏலம் எடுக்க வரப் போறாங்க?'' என்று திகிலுடன் கேட்டாள் அமுது.

''நாளைக்கின்னு இருபத்தி நாலு மணிநேரத்திலேன்னு அர்த்தமில்லே. சீக்கிரம்



நடக்கும்.... அதுக்குள்ளே நாம்ப என்னத்தைப் பொரட்டி சடு கட்டிடப் போறேம்... போயி உங்க பாட்டி கிட்டச் சொல்லு. அதுக்கும் ஏதாவது ஏற்பாடு பண்ணுன்னு..''

''எந்தப் பாட்டிக்கிட்டே?'' என்று அவ்வையாரம்மாவை நினைத்துக் கொண்டு கேட்டாள் அமுது.

''கோதைப்பாட்டி கிட்டத்தான். அவங்க இங்கே வரமாட்டாங்களாமே...'' என்று கோபத்துடன் கோதை இருக்கும் வீட்டின் திசையை வெறித்தவாறு உறுமினான் சிங்காரம்.

தனக்குக் கடனாகப் பத்தாயிரம் தர மறுத்த கோதை இப்போது அதில் பாதியைச் சும்மாவே கொடுத்து அனுப்பி இந்த வீட்டின் விலைமதிப்புடைய பொருள்களைக் காப்பாற்றியிருக்கும் செய்கைக்காக — அந்தச் சின்னம்மாவின் நல்லியல்புகளுக்காக அவனிடம் அன்பு பாராட்டவும், செய்த தவறுகளுக்காக மன்னிப்புக் கேட்கவும் அவன் தயாராக இருந்தான். இந்தச் சமயம் பார்த்து அவள் தன்னிடம் கோபித்துக் கொண்டிருப்பது விதியின் கொடுமை என்று நினைத்துக் கொண்டான் சிங்காரம்.

''மாமா! நீ கோவமா இருக்கியா? ஏதாவது கேக்கலாமா? அப்புறம் கோவிச்சுக்கறதானு நான் கேக்கலே'' என்று மெதுவான குரலில் கொஞ்சிக் கொஞ்சிக் கேட்டாள் அமுது.

''எனக்கென்ன கோவம்? அதான் சின்னம்மா பணம் கொடுத்து அனுப்பிடுச்சே!'' என்று ஒப்புக்குச் சிரித்தான் சிங்காரம்.

''அங்கே அம்மா ஒரு கூடைப் பூ வாங்கி வெச்சிருக்கு.... பசங்களுக்கெல்லாம் பூவச்சி ஜடைப் பின்னல் போட்டு விடுறுங்க.... நீ ரொம்ப அழகாப் பின்னிவிடுவியாமே எல்லாரும் சொல்றுங்களே!.... மாமா, மாமா... எல்லாருக்கும் நீ பின்னுவியாமே — எனக்கு உன் கையிலே பின்னிக்கணும்னு ரொம்ப ஆசையாயிருக்குது....'' என்று குழந்தை போல் கெஞ்சினாள் அமுது.


'குழந்தை போல் என்ன?' குழந்தைதானே இவள்' என்று நினைத்துக் கொண்டு அவளது குறுற்ற எழிலில் சுடரொளியைப் புதுமையாகப் பார்த்து ரசித்தான் சிங்காரம்.

''சரி.... பூவெல்லாம் எடுத்துக்கினு வா... உள்ளே போயிடலாம்... இங்கே எல்லாரும் பாத்துட்டு ஏதாவது சொல்லுவாங்க ...'' என்று எழுந்து உள்ளே போனான்.

அன்று சிங்காரம் தன் மனைவிக்குப் பூத்தைத்துப் பின்னிவிட்ட அழகையும் திறனையும் அந்தத் தெருவாசிகள் பார்த்துப் பார்த்து வியந்தனர்.

''பத்து வயதிலேயே அவன் என்னமாய் இந்த அலங்கார வேலைகள் எல்லாம் செய்வான்!'' என்று கோதை அமுதுவை அழைத்து அவளது ஜடை அலங்காரத்தையும் சிங்காரத்தையும் புகழ்ந்தாள்.

சிங்காரம் ஏதாவது உத்தியோகம் தேடிக் கொள்ள வேண்டும் என்று முனைந்தான். அதற்குக் காரணம் தம்பி வைத்தி, தனது சொந்த முயற்சியால் ஒரு சேட்டுக்





கோபுரக் கலசங்களில்....

திருக் கோவில்களின் கோபுரக் கலசங்கள் தாமிரத்தால் செய்யப்பட்டவை. சில திருக் கோவில்களில் தாமிரத்தின் மேல் தங்க முலாம் பூசப்பட்டுப் பொருத்தப்படுகிறது. எல்லாக் கோபுரக் கலசங்களிலும் உள்ளீட்டுப் பகுதிகளில் வரகு நிரப்பப்படுகிறது. எத்தனையோ தானியங்களிருக்கக் கலசங்களில் வரகு நிரப்பப்படும் காரணத்தை அறிந்தால், நம் மூதாதையர்களின் அனுபவ விஞ்ஞான அறிவை எண்ணி ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது! என்றும் எக்காலத்தும் கெடாமல், மக்கிப் போகாமல் உயிர்ப்புடன் விளங்கும் ஒரே தானியம் வரகு. இடியைத் தாங்கக் கூடிய திறன் மிகுந்த தானியமாகவும் அது கருதப்படுகிறது!

—குன்றக்குடி பெரியபெருமாள்

கடையில் எட்டு ரூபாய்ச் சம்பளத்துக்குக் கணக்கெழுதும் வேலையில் அமர்ந்து விட்டான். முதல் மாதம் சம்பளம் வாங்கிக் கொண்டு வந்து தன்னைத் தாயைப் போல் எடுத்து வளர்த்த காந்திமதியிடம் தந்து அவள் காலில் விழுந்து வணங்கினான்.

பாலிய விதவையாய் இந்த வீட்டிலே அண்டி வாழ்ந்து வருகிற அவளுக்குக் கிடைத்த இந்தப் பாக்கியம், இந்த வீட்டுக்குப் பட்டத்தரசியாக வந்த கோதைக்கு வாய்க்கவில்லையே என்று தனது சின்னம்மாவுக்காகச் சிங்காரம் ரொம்பவும் வருந்தினான். அவன் தனக்காக இவ்விதம் வருந்துவான் என்று நம்ப முடியாத அளவுக்குச் சிங்காரத்தின் மீது மனஸ்தாபம் கொண்டிருந்தாள் கோதை. அதை மாற்றுவதற்காகவே தானும் ஏதாவது ஓர் உத்தியோகம் பார்த்து அமர்ந்து கொள்ளும் ஆசை ஏற்பட்டது அவனுக்கு.

ஆனால் வைத்தியைப் போல் சிங்காரத்தால் எடுபிடி வேலைகள் செய்ய முடியாது. இன்னொருவன் அதிகாரம் செய்தால் தாங்கிக் கொள்ள முடியாது. மற்றவர்களுக்கும் சிங்காரத்தின் இத்தகைய சீமான் பண்புகள் தெரியுமாதலால் இவனது உத்தியோக ஆசையை அவர்கள் பரிகாசம் செய்தார்கள்.

மறுபடியும் - இந்தச் சூழ்நிலையில், தான் மாணவப் பருவத்தில் படிக்காமல் அக்கரைக்குப் போய்த் திரிந்து தனது எதிர்கால வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்ட சம்பவங்களை எண்ணி வருந்தினான் சிங்காரம்.

அந்த நினைவுப் புகையின் நடுவே அவனுக்கு டானியல் பாதிரியாரின் முகம் நினைவுக்கு வந்தது. அவர் அவனது கல்யாணத்துக்கு ஆசி வழங்க வந்திருந்தார். அந்தப் பள்ளிக் கூடத்தைக் கட்டுவதற்குச் சிங்காரத்தின் தந்தை என்ன தாராள சிந்தையுடன், உயர் நோக்கத்துடன் பொருளுதவி செய்தார் என்பதையெல்லாம் எல்லாரும் அறிய எடுத்துச் சொல்லிச் சிங்காரத்தைப் பெருமைப்படுத்தினார்.... என்ற நினைவுகள் வந்து ஒரு நாள், ரொம்பவும் மனம் கசந்த நிலையில் டானியல் பாதிரியாரைத் தேடிக் கொண்டு ஓடினான் சிங்காரம்.

அவன் இதுவரை அந்தப் பள்ளிக்கூடத்துக்குச் சலங்கையொலித்துக் கட்டியங் கூறி வரும் வண்டியிலல்லாது நடந்து வந்ததே இல்லை. தான் நடந்து வருவதை 'யாரும் பார்த்துவிடக் கூடாது என்ற உணர்ச்சியினால் ஏற்பட்ட அவசரமோ என்னவோ — சிங்காரம் அதிவேகமாகப் பாய்ந்து பாய்ந்து நடந்து பள்ளியின் பிரதான வாசல் வழியாக வந்து கொண்டிருப்பதை மேல் மாடியில் உலாவிக் கொண்டிருந்த டேனியல் பார்த்து விட்டு ''குட் ஈவினிங் சிங்காரம்.,. இந்தப் பக்கமாக மாடிக்கு வா'' என்று உற்சாகமாகக் கூவினார்.

'ஓ! இன்று ஞாயிற்றுக் கிழமையா! அது தான் பள்ளிக்கூடமே நிசப்தமாகஃ இருக்கிறது!' என்று நினைத்துக் கொண்டு அந்தக் காலத்தில் பயந்து நடுங்கிக் கொண்டு செல்வது போன்ற குழந்தை மனத்தோடு சிங்காரம் டானியல் பாதிரியாரின் அழைப்புக் குரல் கேட்டு மாடிக்கு ஓடினான்.

(அடுத்த இதழில் முடியும்)




ஒரு கிலோ தேன் உற்பத்தி செய்ய ஒரு தேனீ ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் துளிகளைப் பூவிலிருந்து சுமந்து வர வேண்டும். தேன் கூண்டிலிருந்து மலர் வனம் ஆயிரத்து ஐநூறு மீட்டர் தூரத்திலிருந்தால் தேனீ ஒரு துளித் தேனை சுமந்து வர மூன்று கிலோ மீட்டர் தூரம் பறக்க வேண்டும். எனவே ஒரு கிலோ தேனைச் சேகரிக்க நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் கிலோ மீட்டர் பறக்கிறது. அதாவது - பூமியைச் சுற்றி எட்டு முதல் பதினொரு முறை செய்யும் பிரயாணத்திற்குச் சமமாகும் இது.

—அ. இராமச்சந்திரன்

வைரங்கள்

சுஜாதா



பத்தொன்பதாம் நூற்றாண்டு.

அவன் கண்களைப் பிடுங்கினார்கள்; சித்திர வதை செய்தார்கள்.' ஷாஷுஜா தன்னிடமிருந்த கோஹினூர் வைரத்தைக் கொடுக்க மறுத்தான்.

''வைத்தியக்காரனே! கேவலம் ஒரு கல்லுக்காக இத்தனை அல்லல் படுகிறாயே!''

கண்களில் ரத்தம் வழிய அந்த ஆப்கானிய இளவரசன் பதில் சொன்னான்: ''அது அதிர்ஷ்ட வைரம்!''

இன்று.....

அத்தியாயம் 1
ராலிமுக்கு

ராலிமுக்கு என்ற அந்த இடத்துக்கு எப்படிப் பெயர் வந்தது என்பது நம் சர்ச்சையில்லை. கோவை — பாலக்காடு பாதையில் தமிழ்நாட்டுப் பகுதியில் பிரதான சாலையிலிருந்து விலகும் மண் பாதையில் சரேல் என்று இருப்பத்தில் இருக்கிறது ராலிமுக்கு.

அதைக் கிராமம் என்றோ டவுன் என்றோ சொல்ல முடியாது. ஓர் இடம்; அவ்வளவு தான். நெடுப்பாக்கம் பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டது. பஞ்சாயத்திலிருந்து புறம் போக்குப் பனை மரங்களில் பதனீர் இறக்கத் தினம் ஒரு பள்ளன் வருவான். பெரியசாமி கடையில் சின்னப் பழுப்புச் சீட்டைக் கிழித்துக் கொடுத்து விட்டுக் காசு வாங்கத் தினம் ஓர் இளைஞன் வருவான். பஞ்சாயத்துச் சார்பில் ராலிமுக்குக்குக் கிடைத்திருப்பது ஒரே ஒரு ட்யூப்லைட்டு. அது கூட ராப்பூரா கக்கிக் கொண்டே இருக்கும் பக்பக் என்று.

ராலிமுக்கு ஏறக்குறைய மலையின் மடியில் இருக்கிறது. ஆல மரங்களின் நிழலடியில் ஒன்றிரண்டு ஓட்டு வீடுகள். நீலவானம் நடனமாடும் ஒரு சுனை. சுமை தாங்கிப்பாறை. சுற்றிலும் தரிசு நிலம். கொஞ்சம் கொஞ்சம் அங்கொன்றும் இங்கொன்றுமாக பச்சை சதுரங்கள். சற்று அஜாக்கிரதையாக இருந்தால் கவிதை எழுதத் தோன்றும். கொஞ்ச நேரம் பொறுமையாகக் காத்திருந்தால் உடல் முழுவதும் மயூர நீலமுடைய 'மலபார் விசிலடிச்சான்' என்னும் அக்காக் குருவியின் ஏற்ற இறக்கச் சீட்டிகளைக் கேட்கலாம்.

ராலிமுக்கிலிருந்து ஒன்றரை இரண்டு மைல் தொலைவில் க்வாரி இருக்கிறது. அங்குள்ள மெஷின்கள் கடித்துப் பொடி பண்ணும் கற்கள் நாகரிகத்தை நோக்கி லாரிப் பிரயாணம் போகும் போது டிரைவர்கள் இங்கே கொஞ்சம் நிறுத்திப் பெரியசாமி கடையில் டீத் தண்ணீர் சாப்பிட்டு விட்டுச் செல்வார்கள். ஏறக்குறைய எல்லோரும் நிற்பார்கள்.

டீக்கடை என்று சொல்ல முடியாது. வேளைக்கு வேளை கடையின் இலட்சணங்கள் மாறும். அதிகாலை க்வாரிக்கு மொட்டை டிபன் பாக்ஸுடன் நடப்பவர்கள் நின்று வாங்கும் டீ; ஏலக்காய் கலந்து தூக்கக் கலக்கத்தைப் போக்கும் டீ; அப்புறம் லாரிக்காரர்கள் வந்து பருகும் காட்டமான ஏறக்குறைய மழை நாட்களில் செம்மண் பாதை நிறத்தில் டீ; மத்தியானம் முன்னே சொல்லி வைத்திருந்தால் புழுங்கல் அரிசியும் இறைச்சியும் நல்ல கெட்டியான மோரும் கிடைக்கும். சாயந்திரம் மறுபடி டீ கிடைக்கும். பொழுது சாய்ந்ததும் அன்னியோன்யமானவர்களுக்கு அண்டை மாநிலத்துச் சாராயம் கிடைக்கும்.

கடையின் சாமுத்திரிகா லட்சணங்கள்: புகை படர்ந்த கூரையிலிருந்து தொங்குகிற பெட்ரோமாக்ஸ், ஒரு கயிற்றுக் கட்டில், ஒரு பெஞ்சுப் பலகை, அலமாரி போன்ற ஒரு சமாச்சாரம் - அதில் கண்ணாடி ஜாடிக்குள் பன்கள். நீட்டலாக பிஸ்கோத்துகள். ஒன்றிரண்டு சந்தோஷ நாய்கள். விவேகாநந்தர் படம். கொஞ்சம் தள்ளினாற் போல் எப்போதும் ஈரமாக ஓர் இடம். தட்டி மறைத்து ஒரு சமையலறை. வெளியே ஒரு பசுமாடு. குட்டிச்சுவரில் சாணி வட்டங்கள்.

ஆனி மாதம். வெள்ளிக் கிழமை. மழை மேகங்கள் இருட்டு ராட்சசர்களாகச் சூழ்ந்திருந்ததால் மத்தியானம் மூன்று மணி ஆறு மணி போலிருந்தது. மழை பெய்யாமல் எதிர்பார்த்து அந்தச் சதுரமைலே புழுங்கிக் கொண்டிருந்தது. பளீர் என்று மஞ்சள் பெயிண்ட் அடித்த அந்த லாரி கருமேகப் பின்னணியில் ஜகஜக என்று அதிர்ந்து கொண்டு அதன் இரட்டை ஹாரன் கட்டியங்கூற வருகை தந்து நின்றது. கழுத்தில் கைக்குட்டை கட்டிய ஒரு க்ளீனர் பையன் குதித்து இறங்க லாரியின் டிரைவர் பெருமிதத்துடன் இறங்கினான். புத்தம்புதிய பென்ஸ் லாரி. அதன் தோற்றத்தில் ஒரு பொலி காளையின் ஆணவம் இருந்தது.

டிரைவர் கடைவாசல் கயிற்றுக்கட்டில்மேல் சலுகையாக உட்கார்ந்தான். க்ளீனர் சிறுவன் அவன் புஜங்களைப் பிடித்து விட்டான்.

டிரைவரின் பெயர் தாஸ். புஜத்தில் கருக மணிக் கயிறு கட்டி யிருந்தான். எடுப்பாகத் திருகி விட்ட மீசை. லாரிக்கேற்ற டிரைவர். மிகச்சதுரமான திராவிட முகம். பெரிய உதடுகள். காலன் கணக்கில் குடிப்பவன் போல் தோன்றினான்.

''என்ன மாப்பிளே!'' என்றான்.

கடையிலிருந்து பெரியசாமி ஒரு தம்ளரில் டீயுடன் வெளிப்பட்டான்.

''வாங்கய்யா'' என்றான்.

''சலாம் அண்ணே!'' என்றான் சிறுவன். பெரியசாமிக்கு முப்பது வயது இருக்கும். நல்ல வெளுப்பான பனியன், காக்கி டிராயர் மேல் டப்பாக் கட்டு. தலையில் சுற்றிச் செருகிய முண்டாக, காதில் ஒரு பென்சில், அடர்த்தியான புருவங்கள், எட்டுநாள் தாடி, நெற்றியில் பச்சை குத்தின பொட்டு. அவனுக்கு சிறு வயதில் காது குத்தி ரொம்ப நாள் கடுக்கன்



போட்டிருக்க வேண்டும். சின்னச் சின்ன ஒட்டைகள் இருந்தன.

''எங்கே சம்சாரம்?'' என்றான் தாஸ்.

''நெலத்துப் பக்கம் போயிருக்கு.''

''இந்த வருசம் என்ன உளுந்தா?''

''ஆமாங்க.''

''வந்துருமா?''

''மழை வந்தா வந்துரும்.''

''நான் உளுந்தைச் சொல்லலே, உம் பொஞ்சாதியை.''

''கொஞ்ச நேரமாவும்.''

லாரிக்காரன் கட்டிலில் சாய்ந்து தன் மீசையைப் பின் விரல்களால் ஒரு தடவை தடவிக் கொண்டான்.

''எங்கே பொண்ணு?''

''விளையாடுது. உங்களைப் பார்த்தா ஓடி வந்துடும்.''

''கூப்பிடேன்!''

''அண்ணே! புது வண்டி பார்த்தீங்களா?''

''ஆமா! புதாசு! என்ன தாஸண்ணே!''

''எஜமானரு புதுசா வாங்கியிருக்காரு.''

''எவ்வளவு?''

''ஒரு லட்சம்!''

''அடங் கொன்னியா!'' என்றான் பெரிய சாமி ஆச்சரியத்துடன். அவனுக்கு லட்சத்துக்கு எத்தனை சைபர் என்று தெரியாது. நிறையப் பணம்.



"துபாய்ல ரெண்டு வருஷத்தில பத்து லட்சம் சம்பாதிச்சிருக்காரு. உம்மாதிரி டீக்கடை வெச்சுத்தான்! பெரியசாமி துபாய் போறியா?"

"அது எங்கய்யா இருக்குது? பகவதி கோயிலுக்கு அப்பாலயா?"

"சேச்சே! கடல் தாண்டி வேற தேசம். பாஸ்போர்ட்டு வேணும். பர்மிட்டு வேணும்."

"வாண்டாங்க!"

"பத்து லெச்சம் மாப்பிளே!"

பெரியசாமி சிரித்தான். "எவக்கு இந்த ராவிமுக்கு. என் மனோகரி, கையகலம் நிலத்தில் கொஞ்சம் உளுந்து. என் பொண்சாதி திலகம் - இது போதுங்க!"

"எங்க இன்னும் காணலியே!" தாஸின் கண்கள் அலைந்தன.

"வந்துருங்க! அப்புறம் மனோகரிக்குச் சரியாயிடுச்சின்னு அதுவே எனக்குப் பத்து லட்சம்!"

தாஸ் தன் உடம்பு பிடித்து விட்டுக் கொண்டிருந்த சிறுவனிடம் "டேய் காதர்! அதோ பாரு அந்தப் 'பொண்ணைக் கூட்டிக்கிட்டு வாடா!" என்றான்'

காதர் வாயில் விரல் வைத்து "உய்யு உய்" என்று விசிலடித்து "ஏய் பொண்ணு" என்றான்!

தாஸ் அவன் மண்டையில் அடித்து "ஏய்! அந்தப் பொண்ணுக்குக் காது செவுடு. கிட்டப் போய்த் தொட்டுக் கூட்டாத்தான் வரும் ஓடுரா... கான்னி விசிலடிக்கிறான் பாரு மைனாக் குருவி யாட்டம்! எங்கடா கத்துக்கிட்ட?"

க்ளீனர் சிறுவன் ஓடிப்போய்த் தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த பெரியசாமியின் மகளைத் தொட்டான். அந்தப் பெண் திரும்பிப் பார்க்க அங்கிருந்து இவர்களைக் காட்டி,


"உங்கப்பா கூப்பிடுது அப்பா, அப்பா" என்று மிகைப் படுத்தி பாவனை அதிகமாகச் சொன்னான். அந்தப் பெண் ஓடி வந்தது. முகம் மலர்ந்து ஒரே ஓட்டமாக ஓடியது. காதர் கூட ஓடி வந்தான்.

அந்தப் பெண் தன்னை நெருங்கி வருவதைப் பார்த்து தாஸ் தன் பையிலிருந்த பட்டை சாக்லெட்டை எடுத்துக் கொடுத்தான். "வாங்கிக்க மகளே!" என்றான்.

சென்னை அண்ணா நகரில் ஒருவர் வீட்டு வரவேற்பு அறையில் கீழ்க்கண்டவாறு எழுதி மாட்டப்பட்டிருந்தது.

எங்கள் வீடு கனோபரமாக இருப்பதைக் கண்டாலும், உள்ளே வாருங்கள், உட்காருங்கள், பேசுங்கள். எங்கள் வீடு எப்பொழுதுமே இப்படி காணப்படாது. சில நாட்களில் இதைவிட மோசமாக இருக்கும்.

—கமலா பார்த்தஸாரதி



அந்தப் பெண் பெரியசாமியைப் பார்த்தது: அவன் கண்ணால் அனுமதி கொடுத்தபின் தன் கையிலிருந்த கல்லைப் பாவாடை ஓரத்தில் சுற்றி முடிந்து கொண்டு அந்தச் சாக்லெட்டை வாங்கிக் கொண்டது.

பெரியசாமியின் மகள் பேர் மனோகரி. அவளுக்கு எட்டு வயசிருக்கும். மனோகரியின் உலகம் மிகவும் மௌனமான உலகம். சிங்காநல்லூருக்கு அருகில் ஒரு கிராமத்தில் ஒரு லோகல் ஃபண்ட் ஆஸ்பத்திரியில் மனோகரி பிறந்த போது குழந்தை நன்றாகத்தான் இருந்தது. ஒரு வருஷம் வரை அதனிடம் எதுவும் கோளாறு இருப்பதாகப் பெரியசாமியும் திலகமும் சந்தேகிக்கவில்லை. குழந்தை கொஞ்சம் மந்தமாக இருந்ததாகப் பட்டது, அவ்வளவு தான். "நான் கூட மூணு வயசிலேதான் நடக்க ஆரம்பிச்சேனாம். அஞ்சு வயசுக்குத்தான் பேசவே தொடங்கினேனாம்" என்று சொல்லிக் கொண்டு மனோகரிக்குப் பிறவியிலேயே இருந்த காது கேளாக் குறையைக் கவனிக்காமல் விட்டு விட்டார்கள். குழந்தை பேசவே இல்லை. திருதிரு என்று விழித்தது: அஞ்சாம் வயசில் கோயமுத்தூர் பெரிய ஆஸ்பத்திரியில் கொண்டு காட்டின போது காதில் மருந்து போட்டார்கள். பெரிசாக எட்போன் மாட்டி ஏதேதோ கருவிகளைத் திருகித் திருகிப் பார்த்து பழுப்புக் காகிதத்தில் எழுதி எழுதித் திரும்பத் திரும்ப வரச்சொல்லிக் கடைசியில் "சின்னப் பிள்ளையிலேயே கொண்டு வந்திருக்கணும். காது கேக்கற நரம்புகள் டாமேஜ் ஆயிருக்குது" என்றார்கள்.

"பேச்சாவது வருங்களா?"

"காது கேட்டாத்தானே பேச்சு வரும்!"

"சரிதான்!"

அங்கிருந்து மருதமலைக்குச் சென்றார்கள்; முருகனுக்கு வேண்டிக் கொண்டார்கள். அப்புறம் சாமிஇரி சித்த வைத்தியரிடம் காதுக்கு, தைலம் விட்டுக் கொண்டார்கள். ம்ஹூம், தெய்வ சக்தியோ, அலோபதியோ சத்தமோ மனோகரியின் மௌன உலகைக் கலைக்கவில்லை.

பெரியசாமியும் திலகமும் ஆரோக்கியமானவர்கள்தான். திடகாத்திரமானவர்கள்தான். இருவருக்கும் பிறந்த முதல் குழந்தைக்கு இந்தப் பிறவிக் குறை இருப்பதற்குக் கிராமத்தில் சுலபமாகக் காரணங்கள் கிடைத்தன முனீஸ்வரனின் கோபம், பௌர்ணமியில் பாம்பைப் பார்த்தது, கார்த்திகை மாசம் உண்டானது... எத்தனையோ காரணங்கள்

மனோகரி பெரிய கண்களுடன் அழகாக இருந்தாள். அவள் தன் கண்களின், மனத்தின் மூலம் உணரும் பிரத்தியேக உலகத்தை அச்சடித்த எழுத்தில் வார்த்தைகளில் எப்படிச் சொல்ல முடியும். ஒரு புல னுணர்வு முழுமையாக நீக்கப்பட்ட மனத்திரை வடிவங்களை எப்படி நான் சொல்லுவேன்.

மனோகரி தன் மடியில் பத்திரமாகக் கட்டி வைத்திருந்த கல்லை எடுத்து பெஞ்சு மேல் வைத்து ஓர் ஆணியை ஒன்றிரண்டு தடவை தட்டி விட்டு காதரைப் பார்த்துச் சிரித்தாள். அந்தச் சிறுவன் அவளை அருகில் சென்று தன் ஒரு காதை இழுத்து அதே சமயம்

நாக்கை நீட்டினான். மனோகரி நிறையச் சிரித்தாள். ''பா...வங்க!'' என்றான், சின்ன தாகத் தூற்றல் போட்டது.

தாஸ், ''அப்ப நான் வரேன். திரும்பற போது பார்க்கலாம்'' என்று எழுந்து. ''வாடா காதரு'' என்றார். காதர் ஒரே ஓட்டமாக ஓட, லாரி புறப்பட்டதைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் மனோகரி.

லாரி கிளம்பின பின் இலகம் வந்தாள். ''இத்தனை நாளி அந்தாளு தாஸ~ காத் திருந்துட்டு இப்பத்தான் போறாரு'' என்றான் பெரியசாமி.

''அவர் போவட்டும்முனுதான் நான் கொஞ்சம் தள்ளியே வந்தேன்'' என்றாள் இலகம்.

''ஏன்?''

''ஏன்! கேக்கறதைப் பாரு! அந்தாளைப் பார்த்தா எனக்கு பயமாயிருக்குதுய்யா!''

''மிலிட்ரில இருந்த ஆளு! கொஞ்சம் தாட்டியமா இருக்கிறாராமா!''

''தாட்டியமா இருந்தா என்ன? நான் அதைச் சொல்லலியா!''

''ரொம்ப நல்லவரு. மனோகரிக்கு மிட் டாய் வாங்கியாந்திருக்காரு.''

மனோகரி தன் பாவாடையில் மற்றொரு கோடியில் முடிந்து வைத்துக் கொசகொச வென்றிருந்த சாக்லேட்டுத் துண்டு ஒன்றை எடுத்துத் தன் தாய்க்குக் கொடுத்தாள்.

''என் செல்லமே! கண்ணுக். குட்டி பெத்த தாய்க்குன்னு முடிஞ்சு வைச்சிருக்குது. பாருங்க, இதுக்கு இருக்கிற சாமர்த்தியம்! ஏய், பைத்தியம்! என்ன பார்க்கறே! என்ன வேணும்?''

மனோகரி 'உம்' 'ஆ' என்று வேறு வேறு சப்தங்கள் செய்து தன் அபரிமித சந்தோஷத் தைக் காட்டினாள்.

மனோகரிக்கும் இலகத்துக்கும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதில் எந்தவிதச் சிரம மும் இருந்ததில்லை. கண்களும் கைகளும் தொடுகைகளும் முத்தங்களும் அவர்கள் பாஷையில் போதுமான வார்த்தைகள். அந்த அகராதியில் போதுமான அன்புப் பக்கங்கள் இருந்தன அவர்களுக்கு. எப்படியோ அந்தக் குழந்தை தன் தாயின் உதட்டு அசைவுகளைத் துல்லியமாகப் படித்து விடுவாள்.

''எங்கடி போயிருந்தே?''

அதோ! அதுவரைக்கும்என்று தூரத்தில் காட்டியது.

''என்ன செஞ்சுக்கிட்டிருந்தே!''

வீடு கட்டிக்கிட்டிருந்தேன்.

மனோகரி பெஞ்சுப் பக்கம் சென்று அந்தக் கல்லை எடுத்து வந்து காட்டினாள்.

இதை அங்கே கண்டெடுத்தேன்.

சரி என்று தலையாட்டினாள் தாய்.

'நீ வெச்சுக்க' என்று சைகை செய்தது குழந்தை.

''சரி'' என்றாள் இலகம். ''இத பாருங்க, உங்க மக எனக்காகக் கொண்டுட்டு வந் திருக்கா! கூளாங்கல்லு!'' என்றாள்.

இலகத்துக்கு இருபத்தி ஐந்து வயசிருக்கும். தாஸ் அவள் வருகைக்குச் சற்று நேரம் காத்



கிரிக்கெட்டில் 'டக் அடித்தான்' என்றால் ஒரு ரன் கூட எடுக்கவில்லை என்று அர்த்தம். 'கோல்டன் டக்' என்றால் என்ன தெரியுமா? விளையாட்டு ஆரம்பித்த முதல் பந்திலேயே அவுட் ஆகிவிடுவது!

—ராமுசாமி

இருந்ததன் ரகசியம் இலகத்தைப் பார்த்த உடன் உங்களுக்குப் புரியும். பெரியசாமியின் உயரமே இருந்த இலகம் வனப்பாக இருந் தாள். சற்று செம்பட்டைத் தலைமயிர். இயற்கையாகவே முரட்டுப்படிமனுக அடர்ந்த தலைமயிர். கண்கள் பெரிய வட்டங்க ளாகவும் மூக்கு சின்னதாகவும் மிகச் சிறிய உதடுகளும் சற்று அதிகப்படியான கீழுதடும் நீண்ட கழுத்தும் – இதற்கு மேல் வருணிக்க வேண்டுமானால் ஓவியர் ஜெயராஜின் படத் தோடு ஒப்பிடலாம்!

இலகம் தன் நகத்தைப் பிய்த்துக் கொண்டே இருக்க ''தாஸ் மறுபடி வரேன் னுரு'' என்றான் பெரியசாமி.

''எதுக்காம்?''

''உன்னைப் பார்க்கணும்னுரு!''

''என்னை எதுக்குப் பார்க்கணுமாம்!''

''சும்மாத்தான் விசாரிக்க!''

''தத்! வேற வேலையில்லை! என்னடி சொல்லுறே!'' மனோகரி அவள் புடவையைப் பிடித்து இழுத்து அந்தக் கல்லை அவள் தலைப் பில் முடிச்சுப் போட முயற்சி செய்து கொண் டிருந்தாள்.

முதல் தடவையாகத் இலகம் அந்தக் கல்லைச் சுற்றிக் கூர்ந்து நோக்கினாள்.

''இது என்ன கல்லுங்க!'' என்று தன் கணவனிடம் காட்டினாள்.

அவன் அதை வாங்கித் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அழுக்காக இருந்தது. உள்ளுக் குள் ஒரே ஒரு தடவை பளிச்சென்றதை அவன் கவனிக்கத் தவறி விட்டான்.

''கூழாங்கல்லு! அல்லது படிக்காரமா இருக்கும்!'' என்று அதைத் தூக்கி எறிந் தான். மிக அழுக்கான, தீட்டப்படாத அந்தக் கல்லின் அப்போதைய, நிலையில் அதை மிக மிக விலை உயர்ந்த வைரம் என்று எவராலும் சொல்லியிருக்க முடியாது. (தொடரும்)

மணி 8.30 ஆயிற்று. அவசர அவசரமாகக் கையில் புத்தகங்களை எடுத்துக் கொண்டு கிளம்பினாள் சுதா. ''ஏண்டி இன்னிக்கு காலேஜுக்குப் போகணுமா என்ன? வீட்டில் விசேஷம் நடக்கும்போதுகூட லீவு போடக் கூடாதா?'' என்று அங்கலாய்த்துக் கொண்டாள் அவள் அம்மா.

சுதாவின் அக்காவுக்கு அடுத்த வாரம் திருமணம். அதற்காக அன்று சுமங்கலிப் பிரார்த்தனை நடந்து கொண்டிருந்தது. ''போம்மா, சுமங்கலிகள்தான் இங்க இருக்க வேண்டும்? எனக்கென்ன? இன்று பிராக்டிகல்ஸ் வேறே இருக்கு, போயே ஆகணும். அடுத்த வாரம் பூராவும் தான் லீவு 'போட்டிருக்கேனே'' என்று பதில் சொல்லிக் கொண்டே மாடிப்படிகளில் தாவி இறங்கினாள் சுதா.

திணறிக் கொண்டு வந்து நின்றது பஸ். முண்டியடித்துக் கொண்டு ஏறி லேடீஸ் ஸீட் அருகே வந்து நின்று கொண்டவள், ''ஹௌ லக்கி ஐயாம்'' என்று வியந்து கொண்டாள். விஷயம் வேறு ஒன்றுமில்லை, லேடீஸ் ஸீட்டில் இருந்த ஒரு பெண் அடுத்த ஸ்டாப்பில் இறங்குவதற்காக எழுந்ததால், அவளுக்கு உட்கார உடனே இடம் கிடைத்து விட்டது. உட்கார்ந்து பக்கத்துப் பெண்ணிடமிருந்த வாரப் பத்திரிகையைப் படிக்கத் துவங்கியவள் சிறிது நேரத்தில் சுற்றுப்புறத்தை மறந்தாள்.


ஒருமுறை சடன் பிரேக் போட்ட போது தான் நிமிர்ந்து பஸ்ஸின் உள்ளே கண்களைச் செலுத்தினாள். சட்டென்று அவள் பார்வை எதிரே நின்றிருந்த அந்த வாலிபன் மீது படிந்து நின்றது. அவன் அணிந்திருந்த உடைக்கும், கையிலிருந்த பொருளுக்கும் பொருத்தமில்லாமல் இருந்தது. அழகாக புளு கலர் ஸஃபாரி ஸூட் போட்டுக் கொண்டிருந்தவன் கையில் ஒரு துணிப்பையும் அதில் சில ஜல்லிக்கரண்டிகளும் இருந்தன. திருமணங்களில் பூந்தி செய்ய உபயோகிக்கும் பெரிய கரண்டி அது. அந்தக் காம்பினேஷன் அவளுக்கு விநோதமாகப் பட்டது.

அவனையே சிறிது நேரம் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தவள் இடுப்பை ஏதோ இறுக்குவதை உணர்ந்தாள். நிலைமை சில விநாடிகளில் புரிந்து விட்ட போது பயத்தில் மூச்சே நின்று விடும் போலிருந்தது. 'ஹால்டான், ஹால்டான்' என்று கத்தியபடி எழுந்தாள்.

திணறும் கூட்டம் வலப்பக்கம் அதிகமானதால், பஸ் டயர் ஸீட்டில் தேய்ந்து தேய்ந்து லேடீஸ் ஸீட்டில் கால் வைக்கும் இடத்தில் ஓட்டைகள் விழுந்திருந்தன. ஒரு திருப்பத்தில் டயர் ஸீட்டில் தேய்கையில் சுதாவின் நைலக்ஸ் புடவையின் நுனிஓட்டைக்குள் சரியாக மாட்டிக் கொள்ள, பல்லவன் ஒரு நொடியில் துச்சாதனன் ஆக மாறி, அவள் புடவையை சக்கரத்தில் சுற்றிக் கொண்டான். பஸ்ஸின் ஓட்டத்துக்கும், நைலக்ஸ் புடவைக்கும் நடந்த போராட்டம் ஒரு நிமிஷமே தான் என்றாலும் அதற்குள் பாதிப்

ஓடும் பஸ்ஸில் ஒரு-வாலிபன்

அபிராமி



புடவை கிழிந்து சக்கரத்தில் மாட்டிக் கொள்ள, உள்ளுடையுடன் நவீன திரௌபதியாக நின்றாள் சுதா.

மார்பில் மட்டும் இறுகப் பற்றிய புடவையுடன் உள் பாவாடையோடு நின்ற அவளை அனைவரும் பரிதாபமாகப் பார்த்தனர். அவர்களின் பார்வைகள் மேய்ந்த இடங்களை மறைக்கத் திணறிய அவள் கண்கள் குளமாயின. அப்போதுதான் அந்த ஜல்லிக் கரண்டிகள் ஏந்திய வாலிபன் எதிர்பாராத காரியம் ஒன்று செய்தான். சட்டென்று தன் துணிப்பைக்குள் கைவிட்டு அட்டைப் பெட்டி ஒன்றை எடுத்தான். பிரபல துணிக்கடையின் பெயர் தாங்கிய அப் பெட்டியை அவளிடம் நீட்டியபடி, ''இறங்கி எதிரே தெரியும் வீட்டுக்குச் சென்று இந்தப் புடவையை அணிந்து கொள்ளுங்கள்'' என்றான். அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. அவனுக்கு நன்றிகூடத் தெரிவிக்காமல் இறங்கிப் புடவையுடன் எதிர் வீட்டுக்குள் ஓடினாள்.

அவள் வரும்வரை காத்திருக்கப் பொறுமையின்றிக் கிளம்பியது பஸ். 'அடக்கமா இழுத்துச் சொருகிண்டு வரக்கூடாதோ? 'ஹூம் பல்லவன் பஸ்களே இப்படி ஓட்டை உடசல்தான்' - இப்படிப் பலவித விமர்சனங்களுடன் பஸ் ஓடிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அனைவரும் தங்கள் அலுவல்களைப் பற்றிப் பேசுவதில் அவளை மறந்துவிட்டனர்.

அரைகுறை ஆடையுடன் அந்த வீட்டினுள் நுழைந்த சுதா, அவசரமாகக் கதவைச் சாத்திக் கொண்டாள். பிறகுதான் வீட்டினுள் யார் இருப்பது என்று நோட்டம் விட்டாள். எவரும் தென்படவில்லை. 'மாமி' என்று குரல் கொடுத்தாள். பின்பக்கத்திலிருந்து வயதான அம்மாள் ஒருத்தி 'யார் வேணும்?' என்று கேட்டுக் கொண்டே புடவைத் தலைப்பில் கையைத் துடைத்துக் கொண்டு வந்தாள். பாதி கிழிந்த புடவையுடனும், கையில் ஒரு புடவைப் பெட்டியுடனும் நின்ற பெண்ணைக் கண்டதும், ஆச்சரியத்தில் அவள் புருவங்கள் உயர்ந்தன.

'கொஞ்சம் புடவை மாத்திண்டு போயிடறேன் மாமி. பஸ் சக்கரத்தில் மாட்டிக் கொண்டு புடவை கிழிந்து விட்டது' என்று கெஞ்சும் குரலில் கேட்டாள், புடவைப் பெட்டியைப் பிரித்தபடியே. உள்ளே மயில் கழுத்துக் கலரில்; நீல பார்டரில் அழகான மெல்லிய சரிகை போட்ட பட்டுப் புடவை இருந்தது. பில்லில் 303 ரூபாய் என்று போட்டிருந்தது. பிரித்துக் கட்டிக் கொள்ள அவ



ளுக்கு மனம் வரவில்லை. ''யார் ரெடியா உனக்கு வஸ்திரதானம் செய்தது?'' என்று கேட்டுக் கொண்டே பின் பக்கக் கதவைச் சாத்தினுள் அந்த மாமி. அப்போதுதான் மூளைக்குள் 'சுரீர்' என்றது சுதாவுக்கு. யார் என்று தெரியாமல் புடவை வாங்கிக்கொண்டு விட்டோமே என்று தன்னைத் தானேநொந்து கொண்டாள். தினமும் அந்தப் பஸ்ஸில் அவனை அவள் பார்த்ததில்லை. அவன் யார், எங்கு படிக்கிறுன் அல்லது வேலை செய்கிறுன், இப்படி 300 ரூபாய் புடவையைத் தூக்கிக் கொடுத்து விட்டுப் போய் விட்டானே, ரொம்பப் பணக்காரனே, ரொம்ப நாட்களாக என்னை வாட்ச் பண்ணுகிறுனே, இதை எப்படி திருப்பிக் கொடுப்பது அல்லது பணத்தைக் கொடுப்பது, இந்தப் புடவை அவனது மனைவிக்கோ அல்லது சகோதரிக்கோ ஏன் கேர்ள் பிரண்டுக்காககூட இருக்கலாம் — மனத்தில் கேள்வியும், பதிலும் கம்ப்யூட்டராலும் கணக்கிட முடியாத வேகத்தில் தோன்றி மறைந்தன.

அவன் யார், எங்கிருக்கிறுன் என்றுகூடக் கேட்காமல் வந்து விட்டோமே என்று நொந்து கொண்டு வீட்டிற்குத் திரும்பினுள் சுதா. ''காலேஜுக்குப் போனவள் பட்டுப் புடவையில் திரும்பி வந்திருக்கிறுளே'' என்று வீட்டில் எல்லோருக்கும் ஆச்சரியம். உள்ளே நுழைந்த சுதா, ''போகும் போதே அபசகுனம் மாதிரி தடுத்தியே, அதுதான் இப்படி ஆயிற்று'' என்று வெடித்தபடி நடந்ததைக் கூறி முடித்தாள்.

அந்த வாரம் முழுதும் கல்யாண காரியமாக வெளியில் சுற்றிய போதெல்லாம் கடை வீதிகளிலும், பஸ்களிலும் அவன் கண்களைச் சந்திக்கத் தவித்தாள் சுதா. ஆனுல் சோதனையாக ஒரு இடத்திலும் அவன் தென்படவில்லை. கல்யாணத்திற்கு முதல் நாள் காலை. சுதா வீட்டார் அனைவரும் சத்திரத்திற்கு வந்து விட்டார்கள். மாப்பிள்ளை வீட்டாரைச் சேர்ந்த பெண்களை ஸ்பெஷலாகக் கவனித்துக் கொள்ளும்படி அவளிடம் சொல்லியிருந்தார் அப்பா. சமையற்கார மாமாவுக்கு வேண்டியதைச் செய்து உதவும் பொறுப்பும் அவளிடம் விடப்பட்டிருந்தது.

மத்தியானமாக மாப்பிள்ளை வீட்டார் வந்து இறங்கினுர்கள். சத்திரம் களைகட்டத் துவங்கியது. மாடிக்கும், கீழுக்குமாகப் பறந்து கொண்டிருந்தாள் சுதா. இயற்கையிலேயே நல்ல நிறமும், களையான முகமும் கொண்ட அவள் சென்ற இடங்களிலெல்லாம் எல்லாருடைய கண்களும் அவள் மீதே படிந்தன.

''சுதா'' மேலேயிருந்து கூப்பிட்டார் அப்பா. ''இதோ வந்துட்டேம்ப்பா'' நாலு எட்டில் மாடியை அடைந்த சுதா, மாப்பிள்ளைப் பையனின் அருகேநின்று கொண்டிருந்த அப்பாவிடம் போனுள். 'மாப்பிள்ளையின் அக்காவுக்குத் தலைவலியாம், நான் ''சாரிடான்'' வாங்கி வர அம்பியை அனுப்பிட்டேன். நீ போய் சாமா மாமாவிடம் கேட்டு டிகிரி காப்பி ஒரு டம்ளர் எடுத்துண்டு வா'' என்று கட்டளையிட்டார். 'மாப்பிள்ளை வீட்டார் என்றுல் பெரிய கொம்பு என்ற நினைப்பு' என்று பொருமிக்கொண்டு பின் கட்டுக்கு ஓடினுள் சுதா.

''மாமா'' என்று அழைத்தபடி உள்ளே நுழைந்தவள் சட்டென்று திடுக்கிட்டு நின்றுள். அதே வாலிபன் கையில் ஜல்லிக் கரண்டியுடன் நின்று கொண்டிருந்தான். வியப்பும், திகைப்பும் போட்டியிட வந்த காரியத்தை மறந்து நின்றுள் சுதா. அவனும் ஆச்சரியம் கண்களில் விரிய அவளைப் பார்த்தான். ஏனென்றுல் அன்று அவள் அந்தப் பட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டிருந்தாள். ''நீங்கள் இங்கு எப்படி?'' வார்த்தைகள் தடுமாறின.

அதற்குள் சாமா மாமா உள்ளே நுழைந்தார். ''என்னம்மா சுதா? என்ன வேணும்?'' என்றபடி. ''ம்... வந்து'' கண்களை மிகுந்த பிரயாசையுடன் அவனிடமிருந்து மீட்டவள் ''மாப்பிள்ளையின் அக்காவுக்குத் தலைவலியாம். நல்ல டிகிரி காப்பி வேணுமாம்'' வாய் பதில் சொன்னுலும் மனம் அவனையே வட்டமிட்டது. காப்பி கொண்டு வர உள்ளே சென்றுர் சாமா மாமா.

''என் கேள்விக்கு நீங்க இன்னும் பதிலே சொல்லலையே'' என்றுள் சுதா.

''சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதற்குள் தான் அப்பா வந்துட்டாரே'' என்றுன் அவன்.

அப்பாவா?'-கேள்விக்குறி அவள் முகத்தில் தோன்றியது.


'ஆமாம்' இந்தச் சமையற்கார சாமா தானே என் அப்பா.''

''நீங்க சொல்றது ஒண்ணும் எனக்குப் புரியலே.''

''அம்மா போன பிறகு அப்பாதான் என்னை வளர்த்துப் படிக்க வைத்தார். நான் இப்போ எம்.எஸ்ஸி. இரண்டாம் வருஷம் படித்துக் கொண்டிருக்கேன். அப்பாவை நல்லபடியா வைத்துக் கொள்ளணும்கிறது தான் என் ஒரே லட்சியம்'' என்றுன்.

அதிகாரி: உங்க பேர் என்ன?
ரோமவாசி: மருதை ஆசாரிங்க.
அதிகாரி: சாதிங்கறதே கூடாது. வெறுமே மருதைன்னு எழுதிக்கிறேன். சரி உங்க பக்கத்திலே நிக்கிறது யாரு?
ரோமவாசி: அது என் பொண்ணுங்க.
அதிகாரி: என்னது! உங்களுக்கு இவ்வளவு பெரிய பெண் இருக்கா?
ரோமவாசி: உண்மையில அது என்னோட பெண்சாதிங்க. நீங்க சாதிங்கறதே கூடாதுன்னுட்டுச் சொன்னதினுலே அதை விட்டுட்டுப் பெண்ணுன்னு சொன்னேனுங்க!

-விசாலாட்சி நடராஜன்



இதோ!
நாங்கள் அளிக்கும் இல்லத்தரசிகளுக்கு மற்றுமோர் படைப்பு:

புதிய பாரத் இட்லி குக்கர்

இருபது ஆண்டுகளுக்கு மேலாக தொழில்துறையில் அனுபவம் பெற்ற எம்.எம். இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தாரிடம் தனிச்சிறப்பு உண்டு.

எந்த விதமான கச்சாப் பொருள்கள் தட்டுப்பாடு நேரத்திலும் உங்களுக்கு சீராக கிடைக்கும்.

பாரத் இட்லி குக்கர் மற்ற இட்லி குக்கர்களை விட அதிக -ழைப்பும், குறுகிய நேரத்திலும், சிறந்த முறையில் செயல்படுகிறது.


மிகக்குறைந்த முறையில் தேவைக்கேற்ப 4 சைஸ்களில் கிடைக்கும்.

புதிய சிறப்பு அம்சங்கள்:


- இதன் கைப்பிடிகள் நெருப்பின் சூட்டை தாங்கக்கூடிய பேக்லிட் என்ற உலோகத்தினால் தயாரிக்கப்பட்டது.
- இதன் திருகாணிகள், விசில் ஆகியவை பித்தளையில் குரோமியம் பூசப்பட்டவை.
- இட்லி தட்டுகளில் தட்டுகளும் கப்பும் 'பிரஸ் முறையில் இணைக்கப்பட்டிருக்கின்றன.
- தட்டுகளிடையே அதிக இடைவெளி. ஆகவே நீராவி நல்ல திறனுடன் செயல்படுகிறது.

CCC/MMI/TAM-149





மில்க் பாய்லர்



இட்லி தட்டுகள்

எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்கள்:
M. M. இண்டஸ்ட்ரீஸ்
சென்னை-600 013.
போன்: 554464/551312/552865

''இப்படி வருவது உங்களுக்குக் கௌரவக் குறைச்சலா தெரியலையா'' என்று கேட்டாள் சுதா.

அவனது முகம் சிவப்பாகியது. மூக்குநுனி துடித்தது. ''எது கௌரவக் குறைச்சல்? 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று நீங்கள் அரிச்சுவடியில் படித்ததில்லையா? எந்த வேலையும் கௌரவக் குறைவில்லை. இந்த வேலை செய்ய ஆள் இல்லாவிட்டால் நீங்கள் எல்லாம் எப்படிக் கல்யாணம் செய்வீர்கள்?'' நெருப்புத் துண்டுகளாகத் தெறித்து விழுந்தன வார்த்தைகள். அப்படியே நடுங்கி விட்டாள் சுதா.

அந்த நேரத்தில் சாமா மாமா மணக்கும் காப்பியுடன் வந்தார்.

''என்னம்மா இவன் உன்னுடன் லெக்சர் ஆரம்பித்து விட்டானா? வர வேண்டாம்னு சொன்னா கேட்டாத்தானே? பேசாம பரீட்சைக்குப் படிக்காம இப்படி எனக்கு ஹெல்ப் பண்றேன்னு வந்து தன் கௌரவத்தைக் குறைச்சுக்கிறான்'' என்றார் சாமா மாமா.

''அதனால் என்ன மாமா? எந்தத்தொழிலுக்கும் ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. இவர்ாட கொள்கை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு'' என்று கூறிவிட்டு, ''உங்களை பிறகு சந்திக்கிறேன்'' என்று அவனிடம் கூறியபடி காப்பியுடன் வெளியேறினாள் சுதா.

மாப்பிள்ளை அழைப்புக்காக அனைவரும் வெளியே போயிருந்தார்கள். அவனைத் தேடிக் கொண்டு சமையலறைப் பக்கம் வந்தாள் சுதா. பண்ணி வைத்த சமையலைப் பரிமாற வசதியாகச் சிறு பக்கெட்டுகளில் போட்டுக் கொண்டிருந்தவர்களிடம் அவன் ஏதோ கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தான். 'க்கும்' என்று குரல் கேட்டு திரும்பிப் பார்த்தவன் சுதாவைக் கண்டதும் தனியே ஸ்டோர் ரூம் பக்கமாகச் சென்றான். அவன் பின்னாடியே வந்து நின்றாள் சுதா. ''ஆமாம், அன்று 300 ரூபாய் புடவையைத் தூக்கிக் கொடுத்து விட்டுப் போய் விட்டீர்களே, யார் எங்கிருக்கிறீர்கள் என்று கூடச்சொல்லாமல். இதை எப்படித் திரும்பி உங்களிடம் தரப் போகிறேம்னு நான் எப்படித் தவிச்சுண்டிருந்தேன் தெரியுமா?''

''நீங்க பஸ்ஸிலே அப்படிப் பரிதாபமா எல்லாரும் பார்க்கும்படியா நின்றது எனக்கு வேதனையா இருந்தது. பெண் என்றால் பேயும் இரங்கும்னு சொல்லுவாங்க. ஆனால் பக்கத்திலிருந்த பெண்கூட உங்களுக்கு உதவலையே.

அன்னிக்கு என் அம்மாவோட நினைவுநாள். எப்போதும் அந்த நாளில், சுமங்கலியாக இறந்த என் அம்மாவுக்கு ஆத்ம சாந்திக்காக ஒரு புடவை வாங்கி யாருக்காவது தருவது வழக்கம். போன வாரம்தான் எனக்குத் தாற்காலிகமாக ஒரு பேங்கில் வேலை செய்த தற்கான பணம் வந்தது. என் அம்மா சாகும் வரை அந்தக் கலரில் ஒரு பட்டுப்புடவை கட்டிக் கொள்ள ஆசைப்பட்டு, அது நிறைவேறாமலேயே இறந்துட்டா. கையில் நிறைய பணம் இருந்ததாலே இந்தத் தடவை அம்மாவுக்குப் பிடிச்ச கலரிலேயே பட்டுப் புடவை வாங்கிண்டு போயிண்டிருந்த போதுதான் அந்தச் சம்பவம் நடந்தது. யாருக்குத் தந்தால் என்ன என்று உங்கிட்டே கொடுத்துட்டேன். என் அம்மா உயிரோடு இருந்திருந்தாலும் ரொம்ப சந்தோஷப்பட்டுத்தான் இருப்பா.''

''அதுக்காக 300 ரூபாய் புடவையை முன் பின் பார்க்காம தூக்கிக் கொடுத்து விடற தாக்கும்'' பொய்க் கோபத்துடன் கண்களை உருட்டியபடி கேட்டாள் சுதா. ''வீட்டுக்குப் போனதும் உங்க மனைவிகிட்ட திட்டு வாங்கப் போறீங்கன்னு நினைச்சேன்.''

''ஆமா, என்னைப் பார்த்தா கிரகஸ்தனாட்டம் மூணு குழந்தைகளுக்குத் தகப்பனாட்டமா இருக்கு''. என்றான் அவனும் அவளைச் சீண்டியபடி.

''வரப் போற பெண்டாட்டி ஜாக்கிரதையா இருக்கணும். புடவைக் கடைக்கு உங்களைத் தனியா அனுப்பவே கூடாது'' என்றாள் சுதா.

''ஆகட்டும், புடவைக் கடைக்குப் போகும் போதெல்லாம் உன்னையும் அழைச்சிண்டே போறேன்.''

திடீரென்று அவன் தன்னை ஒருமையில் அழைத்ததை உணர்ந்தவள், ''வாட் டூ யூ மீன்?'' என்றாள் வெட்கத்துடன்.

''ஐ மீன் வாட் ஐ ஸெட்'' என்று சொல்லி விட்டு அவளை ஊடுருவிப் பார்த்தான். மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போன அவள் தலையைக் குனிந்து கொண்டு சில விநாடிகள் கால் விரலால் தரையைக் கீறிக் கொண்டிருந்தாள்.

''சுதா, என் அம்மா சாகும் போது 'என் புடவை, நகையெல்லாம் பத்திரமா வெச்சிருந்து என் மாட்டுப் பொண்ணுக்குக் குடுங்கோ'ன்னு சொல்லிட்டுப் போனா. அதே மாதிரி அவளுக்கு வாங்கின புடவையை என்னை அறியாம உங்கிட்ட அன்னிக்குக் கொடுத்துட்டேன். இது எதைக் குறிக்கிறது தெரியுமா?'' என்றான்.

பதில் சொல்லத் தலை நிமிர்ந்தவள் அவனது அப்பா உள்ளே வருவதைக் கண்டதும், ''மாமா, என் கல்யாணத்துக்கு நீங்க இப்படி ஓடி ஆடி சமையல் செய்ய முடியாது. மணையில் நின்று ஆசீர்வாதம் தான் செய்ய வேண்டியிருக்கும்'' என்று அவன் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்ட திருப்தியில், சந்தோஷத்துடன் அந்த ரூமை விட்டு வெளியேறினாள்.

பெரும் கூட்டமான மக்கள்
தங்களை ஆள்பவர்களின் சுயநலத்தையும்
அநீதியையும் தெரிந்து கொண்டால்
எந்த அரசாங்கமும் ஓராண்டு கூட
நிலைத்திருக்காது.
- உலகமே புரட்சியில் கொந்தளிக்கும்.
— தியோடோர் பார்க்கெர்
— திருப்பூர் அனோ

கல்கி ஆகஸ்டு 26 இதழில்

பூக்குழி

லக்ஷ்மி எழுதும் தொடர்கதை ஆரம்பம்



கல்கி ஆகஸ்டு 19


சிறுகதைச் சிறப்பிதழ்

ஆர்வி
பி.வி.ஆர்
சிவசங்கரி
புஷ்பா தங்கதுரை
கோவி.மணிசேகரன்
ராஜேஷ்குமார்
பாலகுமாரன்
பி.ரங்கநாயகி
கி.ராஜேந்திரன்

எழுதும்

நவரசக்கதைகள்

இடம் பெறுகின்றன.





மேகஜ

கல்கி வாசகர்களுக்குச் சிரிக்கத் தெரியாதா?

● சின்னஞ் சிறார்களின் கற்பனை அற்புதம்! அதை அட்டைப் படத்தில் இடம் பெறச் செய்து நீங்கள் தந்த ஊக்கம்.... அதற்கான துணிவு.. இது அதை விட அற்புதம்!
கோவை-3 செல்லம் சந்திரசேகர்

● முதல் பரிசு பெறும் சித்திரப் படத்தை அட்டையில் வெளியிட்ட கல்கி குழந்தைகளிடத்தில் நன்மதிப்பை மேலும் பெற்று விட்டது. செல்வி காமாட்சியின் கைவண்ணம் ''கல்கி'' ஆசியுடன் மேன்மேலும் வளர வேண்டும் என்று பாராட்டுகிறேன்.
மதுரை-9 எஸ். பாலகிருஷ்ணன்

● ''ஜனதா கவிழ்கிறதோ இல்லையோ, எல்லோரும் சேர்ந்து மக்களைத் தலைகவிழச் செய்து விட்டனர்! 'ஐயோ! இப்படிப்பட்ட தலைவர்கள் வந்து வாய்த்தார்களே' என்று பாரதப் பிரஜைவெட்கித் தலைகுனிகிறான்'' - இந்த விமரிசனம் ஒவ்வொரு பிரஜையின் உள்ளத்தையும் பிரதிபலிக்கிறது.
சென்னை-43 சுதாகர்

● ஜனங்களைப் பொறுத்த வரையில் 'இவர் எவ்வளவு சாகஸமாய் மந்திரி சபை அமைக்கிறார் பார்' என்று மகிழ்ந்து ரசிக்கத் தக்க நிலையில் இல்லை. அந்தக் காலம் மலையேறி விட்டது. 'எப்படி நல்லதொரு ஆட்சியைத் திறம்பட நடத்துகிறார் பார்' என்று பாராட்டக் காத்துக் கிடக்கிறார்கள். அத்தகைய தலைவர் எப்போது தோன்றுவாரோ?
திருச்சி-4 ஆர். ஷண்முகம்

● பின்தங்கிய வகுப்பினரிலே பொருளாதார ரீதியில் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கும் அரசியல் லாபம் கருதிச் சலுகைகளை அளித்து வரும் இக்காலத்திலே, பொருளாதார ரீதியில் பின்தங்கிய வகுப்பினருக்கும் சலுகையளித்து எம். ஜி. ஆர். அவர்கள் கொண்டு வந்துள்ள சட்டத்தைத் தங்களுடைய தலையங்கத்தில் பாராட்டி யிருப்பது சரியே.
சென்னை-17 ''மதுரை மணியன்''

● ஏன் சார்! கல்கி வாசகர்களைக் கை யெடுத்துக் கும்பிட்டுச் சிரிக்கச் சொன்னால் தான் சிரிப்பார்களா? மற்றபடி எங்களுக்குச் சிரிக்கத் தெரியாது என்று நினைத்துக் கொண்டீர்களா? இதோ பாருங்கள் என் சிரிப்பை: ஹி..... ஹி..... ஹி..... ஹி..... ஹி....
போடிநாயக்கனூர் எல்.வி. மணி

● தமக்கே உரித்தான தனிப் பாணியில் கிராம நடையில் 'மலரான சருகை'ப் புனைந்துள்ளார் சு. சமுத்திரம். கிழவரின் மூலம் வாசகர்களை நெகிழ வைத்து விட்டார்.

''நவீன அவதாரம்'' கார்த்திகா ராஜ்குமார் கதை அருமை. ஆனால் தம் முடிவைத்தான் அவர் ஆணித்தரமாகச் சொல்ல வேண்டுமே ஒழிய இரண்டு முடிவை எழுதி வாசகர்களையே தேர்ந்தெடுக்கச் சொல்வது ஒருவகை கோழைத்தனம்.
சென்னை-17 சுப்ரஜா.

● திரு ராஜேஷ்குமாரின் ''சொன்னது சொன்னபடி'' ஒரே அபத்தம். கதையின் முடிவில் நாயகனுக்கு அறுபதாம் கல்யாணத்தை முடிக்கிறார். ஆனால்மேலும் கதையின் போக்குப் படியும், நண்பர்களது உரையாடல்களின் படியும் கதையின் நாயகனும் நண்பனும் முப்பதைத் தாண்டினாலே அதிகம். அறுபதாம் கல்யாணத்தை நெருங்கும் எந்தப் பெண்ணும் — மன்னிக்கவும் — எந்த அம்மையாரும், மன நிறைவும், சந்தோஷமும், பூரிப்பும் அடைவார்களே யன்றி, கதையில் குறிப்பிட்டிருப்பது போல் வெட்கத்தால் முகம் சிவக்க மாட்டார்.
சென்னை—78 இரா. பாலகோபால்

● 'ராஜேஷ் குமார்' அவர்களின் தீவிர எழுத்தாற்றலும், நெஞ்சைத் தொடும் சோகப் படைப்புகளும்தான் இத்தனை நாள் நாங்கள் அறிந்தவை. ஆனால்.... இதென்ன? அவரால் ஒரு கச்சிதமான நகைச்சுவைக் கதையையும் எழுத முடியும் என்று உணர்த்தி விட்டீர்களே!
குரோம்பேட்டை எஸ். வேதா

● பெங்களூரில் சினிமாத் தியேட்டர்களில் 'ஏ' படங்களுக்கு இரு மடங்கு வரி விதிக்கப்படுவதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். மேற்கொண்டு சில செய்திகள்: இரு மடங்கு வரி கொடுத்து ரசிகர்கள் பார்க்கத் தயங்குவதால் 'ஏ' படங்கள் அவ்வளவாக ஓடுவதில்லை. பல கன்னடப் படத் தயாரிப்பாளர்கள் 'ஏ' முத்திரை வாங்கத் தயங்குகிறார்கள். இதன் காரணமாகவே கவரிமான், இனிக்கும் இளமை, புதிய வார்ப்புகள் போன்ற 'ஏ' படங்கள் இன்னும் ரிலீஸாகவில்லை.
பெங்களூர்-560005 அ. குமார்

● முதலாளித்துவ ஜனநாயகத்தை ஐம்பது ஆண்டுகளாக மாற்ற முடியாதவர்கள் இனிமேலா மாற்றப் போகிறார்கள்? கல்யாணசுந்தரம் போன்றவர்களின் வாய்வீச்சில் ஒன்றும் குறைச்சல் இல்லை.
இராஜபாளையம் எஸ். விஜயன்



ஓர் உயிர் விலை போகிறது!

ஜனசந்தடி மிகுந்த நகர வீதியொன்றிலிருந்து நரம்பாய்க் கிளை பிரியும் ஒரு சந்து. அங்கே ஒன்றோடொன்று இடித்து நெருக்கிக் கொண்டு, முன்னும் பின்னுமாய்த் தலையை நீட்டியபடி நிற்கும் பழங்காலத்து வீடுகள். அவற்றுள் ஒன்றின் மாடிப் போர்ஷனில் நடுக் கூடத்திலுள்ள சுவரின் மத்தியில் ஆணி அடிக்கப்பட்டுத் தொங்கும் நான்கு சட்டங்களுக்கிடையே சிறைப்பட்டுக் கிடக்கிறேன் நான். புன்னகை.. என் முகத்தில் உறைந்து போயிருக்கிறது. என்னைச் சுற்றியுள்ள அவலங்களுக்கும், அழுகைகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு மனுஷியாக... அவற்றோடு ஒட்டுதலோ, பந்தமோ இல்லாத ஒரு மூன்றாவது நபராக... அங்கே நடக்கிறவைகளை வேடிக்கை பார்ப்பதில் எனக்குக் கொஞ்ச நாட்களாக ஒரு சுவாரசியமே ஏற்பட்டிருக்கிறது.

''என்னைத் தனியாத் தவிக்க விட்டுட்டுப் போயிட்டியேடீ பாவி!'' தன் நினைவற்று மயங்கிக் கிடக்கிற நேரங்களைத் தவிர மற்றப் பொழுதெல்லாம் இப்படியே புலம்பிக் கொண்டிருக்கிறாள் அம்மா. வாயிலே துண்டை அழுத்திப் பொத்தியபடி அவளுக்கு ஆறுதல் சொல்லக் கூடத்துக்கு வருவதும், எங்கே தலையைக் கொஞ்சம் நிமிர்த்தினாலும் என் 'முகம்' கண்களில் தெறித்து அழுகையை வெளியாக்கி விடுமோ என்று பயந்தபடி தலையைக் குனிந்து கொண்டு வெளியேறுவதுமாக ...அப்பா தவிக்கிறார். தம்பிகள் இருவரும் ஆளுக்கொரு புத்தகத்தைக் கையில் ஏந்தியபடி ஜன்னல் வழியாகத் தெரியும் தெருவை வெறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

''அம்மா! அம்மா! அங்கே பாரேன்! அத்திம்பேர் வந்திண்டிருக்கார்!'' அம்பிப் பயல் கத்துகிறான்.

அமரர் **கல்கி** நினைவுச் சிறுகதைப் போட்டி

ரூ 1,000/- முதல் பரிசு பெற்ற கதை

''நம்மாத்துக்குத்தாம்மா'' – இது மூரளி.

அம்மாவின் சலனமற்ற முகத்தில் ஓர் இறுக்கம் படர்கிறது. அப்பா... உணர்ச்சிகளைக் கல்லாக்கிக் கொண்டு மாடிப்படி ஓரமாக நின்று வரப் போகிற மாப்பிள்ளையை எதிர் கொள்ளத் தயாராகிறார். அம்பியும், மூரளியும் ஒரே பாய்ச்சலில் படிகளைக் கடக்கிறார்கள்.

நிமிடங்கள் யுகங்களாகின்றன.

சென்றவர்கள் மூச்சிரைக்கத் திரும்புகிறார்கள்.

''அத்திம்பேர் அத்திம்பேர்னு கத்திண்டு 'ரோட்'லே பின்னாடியே ஓடினோம். அவர் திரும்பிக் கூடப் பார்க்காமப் போயிட்டார் அப்பா.''

''.......''

'தாலி கட்டின பொண்டாட்டிக்கு ஒரு கொள்ளி வைக்கக்கூட மனசில்லாதவன், இப்ப வருவான்னு எல்லாரும் என்ன நம்பிக்கையிலேதான் எதிர்பார்த்தேளோ?'

அம்மாவின் விசும்பல் வலுக்கிறது

• • •



எம்.ஏ.சுசீலா

(அறிமுக எழுத்தாளர்)



''கூட்டாயம் வைரத்தோடு போட்டுத் தான் ஆகணுமா ராஜும்? அவர் ஒண்ணும் வற்புறுத்தறதாத் தெரியலியே.''

''நமக்கு இருக்கிறது ஒரே பொண்ணு! ஆயுசுக்கும் இனிமே வேறு யாருக்குப் போட்டு அழகு பார்க்கப் போறோம்? அவர் கேக்கறதுக்காகவா ஒண்ணொண்ணும் பண்ணறோம்?''

அம்மாவின் ஆசை, மின்னும் வைரங்களாய் காதுகளில் ஜொலிக்க ... மாலையும், கழுத்துமாய் மடிசார் புடவையுடன் மாமியாரை நமஸ்காரம் பண்ணி எழுந்த பொழுது அவள் வாயெல்லாம் பல்லாய்... இனிமேல் தேக்கிக் கொள்வதற்குக் கொஞ்சங்கூடப் பாக்கியில்லை என்கிற மாதிரி அன்பை வார்த்தைகளாலேயே பொழிந்து தள்ள... இதுவே என்றென்றைக்கும் சாஸ்வதமாகி விடலாகாதா என்ற பேராசையுடன் பொழுதுகளைப் பொன்னாய்க் கழித்த நாட்கள்....

வாழ்க்கையின் நிஜங்கள், அவற்றின் உண்மையான பரிமாணத்துடன் – குரூரத்துடன் தாக்கிய பிற்பாடு ... சூறாவளியில் சிக்கிய மரக்கலமாய் ... சிறகுரிந்த கோழியாய்...


மெல்லுவதும்.. ஜடமாய்ப் பிறந்த வீட்டுக்குள் திரும்ப அடியெடுத்து வைத்த அவலம்....

• • •

"உங்காத்து மாட்டுப் பொண்ணுக்கு என்ன உடம்பு? ரெண்டு மாசமா ஆஃபீஸுக்குக்கூட வரலியாமே! என் பொண்ணு சொன்னா."

பரிவோடு கேட்பது போன்ற பாவனையில் அடுத்தவர் முதுகைச் சொறிந்து ஆனந்தம் காண்பதைப் பொழுது போக்காகவே கொண்டிருக்கும் இத்தகைய ஜீவன்களுக்கு மாமியார் தரும் மறுமொழி செவிப்பறையில் வந்து மோதுகிறது.

"அது என்னதான் உடம்போ போங்கோ! கல்யாணம் ஆகி இந்த ஒரு வருஷத்திலே அவ படுத்துக்காம இருந்த நாளை விரல் விட்டு எண்ணிடலாம். என்னவோ சம்பாதிக்கிற பொண்ணு இருக்காளேன்னு பாத்தா ... இப்ப 'லாஸ் ஆஃப் பே'யிலே வேற லீவு போட்டாறது. அதை விட்டுத் தள்ளுங்கோ! காக இன்னிக்கு வரும், நாளைக்குப் போகும்.



"ஏண்டி நெருப்பு நெருப்புன்னு தொண்டை கிழியக் கத்தறே? காஸ் கிடைக்கலை; விறகு அடுப்பு மூட்டினேன்; அவ்வளவு தான்!
—கபடி

ராஜா மாதிரி இருக்கிற எங்க பாபு தலையிலே இப்படி ஒரு நோஞ்சானைக் கட்டிண்டு அவஸ்தைப் படணும்னு எழுதிட்டானே பகவான்! அதை நினைச்சாத்தான் எனக்கு ஆறவே மாட்டேங்கறது.

"இப்பன்னு தெரியறது. அவா வலிய வந்து வைரத்தோடு போட்டதோட மர்மம்! என்ன சீர் செஞ்சி என்ன பிரயோஜனம்?"

இன்னும் .... இன்னும் .... இன்னும்....

தேன் கொடுக்காய்க் கொட்டுகிற அந்த வார்த்தைகளை இனி மேலும் கேட்க மனசுக்குத் தெம்பில்லை.

அம்மாவின் அரவணைப்பில் இல்லாமல் சென்னை 'ஹாஸ்டல்'லில் இருந்த போது கூடக் கல்லுக் குண்டாய் இருந்த உடம்புக்கு இப்போது என்ன கேடு வந்து விட்டது? வலது மார்பில் பருப்பளவுக்குச் சிறிதாய் முளைத்த கட்டியைப் பற்றி முதலில் கூச்சத்தினாலும் பிறகு அச்சத்தினாலும் சொல்லாமல் விட்டது எவ்வளவு பெரிய தப்பு? யானைப் பசி கொண்ட அரக்கனைப் போல் ... அது ஒரு மார்பைப் பூராவாக அரித்து உளுத்து விட்டு அடுத்ததிலும் கால் கொள்ள ஆரம்பித்திருக்கும் இந்த நிலையில்...?

• • •

அந்த 'ஜெனரல் வார்'டின் முனகல்களோ, வெண் புறுக்களாய்ப் பரபரக்கும் 'நர்ஸு'களின் சுறுசுறுப்போ, டெட்டாலும், மருந்தும் கலந்து தரும் நெடியோ... எதுவும் என் மோனத்தை ஈர்க்க முடியாத நிலையில் கண்களை உத்தரத்தில் பதித்தபடி படுத்திருக்கிறேன். ஆபரேஷன் முடிந்து ஒரு மாதமாக இதே மாதிரித்தான்! நான்கு நாட்களுக்கு ஒரு முறை வந்து கடனைக் கழித்து விட்டுப் போகும் மாமியார்... 'ஆபரேஷன்' நினைத்தன்று மட்டும் கூட நின்று விட்டுஅதன் பிறகு ஒப்புக்குக் கூட வந்து எட்டிப் பார்க்காத கணவர்.... இவர்களெல்லாம் போகட்டும்! 'அம்மா.... நீ எப்படி...?'

மனத்தில் ஒரு சிறு நெருடல்.

"சிஸ்டர்! ஒரு 'போஸ்ட் கார்டு'ம், 'பென்'னும் கிடைக்குமா?"

"நன்னாத்தான் காரியத்தைக் கெடுத்தே போ! டாக்டர் உன்னை உட்காரவே கூடாதுன்னு சொல்லியிருக்கார்! நீ என்னடான்னு படுக்கையிலே எழுந்து உக்கார்ந்துண்டு கடிதாசி வேறே எழுத ஆரம்பிச்சுட்டியே! உங்காத்துப் பேருக்குத் தெரிவிக்கணும்னு எங்களுக்குத் தெரியாதா? அவா மனசு கஷ்டப்படப் போறதே... பக்குவமா விஷயத்தை எடுத்துச் சொல்லணும்னுதான் காத்திண்டிருக்கோம்!"

தேன் தடவிய விஷத் துளிகள்!

இன்று மாமியாரின் 'விஸிட்டிங் டே' என்பது எப்படி மறந்தது எனக்கு?

'பரவாயில்லே? உனக்குத் தெரிவிக்காம இருக்கறதே நல்லதுதான் அம்மா! எனக்கு ஒரு தலைவலி வந்துட்டாக் கூடத் துடிச்சுப் போற நீ... ஒரு ஜலதோஷம் பிடிச்சிட்டாக் கூடப் பத்துப் போட்டுக் கஷாயம் வச்சுக் கொடுத்து இராப் பூராக் கண் முழிச்சிருக்கிற நீ உன் பொண்ணுக்குக் 'கான்சர்'ங்கிற அதிர்ச்சியை எப்படித் தாங்குவே? அதுவும்.... 'ஆபரேஷ'னுக்கப்புறம் அவ... மென்மையான தன்னோட பெண்மைச் சின்னங்களை இழந்துட்டுக் கிழிச்ச நாரா ஒரு 'ஜெனரல் வார்'டிலே கிடக்கிறதை உன்னாலே எப்படிப் பொறுத்துக்க முடியும்?'

• • •

'ஆஸ்பத்திரியிலிருந்து 'டிஸ்சார்ஜ்' ஆகி வீட்டுக்கு வந்தது முதல் எனக்குப் புகல், நட்பு, சொந்தம் எல்லாம் இந்தக் 'காமிரா' உள் ஒன்றுதான். சாப்பாடு கூட என்னைத் தேடி வந்து விடுகிறது.

கதவு ஓசைப்படும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறேன்! அவர்தான். நான் இங்கு வந்த பிறகு, எண்ணி இரண்டு முறை அவர் என்னைப் பார்க்க வந்திருக்கிறார். ஏதோ 'ஆஃபீஸ்' தொடர்பான பேப்பர்களில் என்னிடம் கையெழுத்து வாங்குவதற்காக....! அதுதான் டாக்டர்கள் திட்டவட்டமாக என் ஆயுளுக்கு இன்னும் இரண்டு வருடங்கள்

தான் என்று கெடு வைத்து விட்டார்களே! எத்தனை நாட்களுக்குத்தான் லீவை நீடித்துக் கொண்டு போவது? இருந்தாலும் ஆபீசில் கறக்க முடிந்த வரை கறக்கலாமே என்று இவர்களுக்கு ஒரு சபலம் இருக்கும் போது.... எந்த வகையாலும் உடம்பால் ஒத்துழைப்புத் தர முடியாத நிலையில் இருக்கும் நான் ஏன் மறுக்க வேண்டும்?

எப்பொழுது உள்ளே வந்தாலும் காரியத்தை முடித்துக் கொண்டு வெளியேறுவதிலேயே கவனமாக இருக்கும் அவர், இன்றென்னவோ நாற்காலியை இழுத்துப்போட்டுக் கொண்டு உட்காருகிறார். தொட்டால் கூட ஒட்டிக் கொண்டு விடுமோ என்ற பயத்தில் கட்டிலிலிருந்து நாலடி விலகித்தான்!

வார்த்தைகளை மென்று விழுங்கியபடி பேச ஆரம்பிக்கிறார்.

''கஸ்தூரி! இதைச் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுடுத்தேன்னு எனக்கு... ரொம்பக் கஷ்டமாத்தான் இருக்கு! ஆனா... சொல்லாம இருக்கவும் முடியலே. உன்னைப் பார்த்தா எனக்கு ரொம்பப் பரிதாபமாத்தான் இருக்கு! ஆனா இதுக்கு மேலே என்னாலே என்ன செய்ய முடியும்னு தெரியலே...''

''.......''

''என்னைப் பத்தியும் நீ கொஞ்சம் நெனைச்சுப் பார்க்கணும். நான்... ஆசாபாசங்களோட இருக்கிற ஒரு சராசரி மனுஷன். உணர்ச்சிகள் ... எனக்கு இன்னமும் மரத்துப் போயிடலே. இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி உப்புச் சப்பில்லாமே வாழ்க்கையை ஓட்டிண்டிருக்கிறதுன்னு ... அம்மா இங்கேயே மாதுங்காவிலே ஒரு பொண்ணைப் பார்த்துப் பேசி வச்சிருக்கா. நீ இந்தப் பேப்பர்லே கையெழுத்து மட்டும் போட்டியானா....''

பண மாற்றுப் பேப்பர்களிலே கையெழுத்துப் போடுவது எனக்குக் கஷ்டமாக இருந்திருக்கவில்லை. ஒருவகையில், ஏதோ கடன் பட்டுப் போனதைப் போன்ற மனச் சுமையைக் குறைக்கக்கூட அவை உதவியிருக்கின்றன.

ஆனால் ஆனால்... வாழ்க்கை கூட ஒரு பண்டமாற்று வியாபாரம்தான் என்று உணர்ந்த அந்த விநாடியில்... என்னுள் உடைந்து நொறுங்கிப் போன ஏதோ ஒன்று சிரிப்பாய்ப் பீறிட்டுக் கொண்டு வந்து அலை அலையாய்த் தெறிக்கிறது....முகத்தில் ...கண்களில் .... நரம்புகளின் அசைவில்! ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின் வெடித்தமனம் 'விட்ட' சிரிப்பு!!

'கோபால்ட் ட்ரீட்மெண்ட்' என்ற பெயரில் பெண்மை வடிவிழந்து, வனப்பிழந்து நிற்கும் நான் ... கண்ணாடியில் பார்த்தால் எனக்கே அச்சத்தை உண்டாக்கும் என் பயங்கரத் தோற்றம் ... அத்துடன் இணைந்த அந்தப் பேய்ச் சிரிப்பு — அவருக்குத் திகிலூட்டியிருக்க வேண்டும். எழுந்து போய் விடுகிறார்.

'இத்தனை நாள் என்னோட வாழ்ந்ததுக்கு.. இன்னும் கொஞ்ச நாட்கள் காத்திருக்கப் பொறுமையில்லையா?'



ஜாதி ஒழிப்பு மகாநாட்டில் ஒருவாது ஆவேசப் பேச்சு :

''இனி ஜாதி என்பதே நம் நாட்டில் கூடாது என்று நாம் போராடும் வேளையில் அரசாங்கமே வானொலியில் ''கண்ட ஜாதி நிரிபுடதாளம்; திஸ்ர ஜாதி கண்ட நடை'' என்றெல்லாம் ஜாதியின் பெயரால் தாளங்களைக் கூறுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்''!

—விசாலாட்சி நடராஜன்

ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்து எத்தனை நாளாயிற்று என்பது கூடத் தெரியவில்லை எனக்கு. அவர் கொண்டு வந்து விட்டதும், அப்பொழுது நடந்த பேச்சு வார்த்தைகளும் மட்டும் கனவில் நடந்தவை போல் நினைவில் மின்னி மறைகின்றன.

''என்ன இருந்தாலும் மாப்பிளே... இவ்வளவு நடந்திருக்கறப்ப எங்களுக்கு நீங்க தெரிவிக்காம விட்டதை என்னாலே ஒத்துக்கவே முடியலே. உங்களாலே முடியாட்டாலும் ஏதோ எங்க குழந்தைக்கு நாங்க வைத்தியம் செஞ்சிருப்போமே!''

''மாமா! நீங்க புரியாமப் பேசறேள்.. இந்த வியாதிக்கு அங்கே கிடைச்ச மாதிரி 'ட்ரீட்மெண்ட்' இங்கெல்லாம் கிடைக்கறது கஷ்டம்! எனக்கு இருக்கிற எத்தனையோ 'கமிட்மெண்ட்'ஸுக்கு நடுவிலே நான் இவளுக்கு ராஜ வைத்தியம் செஞ்சிருக்கேன்னு சொல்லணும். நீங்க போட்ட நகையெல்லாம் மருந்துச் செலவிலே கரைஞ்சு போய் அதுக்கு மேலே இன்னித் தேதியிலே இரண்டாயிரம் ரூபாய் கடன் இருக்கு எனக்கு.''

அம்மா செய்து போட்ட நகைகள் அத்தனையும் — ஒரு திருகாணி உட்படப் பத்திரமாக மாமியாரின் டிரங்குப் பெட்டியில் தூங்குவதும், என் வைத்தியச் செலவுகள் எல்லாம் எனக்கு நானே என் ஆபீஸ் மூலம் இலவசமாகச் சம்பாதித்துக் கொண்ட தர்மத் தொள்ளி என்பதும் என் மனசு மட்டுமே அறிந்த உண்மைகள் அல்லவா?

''தங்கம் போனாப் போகட்டும்னு, தங்க விக்கிரகமாத்தானே வார்த்துக் குடுத்தோமே இப்படி அருபமா ஆகி அழகழிஞ்சு நிக்கறாளே! ...ஏண்டி இத்தனை படிச்சவளுக்கு... எங்களுக்கு ஒரு வார்த்தை தெரிவிக்கணும்னு தோணலியேடி! இந்தச் சொத்து பூராப்



தஞ்சை சரபோஜி காலத்திய அரண்மனை உணவு வகையில் அடிக்கடி உபயோகிக்கப்பட்ட, ஒரு வகை, பொரித்த வெஞ்சனத்தின் (சாதத்துக்குத் தொட்டுக் கொள்ளும்) கருவடாம் போன்ற உப உண்டி) பெயர் கண்டி.

ஒரு விரல் நீளத்துக்குச் சற்று அதிகமான புடலங்காய்த் துண்டின் பஞ்சு போன்ற உள் பகுதியை நீக்கிய குழல் பகுதியில்; உருளைக்கிழங்கு மசாலாவை அடைத்து; புடலங்காய்க் குழலின் திறந்த இரு முனைகளையும், அடைக்கப்பட்ட மசாலா வெளியே சிந்தாமல், நூலால் கட்டி நெய்யில் பொரித்து எடுப்பது கண்டி.

— கை. வேம்பு

போனாலும் போகட்டும்னு சிமைக்குக்கூடப் போய் வைத்யம் செஞ்சிருப்போமேடி!''

அம்மா...புலம்பிப் புலம்பியே மாய்ந்து போகிருள். அத்தனைக்கும் ஒரு புன்னகை தான் என் பதில்!

'அம்மா! உன் மடியில் விழுந்து என் தாபங்களைச் சொல்லிக் கதற வேண்டும் போல என் நெஞ்சம் துடிக்கிறதம்மா! ஆனல்.. ஆனல் என் இழப்பு என்கிற ஒரு சோகச் சுமையையே தாங்கிக் கொள்ள முடியாமல் துடிக்கப் போகிற உன் பலவீனமான இருதயத்தில் இன்னும் எத்தனை பாரங்களைத்தான் ஏற்றுவது?'

• • •

இப்பொழுதெல்லாம் அம்மா எதுவுமே கேட்பதில்லை. வாய்ச் சொற்களை விட... கை விரல்களில் வழிந்து நெஞ்சையே நீவி விடுகிற பரிவு கலந்த இந்த ஸ்பரிசம்தான் எத்தனை இதமாயிருக்கிறது! எலும்புக் கூடாகி விட்ட இந்த உடம்பை மணிக்கணக்கில் மடியில் ஏந்திப் பாசத்துடன் பரிவதில்... அம்மா! நீ என்ன சுகம் காண்கிருய்? தன் னைக் கலப்பற்றுப் பொழியும் அந்த அன்புப் புனலில் ஆழ்ந்திருந்த ஒரு வேளையில்..கூட்டை விட்டுப் பறக்கும் ஆன்மப் பறவையாகிறேன்.

துக்கம் விசாரிக்க வருவோரின் உண்மையான துக்க விசாரணை, ''அவாத்திலேயிருந்து யாரும் வரலே போலிருக்கே'' என்பதுதான் புண்பட்டுக் கசியும் மனத்தின் ரணங்களைச் சூட்டுக் கோலால் ஊதிப் பார்க்கும் சொற்கள்!!

கஸ்தூரி என்றொரு பெண் வாழ்ந்ததும், மலர்ந்ததும், கருகிப் போனதும்... எல்லாம்.. பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்ப் போய் வெறும் நினைவாய் மட்டும் நிலைத்து விட்ட இந்த வேளையில்தான் ...அவரின் இவர் வருகை. ஒரு சலனத்தைக் கிளப்பிப் படிந்து விட்ட பழைய தூசுப் படலங்களை மீண்டும் எழுப்பியிருக்கிறது.

உள்ளே புயலாக நுழைகிருர் அப்பா. அவர் முகம் கறுத்துச் சிறுத்திருக்கிறது. நிதானமின்றி வார்த்தைகள் கொட்டுகின்றன.

''அந்த 'ராஸ்கல்' இங்கே ஏன் வந்திருக்கான்னு தெரிஞ்சு போச்சு ராஜம்!''

''.....????....''

''அந்த ராமனுதன் ஆத்திலே தான் தங்கியிருக்கானும். அவர் மட்டும் என்னை அப்ப 'டைவோர்ஸ்' பண்ணும இருந்திருந்தா இந்தச் சம்பந்தத்துக்கே ஒத்திண்டிருக்கமாட்டேன்.''

இப்பொழுது இதைப் பேசிப் பயன்? என்கிற பாவனையில் அம்மாவின் முகம் அவரை வெறிக்கிறது.

குரல் கம்ம... அவர் தொடர்கிருர்.

''நம்ம கஸ்தூரி வேலை பார்த்திண்டிருந்த பம்பாய் ஆஃபீஸ்லேயிருந்து அவளுக்குச் சேர வேண்டிய 'பி.எஃப்', 'கிராட்சுயிடி' எல்லாத்தையும், தான் 'கிளெய்ம்' பண்ணிக்கிறதுக்காக அவளோட 'டெத் சர்டிபிகேட்' வாங்க வந்திருக்காண்டி! 'டெத் சர்டிபிகேட்' வாங்க வந்திருக்கான்.''

மலைபோன்ற அப்பாவின் பொறுமை ஆட்டம் காணுவதைப் போல் அவர் உடம்பு குலுங்குகிறது.

விம்மல்கள் அணை கடந்த வெள்ளமாய்ச் சங்கமிக்கும் அந்த நடுக் கூடத்தில் உறைந்து போன புன்னகையால் அவர்களை அரவணைக்கிறேன் நான்.



''பழைய ஓட்டை உடைசல் இரும்பு சாமான் வாங்கறவர் எங்கே இவ்வளவு அவசரமா ஓடறூர்?''


''ஸ்கைலேப் பக்கத்திலே எங்கேயோ விழுந்திடுச்சாம். விலைக்கு கிடைக்குமாஎன்று பார்க்கத்தான்.''

—விசாலாட்சி நடராஜன்



"ஸ்டெப் கட்!"







வெட்டு சிரிப்பு!

— கபடி


நான் கண்ட ரஷ்யா

ஆ.சை.மூவாயில்

சோவியத் ரஷ்யாவைச் சொர்க்க பூமி என்று வர்ணிப்பவர்கள் இருக்கிறார்கள். அங்கு வாழும் எல்லா மக்களின் அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டு, அவர்கள் அனைவரும் வசதிகளோடும் வளத்தோடும், சுதந்திரமாகவும் ஆனந்தமாகவும் வாழ்வதாகக் கூறுபவர்கள் இவர்கள். இதற்கு முற்றிலும் மாறாக, அந்த நாடே ஒரு பெரிய சிறைச்சாலை என்றும் அங்கு வாழும் மக்கள் அனைவரும் அடிமைகள் என்றும் அடித்துக் கூறுபவர்களுக்கும் இந்த நாட்டில் பஞ்சமில்லை.




✕ சோவியத் நாடு விருதுக்குழுவின் துணைத் தலைவர் திரு ஜி.மிரோனின் திருமதி மிரோனினுடன் ஆசிரியர்



✕ ரஷ்ய நடனம் - ஓம்ஸ்க் பகுதி நாடோடி நடனம்

நேருக்கு மாறான இவ்விருவகைக் கருத்துக்களையும் என் செவிகளால் கேட்டுக் கொண்டும் பத்திரிகைகளில் படித்துக் கொண்டும் அதன் உண்மையை அறியும் நோக்கத்துடன் மூன்று முறை நான் சோவியத் நாடு சென்று வந்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் 15 நாட்கள் வீதம் மொத்தம் 45 நாட்களை அந்த நாட்டில் செலவிட்டிருக்கிறேன். ஒவ்வொரு நாளும் 6 மணி நேரம் உறங்கியது போக, 2 மணிப்பொழுது என்னைத் தயார் செய்து கொள்வதற்காக ஒதுக்கி விட்டு, 16 மணி நேரத்தை இதற்காகச் செலவிட்டிருக்கிறேன். வெறும் விமானத்திலும் காரிலும் மட்டும் பறக்கும் உல்லாசப் பயணியாக நான் இருக்கவில்லை. தெருவோரங்களில் நடந்து திரிந்தும் நகர பஸ்ஸிலும் பாதாள ரயிலிலும் வாடகைக் காரிலும் அலைந்தும் அந்த நாட்டு மக்களின் வாழ்க்கை நிலைகளைத் தெரிந்து கொள்ள முயன்றிருக்கிறேன். அவர்களுடைய ஆடல், பாடல், நாடகம், சித்திரம், சிற்பம், பத்திரிகை இவற்றையும் எட்டிப் பார்த்திருக்கிறேன்.



புரட்சிக்குப் பின் புதிய சோவியத் நாடு உருவாகி இன்றைக்கு 62 ஆண்டுகள் ஆகின்றன. இடையில் 1941 முதல் 45 வரை நடைபெற்ற இரண்டாவது உலகப் பெரும் போரில் அது அடைந்த பேரிழப்பு பயங்கரமானது. அந்தப் போரில் வேறு எந்த நாடும் இந்த அளவுக்குத் தன் மக்களைப் பலிகொடுக்கவில்லை; பொருள்களை இழந்து விடவில்லை. ஆனால் இவ்வளவு சோதனைகளுக்கிடையிலும் அது இன்று இருபெரும் உலக வல்லரசுகளிடையே ஒன்றாகத் தலைதூக்கி நிற்கிறது. இதன் இரகசியம் என்ன? — அங்கு நான் கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும் உயத்துணர்ந்ததையும் கொண்டு, நான் அறிந்த விவரங்களை என் நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நம் நாடு விடுதலை பெற்று 32 ஆண்டுகள் ஆகி விட்டன. தென் மாநிலங்களில் மட்டுமல்லாமல் வட மாநிலங்கள் சிலவற்றிலும் சுற்றுப் பயணம் செய்து வந்திருக்கிறேன். நம் நாடு இன்று எந்த அளவுக்கு எந்தெந்தத் துறைகளில் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதும், எந்தெந்தத் துறைகளில் வளர்ச்சி பெறவில்லை என்பதும், வளர்ச்சியின் பயன் எத்தனை சதவிகித மக்களை எட்டியிருக்கிறது என்பதும் ஓரளவு எனக்குத் தெரியும்.

இந்த நாட்டின் விடுதலைப் போர்க்கால வேள்வியல் எனக்குச் சிறிது பங்கு உண்டு. அதே உணர்ச்சியால் உந்தப்பட்டுக் கையில் பேனாப் பிடித்தவன். நான் தேசியவாதி; தமிழ்ப் பற்றுக் கொண்டவன்: எந்த அரசியல்

கட்சியையும் சாராதவன். ஆனால் நாட்டின் அரசியல், பொருளாதாரம், கலாசாரம், பண்பாடு இவற்றில் எனக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு.

எந்தக் கண்ணோட்டத்திலிருந்து, எந்த நோக்கத்தோடு, இந்தக் கட்டுரைத்தொடரை நான் எழுதுகிறேன் என்பதை முன்பே சொல்லி விடுவது நல்லதல்லவா? இதில் உல்லாசப் பொழுதுபோக்கு அம்சங்களும் இடையிடையே தலைநீட்டக் கூடும். ஏனென்றால் சில சமயங்களில் நானும் அங்கே உல்லாசமாகப் பொழுது போக்கியிருக்கிறேன். ஆனால் அடிப்படை நோக்கம் அதுவன்று. இந்த நாட்டு மக்களின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்ட ஆண்களையும் பெண்களையும் இந்தக் கட்டுரைகளின் வாயிலாகச் சிறிதளவாவது சிந்திக்கத் தூண்டுவதே என் தலையாய நோக்கம்.

இந்த மூன்றாவது பயணத்தில், சோவியத் நாட்டுக்குள் நுழைவதற்கு முன்பாகவே, விமானத்திலேயே பிரான்சைப் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ள எனக்கு ஓர் எதிர் பாராத வாய்ப்புக் கிடைத்தது. அங்கேயே முப்பதாண்டுகளுக்கு மேல் வாழ்ந்து வரும் — தமிழ்நாட்டில் பிறக்காத — ஒரு தமிழன்பர் எனக்குக் கிடைத்தார்.

முதலில் அவரைச் சந்தித்து பிரான்ஸை எட்டிப் பார்த்து விட்டுப் பிறகு மாஸ்கோவுக்குள் நுழைவோம்.

1. விமானத்தில் ஓர் அறிமுகம்

1979 ஜூன் இருபத்தோராம் தேதி வியாழக்கிழமை அதிகாலை 3.45 மணி. டில்லி பாலம் விமான நிலையத்தில், மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரிலிருந்து வந்த சோவியத் விமானம் 'ஏரோஃப்ளோட்' மாஸ்கோவுக்குப் பறப்பதற்காகத் தயாராகக் காத்திருக்கிறது. நானும் வங்காளி, மராத்தி ஹிந்தி ஆகிய மொழிகளைச் சேர்ந்த மற்ற மூன்று எழுத்தாளர்களும் பரபரப்போடு விமானத்துக்குள் நுழைகிறோம்.

வங்கப் புரட்சியாளரும், தம் இளமைக் காலத்தில் பன்னிரண்டு ஆண்டுகளைச் சிறையில் கழித்தவருமான கோஸ்வாமிக்கு இப்போது எண்பத்திரண்டு வயது. அவரைக் கவனித்துப் பத்திரமாக அழைத்துச் செல்லும் பொறுப்பை மேற்கொண்ட நான், இருவருக்கும் சேர்ந்தாற் போல் அருகருகே இடம் இருக்கிறதா என்று கவனித்து, அவருக்கு இடமளித்து விட்டு உட்காருகிறேன். அதே வரிசையில் முதலில் உட்கார்ந்திருப்பவரைப் பார்த்தால் ஒருபுறம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் போல் தோன்றுகிறது; ஆனால் மாநிறம் கொண்ட தமிழ் முகத்தில் சீனர்களுக்கான சாயலும் தெரிகிறது. அவரும் எங்களையே உற்றுப் பார்க்கிறார்; நாங்களும் அவரைப் பார்க்கிறோம்.

மற்றபடி அந்த விமானத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர்களுக்கு மேல் ரஷ்யர்கள். தென்கிழக்கு ஆசியாவிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் தங்கள் தாய்நாட்டுக்குத்





✖ மாஸ்கோ செஞ்சதுக்கம்
✖ சோவியத் நாடு விருது பெற்ற எழுத்தாளர்களுடன், இந்தியாவின் சோவியத் தூதர் Y. M. வோரன்ஸோவும், விருதுக்குழுவின் தலைவர் K. P. S. மேனனும்

அகிலன்

திரும்பிக் கொண்டிருப்பவர்கள். ரஷ்யர்களின் பண்பாடு என்னுடைய நினைவுக்கு வருகிறது. இந்தியாவில் ஆங்கிலத்திலும் பல்வேறு இந்திய மொழிகளிலும் வெளிவரும் 'சோவியத் நாடு' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியர் திரு ஒய். என். கிர்சனேவ் எங்களை வழியனுப்பி வைக்க அந்த நள்ளிரவில் தாமே பாலம் விமான நிலையத்துக்கு வந்திருந்தார். சோவியத் நாடு நேரு விருதுக் குழுவின் தற்காலிகத் துணைத் தலைவர் அவர். அன்றிரவு எங்களைப் போலவே அவரும் உறங்கியிருக்க முடியாது.

விமானம் புறப்பட்டு விட்டது. இரவில் தூக்கம் கெட்டுப் போனதால், 'இன்னும் ஆறு மணி நேரத்துக்கு விமானம் மாஸ்கோ செல்லும் வரை, நிம்மதியாகத் தூங்கலாம்' என்று நினைத்தேன் நான். விமானத்தின் கோடியில் கண்ணாடி சன்னலுக்கருகில் இருந்தது என்னுடைய இடம். எனக்கு வலது புறம் இருந்த கோஸ்வாமியிடம் ''உங்களுக்குத் தமிழ் பேசத் தெரியுமா?'' என்று அவருக்கு அடுத்திருந்த அன்பர் ஆங்கிலத்தில் கேட்பது என் காதில் விழுந்தது. வங்காளிகளுக்கும் தமிழர்களுக்கும் உருவத்தில் மிகுந்த ஒற்றுமை உண்டு. 'தெரியாது' என்பது போல் கோஸ்வாமி தலையசைத்தார்.

''நீங்கள் தமிழரா?'' என்று ஆங்கிலத்தில் கேட்டேன் ஆர்வத்தோடு.

''என் தகப்பனார் தமிழர்; தாயார் வியட்நாமைச் சேர்ந்தவர். வியத்நாமில் பிறந்து வளர்ந்த நான் முப்பது வருஷங்களாக மனைவி மக்களுடன் பிரான்ஸில் வாழ்கிறேன்.''

பழகு தமிழில் எவ்வித உச்சரிப்புப் பிழையுமின்றி அழகாகப் பேசினார் அவர். வியட்நாமில் பிறந்து வளர்ந்து பிரான்ஸில் வாழ்க்கை நடத்தும் அவரிடமிருந்து இப்படியொரு தமிழ் அமுதை நான் எதிர்பார்க்கவில்லை. கோஸ்வாமியுடன் இடத்தை மாற்றிக் கொண்டு அந்த அன்பருக்கு அருகில் வந்து உட்கார்ந்தேன். தமிழில் நாங்கள் இருவரும் மிகுந்த உற்சாகத்துடன் பேசத் தொடங்கினோம். என்னைவிட அவருக்குத்தான் இதில் மிகுதியான ஆனந்தம். தமிழில் பேசுவதற்கு அந்த இடத்தில் ஒருவர் கிடைத்ததை அவர் கிடைத்தற்கரிய வாய்ப்பாகவே கருதினார்.

அந்த அன்பரிடமிருந்து நான் அவருடைய சொந்த வரலாற்றையும் இன்றைய பிரான்ஸ் நாட்டின் நிலையையும் தெரிந்து கொள்ள விரும்பினேன். ஒரு வாரமோ பத்து நாட்களோ பாரிஸில் தங்கியவர்களிடமிருந்து தெரிந்து கொள்வதைவிட, இவரிடமிருந்து இன்றைய பிரஞ்சு மக்களின் வாழ்க்கையை அதிகமாய்த் தெரிந்து கொள்ளலாமல்லவா?

இதோ அவருடைய சொந்தக் கதை:

அவருடைய பெயர் இஸ்மாயில். அவருடைய தந்தை காரைக்காலைச் சேர்ந்த தமிழ்நாட்டு முஸ்லிம் பெயர் ஜாஃபர். ஜாபர் தம் இளமைப் பருவத்திலேயே காரைக்காலை விட்டுப் புறப்பட்டு, அப்போது பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்த வியத்நாமில் குடியேறி விட்டார். வியத்நாம் பெண்மணி ஒருவரையே மணந்து கொண்டார். ஆனாலும் அவரால் தமிழ் மொழியையும் இலக்கியங்களையும் சிறிதுகூட மறக்க முடியவில்லை. வியத்நாம் பெண்மணியான தம் மனைவிக்கும் தம்முடைய மக்களுக்கும் அவர் தமிழை எழுதவும் படிக்கவும் பேசவும் கற்றுக் கொடுத்திருக்கிறார்! இஸ்மாயிலின் தமக்கையைத் தமிழ்நாட்டில் பொறையாரிலோ பேராவூரணியிலோ உள்ள தம் உறவினர் ஒருவருக்குத் திருமணம் செய்து கொடுத்திருக்கிறார். இப்போது இஸ்மாயிலின் பெற்றோர் உயிருடன் இல்லை. இஸ்மாயில் மட்டிலும் இரண்டு மூன்று முறை தமிழ்நாட்டுக்கு வந்து தம் தமக்கையைப் பார்த்துச் சென்றிருக்கிறார். இந்தியாவைச் சுற்றிப் பார்த்திருக்கிறார்.

''ஆனால்...?'' என்று நீண்ட பெருமூச்சு விட்டார் இஸ்மாயில்.

''என்ன?''

''என் தலைமுறையோடு எனக்கும் தமிழுக்கும் தமிழ்க் கலாசாரத்துக்கும் உள்ள தொடர்பு விட்டுப் போகும். தம்முடைய நாட்டுக் கோயில்களை ஒட்டியே நம்மவர்கள் வியத்நாமுக்கும் வந்து அங்கெல்லாம் கோயில்களை எழுப்பியிருக்கிறார்கள். நான் சிறுவனாக இருந்த போது என் அப்பாவோடு வியத்நாமில் பல இடங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். நான் ஒரு முஸ்லிம்; பிரஞ்சு நாட்டுக் குடிமகன்; ஆனாலும் என் ஆன்மாவில் இந்தியக் கலாச்சாரமும் தமிழ்ப் பண்பாடும் கூடிக் கலந்திருக்கின்றன. தமிழ் மண்ணில் பிறக்காவிட்டாலும் என்னால் தமிழையும் இந்தியாவையும் மறக்கவே முடியவில்லை. என் மனைவிக்கோ குழந்தைகளுக்கோ இனி இவற்றோடு எந்தத் தொடர்பும் இருக்க வழியில்லை.''

''ஏன்?'' என்று கேட்பது போல் அவரை ஏறிட்டுப் பார்த்தேன் நான்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

மந்திரியிடம் ஒரு பத்திரிகை நிருபர்: ''இப்போது நீங்கள் சொன்னது அரசாங்கத்துக் கருத்தா, உங்கள் இலாகாவினுடையதா, அல்லது உங்கள் கட்சியினுடையதாக இருக்கும் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருப்பதா? அல்லது உங்கள் சொந்தக் கருத்தா?''

ராமுசாமி




''பிரஞ்சு ஆதிக்கம் ஆட்டம் கொடுக்கத் தொடங்கியவுடன் நாங்கள் வியத்நாமிலிருந்து பிரான்ஸுக்குப் போய் விட்டோம். எங்களோடு புறப்பட்ட ஒரு வியத்நாம் குடும்பத்துப் பெண்ணை நான் கல்யாணம் செய்து கொண்டேன். எனக்கு ஏழு குழந்தைகள். வியத்நாம் மொழியும் பிரஞ்சும்தான் அவர்களுக்குத் தெரியும். ஒரு மின்துறைத் தொழிற்சாலையில் நான் வேலை செய்கிறேன். தமிழை என் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க நேரமில்லை.''

நம் நாட்டின் பழம் பெரும் கலாசாரத்தில் அவர் பெருமை கொண்டது போலவே, இன்றையச் சிறுமைகள் கண்டும் அவர் மனம் புழுங்கினர். இந்திய நாட்டில் நிலவும் குறைபாடுகள் பல அவருக்குப் புலப்படாமல் இல்லை. அதை அவர் நேரடியாகச் சுட்டிக் காட்டாமல், ''நான் முப்பதாண்டுகளுக்கு மேலாக பிரான்ஸில் இருக்கிறேன்; 'பிரஞ்சுக்காரர்கள் நாணயமானவர்கள்; ஏமாற்றத் தெரியாதவர்கள்; கடுமையான உழைப்பாளர்கள், பிறருக்கு வலிந்துதவி செய்யக் கூடியவர்கள்'' என்று மறைமுகமாக ஒப்பிட்டுக் காட்டினர்.

ஐரோப்பாவில் இன்று வலிமை மிக்கதொரு நாடாக வளர்ந்து வரும் பிரான்ஸைப் பற்றித் திரு இஸ்மாயிலிடமிருந்து சில முக்கியமான விவரங்கள் எனக்குக் கிடைத்தன. உழவுத் துறைப் பொருள்களில் சுமார் 75 சதவிகிதமும் தொழில்துறைப் பொருள் களில் சுமார் 95 சதவிகிதமும் ஏற்றுமதி செய்வதால், நாட்டில் பொருள் வளம் கொழிக்கிறதாம். ஒரு சில சோம்பேறிகள், குடிவெறியர்கள், ஊதாரிகள் போன்றோர் தவிர மற்றோர் வாழ்க்கையில் வறுமையே கிடையாது. உழைக்க விரும்புவோர் அனைவருக்கும் உழைப்பும் ஊதியமும் தாராளமாக்க கிடைக்கிறதாம். திரு. இஸ்மாயிலுக்கு மாதம் சுமார் ஈராயிரம் 'பிராங்க்' சம்பளம். ஆனால் அவர் குடும்பம் பெரிய குடும்பம் என்பதற்காகப் பல சலுகைகளை அரசு வழங்குகிறதாம். அவருக்கே இரண்டு கார்கள் இருக்கின்றன. விலைவாசிகள் மிகஅதிகமாகஉயர்ந்து விட்டாலும், வாங்கும் சக்தியும் அதிகமாக இருக்கிறது. மனிதர்கள் தங்களுடைய சோம்பலால் வறுமையைத் தேடிக் கொண்டால் தவிர, பொதுவாக அந்த நாட்டில் வறுமையே இல்லை.

''குடும்ப வாழ்க்கை அங்கே எப்படியிருக்கிறது?'' என்று கேட்டேன்.

'தர்ம சங்கடமான கேள்வியைக் கேட்கிறீர்களே?' என்பது போல் என்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார் இஸ்மாயில். ''கல்யாணம் செய்து கொண்டு பலர் குடும்பம் நடத்தி வாழ விரும்புவதில்லை. கல்யாண வயதைக் கடந்தவர்களில் ஆண்களில் 35 சதவிகிதம் பேர்களும் பெண்களில் 55 சதவிகிதம் பேர்களும் தனித்தனியே வாழ்கிறார்கள். கல்யாணம் செய்து கொள்பவர்கள்கூடக் குழந்தைகள் பெற்றுக் கொள்வதை விரும்புவதில்லை. மிகவும் அற்பமான காரணங்களுக்காக விவாகரத்து செய்து



''ஜப்பானிய மலைப்பாதைகளில் பயங்கரமான வளைவுகள் இருக்கின்றன. அந்த வளைவுகளில் பெரிய கண்ணாடிகளை விளக்குப் போஸ்டுகளில் நட்டு வைத்திருக்கின்றனர். சாலையின் எதிர்திசையில் வளைவுக்கு அப்பால் உள்ளவற்றை, அல்லது ஊர்வனவற்றை இவை பிரதிபலித்துக் காட்டுகின்றன. இது பஸ் டிரைவர்களுக்கு ரொம்ப வசதியாக உள்ளது. வளைவுகளின் மறைவில் எதிரே வரும் வண்டிகளை, இந்தக் கண்ணாடிகளின் மூலம் முன்கூட்டியே பார்த்து விடுகின்றனர்.

—பி. நாராயணன்

கொண்டு பிரிந்து போய் விடுவார்கள். பிரான்ஸ் நாட்டுச் சிந்தனையாளர்களுக்கு இந்தப் போக்குத்தான் மிகுந்த கவலையைத் தந்து கொண்டிருக்கிறது. திருமண வாழ்வும் பிறப்பு விகிதமும் நாளுக்கு நாள் அவர்களிடையே குறைந்து வருவது அச்சந்தரக் கூடியதுதான்.''

''பெற்றோர், பிள்ளைகள், அண்ணன், தம்பிகளுக்கிடையே உறவு எப்படியிருக்கிறது?''

''பதினெட்டு வயதானல் ஆணும் பெண்ணும் குடும்பத்தை விட்டு வெளியேறி விடுவார்கள். பிறகு பந்தபாசமெல்லாம் அடியோடு மறந்து விட்டது போலத்தான். ஒரே ஊரில் இருந்தாலும் சகோதர சகோதரிகள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொள்வதில்லை. வயதான பெற்றோரைக் கூடப் பிள்ளைகள் அடிக்கடி போய்க் கவனிப்பதில்லை. வயது வந்த பலர் பொது மருத்துவ மனைகளில் அநாதைகள் போல் உயிரை விடுகிறார்கள். இது அங்கே சாதாரணமாக நடக்கக் கூடியது.''

''உங்களைப் போல் ஆசியாக்காரர்கள் பலரும், ஆப்பிரிக்காவிலிருந்து பலரும் அங்கு வந்து வசிக்கிறார்களே, அவர்களும் இப்படித்தானா?'' என்று கேட்டேன்.

''கூடியவரையில் எங்கள் பழக்க வழக்கங்களையும் கலாசாரத்தையும் நாங்கள் காப்பாற்றி வருகிறோம்'' என்றார் இஸ்மாயில். ''அங்கெல்லாம் தெருக்களிலும் மரத்தடிகளிலும் பொதுவிடங்களிலும் ஆணும் பெண்ணும் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்துக் கொள்வார்கள். பூங்காக்கள், தெருவோரங்கள், நிறுத்தப்பட்ட கார்கள் முதலியவைகளைக் கூடச் சில சமயங்களில் காதலர்கள் படுக்கையறைகளாக்கி விடுகிறார்கள்; இதையெல்லாம் யாருமே அங்கே சட்டை செய்வதில்லை; கவனிப்பதுமில்லை. இது அவர்களுடைய நெடுநாள் பழக்கம். இந்தப் பழக்கமெல்லாம் ஏற்பட்டு விடாதபடி

நாங்கள் எங்கள் குழந்தைகளை வளர்க்க முயல்கிறோம். ஓரளவு சிரமம்தான்.''

ஓர் இந்தியரின் கண்ணோட்டத்தி விருந்து தமிழ் நாட்டு முஸ்லிமின் கண்ணோட்டத்தி விருந்து. இஸ்மாயில் இவ்வளவையும் மனம் திறந்து ஒரு தமிழ்நாட்டுக்காரனை என்னிடம் பேசினார். அதே சமயம் பிரஞ்சுக் குடிமகன் என்ற செருக்கும் அவரிடமிருந்தது. பெருமையும் இருந்தது. பிரெஞ்சுக்காரர்களை அவர் மிகவும் நேசித்தார். மதித்தார்.

''பிரஞ்சுக்காரர்கள் மிகவும் நல்லவர்கள். நிறவெறி, இனவெறி, மதவெறி எதுவுமே அவர்களிடம் கிடையாது. இரக்க குணம் படைத்தவர்கள். உதவிசெய்யக்கூடியவர்கள். பொய், சூது, வாது; சூழ்ச்சி, வஞ்சனையெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. கடுமையாக உழைத்து வளமாக வாழ்கிறார்கள்'' என்று மீண்டும் மீண்டும் பெருமிதத்தோடு கூறினார்.

ஆறு மணிப் பொழுது விமானத்தில் எப்படிக் கழிந்ததென்றே எனக்குத் தெரியவில்லை. மாஸ்கோவுக்குப் போவதற்கு முன்னால் இஸ்மாயிலின் வாயிலாக நான் பிரஞ்சு நாட்டின் பல பகுதிகளிலும் சுற்றி வந்து விட்டேன். அவரிடம் எவ்வளவு கேள்விகள் கேட்க முடியுமோ அவ்வளவு கேள்விகள் கேட்டேன். அவ்வளவுக்கும் உற்சாகமாக அவர் பதிலளித்தார். ரஷ்யாவுடன் பிரான்ஸ் நெருக்கமான நட்புறவு கொண்டிருக்கிறதாம். பிரான்ஸ் நாட்டின் கட்டிடக் கலை நிபுணர்கள் மாஸ்கோவுக்கு வந்து 1980ம் ஆண்டு நடைபெற விருக்கும் உலக விளையாட்டுப் போட்டிக்கான பிரும்மாண்டமான அரங்குகளை நிர்மாணம் செய்து வருகிறார்களாம். அந்த அரங்குகளை நான் கட்டாயம் பார்த்து வர வேண்டுமென்று இஸ்மாயில் என்னிடம் கேட்டுக் கொண்டார்.

பாரிஸ் நகரத்தின் சுற்றுப்புறப் பகுதியில் தான் அவர் வசித்து வருகிறார். பிரான்ஸுக்கு வருவதானால் கட்டாயம் தமக்கு எழுதச் சொன்னார். அவருடைய விருந்தினராக இருந்து நான் பாரிஸ் நகரைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்றார். மாஸ்கோவில் விமானத்தை மாற்றிக் கொண்டு அடுத்த விமானத்தில் பாரிஸுக்குப் போக வேண்டியவர் அவர். நானும் மற்ற எழுத்தாள நண்பர்களும் மாஸ்கோவில் இறங்க வேண்டியவர்கள்.

21ந் தேதி மாஸ்கோ நேரப்படி காலை 7-30க்கு — இந்திய நேரப்படி காலை பத்து மணிக்கு — மாஸ்கோவின் சர்வதேச விமான நிலையத்தில் இறங்கினோம். ஏற்கனவே இரு முறை அங்கு வந்து பழக்கப்பட்டவனாதலால் குளிரிலிருந்து தப்புவதற்குத் தீவிரமான தற்காப்பு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தேன். குல்லாய், கோட்டு, ஸ்வெட்டர், கழுத்துப் பட்டை, பாண்ட்ஸ், பூட்ஸ் இப்படி ஐந்தாறு கிலோ எடையுள்ள கம்பளித் துணிகளை உடம்பில் சுமந்து கொண்டு விமானத்தில் இணைக்கப்பட்ட படிகளில் இறங்கினேன்.

என்ன ஏமாற்றம்! ஆயிரம் ஊசிமுனைகள் முகத்தில் தாக்குவது போன்ற மாஸ்கோக் குளிரில் அரைக்கால் வாசிகூட இப்போது அங்கில்லை. காலைச் சூரியன் தன் குளிர் வெயிலை அந்தப் பக்கமெல்லாம் இதமாகப் பரப்பியிருந்தான். 1973 செப்டம்பரில் நான் அங்கு சென்றபோதும், 1977 செப்டம்பர் — அக்டோபரில் சென்றபோதும் ஒரு நாள்கூடச் சூரியனை நான் மாஸ்கோவில் கண்டதில்லை. பனியையும் குளிரையும் நடுக்கத்தையும் எதிர் பார்த்துச் சென்ற எனக்கு, இந்த எதிர்பாராத இளவெயிலின் வரவேற்பு உள்ளத்துக்குள் ஒரு குதூகலமான பரவச உணர்ச்சியைக் கொடுத்தது. வேனிற் காலத்துக் கோடைக்கானல் போலிருந்தது மாஸ்கோ.

ஓ! இது ஜூன் மாதம் 21ம் தேதியல்லவா? ஓர் ஆண்டில் சுமார் பாதிப் பகுதியைக் குளிரிலும் பனியிலும் உறை பனியிலும் கழிக்கும் அவர்களுக்கு இது ஓர் உன்னதமான காலம். அவர்கள் குதூகலத்துடன் விரும்பி வரவேற்கும் கோடைக்காலம்!

'சோவியத்நாடு' பத்திரிகையை வெளியிடும் நோவோஸ்ட்டி செய்தி நிறுவனத்தின் சார்பில் எங்களை வரவேற்று அழைத்துச் செல்வதற்காக மாலிகோவ் என்ற சோவியத் இளைஞர் வந்திருந்தார். விமான நிலையத்தின் சடங்குகளை முடித்துக் கொண்டு நாங்கள் நகருக்குப் புறப்பட்டோம். (தொடரும்)

ஐந்து பண்டிதர்கள் முனிவரிடம் தீட்சை பெறச் சென்றார்கள். முனிவர் அவர்களை ஒரு கேள்வி கேட்டார்.

'உலகில் எல்லாவற்றையும் விட உயர்ந்த நீர் எது?' 'கங்கை நீர்' என்றார் ஒருவர்.

''முதன் முதலில் பூமியில் விழும் மழைத்துளி'' என்றார் இரண்டாமவர்.

''வைகறையில் இலைகளில் பளபளக்கும் பனித்துளி'' என்றார் மூன்றாமவர்.

''வெகுநாள் பிரிந்திருந்த மகனைப் பார்க்கும்போது, தாயின் கண்ணில் நழுவும் நீர்!'' என்றார் நான்காமவர்.

''அதையும் விட உயர்ந்தது வேறு எதுவும் இல்லையா?'' — முனிவர் கேட்டார்.


ஐந்தாமவர் ''தன்னைச் சார்ந்தவர்களிடம் அன்பு கொண்டு அவர்களுக்காக நாள் முழுவதும் உழைக்கின்றானே அவனுடைய வேர்வைத் துளியைவிட உன்னதமானது எதுவுமில்லை'' என்றார்.

அவருக்கு உடனே தீட்சை கிடைத்தது.

மலேசிய-வார இதழ் 'வானம்பாடி'யிலிருந்து —தஞ்சை துரை



பிறந்தகம் போன பூர்ணிமா



லீலாதேவி


சூரியன் தகித்துக் கொண்டு இருந்தது. ராஜாவின் உள்ளம் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் ஏதோ ஒருவித உணர்ச்சியில் தகித்துக் கொண்டிருந்தது. அவனால் வீட்டில் சும்மா இருக்க முடியவில்லை. பேசாமல் ஷர்ட்டை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியே கிளம்பினான். உண்மையில் பூர்ணிமா போனதில் இருந்து அவனுக்கு உலகமே வெறுத்துப்போனமாதிரி இருந்தது. அவனுக்கும், பூர்ணிமாவுக்கும் கல்யாணம் ஆகி மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. அந்த மூன்று மாதங்களும், அவன், அவளை விட்டுப் பிரிந்திருக்கவே இல்லை. அவளது கட்டான மேனி, அவனை அவளிடமே கட்டிப் போட்டு விட்டது என்றே சொல்ல வேண்டும். மகாலட்சுமி போன்ற அவளது முகமும், சாந்தமான குணமும், எதிலும் அவனுக்குப் பணிந்து போகும் குணமும் அவனைப் பெரிதும் கவர்ந்தன. அதோடு அவள், அவன் அம்மா, அப்பா எல்லோரிடமும் ரொம்பவும் பணிவோடு நடந்து கொண்டாள். இதனாலும் அவள், அவனின் உள்ளத்தில் ஒரேயடியாக உயர்ந்து நின்றாள். அப்படியிருந்தவளை — அவள் பிறந்த வீட்டுக்கு எல்லோரும் சேர்ந்து அனுப்பி விட்டார்கள். ராஜா சென்ற வருடம்தான் பி.இ. பாஸ் பண்ணி விட்டுப் பெரிய இடத்துச் சிபாரிசுகள் எல்லாம் இருந்ததால் இன்று உதவி இன்ஜினியராக இருக்கிறான். அவனது வேலை நிரந்தரம் என்றதும் உடனே பெண் பார்த்தார்கள். பூர்ணிமாவைக் கட்டிக் கொள்ள ராஜாவுக்குக் கசக்கவில்லை. சீர் செனத்தி விஷயங்களைப் பேசினார்கள். பூர்ணிமாவின் அப்பா எல்லாவற்றுக்கும் ஒத்துக் கொண்டார். மாப்பிள்ளைக்கு ஸ்கூட்டர் வாங்கித் தருவதை மட்டும் கல்யாணமாகி ஒரு மூன்று மாதத்தில் நிறைவேற்றுவதாகச் சொல்லியிருந்தார். ராஜாவுக்கும் எதையும் அனுபவிக்க வேண்டும் என்ற வெறி அதிகம். தன் மனைவி அதிக நகை நட்டுடன் வருவதை அவன் பெரிதும் விரும்பினான். அதோடு தானும் அவளும் ஹாய்யாக ஸ்கூட்டரில் உலா வருவதை எண்ணி எண்ணி, கல்யாணமாகி அந்த மூன்றாவது மாதத்தை வெகு ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

மொத்தத்தில் ராஜாவும் அவன் அம்மா அப்பா எல்லோருமே வெளிப்படையாகச் சொல்லவில்லையே தவிர, ''..... நீ ஸ்கூட்டர் இல்லாம வீட்டுக்குத் திரும்பக் கூடாது'' என்ற விதத்தில் அவளிடம் சொல்லி வண்டி ஏற்றி அனுப்பியிருந்தார்கள். பூர்ணிமாவுக்கு அவளின் அப்பாவின் நிதி நிலைமை நன்றாகவே தெரியும். பூர்ணிமாவின் பெரியப்பா மட்டும் இந்தக் கல்யாணத்துக்கு உதவி

செய்யாமல் இருந்திருந்தால்....? அவனுக்கு இதை நினைக்கவே வயிற்றைக் கலக்கியது. அப்படி இருந்தும் இந்த அப்பா எப்படித்தான் இந்த ஸ்கூட்டர் விவகாரத்தை ஒப்புக்கொண்டாரோ தெரியவில்லையே...? அப்பா ஸ்கூட்டர் வாங்கித் தருவார் என்று அவனுக்குத் துளிக்கூட நம்பிக்கையே இல்லை. கல்யாணமான இந்த மூன்று மாத காலத்திலும் அவள் நல்ல மனைவியாக, நல்ல மருமகளாகத் தன்னை நிலைநாட்டிக் கொண்டாள். கேவலம் இந்த ஸ்கூட்டர் வந்து தன் மண வாழ்க்கையை முடித்து விடுமோ என்ற கவலையுடன் அவன் தன் பிறந்தகத்துக்கு வண்டி ஏறினான்.

''...ராஜா... கொஞ்சம் முன்ன பின்ன ஆனாலும் நீ அவசரப் படக்கூடாது ... அப்பத்தான் ஸ்கூட்டர் கிடைக்கும். என்னடா, பொண்டாட்டி போயி ரொம்ப நாளாச் சேன்னு அவசரப்பட்டேன்னு, காரியம் கைகூடாம போயிடும்'' என்று அம்மா தூபம் போட்டுக் கொண்டே இருந்தாள். அப்பாவும் அதற்குத் தகுந்தாற்போல், ''ஒரே பெண் தானே, இன்ஜினியர் மாப்பிள்ளைக்கு ஸ்கூட்டர் வாங்கித் தரக் கசக்குதாக்கும்... போனவ அப்படியே இருந்திட்டாளே... நீ அங்கே போகக்கூடாது. நீ போனேன்னு, ஸ்கூட்டர் அவ்வளவுதான்...'' இப்படி ஓயாமல் இருவரும் 'பிரையின் வாஷ்' பண்ணிக் கொண்டே இருந்தார்கள். பகல் பொழுதெல்லாம் இந்த பிரையின் வாஷுக்கு மதிப்புக் கொடுத்து எப்படியும் ஸ்கூட்டரை வாங்கிவிட வேண்டும் என்று எண்ணுவான். ஆனால் இரவு வந்து விட்டாலோ, அவன் முகம் சூரியனுக்காக ஏங்கும் தாமரையின் நிலையை அடைந்துவிடும். மறுநாளே பூர்ணிமாவை அழைத்துக் கொண்டு வந்துவிட வேண்டும் என்று எண்ணுவான். ஆனால் பிரையின் வாஷும் தொடர்ந்துகொண்டே இருக்கும். இப்படி பகல் பொழுதுகள் எதிர்பார்ப்புகளுடனும், இரவுப் பொழுதுகள் ஏக்கத்துடனேயும் ஓடும்! ஞாயிற்றுக் கிழமையான இன்றும் இப்படித்தான் அம்மாவும், அப்பாவும் பிரையின் வாஷ் பண்ணி முடித்ததும், தலையே வெடித்து விடுவது போலிருந்ததால், அவன் ஷர்ட்டை எடுத்து மாட்டிக் கொண்டு வெளியே கிளம்பி விட்டான்.

'மாத்திரை' என்று பிரத்யேகமாக ஒரு பிரசாதம் செய்து பெருமாளுக்கு நைவேத்தியம் செய்கிறார்கள், திருப்பதி மலையில். அது யாருக்கும் வழங்கப்படுவதில்லை — மிகவும் முக்கியமானவர்கள் தவிர. கற்கண்டு, அரிசி, தயிர் ஏடு ஆகியவற்றால் தயாரிக்கப்படுகிறதாம் அந்த 'மாத்திரை'. — பிரபு



ராஜா லாயிட்ஸ் காலனியை விட்டு வெளியே வந்தான். அவன் வழக்கமாய்ச் சிகரெட் வாங்கும் பெட்டிக் கடையில் போய் ஒரு பிளேக் கிங்ஸ் சிகரெட்டை வாங்கிப் பற்றவைத்துக்கொண்டு பக்கத்திலிருந்த நாயரின் காப்பிக் கடையில் போய் உட்கார்ந்தான். அப்போது ... இரண்டு பையன்கள் வேகமாக வந்தார்கள். அவர்கள் வயது பன்னிரண்டிலிருந்து பதினைந்துக்குள் தான் இருக்கும். இருவர் அணிந்திருந்த உடையும் அவர்களது குமாரால நிலையைப் பறைசாற்றியது. ஒரு பையன் கையில் ஓர் அலுமினிய டிபன் பாக்ஸ் இருந்தது. இருவரும் ராஜாவுக்குப் பக்கத்து மேஜையில் அமர்ந்தார்கள். ஆனால் பக்கத்து பக்கத்து ஸ்டூலில் அவர்கள் அமரவில்லை. இருவரும் எதிரும் புதிருமாக அமர்ந்தார்கள். டிபன் பாக்ஸ் வைத்திருந்த பையன் மிகவும் சுவாதீனமாக இருந்தான். ஆனால் அடுத்தவனே, ஏதோ பரபரப்பில் உந்தப்பட்டவனாய் அடுத்தவனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ராஜா இவைகளையெல்லாம் ஒன்றும் கண்டு கொள்ளவில்லை. இருந்தாலும் அந்த இரண்டாவது பையன் அவன் கவனத்தைக் கவர்ந்தான். இப்போது முதல் பையன் டிபன் பாக்ஸைத் திறந்தான். அதில் ஆறு இட்லிகளும் சட்னியும் இருந்தன. அவன் டிபன் பாக்ஸ் மூடியில் கொஞ்சம் சட்னியை எடுத்து வைத்துக் கொண்டு, முதல் இட்லியைச் சாவகாசமாய்ச் சாப்பிட ஆரம்பித்தான். இரண்டாவது பையன் அவனைத் தீர்க்கமாய்ப் பார்த்துக் கொண்டே, ''டேய்... டேய்...'' என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தான்.

மூன்றும் மனிதன் ஒருவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற சுரணையே இல்லாமல் அந்தப் பையன்களின் நாடகம் நடந்து கொண்டிருந்தது. ஆயிற்று. முதல் பையன் மூன்று இட்டிலிகளைக் காலி செய்து விட்டான். ஒருவேளை இந்த ஆறு இட்டிலிகளில் ஒன்றோ இரண்டோ அந்த இரண்டாவது பையனுக்குக் கொடுப்பதாய் அந்த முதல் பையன் அவனை அழைத்து வந்திருப்பானோ? அல்லது முதல் பையனுக்கு இட்லி வந்ததைப் பார்த்ததும் இரண்டாம் பையன் தனக்கும் ஏதாவது கிடைக்கும் என்ற நைப்பாசையில் வந்திருப்பானோ? ராஜாவின் மனக்குதிரை இப்படி ஓடிக் கொண்டிருந்தது.

''...டே... மாடசாமி... நம்பள மறந்திட்டே போல இருக்கேடா...'' பரிதாபமாகக் கேட்டான் இரண்டாவது பையன்.

முதல் பையன் அவன் பேசியதையே காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல் ஐந்தாவது இட்லியை எடுத்து டிபன் பாக்ஸ் மூடியில் வைத்தான்.

இரண்டாவது பையனின் நிலை முள் மேல் நிற்பவன் போல் இருந்தது. அவன் கண்கள் அந்த ஆறுவது இட்லியை வெறித்து நோக்கின. ஆயிற்று... அந்த ஆறுவது இட்லியை எடுத்து முதல் பையன் டிபன் பாக்ஸ் மூடியில் வைத்ததுமே அந்த இரண்டாவது பையனின் உள்ளத்திலிருந்த துடிப்பு அடங்கிவிட்டது. அவன் கண்களில் பிரகாசம் குன்றிவிட்டது.

''...போடா...ஓம் பின்னாடி வந்தேயே... எம் புத்திய ஜோட்டால அடிக்கனும்...'' என்று முனகி விட்டுக் கிளம்பத் தயாரானான்.

உண்மையில் ராஜாவுக்கு அந்த முதல் பையன் மேல் கடுங்கோபம் உண்டாயிற்று. எவ்வளவு பெரிய அரக்கன் அவன்...? பசியால் வாடும் அந்த இரண்டாவது பையனை உடன் வருவதற்கு அனுமதித்து விட்டு, அவனை எதிர்த்தாற்போல் உட்கார வைத்துக் கொண்டே — ஆறு இட்லியில் ஒன்று கூட அவனுக்குத் தராமல் எப்படி அள்ளிப்போட்டுக் கொண்டான்? அவனை ஓங்கி அறைய வேண்டும் போல் இருந்தது. அந்த இரண்டாம் பையன் மேல் ராஜாவுக்கு இப்போது ஒரு கழிவிரக்கம் பிறந்தது.

''...நாயர்.. ஒரு கப் டீயும், ரெண்டு பொறையும் அந்தப் பையன்கிட்டே குடு...'' என்று ஆர்டர் கொடுத்து விட்டு முதல் பையன் தலையில் ஒரு தட்டு தட்டி, ''ஏன்டா நீயெல்லாம் மனுஷ ஜென்மம்தானு....? கூட வந்தவன் பசியாலே துடிக்கிறப்போ, ஒரு இட்லிகூட தராம தின்னுட்டியே... தூ... உன்னை நம்பி அவன் வந்தானே... அவன் புத்திய ஜோட்டாலத்தான் அடிக்கனும்....'' என்று அவனது கோபத்தை வெளிக்காட்டினான்.

அவ்வளவுதான் ... ராஜா கனவிலும் எதிர்பாராத ஒன்று நடந்தது. அந்த இண்டாவது பையன், ''தூ... உன் டீ யாருக்குப்பா வேணும்... என்னை என்ன பிச்சைக்காரன்னு நெனைச்சியா?'' என்று கடுகடுப்புடன் கேட்டுவிட்டு ராஜா வாங்கித் தந்த பொறையைப் புறங்கையால் தூரத் தட்டி விட்டு, ''எம்பா, உங்கிட்டே துட்டு இருக்குங்கிற திமிரா...? எவ்வளவு 'தில்' இருந்தா, என் கூட்டாளியே தலையிலே அடிச்சியிருப்பே? நாங்க ப்ரண்ட்ஸ்ங்க. இன்னைக்கு அடிச்சிக்குவோம். நாளைக்குக் கூடிக்குவோம். இடையில நீ யாருப்பா?'' என்று அவன் கேட்டது ராஜாவின் பொட்டில் யாரோ சம்மட்டி கொண்டு தாக்கியது போல் இருந்தது.

உண்மையில் ராஜா இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவே இல்லை. தடுமாறித்தான் போய் விட்டான். நல்ல காலம், அந்த டீக்கடை நாயர் ராஜாவின் உதவிக்கு வந்தான்.

''டேய்..டேய்... ரொம்பப் பெரிய மனுஷனாட்டம் பேசறயே...?? ரெண்டு இட்லிக்கு வாய பொளந்துக்கிட்டுத்தானே அவன் பின்னாடி வந்தே... அவன் ஒனக்கும் பெப்பே, ஒங்கப்பனுக்கும் பெப்பேன்னுட்டான் ... ஏதோ இன்ஜினியரு சாரு தொலையுதுன்னு பொறையும், டீயும் வாங்கிக் குடுத்தா — அவருகிட்டேயே டபாய்க்கறயே...'' என்று இரண்டாவது பையனிடம் நாயர் சற்றுக் காரமாகவே சீறினார்.

சமயத்தில் நாயரிடம் கடனில் சாப்பிடும் அந்தப் பையன் இப்போது, சற்று அடங்கித் தான் போனான் என்று சொல்ல வேண்டும். இருந்தாலும், ''நீ சொம்மா கெட நாயர்..., அவன் எனக்குக் குடுக்கிறான், குடுக்கலே, அது வேற விஷயம்.. ஆனா, அவன் என் தோஸ்த்.... அவனை இவரு எப்படி கைநீட்டி அடிக்கலாம்? அவன் குடுத்தாலும் குடுக் காட்டியும் நாங்க எங்களுக்குள்ள ஒத்துப் போயிக்குவோம். ஏன்னா நாங்க கீழ்மட்டத்து ஆளுங்க...'' என்று நாயரிடம் சொன்னவன், சற்று குரோதத்துடனே, ராஜாவைபார்த்து, ''இவங்களைப் போல மேல் மட்டத்து ஆளுங்களாட்டம் — குடுத்தாத்தான் நல்லவன், குடுக் காட்டி கெட்டவன்ங்கறதாட்டம் எங்களாலநடத்துக்க முடியாது...'' என்றுசொல்லி விட்டு அவன் போயேபோய் விட்டான்.

''சாரே, அவங் கெடக்கிறான். பொடிப் பய, நீங்க எதையும் மனசிலே வச்சிக்காதீங்க'' என்ற நாயர் அந்தப் பயல்களுக்காகத் தான், ராஜாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

ராஜா ஒன்றும் பேசவில்லை. அந்தப் பையன் குடிக்காத டீக்கும், அவன் தட்டிவிட்ட பொறைக்கும் சேர்த்து — நாயர் மறுத்தும் கூடக் காசைக் கொடுத்து விட்டு வெளியே வந்தான்.

இப்போது ராஜா — பூர்ணிமாவை நினைத்துக் கொண்டான். 'சீ நான் எவ்வளவு கேவலமான ஆண் பிள்ளை. தன் பசியைப் போக்க மறுத்து அவன் தன் நண்பன் என்ற ஒரே காரணத்திற்காக என்னிடம் எப்படி சண்டைக்கு வந்தான்.? நான்....?

'என்னையே நம்பி வந்தவளை — தன்னையே எனக்குத் தந்தவளை கேவலம் ஒரு ஸ்கூட்டருக்காக, அப்படியே விட்டுவிட்டேனே...? அந்தப் பொடியன் அடைந்த மன வளர்ச்சி கூட நானோ என் அம்மாவோ, அப்பாவோ அடையவில்லையே? உண்மையில் கொடுத்தால்தான் நல்லவரா? ஸ்கூட்டர் கொண்டு வராவிட்டால் அவள் எனக்கு மனைவியாக இருக்க முடியாதா?


இப்படி எண்ணற்ற எண்ணங்கள் அவன் மனத்தில் எழுந்து கொண்டே இருந்தன. அவன் நடந்து கொண்டே இருந்தான். அவன் மனத்தில், அவன் பெற்றோர்களின் பிரைய்ன் வாஷையும் மீறி ஒரு முடிவு மின்னல் கீற்றாய் மின்னி மறைந்தது.

ராஜா — பூர்ணிமாவை அழைத்து வர ரயிலுக்குக் கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்தான். தேவையான டிரெஸ்களை யெல்லாம் சூட்கேசில் எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தான். அவன் புறப்பட்டு விட்டதை அறிந்த அவன் பெற்றோர் வேறு எதுவும் பேச நா எழாமல் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தார்கள்.



விஸ்வநாத்தின் கிரிக்கெட் ஆட்டத்தை ரேடியோ காமெண்டரியில் கேட்ட பிறகுதான் கபில் தேவிற்குத் தானும் கிரிக்கெட் ஆட ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டதாம்.

- பாட்ரியா.



சிண்டிகேட் பாங்க்

உங்களது துளிர்விடும் நம்பிக்கைகள்
செயல்வடிவம் பெற
எங்களின் பல்வேறு திட்டங்கள்
உதவுகின்றன.

உங்கள் குழந்தைகளின்
எதிர்காலத்தை ஒளிமயமாக்க
வல்லது சிண்டிகேட் பாங்க்.

உங்கள் தேவைகளை நிறைவேற்ற
பல திட்டங்களை வகுத்து
செவ்வனே பணியாற்றி வருகிறது
சிண்டிகேட் பாங்க்

இன்றே சிண்டிகேட் பாங்க்கை
அணுகுங்கள். நலமடையுங்கள்.

நம்பிக்கை, நட்புறவு இவற்றின்
சின்னம் சிண்டிகேட் பாங்க்.

சிண்டிகேட் பாங்கில் சேமிப்பீர்—
செழிப்படைவீர்.

குழந்தைகள் நல
சேமிப்புத் திட்டம்
ரூ.100ம் அதன் மடங்குகளிலும்
கிடைக்கும்.
உதாரணமாக:
ரூ. 1000 பத்திரம்
39 மாதங்களில்
ரூ. 1273.50 ஆகவும்
63 மாதங்களில்
ரூ. 1596.00 ஆகவும்
பெருகுகிறது

சிண்டிகேட் பாங்க்

உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் வளம் பெற உற்ற நண்பன்



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி முடிவு

1979 அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்கு 2111 சிறுகதைகள் வந்தன. முதல் பரிசீலனை முடிந்து 120 சிறுகதைகள் இறுதிப் பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. திரு. அகிலன், ஸ்ரீமதி லக்ஷ்மி, திரு. பி. வி. ஆர்., திரு. எஸ். வி. எஸ்., திரு. லேோமாஸ், கல்கி ஆசிரியர் குழு ஆகியோர் உள்ளடங்கிய நடுவர்கள் இச் சிறுகதைகளைப் பரிசீலித்து முதல், இரண்டாவது மூன்றுவது பரிசுகளுக்குப் பின்வரும் கதைகளைத் தேர்ந்தெடுத்தனர்.

முதல் பரிசு ரூபாய் ஆயிரம்

கதையின் பெயர் : **ஓர் உயிர் விலை போகிறது**

எழுதியவர் : ஸ்ரீமதி எம். ஏ. சுசிலா, எம்.ஏ.
உதவித் தமிழ்ப் பேராசிரியை, பாத்திமா கல்லூரி,
புருனே காட்டேஜ், மதர் ரோஸ் காலனி, மதுரை-18

இரண்டாம் பரிசு ரூபாய் ஐந்நூறு


கதையின் பெயர் : **மீண்டும் வரும்**

எழுதியவர் : திரு. எஸ். சுந்தரராஜன், பி. டெக்
எஃப் 14, ஹாஸ்டல் II டிரெயினிங் சென்டர்
பி. ஹெச். இ. எல். திருச்சி-620014

மூன்றும் பரிசுகள்-இரு கதைகளுக்குத் தலா ரூ. 250 வீதம்

1. கதையின் பெயர் : **நிறங்களின் மனங்கள்**
எழுதியவர் : திரு. வெ. முரளிநாதன் (அரவிந்தன்)
நியூ, சி. 23, கெமிக்கல் காலனி
மேட்டூர் அணை-2

2. கதையின் பெயர் : **சாவதற்குச் சம்பளம்**
எழுதியவர் : திரு. எஸ். கே. அமர்நாத். பி.ஏ. (ஜெயகதா)
டி. 96, ராஜாஜி ரோடு, பிளாக் 26,
நெய்வேலி-607803



மெட்டியொலித்தது

கே. ஜெயலக்ஷ்மி

பக்கத்து வீட்டு டெலிவிஷன் பெட்டியில் ஆங்கிலச் செய்தி ஆரம்பமாயிற்று. தலைப்புச் செய்தியை மட்டும் கேட்டுவிட்டு, 'பட்' டென்று அவர்கள் பெட்டியை மூடுவது தெரிந்தது.

மணி ஒன்பது நாற்பத்தி ஆறு.

கையிலிருந்த புத்தகத்தை மூடிக் கீழே வைத்தேன். எழுந்து ஜன்னலருகில் சென்றேன். பக்கத்து வீட்டிலிருந்து திரைப்படம் பார்த்துவிட்டுச் சளசளவென்று வெளியே வந்து கொண்டிருந்தது உறவினர் — நண்பர்களின் கூட்டம். சுமார் பதினேழு மாதங்களுக்கு முன்பு வரையில் இந்த வீட்டிலிருந்தும் இது போன்றதொரு கூட்டம் இப்படி வெளியேறியதுண்டு. ஆனால் இன்று அதன் அடையாளத்தைக் கூடக் காண முடியவில்லையே! — வீடே களை இழந்து இருண்டு கிடக்கிறதே!

குப்பென்று குண்டு மல்லிகையின் மணம் நாசியில் வந்து மோதச் சன்னல் திரையைச் சற்று விலக்கிவிட்டு இடது கைப்பக்கம் பார்வையை ஓட விட்டேன். கறுப்புப் போர்வையில் வாரி இறைத்த வெள்ளி மணிகளாக மல்லிகைகளின் மலர்க் காட்சி! போன வருடம் கூட இதே சீசனில் அந்தக் கொடி புஷ்பித்த மலர்களின் மணமெல்லாம் இந்த அறைக்குள் வியாபித்து நிற்கும். இந்த ஆண்டுதான் அந்த மல்லிகைகளைச் சீந்துவாரில்லை. அது தினமும் பூத்துச் சொரிவதும் கருகி உதிர்வதுமாகவே இருக்கின்றன. அக்கம் பக்கத்தில் உள்ள குழந்தைகள் கூட 'வீணாகிப் போய்க் கொண்டிருக்கிறதே! நாங்கள் எடுத்துக் கொள்ளவா?' என்று கேட்க அஞ்சுகிற அளவுக்கு வீடு இருளடர்ந்து கிடக்கிறதே!

காலரவம் கேட்டுத் திரும்பினேன்.

கையில் பிளாஸ்குடன் உள்ளே வந்தாள் லலிதா. முன்பெல்லாம் அவள் வருவதைக் கட்டியம் கூறி அறிவிக்கும் அவளுடைய கால் மெட்டிகள். இப்போது ஒரே நிசப்தம். மெட்டிகளைக் கழற்றி விட்டிருக்கிறாள். கருண்ட கூந்தலுக்குப் பொருத்தமான கொண்டையையும் காணோம். வாரப்படாத கூந்தலை வெகு அலட்சியமாக எடுத்து முடித்திருந்தாள்.

பிளாஸ்கை ஜன்னலின் அருகில் வைத்து விட்டுத் திரும்பினாள் லலிதா.

ஆயாசத்துடன் படுக்கையில் போய் விழுந்தேன். புரண்டு புரண்டு படுத்தே இரவைக் கழித்தாயிற்று.

கீழேயிருந்து விடுத்த அழைப்பு மணி ஒலித்தது.

'காப்பி தயார்!' கொஞ்ச நாட்களாக ஏற்பட்டிருக்கும் சங்கேத ஒலி இது! முன்பெல்லாம் கையில் காப்பியும் வாயில் சுப்ரபாதமும் முழு நிலவு முகத்தில் புன்னகையும் பளிச்சிட லதா படியேறி வருவாள். மெட்டியோசை 'ணிங்! ணிங்' என்று முன்னால் வரும். ஆனால் இப்போது...?

வேண்டா வெறுப்பாக எழுந்து சென்றேன்.

ஏன் இந்த மாற்றம்? எதற்காக இந்த மாற்றம்? மகிழ்ச்சியின் வாடை கூடத் தீண்டாத இந்த மாற்றம் ஏன் என் வீட்டுக்கு அழையாத விருந்தாளியாக வந்து தொலைத்திருக்கிறது! என் வீடு எப்போது முன்பு இருந்தது போன்ற நிலைக்குத் திரும்பும்?

யாரோ பெரிதாகக் கெக்கலித்துச் சிரிப்பது போன்ற பிரமை. 'பைத்தியக்காரா! உன் வீடாவது பழைய நிலைக்குத் திரும்புவதாவது! அது போனது போனதுதான். இந்த இருளடர்ந்த 'நிலைமைதான் இனிமேல் உனக்கு நிரந்தரமானது!

தூக்கி வாரிப் போட்டது எனக்கு. என் வீட்டின் இந்த நிலவரத்தை என்னால் இனியும் தாங்கிக் கொள்ளவே முடியாது! இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும். அது என்ன? எப்படி?

யோசிக்கத்தான் வேண்டும்.

''அம்மா! நான் கீரையைச் சுத்தமாக அரிந்து வைக்கிறேனுங்க. நீங்க குளிச்சிட்டுச் சாமி கும்புட்டுப்புட்டு வாங்கம்மா...'' என்கிறாள் கண்ணம்மா.

''சரிதான் போடி! காலங் கார்த்தாலே குளிச்சுப்புட்டு மடியும், ஆசாரமுமாய் பூஜை பண்ணி என்னத்தை வாரிக் கட்டிண்டேன்' குழந்தை வாழ்விழந்து வந்து நின்றுவிட்டாளே... சாமியாவது... பூதமாவது கண்ணம்மா! பொய்! எல்லாம் பொய்!'' லலிதா உதயராகம் பாட ஆரம்பித்து விட்டாள்?

எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. எழுந்து மாடிக்கு வந்து விட்டேன்.

ஏதோ ஒருவித உந்தல். நிர்மலாவின் அறைக்குள் எட்டிப் பார்த்தேன்.

அவள் வண்ணப் பொலிவிழந்த ஓவியமாக நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாள். அவள் மடியில் குப்புற விழுந்து கிடக்கிறது 'கண்ணன் காட்டிய வழி'. பார்வை சன்னல் வழியாக வெட்ட வெளியை மேய்ந்து கொண்டிருக்கிறது.

என்னாலேயே விரும்பிப் படிக்க முடியாததை — அவளால் எப்படிப் படிக்க முடியும்!

என் அறைக்குத் திரும்பினேன். வழக்கம் போல் கைகள் 'ஷேவிங்' செட்டை நாடின. அதற்குத் தடை போட்டுவிட்டுச் சுழல் நாற்காலியில் போய் உட்கார்ந்தேன். எதிரே டீப்பாயின் மேல் ஒரு ஏர்மெயில் கவர்—நேற்று வந்த கவர் இன்னமும் பிரிக்கப்படாமலே கிடந்தது!

மகளிடமிருந்து கடிதம் வந்தால் லலிதா தான் முதலில் பிரித்துப் படிப்பது வழக்கம். அவள்கூட அதைத் தொடவில்லை. ராகவன் என்ன எழுதியிருப்பான் என்று எனக்குத் தெரியுமாதலால் நானும் அதைப் பிரித்துப் படிக்கவில்லை. அதனால் அந்தக் கடிதம் அனாதரவாகக் கிடந்தது. நிர்மலா தன் அறையை விட்டு வெளியே வருவதேயில்லை.


இப்போது அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்தேன்!

அன்புள்ள அப்பாவுக்கு,

நமஸ்காரம். என் முதலிரண்டு கடிதங்களும் கிடைத்திருக்கும். ஆனால் பதிலில்லை. அம்மா பக்கம் பக்கமாக எழுதுவாள். அதுவுமில்லை. ஏனோ இந்தப் பராமுகம்? இந்தக் கடிதத்திற்காவது பதில் எழுத வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

நிர்மலாவை இப்படியே வீட்டுக்குள் அடைத்து வைத்திருப்பதால் உங்களுக்கோ





ஜெர்மனி போன்ற மேலை நாடுகளில் குழந்தைகள் வீட்டில் பள்ளிக் கூடப் பாடங்களைப் படிப்பது கிடையாது. இதுபற்றி அங்குள்ள பெற்றோர்களைக் கேட்டால், 'வீட்டில் குழந்தைகள் படிப்பதானால் பள்ளிக்கு அவர்கள் ஏன் செல்ல வேண்டும்? மேலும் பள்ளியில் அவர்கள் என்ன செய்கின்றனர்?' என்று திருப்பிக் கேட்கின்றனர். இரவில் வெகு நேரம் பிள்ளைகள் படித்தால் அவர்கள் உடல் நலம் கெட்டுவிடும் என்றும் கருதுகின்றனர்.

பி. நாராயணன்

அவளுக்கோ எவ்விதமான பயனுமில்லை. அவளுக்கு ஒரு வழி செய்துதான் தீரவேண்டும். அது உங்களைப் போன்றவர்கள் எதிர்பார்ப்பது போன்று மேல்படிப்போ ஏதேனும் ஒரு வேலையோ அல்ல. எதையும் அவள் மீது திணிப்பதை என்னால் அனுமதிக்க முடியாது! உங்களுக்குத் துணிவில்லாவிடில் அவளை இங்கே அனுப்பி வைக்கவும். வெட்டிவிட்ட செடி கொடிகள்கூட மீண்டும் துளிர்ப்பதற்கு உரிமை பெற்றிருக்கும்போது மனிதர்களில் மட்டும் ஓர் இனம் மற்றோர் இனத்துக்கு அந்த உரிமையை மறுப்பது என்பது எந்த வகையில் பார்த்தாலும் எனக்குச் சரியாகப் படவில்லை. தயவுசெய்து நிர்மலாவை இங்கே அனுப்பி வைக்கவும்.

ராகவன்

''வெந்நீர் போட்டாச்சு. குளிக்க வரலாம்....'' என்றபடியே வந்தாள் லலிதா.

''உன் பிள்ளை லெட்டர் போட்டிருக்கானே, படித்துப் பார்த்தாயா?''

''படிக்கவே வேண்டாம். அவன் என்ன எழுதியிருப்பான்னு எனக்குத் தெரியும்?''

''ரொம்ப நல்லதாப் போச்சு. அதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?''

''நான் என்ன, நினைத்து என்ன பிரயோசனம்?'' லலிதாவுக்குக் குரல் தழுதழுத்தது.

''சொல்லேன் லலிதா. செய்யக் கூடியதாக இருந்தால் செய்து விடலாம்.''

''கல்யாணத்தின் போது மணமக்களிடம் ஒருவர் எச்சிலை மற்றவர்க்கு எடுத்துப் போட்டுச் சாப்பிட வைக்கிறார்கள். அன்பின் சங்கமத்தில் இரண்டு பேரும் சமம்தான் என்பது தான் அதனுடைய கருத்து. ஆனால் மறுநாள் முதல் நடப்பது என்ன? ஆண் சாப்பிட்ட எச்சில் தட்டில் பெண்தான் சாப்பிடுகிறாளே தவிர பெண் சாப்பிட்ட எச்சில் தட்டில் எந்த ஆணும் சாப்பிடுவதில்லையே. அதே நிலை மறுமணத்துக்கும் பொருத்தமாகத்தானிருக்கிறது. ஒரு பெண் இயல்பாக ஒரு ஆணை மறுமணம் செய்து கொண்டு அவனுடைய குழந்தைகளையும் தன்னுடையதாக ஏற்றுக் கொள்கிறாளே தவிர ஒரு ஆணால் அப்படிச் செய்ய முடிகிறதா? அப்படி முடிந்துவிட்டால் இப்படி நம்ப வீடு இருளடைந்து கிடக்குமா? அன்பாவது? சங்கமமாவது? சமத்துவமாவது? எல்லாம் வெறும் பித்தலாட்டம். வீணாக எதற்காக என் வாயைக் கிளறுகிறீர்கள்?'' என்றாள் புடவைத் தலைப்பினால் கண்களைத் துடைத்தபடியே.

நான் ஊமையாக உட்கார்ந்திருந்தேன்.

''என்ன, பதிலையே காணோம்? இதுக்குத் தான் சொன்னேன். என் மனசுலே இருக்கிறதைப் பத்திக் கேட்காதீர்கள் என்று ... சரி, குளிக்க வாங்கோ...'' திரும்பி நடந்தாள் அவள்.

''லலிதா!'' திரும்பிப் பார்த்தாள்.

''நிர்மலாவை ராகவனிடம் அனுப்பப் போகிறேன்.''

''சரி.''

''எதற்கு என்று கேட்கவில்லையே நீ?''

''தெரியாதாக்கும்! துயரத்தை மறக்க மேலே படிக்க வைப்பேள். இல்லாவிட்டால் வேலை பார்க்கச் சொல்வீர்கள்...''

''அதுதானில்லை... லலிதா துயரத்தை மறக்கும்படி அவளுக்கு நான் எதுவும் செய்து வைக்கப் போவதில்லை. அவளுடைய துயரத்தையே போக்கிவிடப் போகிறேன்.''

''அது நடக்கிற காரியமல்ல. நம்ப நாட்டில் மனத்தால் ஆணாக இருப்பவர்களின் எண்ணிக்கை ரொம்ப ரொம்பக் குறைவு.'.

''குறைவு என்றாலும் இருக்கிறார்கள் என்பதற்காக நீ சந்தோஷப்பட வேண்டும்!''

''அந்த மாதிரி ஒருவரையாவது நான் பார்க்க நேர்ந்தால் கண்டிப்பாக சந்தோஷப்படாமலிருக்க மாட்டேன்.'' சொல்லிவிட்டு அவள் சென்று விட்டாள்..

பக்கத்து அறையில் அவள் நிர்மலாவைக் குளிக்க அழைத்துக் கொண்டிருந்தாள்.

பல மாதங்களுக்குப் பிறகு ராகவனுக்குப் பதில் எழுதத் தொடங்கினேன்.

நடுஹாலில் என் பாட்டனார் காலத்துக் கடியாரம் மாட்டப் பட்டிருந்தது. அதன் பக்கத்தில் ஒரு படத்தை மாட்டினாள் லலிதா.

அதில் முகமெல்லாம் புன்னகையாக விரித்திருக்க நிர்மலாவும் ரமேஷும் இணைந்திருந்தார்கள்.

வேலைக்காரி கண்ணம்மா ஒன்றைக்கூட விடாமல் மல்லிகை மொக்குகளைக் கொய்து கொண்டு வந்து லலிதாவிடம் கொடுத்தாள். அதை லலிதா நெருக்கமாகத் தொடுத்து, பாதியைச் சுவாமி படத்துக்கும் பாதியைத் தனக்குமாகப் பகிர்ந்து கொண்டாள்.

''வரட்டுங்களா...?''

''ஏழு மணிக்கு வந்துடு. தமிழ்ப்படம் டி. வி. யிலே...'' என்றாள் லலிதா.

சிரித்துக் கொண்டே போகிறாள் அவள்.

டி.வி.யில் ஆங்கிலச் செய்தி ஆரம்பமாகிறது. வழக்கம் போல் என் வீட்டிலிருந்தும் நிறைய பேர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். 'குப்'பென்று மல்லிகையின் மணம்!

சன்னல் வழியாகத் தோட்டத்துப் பக்கம் பார்க்கிறேன். மல்லிகைப் பந்தல் இருளோடிக் கிடக்கிறது. மணம் எங்கேயிருந்து வருகிறது?

'ஙிங்! ஙிங்!' மெட்டியோசை!

திரும்பிப் பார்த்தேன்.

கையில் பிளாஸ்க்கில் பாலுடன் வந்து கொண்டிருக்கிறாள் லலிதா.

இருள் இப்போது என் வீட்டிலுமில்லை.

யுகங்கள் மாறும்போது...

வாஸந்தி



6

சூடான வெந்நீர் உடலுக்கு இதமாக இருந்தது. உடம்பின் அலுப்பை யெல்லாம் போக்குகிற மாதிரி இருந்தது. துபாயிலிருந்து மாலா கொண்டு வந்து கொடுத்திருந்த 'காமே' சோப்பின் மணம் மனத்துக்குச் சுகந்த மாக இருந்தது. பாத்டப்பில் படுத்தபடி நளினி மேலே அண்ணாந்து பார்த்தாள். வெந்நீரிலிருந்து கிளம்பிய ஆவி நீராகிக் கூரையில் முத்து முத்தாக நின்றிருந்தது.

பாத்ரூம் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. ''இன்னிக்கு முழுக்கக் குளிச்சிண்டு இருக்கப் போறியா? வெளியிலே எங்கும் போக வேண்டாமா?''

அவளுக்குச் சிரிப்பு வந்தது. 'வெளியிலே போகிற ஆளைப் பார்க்கல்லே!' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

''இதோ வரேன்!'' என்று அவள் குரல் கொடுத்தாள், அவசரம் அவசரமாக. அவள் குளித்து முடித்து டிரெஸ்ஸிங் கவுனை மாட்டிக் கொண்டு வெளியில் வந்தாள்.

அவளைப் பார்த்து அவன் சிரித்தான். அவள் அவனைக் கேள்விக் குறியுடன் பார்த்தாள்.

''நான் சின்ன வயசிலே சில தமிழ் நாவல்களைப் படிச்சிருக்கேன். கதாநாயகி குளிச்சிட்டு ஒரு பெரிய பாத் டவல்லே வெளியிலே வரமாதிரி. நீ முழுசாவே டிரஸ்ஸை மாட்டிண்டு வரியே!''

''அந்த மாதிரி நாவலை எழுதினவன் உன்னை மாதிரி வக்ரபுத்தி உடையவனாயிருப்பான்!''

அவள் சிரித்துக் கொண்டே கண்ணாடியின் முன் நின்று தலையைச் சீவ ஆரம்பித்தாள்.

''எங்கேயோ போகணும்னு சொன்னியே, எங்கே?''

அவன் பின்புறமாக வந்து அவளை அணைத்துக் கொண்டான்.

''உம்...., ரொம்ப வாசனையாயிருக்கே. இது சோப்பு வாசனையா? உடம்பு வாசனையா? வெளியிலே போறதா? இப்ப வேண்டாம். மழை வரும் போலிருக்கு!''

அவள் சட்டென்று அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

''அதெல்லாம் முடியாது. இன்னிக்கு வெளியிலே போய்த் தான் ஆகணும்!''

''ஏன்?''

''சீ! வெட்கக்கேடு. இன்னும் ஓர் இடம் பார்க்கல்லே. ஊட்டியிலே என்ன பார்த்தேன்னு மம்மி கேட்டான்னா என்ன சொல்லட்டும்?''

அவன் கடகடவென்று சிரித்தான்.

''ஹனி மூனுக்குப் போனவாளை யாரும் அந்த மாதிரி ஒரு கேள்வி கேட்க மாட்டா!''

''அவா கேட்காட்டாலும் பரவாயில்லே, எனக்குப் போயாகணும்.''

அவன் மறுபடியும் அவளுடைய இடையைப் பற்றிக் கொண்டான்.

''நளின் ப்ளீஸ்!''

''நோ!'' என்றாள் அவள் தீர்மானமாக.

''எதுவும் அளவுக்கு மிஞ்சினா சலிச்சுப் போயிடும் அசோக்!''

''உனக்குச் சலிச்சுப் போச்சா?''

''போயிடும் நீ இந்தமாதிரி தொந்தரவு பண்ணினா.''


அவன் எழுந்தான்.

''ஓ.கே.'' என்றான் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு. அவனுக்குக் கோபம் வந்து விட்டதோ என்று அவளுக்குத் தோன்றிற்று. அவனுக்குக் கொஞ்சம் கோபம் ஏற்பட்டால் நல்லதுதான் என்று அவள் சிரித்துக் கொண்டே நினைத்துக் கொண்டாள்.

அவனுடைய கட்டாயத்தின் பேரில் அவர்கள் சில இடங்களைச் சுற்றிப் பார்த்தார்கள். இடையிடையே அவன் ரூமுக்குப் போகலாம் என்று நச்சரித்துக் கொண்டிருந்தான்.

அவர்கள் பொட்டானிக்கல் கார்டனைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கையில் யாரோ தன்னைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவதைக் கேட்டு நளினி திரும்பினாள்.

அவளுடைய சிநேகிதி சசி நின்றிருந்தாள், யாருடனோ. நளினிக்கு ஒரு வியப்பான சந்தோஷம் ஏற்பட்டது. சசிக்கும் அவளுடைய கல்யாணத்தன்று தான் கல்யாணம் நடந்தது என்று ஞாபகத்துக்கு வந்தது. அவர்களும்



ஹனிமூனுக்கு வந்திருக்கிறார்கள் என்று புரிந்தது.

ஒருவருக்கொருவர் அறிமுகமானதும் அவர்கள் பொதுவாகப் பேசிக் கொண்டே நடந்தார்கள். சிறிது நேரம் கழித்து, ''இங்கே உட்காரலாமா?'' என்று சுசியின் கணவர் ராமன் கேட்டார்.

''நீங்க ரெண்டு பேரும் இங்கே உட்கார்ந்திருங்கோ. நாங்க கொஞ்ச தூரம் நடந்துட்டு வரோம்!'' என்றாள் நளினி.

''தே வாண்ட் டு கம்பேர் நோட்ஸ்!'' என்று ராமன் சிரித்தார்.

அது காதில் விழுந்ததும் நளினியும் சுசியும் சிரித்துக் கொண்டே நகர்ந்தார்கள். ''உன்னைப் பார்த்தது எனக்கு ரொம்ப சந்தோஷமாயிருக்கு நளினி!'' என்றாள் சுசி உண்மையான சந்தோஷத்துடன்.



நளினி அவள் கையைத் தோழமையுடன் அழுத்தினாள். ''ஓ, எனக்கும் சுசி. அதுக்குள்ளே ஹனிமூனே அலுத்துப் போன மாதிரி ஆயிடுத்து. மாறுதலா நமக்குத் தெரிஞ்சவா யாரையாவது பார்க்க மாட்டோமான்னு ஆயிடுத்து....''

அந்த வார்த்தைகளின் தாத்பர்யம் தங்களுக்கு மட்டுமே புரியும் என்கிற தோழமை உணர்வுடன் அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு சிரித்தார்கள். ''சொல்லு சுசி, உன்னுடையது அரேன்ஜ்ட் மேரேஜ் ஆச்சே, அவரை முன்னே பின்னே தெரியாதே, ஹௌ டு யூ ஃபீல்? அவர் எப்படி இருக்கார்?''

சுசியின் கன்னங்களில் ஒரு செம்மை படர்ந்தது. கண்கள் கனவில் மிதந்தன.

''முதல்லே ரொம்பப் பயமா இருந்தது, நளினி. கல்யாணத்துக்கு முதல் நாள் உட்கார்ந்துண்டு, 'ஓ'ன்னு கூட அழுதேன். மனசு பட்டு கல வரத்திலே. இங்கே வந்தப்புறம் தான், அவரோட இந்த இரண்டு நாள் பழகினப்புறம் தான் நான் பயப்பட்டதற்கெல்லாம் அர்த்தமேயில்லேன்னு புரிஞ்சது. அவர் ஒரு பர்பெக்ட் ஜென்டில்மேன் நளினி— ஐ ஆம் ரியலி லக்கி...!''

நளினி யோசனையுடன் நடந்தாள். ஒரு பெரிய பிரச்னையைச் சரளமாகக் கைசொடுக்கும் நேரத்தில் தீர்ந்து போன மாதிரி சுசி பேசியது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. உடலுறவு ஏற்படுத்திய நெருக்கத்தின் விளைவா இது? அந்தக் கிறக்கத்திலிருந்து விழித்துக் கொண்ட பின் சுசியின் தீர்மானம் எப்படியிருக்கும்? வெறும் உடற் சங்கமத்தினால் மட்டுமே ஒரு படித்த சிந்தனைத் திறன் உள்ள பெண்ணுக்குச் சமாதானமேற்படுவது இயலாத காரியம் என்று அவளுக்குத் தோன்றிற்று. மனங்கள் சங்கமிக்கும் என்கிற நம்பிக்கை ஏற்பட்டால்தான் 'நான் பயப்பட்ட

துக்கெல்லாம் அர்த்தமேயில்லேன்னு புரிஞ்சுது' என்று தன்னால் சொல்ல முடியும் என்று தோன்றிற்று.

கசி அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''என்ன யோசனை நளினி? நீ பழகி இஷ்டப்பட்டவரையே கல்யாணம்பண்ணிண்டிருக்கே. அதனாலே அட்ஜெஸ்ட் பண்ணிக்கறது உனக்குக் கஷ்டமில்லே!'' நளினி சிரித்தாள்.

''நீ சொல்றது வாஸ்தவமாயிருக்கலாம். ஆனா பொதுவா எந்தவிதமான கல்யாணமானாலும் அதிலே ரிஸ்க் இல்லாமெ இல்லே.''

''நீ அதைப் பற்றியெல்லாம் கவலையே பட வேண்டாம் நளினி. அவர் உன் மேலே உசிரையே வெச்சிருக்கார்ன்னு தோணறது. நாங்க நடுவிலே வந்தது கூட அவருக்குப் பிடிக்கல்லேன்னு நா நினைச்சேன்.''

நளினி சிரித்தாள். 'அவனுடைய உசிர் எதன் மேலே இருக்கிறது என்று எனக்குத் தெரியும்' என்று நினைத்துக் கொண்டாள். அவர்கள் பேசிக் கொண்டே திரும்பி வந்தார்கள். அவர்களைக் கண்டதுமே ராமனும் அசோக்கும் எழுந்தார்கள்.

''ரொம்ப சீக்கிரம் வந்துட்டேளே? எங்களுக்குப் பசிக்கிறதுன்னு தெரியுமா?''

''அது தெரியாது'' என்று சிரித்தாள் நளினி.

''ஆனா எங்களுக்குப் பசிக்கிறது.''

''வாங்களேன். இங்கேதான் நாங்க தங்கியிருக்கிற இடம் பக்கத்திலே இருக்கு. எல்லோரும் சாப்பிடலாம் சேர்ந்து'' என்றார் ராமன்.

''எதுக்கு? நாங்க எங்க ஹோட்டலுக்குப் போயிடறோமே?'' என்று மெள்ள இழுத்தான் அசோக்.

''பரவாயில்லே. வாங்களேன். அப்புறம் இந்த மாதிரி நாம மீட் பண்ண எங்கே சான்ஸ் கிடைக்கப் போறது?''

ராமனின் பேச்சில் ஒரு கம்பீரமும் நிதானமும் இருந்தன. பார்வையில் குளுமை இருந்தது. கசி சொன்ன மாதிரி இவர் ஒரு பர்ஃபெக்ட் ஜென்டில்மேனாகத்தான் இருக்கவேண்டும் என்று நளினி நினைத்துக் கொண்டாள்.

''மெ'க்கு அப்புறம் என்ன எழுத்து வரும்?''

'' 'வி'! எங்க விட்டிலே போன வாரம் வாங்கிட்டாங்களே!'' -மேனு



வெள்ளை வெளேரென்று சுத்தமான மேஜை விரிப்புடன் சாப்பாட்டு அறை பளிச்சென்று காட்சி அளித்தது. சாப்பாட்டுக்கு ஆர்டர் கொடுத்து விட்டு அவர்கள் காத்திருந்தார்கள்.

புதிதாக மணமானவர்கள் போல் தெரிந்த ஓர் ஆங்கிலோ இந்தியத் தம்பதி பின்புற மேஜைக்கு வந்து அமர்ந்தார்கள். அந்தப் பெண் கூச்சமில்லாமல் தன்னுடைய பரிமாணங்கள் தெரியும்படி ஓர் உடையில் வந்திருந்தாள். அவளுடைய கணவனுக்கே அவளுடைய உடையைக் கண்டு கூச்சமாக இருந்ததோ என்று நளினி நினைத்துக் கொண்டாள். அசோக்கின் பார்வைக்கு நேராக அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவனுடைய பார்வை அடிக்கடி அந்த மேஜைக்குப் போவதை நளினி கவனித்தாள்.

ராமன் ஏதோ சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தார். அதில் கூடக் கவனமாகக் கலந்து கொள்ளாமல் அசோக் உட்கார்ந்திருந்தது அவளுக்கு ஒரு லேசான அவமான உணர்வை ஏற்படுத்திற்று.

''இன்னும் இங்கே எத்தனை நாட்கள் இருக்கப்போறேள்'' என்று கசியைக் கேட்டாள்.

''இன்னும் இரண்டு நாள்'' என்றார் ராமன். ''போன உடனே டில்லிக்குக் கிளம்பணும்.''

அவருக்கு டில்லியில் மத்திய அரசில் வேலை என்று நளினி கேள்விப்பட்டிருந்தாள். அவள் கசியைச் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். கசி இலேசாகச் சிரித்தாள். கல்யாணம் ஆன கையோடு முன்பின் தெரியாத ஒரு மனிதருடன் அவ்வளவு தொலைவு போவது இவளுக்கு எவ்வளவு சிரமமான காரியமாக இருக்கும் என்று நளினி நினைத்துக் கொண்டாள். அதற்காகத்தான் ஒரு பரிச்சயத்துக்காகத் தான் இங்கு நான்கு நாட்கள். பழகிய இரண்டு நாட்களுக்குள் 'ஹி இஸ் எ பர்ஃபெக்ட் ஜென்டில்மென்' என்று இவள் ஸர்டிஃபிகேட் கொடுக்க வேண்டுமானால் இந்த ராமன் கெட்டிக்காரர்தான் என்று தோன்றிற்று. இவர் பேசுவதையும் மென்மையாகச் சிரிப்பதையும் பார்க்கும்போது அது உண்மையாகவும் இருக்கலாம் என்று தோன்றிற்று.

அவர்கள் சாப்பிட்டு விட்டு எழுந்தார்கள். அசோக்கின் பார்வை மறுபடியும் அலைபாய்வதைக் கவனிக்காத மாதிரி நளினி நடந்தாள். ராமனிடமும் கசியிடமும் விடைபெற்றுக் கொண்டு அவர்கள் தங்கள் ஹோட்டலை நோக்கி நடந்தார்கள். அசோக் ஒரு பொய்யான பெருமூச்சு விட்டு அவளுடைய இடையைப் பற்றியபடி நடந்தான்.

''அட் லாஸ்ட் வி ஆர் ஃப்ரீ!'' என்றான். அவள் சிரித்தாள்.

இவன் ரொம்பக் குழந்தைத்தனமாக, சிறுபிள்ளைத் தனமாக இருக்கிற மாதிரி இருந்தது. கல்யாணம் இவனுள் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை என்று தோன்றிற்று. இவனுக்கு அந்த மாற்றம் நிதானமாகத்தான் வரும் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

''அந்த மனுஷன் மகா போர். டில்லியைப் பத்தியும் கவர்ன்மெண்டைப் பத்தியும் பேசி

போரடிச்சுட்டார். எப்பப் பிச்சுக்கப் போறேம்னு ஆயிடுத்து எனக்கு.''

அவன் பேச்சைக் கேட்டு அவளுக்கு மறுபடியும் சிரிப்பாக வந்தது. தனக்கு ஜெண்டில்மேனாகத் தெரிந்தவர் இவனுக்குப் போராகத் தெரிவது வேடிக்கையாக இருந்தது. அவள் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''அவர் போரடிச்சா என்ன? உனக்குத் தான் கண்ணுக்கு நல்லவிருந்து கிடைச்சுதே?'' கேள்வியைக் கேட்ட பிறகு, தான் மிகவும் அல்பமாகப் போனமாதிரி அவளுள் ஓர் அவமான உணர்வு ஏற்பட்டது.

அவன் ஒருவிநாடி திகைத்துப் போனமாதிரி அவளைப் பார்த்தான். பிறகு கடகடவென்று சிரித்தான். ''ஓ, அவளா? பாரு பாருங்களே. நா பார்க்கல்லேன்னா அவளுக்கு வருத்தமாயிருக்காதா?''

அவன் சிரிப்பு அவளுக்கு ரசிக்கவில்லை. அவள் மௌனமாக நடந்தாள். அவன் சட்டென்று அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''ஓ, காட் நீ என்ன ஓல்ட் ஃப்பாஷண்ட் பெண்டாட்டி மாதிரி அவளைப் பார்க்காதே, இவளைப் பார்க்காதேன்னு சொல்லப் போறியா? கல்யாண மாயிட்டதினாலே நான் ஒரே யடியாய் மாறிட முடியாது. ஐ ஜஸ்ட் வோண்ட்!''

அந்த வார்த்தைகளில் அழுத்தம் இருந்தது. பிடிவாதம் இருந்தது. அவன் அவளுக்காக மாற மாட்டான் என்று அவளுக்குப் புரிய வைக்கிற மாதிரி.... அந்த அளவுக்கு அவன் அன்பில் விசாலமில்லை என்கிற மாதிரி.... அவள் சட்டென்று சமாளித்துக் கொண்டாள். அவன் சிரித்துக் கொண்டே சொல்லும் இந்த வார்த்தைகளை அவளால் ஏன் லேசாக எடுத்துக் கொள்ள முடியவில்லை? ஏன் ஒவ்வொரு அர்த்தத்துக்கும் அனர்த்தத்தைக் கற்பித்துக் கொண்டு மனம் விபரீதமாகக் கற்பனை செய்கிறது? ஆண்கள் ஆண்களாகத் தான் இருப்பார்கள் என்று ஏன் நாகரீகமாக நினைக்க முடியவில்லை?

ஹோட்டலுக்குப் போய்ச் சேர்ந்ததும் அவளுக்கு ஆயாஸமாக இருந்தது. அவ்வளவு தூரம் நடந்து விட்டுவந்தது களைப்பாக இருந்தது. அதையெல்லாம் அவன் ஏதும் புரிந்து கொண்ட மாதிரித் தெரியவில்லை. மிருதுவாக, கனிவாகப் பேசவில்லை. நான் விரும்பும்போது நீ எனக்கு வேண்டும் என்கிற மாதிரி நடந்து கொண்டான். இவன் தன் உடலைத்தான் நேசிக்கிறான். தன்னையில்லை என்று அவள் இரண்டு நாட்களாக நினைத்ததை மறுபடியும் நினைத்துக் கொண்டாள். சற்று நேரத்தில் அவன் தூங்கிப் போனான். அவள் தூக்கமும் வராமல் படுக்கவும் பிடிக்காமல் எழுந்து ஜன்னல் திரையை விலக்கி ஜன்னல் கட்டையின் மேல் உட்கார்ந்து கொண்டாள். வெளியே யூகலிப்ட்ஸ் மரங்கள் ஒருவித சோகத்துடன் நிற்கிற மாதிரி இருந்தது. மனசில் திடீரென்று ஏதோ ஒரு வெறுமை ஏற்பட்ட மாதிரி இருந்தது. இரண்டு நாட்கள் முன்வரை அதில் சுகந்தமும் உல்லாசமும் இருந்தது நினைவுக்கு வந்தன. காரணம் புரியாமல் கண்களில் நீர் துளித்தது. அவள் திடுக்கிட்டாள். தனக்கு என்ன நேர்ந்து விட்டது? காரணமே இல்லாமல் மனசு ஏன் சஞ்சலப்படுகிறது? என்ன எதிர்பார்த்து என்ன கிடைக்காமல் போய் விட்டது? அவள் அவனிடம் ஒரு மென்மையை எதிர்பார்த்தாள். பிரியமான கரிசனத்தை எதிர்பார்த்தாள். காதல் செய்யும்போது ஒரு நாகரீகத்தை எதிர்பார்த்தாள். இதெல்லாம் அவனிடம் இல்லை என்று தோன்றிற்று. இவன் தனக்குத் தெரிந்தவன் இல்லை. யாரோ ஓர் அந்நியன் என்று தோன்றிற்று. அவள் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டாள். இவையெல்லாம் சாதாரண விஷயங்கள் என்று சொல்லிக் கொண்டாள். அவளுடைய எதிர்பார்ப்புக்கள் சாதாரணமானவை, நானாவட்டத்தில் அவளுடைய எதிர்பார்ப்புகளே, அசட்டு எதிர்பார்ப்புக்களாகக் கேலிக்குரிய விஷயமாகப் போகக் கூடியவை. கல்யாணமான புதிதில் ஒருவன் சற்று முரட்டுத்தனமாக இருப்பதில் ஏதும் ஆச்சரியமில்லை. அவளுக்குத்தான் கற்பனை அதிகம். எல்லாரையும் எல்லா விஷயங்களையும் இயல்பாக இயற்கையாக ஸிம்பிளாக எடுத்துக் கொள்ளத் தெரிய வேண்டும். நேற்றைய அசோக்கிற்கும் இன்றைய அசோக்கிறகும் ஏதும் வித்தியாசமில்லை. ஏதேனும் இருப்பதாகத் தோன்றினால் அவளுடைய பார்வையில்தான் ஏதேனும் கோளாறு இருக்க வேண்டும்.

அவர்கள் ஊருக்குத் திரும்பிய போது அவர்கள் தங்களுக்காகப் பார்த்து வைத்திருந்த சின்ன வீட்டை மைதிலி எல்லாவசதிகளுடனும் தயார் செய்து வைத்திருந்தாள். நளினி நெகிழ்ந்து போனாள். ''மம்மி! தாங்க்யூ'' என்று அணைத்துக் கொண்டாள். மைதிலி அவளுடைய தோளைப் பற்றினாள். ''நீ சந்தோஷமாக இருக்கணும் நளினி.. எனக்கு அதுதான் முக்கியம்'' என்றாள். அம்மாவின் பார்வையில் ஆழம் தெரிந்தது. கவலை தெரிந்தது.

அன்றைக்கு இரவு அந்தச் சின்னப் புதிய படுக்கையறையில் படுத்து உறங்கும் போது அம்மாவின் வார்த்தைகளும் பார்வையும் கனவில் தொடர்ந்து வந்தது. திடீரென்று அப்பாவின் குரல் கேட்டது. ''யூ டர்ட்டி வுமன், யூ வோர்!'' அவள் சடாரென்று எழுந்தாள். வியர்வை ஆறாய் வழிந்தது. கண்களில் நீர் நிறைந்திருந்தது.

(தொடரும்)

ஈ.ஸி அல்ல!

E என்ற எழுத்து இல்லாமல் ஒரு நாவலே எழுதப் பட்டிருக்கிறது.

Gadsby

என்பது அந்த நாவலின் தலைப்பு.

— எம். சிவசுப்ரமணியன்

விட்டல் கோப்பைக்காக டி. ஐ. சைக்கிள் குழுவும் போர்ட் டிரஸ்டும் ஆடுவதற்கு 'முஸ்தீபு' செய்து கொண்டிருந்தன.

டி.ஐ. சைக்கிள் குழுவில் 'கோல்' அடிக்கும் வல்லுநர் ஏழுமலை, கோல் கீப்பர் முருகேசனுக்குப் பல கோணங்களில் பந்தையடித்தார்! அவற்றில் ஒன்றைத் தம் காமிராவுக்குள் பதித்துக் கொண்டார் உத்ரா. டி. ஐ. சைக்கிள் குழு சென்னை கால்பந்தாட்ட 'லீக்'கில் மூன்றாவது டிவிஷனிலிருந்து இரண்டாவது டிவிஷனுக்கு முன்னேறியுள்ளது. அதோடு விட்டல் கோப்பைப் பந்தயத்தில் கலந்து கொள்ளும் தகுதியும் பெற்றிருக்கிறது. 1962-ம் வருஷத்திலிருந்து டி. ஐ. சைக்கிள் குழு லீக் கால்பந்தாட்டத்தில் கலந்து கொள்கிறது. ஏழுமலை டி.ஐ. சைக்கிள் குழு டாப் ஸ்கோரர்!

புகைப்பட நிபுணர் உத்ரா இந்த 'ஆக்ஷன் ஷாட்' பற்றித் தரும் விளக்கம்: ''நான் இதைவிட 'Fast Aperture'ல் எடுத்திருந்தால் கீழே விழும் கோல் கீப்பரை இன்னும் தெளிவாக எடுத்திருக்கலாம்! ஆனால் ...

SPORTS PICTURE PAGE





கோல் கீப்பர் விழுந்து லாகவமாகப் பிடிக்கும் வேகத்தைக் காண்பிப்பதற்காக Low Apertureல் எடுத்தேன். கோல் கீப்பரது படம் 'shaky' யாக இருந்தாலும் அவரது 'அசைவு' பிரமாதமாக அமைந்திருக்கிறதல்லவா?

''நார்மல் லென்ஸ் - 120 எம்.எம். 125/16,பான்ட் பிலிம். இது சாதாரண புகைப்படம்தான்! ஆனால் டெலி லென்ஸ் இல்லாமலேயே சாதாரண காமிராவில் ஒரு 'action shot' எடுக்க முடியும் என்று காட்டவே இந்த முயற்சி!''

படம்: **உத்ரா**

விளக்கம்: **குண்டுமணி**

41 – 50

பொண்ணுக்குத் தங்கமனசு: கதாநாயகனாகப் படங்களில் நடித்திருக்கலாம். ஆனால் நிலைத்து நிற்க முடியுமா? இந்தச் சந்தேகத்தைத் தீர்த்து வைத்துத் தன்னம்பிக்கையைக் கொடுத்தது இந்தப் படம். உணர்ச்சி மிக்க அழுத்தமான வேடத்தை எனக்கு அளித்து என்னை நடிக்க வைத்தார் டைரக்டர் மாதவன். தேவராஜ் மோகன் இப்படத்தை இயக்கினர்.

சொந்தம்: பல புகழ்பெற்ற நாடகங்களை அரங்கேற்றிய என்னெஸ்ஸென் தியேட்டர்ஸாரின் இந்நாடகம் படமாக்கப்பட்டது. மேடை நாடகத்தில் ஏற்ற அதே வேடத்தைப் படத்திலும் ஏற்று நடிப்பது மிக அரிது. மேஜர் சுந்தரராஜன் நடித்த பாத்திரத்தை முத்துராமன் திரைப் படத்தில் ஏற்றார். ஆனால் எனக்கு மேடையில் ஏற்று நடித்த வயோதிகப் பிரம்மச்சாரி வேடமே.

திருமலை தெய்வம்: நமது திரைப்பட உலகத்தினர் எப்பொழுதுமே சுலபமான வழியைப் பின்பற்றுபவர்கள். ஒரு படம் சிறப்பாக ஓடிவிட்டால் போதும். ரசிகர்கள் 'போர் போர்' என்று கத்தி ஓயும்வரை விட மாட்டார்கள். அந்த வரிசையில் வந்தது தான் இந்தப் படம். இப்படத்தை வெளிவிட்ட நேரம் புராணப் படங்களே இனி வேண்டாம் என ரசிகர்கள் ஒதுக்குமளவுக்குப் புராணப் படங்கள் நிறைய வந்து குவிந்துவிட்ட சமயம்.

கட்டிலா தொட்டிலா: இப்படத்தின் பாடல் காட்சியை டேப்பில் பதிவு செய்து படத்தின் கதாநாயகிக்கு அனுப்பியிருந்தார்கள். கன்னடப் பட உலகில் பிரபலமாக இருந்த கல்பனாதான் இப்படத்தில் என்னுடன் நடித்தவர். பெங்களூரிலிருந்து வந்தவர். சென்னை மீனம்பாக்கத்தில் காரில் புறப்பட்டவுடன் டேப் ரிகார்டரை 'ஆன்' செய்தார். கேட்க வேண்டிய பாட்டு ஒலித்தது. பாட்டு முடிந்தவுடன் கல்பனாவைப் பற்றிக் கண்டன விமரிசனங்களும் ஒலித்தன! திடுக்கிட்ட அவர் தன்னைப் பற்றி இப்படி அபிப்பிராயம் வைத்திருக்கும் ஒரு கம்பெனிக்காகத் தான் நடிக்கத்தான்வேண்டுமா என நினைத்துக் காரைத் திருப்பி மீனம்பாக்கத்துக்கே ஓட்டச் சொல்லிவிட்டார். விவரம் அறிந்த தயாரிப்பு நிர்வாகி மீனம்பாக்கத்துக்கு ஓடிச் சென்று அவரைச் சமாதானம் செய்து அழைத்து வந்தார். சமீபத்தில் கல்பனா இறந்த செய்தி கேட்டு நான் திடுக்கிட்டேன். இறப்பதற்கு முன் அவர் எழுதி வைத்த வார்த்தைகள் என் நெஞ்சைத் தொட்டன: ''வாழ்க்கையில் எல்லாவற்றையும் பெற்று நான் அனுபவித்துவிட்டேன். இனி நான் உறங்க வேண்டும்!''

பெண்ணை நம்புங்கள்: இந்தப் படத்தை நினைக்கும்போதெல்லாம் சிரிப்பான, சுவையான சம்பவம் நினைவுக்கு வரும். படம் ஓடிக் கொண்டிருந்தது. எனக்குத் திரு










- "இப்படி யார் யாரையோ கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறவருக்கா என் தங்கையைக் கொடுப்பது?"
- திருமலை தெய்வத்தில் ஒரு காட்சி
- "கல்பனா இறந்த செய்தி கேட்டுத் திடுக்கிட்டேன்!"
- "டாக்டர் ராதாகிருஷ்ணனிடம் நான் வரைந்த அவர் ஓவியத்தைக் காட்டிக் கையெழுத்துப் பெற்றேன்!"

படம் முடித்து வைக்கப் பெண்ணையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். என் நண்பர்கள் எல்லோரும் ஒருங்கிணைந்து கோவை மாவட்டத்தையே அலசி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். ஏதோ ஒரு காரணத்துக்காக ஒவ்வொரு இடமும் தட்டிப்போய்க் கொண்டே இருந்தது. கோவை காந்திபுரத்தில் ஒரு பெண் இருப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்றனர். காப்பி வந்தது. பையனைப் பற்றிய விவரங்களைக் கேட்டார்கள். இதுவரை உரையாடல்களை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அந்த வீட்டைச் சேர்ந்த வாலிபன் விறுவிறு வென்று உள்ளே சென்று ஒரு வாரப் பத்திரிகையை எடுத்து வந்தான். அந்தப் பத்திரிகையில் நானும் ஜெயச்சித்ராவும் இருந்த ஒரு புகைப் படத்தைக் காட்டி, "இவர்தானே மாப்பிள்ளை?" என்று வினவினான். எனது நண்பர்கள் அந்தக் கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு காப்பியைக் கூடச் சாப்பிட்டு முடிக்காமல் எழுந்து விட்டார்கள். காரணம், 'இப்படி யார் யாரையோ கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பவருக்கா என் தங்கையைக் கொடுப்பது?' என்ற தொனி அந்தப் பையனின் கேள்வியில் இருந்தது!

சொல்லத்தான் நினைக்கிறேன்: படம் ரிலீஸ் ஆனது. ஒரு நாள் எஸ். எஸ். என். -தியேட்டர்ஸ் நாடகம் முடிந்து வெளியே வந்தபொழுது ஒரு மூதாட்டி, என்னைப் பார்த்தவுடன் மூக்கைச் சிந்தி 'கோ'வென்று கதறினாள். "மூணு பொண்களிலே ஒருத்தியைக் கூடக் கல்யாணம் செஞ்சுக்க முடியாமப் போச்சே" என்றாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. "நாடகத்தில் சாமியாராக அல்லவா நடித்தேன்?" என்று கூறி நான் சிரித்துக் கொண்டிருந்த பொழுது அந்த அம்மாள் "நேற்றுத்தான்



சிவகுமார்



வீட்டுக்கு வந்திருந்த விருந்தினர்களுடன் அப்பா உற்சாகமாகப் பேசிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் மணி வந்தான்.

''அப்பா! சாக்லெட் வாங்க ஐம்பது காசு வேண்டும்'' என்றான்.

''இந்தாடா கண்ணு வாங்கிக்க'' என்று அப்பா காசை எடுத்துக் கொடுத்தார். பத்தடி தூரம் நடந்த மணி திரும்பி வந்தான்.

''அப்பா! இவர்கள் எல்லோரும் போன பிறகு அன்றைக்கு மாதிரி காசைத் திரும்பப் பிடுங்கிக் கொள்ள மாட்டீர்களே?'' என்று கேட்டு வைத்தான். அப்பா முகத்தில் ஈயாடவில்லை!

-மேனு


சொல்லத்தான் நினைக்கிறேன் பார்த்தேன். தங்கமான பிள்ளை. உனக்குப் போய் மூன்று பொண்ணுலே ஒண்ணுகூடக் கிடைக்கலேங்கறதை நினைச்சா எனக்குத் துக்கம் தாங்கலே'' என்றான். நான் சிரித்துக் கொண்டே, ''கே. பாலசந்தரிடம் சொல்லி நாலு பெண்களைக் காதலிக்கிற மாதிரி அடுத்த படத்திலே நடிக்க வெச்சு அந்த நாலு பெண்ணையுமே கல்யாணம் பண்ணிக்கிற மாதிரி எடுக்கச் சொல்றேன். சரிதானே?'' என்றேன்.

திருமாங்கல்யம்: இதில் நட்சத்திர நடிக நடிகையர் பட்டியல் மிக நீண்டது. எல்லோருக்கும் தைத்த உடைகள் எல்லாமே வெளி நாட்டுத் துணியால் ஆனவை. மிருந்த பொருட் செலவில் பெரிய செட்டுகள் போட்டு எடுத்த படம். ஜெயலலிதாவின் 100வது படம். இதே படம் ஆந்திராவில் ''ஜீவனதரங்காலு'' என்ற பெயரில் தெலுங்கில் எடுக்கப்பட்டு, வசூலில் சரித்திரம் படைத்தது. ஆனால் தமிழில் வேறு மாதிரி ஆகிவிட்டது. பணக்காரத் தம்பி, பெண்களின் தொடர்பினால் கெட்டுவிடக் கூடாது என்பதற்காகச் சட்டம் படித்த அண்ணன் ஒரு பெண்ணைக் கடத்தி வந்து அவள் மயங்கிய நிலையில் இருக்கும்போது கள்ளத் தாலி கட்டச் செய்வதை விட அபத்தமான கதை உண்டா என்று ரசிகர்கள் கேட்ட கேள்வி படத்தைப் பாதித்து விட்டது.

டைகர் தாத்தாச்சாரி: உணர்ச்சி மிக்க காவியம் ஒன்றை நாடக பாணியில் திரைப்படமாக்கி வீணாக்கி விட்டோம். பதின்மூன்றே நாட்களில் என். எஸ். என். தியேட்டர்ஸ் நாடகத்தில் பங்கு பெற்ற அனைவரையுமே வைத்து உருவாக்கிய படம்.

சிசுபாலன்: மனோகர் நாடகங்கள் எல்லாமே சரித்திர, புராணப் பின்னணிகளை அடிப்படையாகக் கொண்டவை. சிசுபாலனும் நாடகமாகத்தான் இருந்தது. நேராக நாடகத்தைப் படமாக்குவது போல் ஒரு புது முயற்சி செய்து பார்த்தார் இயக்குனர் சம்பத்குமார். ஆனால் அந்தப் படம் என்ன சொல்லிற்று தெரியுமா? சினிமா வேறு, நாடகம் வேறு என்று போதித்து விட்டது.

மாணிக்கத் தொட்டில்: ''சார் இரண்டொரு பாத்திரத்தில் ஒரு கதை சொல்லுங்கள். சிக்கனமாகக் குறைந்த செலவில் படம் தயாரிக்க வேண்டும்'' என்று கேட்டவர்களுக்கெல்லாம் கதை தந்து பல வெற்றிகளைக் கண்ட பாலமுருகன், தாம் சொந்தமாகத் தயாரிக்கும்போது மட்டும் பதினைந்து பாத்திரங்களை வைத்து ஒரு கதையை எழுதிப் படம் தயாரித்து மிகவும் கஷ்டப்பட்டு விட்டார். இந்தப் படத்தில் நடிக்கும்போது தான் நான் பாரதத்தின் முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களிடம் நான் வரைந்த அவர் ஓவியத்தைக் காட்டிக் கையெழுத்துப் பெற்றேன். பேட்டி: **'சலன்'**



ஞாயிறு - கல்கி குழந்தைகளுக்கானபோட்டி அறிவிப்பைப் பார்த்து விட்டு செல்வன் டி. எம். ரவி, ''கதை கட்டுரை ஓவியம் எல்லாவற்றுக்கும் பரிசு அறிவித்துள்ளீர்களே, கைத்திறனுக்குப் பரிசு கிடையாதா?'' என்று கேட்டதுடன் நில்லாமல், தனது ஆற்றலைக் காட்டி ஓர் அழகிய பூர்ண கும்பத்தைத் தயாரித்து அனுப்பியிருக்கிறான். பதினைந்து வயதான செல்வன் ரவியின் பூர்ண கும்பம் எதிர்காலச் செல்வங்களின் நல்வாழ்வுக்கு அளிக்கும் மரியாதை வரவேற்பாகக் கருதி இங்கு அதன் புகைப்படத்தைப் பிரசுரித்து மகிழ்கிறோம்.

அபரிமிதமான நாட்களில்

விவசாயிகள் தங்களின் அமோகமான உபரி விளைச்சலைப் பற்றிக் கவலைப்படவே வேண்டாம். உணவுக் கார்ப்பொரேஷன் அவர்களின் உபரி விளைச்சலை கொள்முதல் செய்யக் காத்திருக்கிறது. வருடம் முழுவதும் உங்களுக்கு நியாய விலை கிடைக்குமாறு செய்கிறது.

பற்றுக்குறை நாட்களில்

நுகர்வோர், பற்றுக்குறை நாட்களில் விலைவாசி உயர்வு, தட்டுப்பாடு பற்றிக் கவலைப்படவேண்டாம். உணவுக் கார்ப்பொரேஷன் தடையின்றி கிடைக்கும்படி வகை செய்வதுடன், நியாய விலையிலும் கிடைக்கும்படி செய்கிறது. திட்டமிட்ட கொள்முதல், பாதுகாத்த சேமிப்பு, வினியோகம், கையிருப்பை பெருக்குதல், முதலியவற்றை செவ்வனே செய்வதின் மூலம், கள்ளச் சந்தை, பெருலாபமீட்டுதல் ஆகியவைகள் நிகழாமலும் தடுக்கிறது.

தேசியப் பணியில் —

விவசாயிகள், நுகர்வோர் சேவையில்

இந்திய உணவுக் கார்ப்பொரேஷன்

எங்கே போகிறோம்?



ஏ.ஸி. திருலோகசந்தர் பேட்டி

திரை உலகம்: வளர்ச்சியா? வீழ்ச்சியா?

கேள்வி: சமீப காலத்தில் தமிழ்த் திரை உலகில் ஏராளமான திரைப் படக் கம்பெனிகள் காளான்கள் போன்று திடீரென்று தோன்றியுள்ளன. அம்மாதிரியே ஏராளமான படங்களும் தயாராகின்றன. தற்போது சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட படங்கள் தயாரிப்பு நிலையில் உள்ளதாக அறிகிறோம். இந்நிலை தமிழ்த் திரைப் படத் துறையின் வளர்ச்சியைக் காட்டுவதாக நம்புகிறீர்களா?

திருலோகசந்தர்: இந்நிலை தமிழ்த் திரை உலகின் உண்மையான வளர்ச்சியைப் பிரதிபலிப்பதாக நான் கருதவில்லை. இது ஒரு நீர்க்குமிழியைப் போன்றதுதான். உடைபடும்போதுதான் உண்மை நிலை புரியும். புதிதாகத் தோன்றியுள்ள பெரும்பாலான படத் தயாரிப்பு நிறுவனங்கள் திரைப்படம் தயாரிப்பதை ஒரு லாட்டரிச் சீட்டு போலக் கருதி இறங்கியுள்ளார்களே தவிர, கலை சம்பந்தப்பட்ட ஒரு தொழிலாகக் கருதுவதாக எனக்குத் தோன்றவில்லை. அதோடு குழந்தைக்கு மிட்டாயைக் காட்டி அழைத்துச் செல்வதைப் போன்று அத்தகைய திடீர்த் தயாரிப்பாளர்கள் சினிமாத் துறையின் சில பிரகாசமான அம்சங்களை மட்டும் வெளிக்காட்டிச் சொந்தமாக இல்லாமல் மாற்றாரது பணத்தில் விளையாடுகிறார்கள். இத்துறையில் ஆழ்ந்த அனுபவமும், திறமையும் இல்லாத இத்தகைய தயாரிப்பாளர்களின் செயலால் தயாரிப்பில் இருக்கும் படங்களில் 60 சத விகிதம் திரையிடப்படும் நிலைக்கே வராமல், பல்வேறு நிலைகளில் தொடர முடியாமல் நின்று விடுகின்றன. இதனால் பணம் போட்டவர்களுக்கு நஷ்டம் மட்டுமல்ல; கச்சா பிலிமும் வீணாகிறது. சமீபத்தில் கச்சா பிலிம் விநியோகம் சம்பந்தப்பட்ட டெல்லி அதிகாரி ஒருவருடன் பேசிக் கொண்டிருந்த போது அவர் ஒன்றைக் குறிப்பிட்டார்: 'சென்ற ஆண்டு சுமார் 80 படங்கள் தயாராகி வெளியானதாக வைத்துக் கொண்டால் அதன் அடிப்படையில் அடுத்த ஆண்டு படத் தயாரிப்புக்குத் தேவையான கச்சா பிலிம் அளவை நிர்ணயித்து மேல் நாட்டிலிருந்து தருவிக்கிறோம். ஆனால் அடுத்த ஆண்டில் முந்திய ஆண்டை விட இருமடங்கு படங்கள் தயாரிக்கப்படும்போது நிச்சயம் கச்சா பிலிம் தட்டுப்பாடு வரத்தானே செய்யும்! இம்மாதிரி தயாராகும் படங்கள் முழுமையாகத் தயாராகிச் சிறப்பாக அமையுமானால் வரவேற்கத் தக்கதுதான். ஆனால் பாதியிலேயே கைவிடப்பட்டுக் கச்சா பிலிம் வீணாவதைக் காணும்போது இப்பிரச்னைக்கு எப்படித் தீர்வு காண்பது என்பது கேள்விக் குறியாக உள்ளது' என்று குறிப்பிட்டார். ஒருவித சுய கட்டுப்பாடுடன் தயாரிப்பாளர்கள் இத்துறையில் ஈடுபட்டால் இந்நிலை சீராகும்.

கேள்வி: குறைந்த செலவில் விரைவாகத் தயாராகும் படங்களைப் பற்றி (Low Budget Film) உங்கள் அபிப்பிராயம் என்ன?

திருலோகசந்தர்: எந்தெந்தப் படங்களைக் குறைந்த செலவில் தயாரிக்க முடியுமோ, அவற்றுக்குத்தான் இந்நிலை பொருந்தும். எல்லாப் படங்களையுமே குறைந்த செலவில் விரைவாகத் தயாரிக்க வேண்டும் என்றால், அது 'அவசரக் கோலம், அள்ளித் தெளி' என்றாகிவிடும். குறைந்த செலவில்தான் படங்கள் தயாரிக்க வேண்டுமென்றால், சந்திரலேகா, மனோகரா, ராஜ ராஜ சோழன் போன்ற படங்களை எப்படி உருவாக்க முடியும்? அதோடு இன்னொன்றையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். நிதானமாகத் திட்டமிட்டு, பாத்திரப் படைப்புகள், காட்சி அமைப்புகள் ஆகியவற்றைச் சிறப்பாக அமைத்து எடுக்கப்படும் படங்களின் செலவு அதிகமானாலும் இவை வசூலிலும் சிறப்பான பலனை அளிக்கின்றன என்பதை எந்தத் தயாரிப்பாளரும் மறுக்க முடியாது.

கேள்வி: அப்படியானால் தற்போது ஏன் பிரும்மாண்டமான தயாரிப்புகள் முன் போல் தயாரிக்கப்படுவது இல்லை?

திருலோகசந்தர்: இதற்குக் காரணம் திரைப்பட உலகம் முன் போல் போதிய வருமானத்தைத் தற்போது தருவதில்லையாதலால் ஏ. வி. எம்., ஜெமினி, வாஹினி போன்ற பெரிய நிறுவனங்கள் தயாரிப்பினின்று விலகி நிற்பதுதான். இந்நிலை ரொம்ப நாள் நீடிக்காது. பழைய நிலை திரும்பத்தான் போகிறது. திறமையும், அனுபவமும் மிக்க பெரும் நிறுவனங்கள் மறுபடியும் திரைப் படம் தயாரிக்கும் காலம் வரத்தான் போகிறது. தமிழ்த் திரையுலகம் உண்மையான வளர்ச்சியைக் காணத்தான் போகிறது.

கேள்வி: தற்போது கிராமிய சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பல படங்கள் வெற்றியடைவதும், அவையடுத்து அம்மாதிரியான படங்கள் ஏராளமாகத் தயாராவதும் எதைப் பிரதிபலிப்பதாகக் கருதுகிறீர்கள்?

திருலோகசந்தர்: நகரத்துச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்ட படங்களையே பெரும்பாலும் நீண்ட காலமாகக் கண்டு வந்த ரசிகர்களுக்குக் கிராமியச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்ட இப்படங்கள் அதிலும் வண்ணத்தில் காணும்போது ஒரு சுற்றுலாவைப் போன்ற அனுபவத்தில் ஆழ்த்துவதால் சிறப்பாக ஓடுகின்றன. ஆனால் இத்தகைய படங்களும் நகரங்களில் பெற்ற வெற்றியைக் கிராமங்களில் பெறவில்லை என்று அறிகிறேன்.

கொழுக்கட்டை நன்றாக இருக்கிறது என்பதற்காக ஒரு நாளில் ஆறு வேளையும் கொழுக்கட்டையே செய்து போட்டால் வெறுப்புத் தட்டிவிடும் என்பது போல் நமது தயாரிப்பாளர்கள் கிராமியச் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்ட படங்களை ஏராளமாக எடுத்து இப்படங்களைப் பார்ப்பதற்கு வெறுப்பு உண்டாகும் நிலைக்கு ரசிகர்களை நிச்சயம் விரட்டி விடுவார்கள்!

கேள்வி: 'கலைப்படங்கள்' என்று எடுக்கப்படும் படங்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

திருலோகசந்தர்: நான்கு ஓவியர்களை அழைத்து ஒரு குறிப்பிட்ட சப்ஜெக்டைக் கொடுத்துப் படம் வரைந்து கொடுக்கச் சொன்னால் அவர்கள் வரையும் படங்களின் அடிப்படை ஒன்றாக இருந்தாலும் அணுகு முறையும், வெளிப்பாட்டுத் தோற்றமும் மாறுதலாகத்தானே இருக்கும். இவற்றில் எது கலை, எதில் கலைத் திறன் கிடையாது என்று எப்படிக் கூற முடியும்? திரைப்படத் துறையும் அம்மாதிரிதான்.

ஒவ்வொருவர் படம் எடுக்கும் முறை ஒவ்வொரு மாதிரி இருக்கும். 'இதுதான் கலைப்படம்; அது கலைப்படம் இல்லை' என்று முத்திரை குத்துவது சரியானதாக எனக்குப் படவில்லை.

திரைப்படத் துறை கலை சம்பந்தப்பட்ட வியாபாரத் துறையாகும். கலைப் படம் என்று பெயர் சொல்லிக் கொண்டு எவரும் நஷ்டமடையும் விதத்தில் படம் எடுக்க மாட்டார்கள். கலைப் படம் எடுப்பவர்களும் பெரும்பாலும் செக்ஸையும், வன்முறையையும் மையக் கருத்தாகக் கொண்டுதான் படம் எடுக்கிறார்கள். இதற்குக் காரணம் வியாபார நோக்குத்தான்.

இவ்விஷயத்தில் இன்னொன்றையும் சொல்ல ஆசைப்படுகிறேன். பின் நோக்கிச் சென்று, முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன்பிருந்த கோட்பாடுகள், மூட நம்பிக்கைகள், ஜாதி வித்தியாசங்கள் இவற்றைப் பிரதிபலிப்பது போல் எடுப்பதுதான் 'கலைப்படம்' என்றதோர் எண்ணம் பரவிக் கிடக்கிறது. மேல் நாட்டவருக்கு இந்தியாவைப் பற்றி மனத்தில் பதிந்துள்ள தவறான எண்ணங்களை ஊர்ஜிதப்படுத்த இப்படங்கள் ஏதுவாக அமைந்து, மேல் நாடுகளில் வரவேற்பைப் பெறுவதால் இவைதாம் கலைப்படங்கள் என்று பலரும் நம்புகிறார்கள்.

கலைப்படங்கள் என்றால் தற்காலத்திய சூழ்நிலைகளை உள்ளது போல் பிரதிபலிப்பதாக ஏன் அமையக் கூடாது என்பது எனது கேள்வி.



உசிலை மணி பற்றி ஒரு கற்பனை!

அவர் ஒருநாள் பெரிய மூட்டையுடன் பஸ்ஸில் ஏறினாராம். கண்டக்டர் மூட்டைக்கு டிக்கட்டும் அவருக்கு Luggageம் வாங்கினாராம்.!

— வி. பி. ரங்கராஜன்


ELEGANT
கோ ஆப்டெக்ஸ்
பாலியஸ்டர்,
பட்டு ஆடைகள்
புத்துலகப் படைப்பு...!
புதுமைகளின்
முன்னறிவிப்பு...!
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

கேள்வி: திரைப்படங்களுக்குத் தணிக்கை அவசியம்தானா? தமிழ்த் திரை உலகின் தணிக்கை முறை பற்றி உங்கள் கருத்து என்ன?

திருலோகசந்தர்: திரைப் படங்களுக்குத் தணிக்கை முறை அவசியம் என்று நம்புபவன் நான். ஆனால் இத்தணிக்கை முறையின் தீவிரமான கட்டுப்பாடுகள் படத்தின் சிறப்புக்கு எதிரிடையான விளைவுகளைத் தோற்றுவிப்பதாக அமையக் கூடாது! தற்போது தணிக்கைக் குழுவில் சில பெண்கள் உட்படப் பதினைந்து பேர்கள் அங்கத்தினர்களாக உள்ளனர். தணிக்கை செய்யும் முறையில் உறுதியான கோட்பாடுகளும் சரியான 'துலாக் கோலும்' இல்லாமல் தணிக்கையாளர்களின் மனப் போக்கின் அடிப்படையில் தணிக்கை செய்யப்படுவதான சூழ்நிலை உள்ளது. ஒரு படத்தில் ஒரு குறிப்பிட்ட காட்சியை அனுமதிப்பவர்கள் அத்தகைய காட்சியை இன்னொரு படத்தில் தணிக்கை செய்து விடுகின்றனர். கேட்டால் ஒன்றோடு இன்னொன்றை ஒப்பிடக் கூடாது. அது வேறு இது வேறு என்று விடுகின்றனர். இத்தகைய முரண்பாடுகள் இல்லாத விதமாகத் தணிக்கை முறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

தணிக்கை செய்யப்படு முன் தணிக்கைக் குழுவும், படத்தின் டைரக்டரும் இணைந்து விவாதிக்கும் விதமாக ஓர் ஏற்பாட்டைச் செய்துள்ளனர். இந்தச் சந்திப்பில் தணிக்கையாளர்கள் தாங்கள் ஏதோ ஆசிரியர் போலவும், படத்தின் டைரக்டர் ஏதோ மாணவன் போலவும் நினைத்துக் கொண்டு கேள்விகளை மனம் போனபடி கேட்கின்றனர். அதோடு, செக்ஸ் சம்பந்தப்பட்ட சர்ச்சைக்குரிய காட்சிகளை, தணிக்கைக் குழுவில் உள்ள பெண்மணிகள் எவ்விதத் தயக்கமும் இன்றி விரிவாக விவாதிக்க முற்படுகின்றனர். என்னைப் போன்ற சில இயக்குனர்களுக்கு, அவர்களுடன் இவ்விஷயத்தை வெளிப்படையாக விவாதிக்கவே தயக்கமாக இருக்கிறது.

தணிக்கைக் குழுவினர் சார்பாகத் தணிக்கைக் குழு அதிகாரி படத்தின் இயக்குனருடன், அக்குழுவின் சிபாரிசுகளை விவாதித்து இருவருக்கும் ஒப்பும் விதமாக முடிவெடுக்கும் வழிமுறையைப் பின்பற்றலாம்.

கேள்வி: தாங்கள் திரைப்பட இயக்குனராகச் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகச் செயலாற்றி வருகிறீர்கள். தொடர்ந்து வெற்றிகரமான படங்களைத் தங்களால் அளிக்கவும் முடிகிறது. நடிப்புத் துறையிலும் வசனம் பேசும் முறையிலும் பெரும் மாறுதல்கள் சமீப காலத்தில் ஏற்பட்டு ரசிகர்களிடமும் வரவேற்புப் பெற்றுள்ளதே! இது சம்பந்தமாக ஏதேனும் கூற விரும்புகிறீர்களா?

திருலோகசந்தர்: 'மைக்' இல்லாமல் உரக்க வசனம் பேசி மிகையாக மேக்கப் போட்டு நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த நாடக நடிகர்கள் சினிமாவில் அப்போது நுழைந்த காலம். நாடகங்களைப்போன்று நீண்ட வசனங்களை உரக்கப் பேசி இவர்கள் நடிப்பதை மக்களும் விரும்பினர். தற்போது, புருவத் தூக்கலில், தலையசைப்பில், தோள் குலுக்கலில் வசனம் பேசாமல் நடிப்பை வெளிப்படுத்தினால் மக்கள் புரிந்து கொள்ளும் அளவுக்கு ரசனை உயர்ந்துள்ளது. ஆனாலும் கிராமப்புறங்களில் மக்களின் ரசனைத் திறன் இந்த அளவுக்கு இன்னும் உயரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். என்னைப் பொறுத்த மட்டில் இரு சாராரையும் மனத்தில் கொண்டு ஓரளவு சமரசம் செய்து படத்தை இயக்குகிறேன்.

கேள்வி: சமீபத்தில் 'ஹரிதாஸ்' படம் டெலிவிஷனில் திரையிடப்பட்டதே. சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்பு எடுக்கப்பட்ட அப்படத்துக்கும் தற்போதைய திரைப் பட நிலைக்கும் உள்ள முக்கிய வித்தியாசமாக எதைக் கருதுகிறீர்கள்?

திருலோகசந்தர்: ஹரிதாஸ் படத்தின் ஒளிப்பதிவுச் சிறப்பு என்னை அயர வைத்தது. இத்துறையில் அப்போதைக்கும் தற்போதைய நிலைக்கும் ஒப்பிட்டால் நாம் பெரிதாக இன்று ஒன்றையும் சாதித்து விடவில்லை என்றுதான் தோன்றுகிறது. இடைப்பட்ட காலத்தில் 'காமிராத்' துறையில் நாம் மறந்திருந்த அம்சங்களைத் தற்போது நினைவூட்டிக் கொண்டு படமெடுக்கிறோம் என்றுதான் சொல்லிக் கொள்ளலாம். டைரக்ஷனும் அப்படத்தில் மிகச் சிறப்பாக இருந்தது என்றுதான் நான் கருதுகிறேன்.

பேட்டி: நாயகன்

புகைப்படம்: மன்னை மூர்த்தி



ஒரு மாணவன்: நாம எல்லோரும் சேர்ந்து நம்ம வாத்தியாருக்கு ஒரு வெள்ளி மோதிரமாவது வாங்கிப் போடணும்!

மற்றவன்: ஏன், ரிடையர் ஆகப் போறாரா?

ஒரு மாணவன்: இல்லே. நாம வெறும் கையிலே குட்டுப்படறதை விட மோதிரக் கையாலே படலாமேன்னுதான்!

-வெ. சீதாராமன்



வளமைக்கு
வலுவான
வடிவமைத்துள்ளோம்!
இந்தியா சிமெண்ட்ஸ் 1947 ஆம் ஆண்டு முதல் நம் நாட்டின் வளர்ச்சியில் அவா கொண்டுள்ளது. ஆம், சங்கர் சிமெண்ட் உபயோகிக்கப்பட்டு அமைக்கப்பட்ட கட்டடங்கள், சாலைகள், அணைகள் மற்றும் பாலங்கள் கணக்கிலடங்கா. மாபெரும் திட்டங்களில் சில — இராஜஸ்தான் கால்வாய், இடுக்கி அணை, நங்கல் அணை, கொச்சின் கப்பல் கட்டும் தளம், MAPP போன்ற அணுமின் திட்டங்கள், பாம்பன் பாலம், தாஜ் கோரமண்டல் ஹோட்டல்.
இன்று, வளர்ச்சிக்குப் பல வடிவங்கள் கொடுத்து வலுவான இந்தியாவை அமைத்திடும் பணியில் எங்களது ஆழ்ந்த ஈடுபாடை மீண்டும் வலியுறுத்துகிறோம்.
SANKAR IC CEMENT
சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்:
இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1 மவுண்ட் ரோடு
சென்னை 600 002
SCHOOL
SAA/IC/2823

மல்லிகை மோகினி பட விமரிசனம்

ஒரு ஜீவனுக்கு முற்பிறவியின் நினைவு—தான் யாராக இருந்தோம் என்ற பிரக்ஞை—ஏற்படுமானால் உண்டாகிற குளறுபடிகள்? இதை மையமாகக் கொண்டதுதான் மல்லிகை மோகினி. எல்லாரும் போகும் பாதையில் போகாமல் வித்தியாசமான பாதையில் போயிருக்கிறார் கதாசிரியர் நாதன். தமிழ்ப் பட ரசிகர்களுக்குப் புதிது. கதைமட்டுமல்ல; நடிகர்களுமேதான். புனா பிலிம் இன்ஸ்டிடியூட்டில் நடிப்புக் கலை பயிலும் இரு இளைஞர்களை (இவர்களுக்குத் தமிழ் தெரியுமா? குரல் கொடுத்திருப்பவர்கள் யாரோ?) அறிமுகப்படுத்தியிருக்கிறார் இயக்குனர் துரை. எடுப்பான தோற்றம். அநில், விக்ரம் இருவரும் அழகாகவே இருக்கிறார்கள். காதல் செய்யத் தெரிகிறது. இப்போதைக்கு இது போதுமே!

கோவாவின் அழகை யெல்லாம் தேடிப் பிடித்துக் காமிராவுக்குள் அடைத்திருக்கிறார் இஷான் ஆர்யா. காமிராக் கோணங்கள் பிரமிப்பூட்டும்படி இருக்கின்றன.

நீள நீளமான பாட்டுக்கள் கேட்க இனிமையாய் இருந்தாலும் அளவு மீறிப் போவதால் சிலவேளைகளில் சலிப்பும் தட்டுகிறது. கதையில் சம்பவங்கள் குறைவு. விபத்தில் ஏற்பட்ட அதிர்ச்சியில் ஓர் இளைஞனுக்கு (20 வயது) வாழ்ந்த நினைவு மறந்துபோய் முற்பிறவியின் நினைவு வந்து விடுகிறது. அந்தப் பிறவியில் காதலித்தவளின் நினைவுகளோடு அவளைத் தேடிப் போகிறான். அவளைச் சந்திக்கிறான். இவன் உருவம் வேறு. ஆனால் எண்ணம் பழைய எண்ணம். அவளோ இப்போது வேறு ஒருவனின் மனைவி.

அது சரி, ஒரு கேள்வி—

முன்பிறவியில் அவன் காதலித்தபோது அவனுக்கு வயது 22. அவளுக்கு 20 இருக்கலாம். அடுத்த பிறவியில் அவனுக்கு முற்பிறவியின் நினைவு வரும்போது — வயது 20. ஆனால் காதலி மறு பிறவி எடுக்கவில்லையே. ஆக இப்போது அவளுக்கு 40 வயது இருக்க வேண்டாமா? ஆனால் காதலியாக வரும் லதாவோ மார்க்கண்டேய வரம் பெற்றவராக அதே இளமையுடன் அன்று கண்ட மேனிக்கு அழிவில்லாமல் இருக்கிறார். முற்பிறவியின் காதல் நினைவுகள் இப்பிறவி இளைஞனை வாட்டி வதைக்கும்போதெல்லாம் பழைய காதல் நினைவுகளை — களியாட்டங்களாக நிறையவே காட்டுகிறார்கள். ஆடிப் பாடுபவர் லதாவாயிற்றே!

தேங்காய் — டாக்டராகவும் — டோபியாகவும் இரட்டைப் பிறவி எடுத்து இப்படி இம்சைப்படுத்தி இருக்க வேண்டாம். ஸ்ரீகாந்த் கண்ணன் விவகாரம் சண்டைக் காட்சிக்காக ஒட்டப்பட்டது. ஐசரி வேலன் சச்சு காமிக்கும் கதையின் 'சீரியஸ்னஸை'க் கெடுத்து விடுகிறது. பல்வேறு டான்ஸ்களும் பாட்டுக்களும் கதையின் டெம்போவைத் துவளச் செய்து விடுகின்றன. எடுத்துக் கொண்ட கருத்தை இன்னும் சிறப்பாக, விறுவிறுப்பாகக் கொண்டு போயிருக்கலாம். தவறிவிட்டார் துரை. மாஸ் அப்பீலுக்கு வளைந்து கொடுத்து விட்டார். விளைவு? மோகினி மயக்குகிறாள்; ஆனால் மல்லிகையின் மணமில்லை.

—கௌசிகன்



செம்பியன்

எழுதும்

முழு நீள நாவல்

பில்லா–ஏங்கா



1

திருப்தியான ஒரு முனகல் பெருமூச்சுடன் பிரதாப் சரிந்து மெத்தையின் மீது விழுந் தான். ஏ. ஸி. அறையின் குளிருக்கு இதமாக ரஜாயை இழுத்துப் போர்த்தி ஆடையற்ற தன் உடலை மறைத்துக்கொண்டான். புரண்டு கொடுத்து வசதியாகப் படுத்தவன் ஒரு மணி நேரம் கழித்து 'என்னை எழுப்பு!' என்று அரை மயக்கத்தில் பேசுவது போல் குளறலாகச் சொன்னான்.

விடுவிக்கப்பட்டவளாக எழுந்த அனசூயா ''ஷூட்டிங்குக்குப் போக வேண்டாமா? டைரியில் பதினொரு மணிக்கு ஸெட்டில் இருக்க வேண்டும் என்று குறித்திருக்கிறதே!'' என்றாள்.

''அந்த ராங்கிக்காரி ஒரு மணி நேரம் காத்திருந்தால் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது!'' என்று தன்னுடன் ஜோடி சேர்ந்து நடிக்கும் நடிகையைப் பற்றிக் கூறிய பிரதாப், 'என்னைத் தொந்தரவு பண்ணாதே!' என்று முற்றுப்புள்ளி வைத்தான். அவனுடைய இலேசான குறட்டை ஒலி ஏ. ஸி. இயந்திரத்தின் ஒலியுடன் போட்டியிடத் தொடங்கியது.

அனசூயா ஒரு பெரு மூச்சுடன் எழுந்தாள், தரையில் அலங்கோல் கழற்றி வீசி எறியப் பட்டிருந்த ஆடைகளை ஒவ்வொன்றாய் எடுத்து உடுத்திக் கொண்டாள். ஆளுயரக் கண்ணாடியில் பார்த்துச் சற்றே கலைந்திருந்த கேசம், திலகம் முதலியவற்றைச் சரி செய்து கொண்டாள். ஒரே ஒரு வெள்ளி இழை தெரிந்தது. அதை நீக்கிவிட நினைத்து இரு விரல்களால் பற்றியவள், 'இருந்து விட்டுத் தான் போகட்டுமே' என்பது போல் தன் மேனியை ஒருமுறை பாதாதிகேசம் பார்த்துக்

கொண்டவளுக்கு ஒருவித அசுவாரசியம் தட்டியது. 'என்ன அழகாய் இருந்தென்ன? இந்த அழகை எதற்காகக் கட்டிக் காக்க வேண்டும்? யாருக்காக?' என்று தோன்றியது. குழந்தைகள் ரமேஷ், சுரேஷ் ஆகியோருக்காகத்தான் என்று உள் மனம் பதிலளிக்கவும் செய்தது. அவர்களுக்காக, அவர்களை வளர்த்து ஆளாக்குவதற்காக நான் ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்ள வேண்டும்; வாஸ்தவம்தான். அழகை எதற்குப் பேணிப் பாதுகாக்க வேண்டும்? இதோ முதுகைக் காட்டியபடி திரும்பித் தூங்குகிறாரே, இவருக்காகவா? 'சுள்' கொட்டியபடியே அவள் சாவி போட்டு ஓர் அலமாரியைத் திறந்தாள். அதனுள் இன்ஜெக்ஷன் ஸிரிஞ்ச், ஊசிகள் முதலானவற்றைக் கொதிக்க வைத்து ஸ்டெரிலைஸ் செய்யும் பாத்திரம் இருந்தது. திறந்து, இடுக்கியால் ஓர் ஊசியை எடுத்து ஸிரிஞ்சில் பொருத்தினாள். டிஸ்டில்ட் வாட்டர் குப்பியை உடைத்து ஸிரிஞ்சில் அந்நீரை இழுத்துக் கொண்டாள். பிறகு ஒரு வெள்ளைப் பொடி அடங்கிய குப்பிக்குள் அதே நீரைச் செலுத்தி, அது கரைந்ததும் மறுபடி ஸிரிஞ்ச் அதனை உறிஞ்சி இழுக்கச் செய்தாள். தனக்குத் தானே அவள் ஊசி போட்டுக் கொண்ட போது சுருக்கென்று வலிக்கத்தான் செய்தது — நெஞ்சும் கூடத்தான்.

ஸ்டெரிலைஸ் செய்யப்பட வேண்டிய இந்த ஊசி, ஸிரிஞ்சைக் கவனமாக அடையாளமாகத் தனியே வைத்து விட்டு அலமாரியை மறுபடியும் மூடிப் பூட்டினாள். அறையைவிட்டு வெளியேறிக் கதவைச் சாத்தி விட்டு "முருகா! குழந்தைகளுக்குச் சாப்பாடு எடுத்துப் போகணும்! நேரமாவுது!" என்று உத்தரவிட்டபடியே சமையலறைக்குள் சென்றாள். சமையல்காரர் கிருஷ்ணன், சாதம் சாம்பார் தயிர் எல்லாம் தனித்தனியே தயாராய் எடுத்து வைத்திருந்தார். அவரே சாதம் கலந்துவிடலாம்தான்; ஆனால் யஜமானியம்மாள் அதை அனுமதிப்பதில்லை. தன் குழந்தைகளுக்குத் தானே சாதம் பிசைவாள். இவ்வளவு பெரிய பணக்காரி; பெரும் புகழ் பெற்ற திரைப்பட நட்சத்திரத்தின் மனைவி குழந்தைகளுக்கு அன்புடன் பார்த்துப் பார்த்து எல்லாம் தானே செய்வதைக் காணக் கிருஷ்ணனுக்கு வியப்பாகவும் இருந்தது; பெருமையாகவும் இருந்தது. 'இதான் தாய்மைங்கிறது!' என்று அவர் தமக்குள் ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொள்வார்!

2

அஜ்மலும் ஸோனியும் ஒரு டீக்கடையில் நுழைந்து பெஞ்சில் அமர்ந்து, சிமெண்ட் மேஜை மேல் கரம் ஊன்றி இரண்டு டீக்கு ஆர்டர் கொடுத்தார்கள். டீ வந்ததும் டம்ளரை இலேசாகச் சுழற்றி உதட்டருகே கொண்டு சென்று மணத்தையும் உஷ்ணத்தையும் மட்டும் அளந்து விட்டுத் திருப்பி மேஜை மீதே வைத்த அஜ்மல், "பில்லாவையும் ரங்காவையும் பிடிச்சுட்டாங்க தெரியுமா?" என்றான்.

"பார்த்தேன்!" என்றான் ஸோனி நாவி தழைத் தட்டி.

"எப்படியோ அவங்க திட்டம் கோளாறுப் போச்சு! காரியத்தைத் திட்டமிட்டபடி நிறைவேற்றி யிருந்தாங்கன்னு லட்ச ரூபாய் குறைஞ்சபட்சம் கிடைச்சிருக்கும்."

"பணத்துக்கு ஆசைப்பட்டுப் பிள்ளைங்களைக் கடத்திக்கிட்டுப் போறது, அப்புறம் அவங்களைக் கொன்றே போடறது. சேச்சே! மனுஷங்களா அவங்க? ராட்சதப் பேய்ங்க!" என்றான் டீக்கடைக்காரன்.

"பில்லா — ரங்கா பயலுகளுக்குச் சாமர்த்தியம் போதாது. நேக்கா நடந்துக்கிட்டிருந்தால் பசங்களைக் கொன்று போட்டிருக்கவும் வேணும்! பணத்தைக் கோட்டை விட்டிருக்கவும் வேணும்! போலீஸில் அகப்பட்டுக் கிட்டிருக்கவும் வேணும்!"

"எல்லாப் போக்கிரிப் பசங்களுமே மாட்டிக்க மாட்டோம்னு மார் தட்டி நினைச்சுக் கிட்டுத்தான் ஆரம்பிக்கிறாங்க. ஆனா ஏதாவது ஒரு சின்ன விஷயத்திலே கவனக்குறைவா இருந்துவிட அது அவங்களைக் காட்டிக் கொடுத்துடறது!" என்றார் டீக்கடைக்காரர்.

அஜ்மல் பதில் கூறாமல் பேப்பர் படித்தான். வலக்கரம் தானியங்கு முறையில் டீ டம்ளரைச் சுழற்றுவதும் வாயருகே கொண்டு செல்வதும் தாழ்த்துவதுமாக இருக்க நாளிதழில் பில்லா — ரங்கா பற்றிய விவரங்களை வாசித்தான். பக்கத்தில் அமர்ந்திருந்த ஸோனியும் அவன் தோளுக்கு மேலாக எட்டிப் பார்த்துப் படிக்க முயன்றான். சிரமமாயிருந்தது. விட்டு விட்டான். எழுந்து போய்க் கண்ணாடி ஜாடி ஒன்றைத் திறந்து தானாகவே ஒரு பொறையை எடுத்துக் கொண்டு வந்து மீண்டும் அமர்ந்தான். டீயையும் பொறையையும் மாறி மாறிச் சாப்பிட்டு முடித்தான்.

"இன்னொரு ஸிங்கிள் போடவா? ஒன்பை டூ?" என்றான் டீக்கடைக்காரன். பதில் பேசாது இருவரும் எழுந்தார்கள். சில்லறையை வைத்து விட்டு வெளியேறி நடந்தார்கள். கொஞ்ச தூரம் போய் ஒரு முனை

திருப்பூரில்
T.N.C 8398 என்ற எண் உள்ள
ஆட்டோவின் பின்புறம்



இப்படி படம் வரையப்பட்டு 'டேப் ரிக்கார்டர்' பொருத்தப்பட்டு இது ஒரு 'தேனிசை ஊர்தி' என்ற வாசகமும் காணப்படுகிறது.
ஆட்டோ ஓடும் சத்தத்திற்கு மேல் தேன் இசை வேறு காதில் ஏறுமா என்ன?

— திருப்பூர் 'குமரன்'



திரும்பி நெடுஞ்சாலையில் எட்டடி உயரக் காம்பவுண்டு சுவர் ஒன்றின் ஓரமாக நடந்தபோது ''இது தான் அந்தக் கான்வென்ட்!'' என்றான் அஜ்மல்.

''ஓகோ!'' என்றான் ஸோனி.

''ரமேஷ், சுரேஷ் இரண்டு பேரும் இங்கே தான் படிக்கிறாங்க. சினிமாச் செய்தியிலே இந்த வாரம் படம் பிடிச்சுப் போட்டிருக்கான்!''

''அவங்க அப்பன் பெரிய சினிமா ஸ்டார் ஆச்சே. சினிமா செய்தியிலே போடாமல் இருப்பானா? அவன்கிட்டே ஒரு பத்து லட்சம் தேறுமா?''

''சீ! பரதேசிப் பயலே! ஒரு படத்துக்கு இரண்டு லட்சம் வாங்கறாண்டா அவன்!''

''குழந்தைகளிடம் ரொம்ப இஷ்டமோ?''

''இஷ்டமில்லேடா. அதும்பேரு பாசம்! ஐயய்யோ! என்ன ஜோரு! என்ன அமர்க்களம்! அப்பா குழந்தைகளைக் குளிப்பாட்டி விடறாரு! அம்மா பவுடர் போட்டு டிரெஸ் பண்ணறா! அப்பா பாடம் சொல்லித் தரார்! அம்மா சாதம் போட்டு உபசாரம் பண்ணறா! அப்பா கொஞ்சி முத்தமிட்டுக் காரில் ஏற்றுகிறார்; டிரைவர் ஓட்டிப் போறார். வாசப் படியிலே நின்னு அப்பாவும் அம்மாவும் டாட்டா சொல்லுறாங்க!''

''அவ்வளவு ஆசையா! இருக்கும் இருக்கும்! இல்லாமலா போட்டோ புடிச்சுப் போடறாங்க!''

''பசங்க கரெக்டா காலமெ 8.45-க்கு பள்ளிக்கூடம் வராங்க, சாயந்திரம் 3.45-க்கு வீட்டுக்குக் கிளம்பறாங்க. அவங்களைக் கொண்டு வந்து விடறதும் திரும்பி அழைச்சுப் போறதும் ஒரே கார்தான். அதே டிரைவர்தான்!''

3

ஷைலஜா பெல்பாட்ஸும் டாப்பும் அணிந்து புத்தக மூட்டையைக் கையில் ஏந்திக் கொண்டு வாசலுக்கு வந்த போது தபால்காரர் வந்தார். சினிமாச் செய்திப் பத்திரிகையைத் தந்து விட்டுப் போனார். கல்லூரிப் புத்தகங்களை வாசல் படியிலேயே வைத்து விட்டு உறையைப் பிரித்தாள் ஷைலஜா. மேலட்டையில் ஒரு நடிகை படம்; ஒரு பக்கமாக, 'உள்ளே—பிரதாப் வாழ்க்கையில் ஒரு நாள்: வண்ணப் படத்துடன்' என்று குறிப்பும் காணப்பட்டது. அவசரம் அவசரமாக அந்தப் பக்கத்தைத் தேடினாள் ஷைலஜா. கேசம் முதல் இடுப்பு வரை தோற்றமளித்த பிரதாப், நெஞ்சில் ஒரு மெல்லிய சங்கிலியில் கட்டித் தொங்கிய புலிநகம் தவிர வேறு எதுவுமே அணியாமல் காட்சி தந்தான். நீண்டு வளர்ந்த அடர்ந்த முடி, 'வா, இங்கே!' என்று அழைப்பு விடுக்கும் கண்கள், எதையும் லட்சியம் செய்யாத புன்னகை, நெஞ்சை அளாவத் தூண்டும் சுரு ரோமங்கள்.

புத்தகங்களையும் பத்திரிகையையும் எடுத்துக் கொண்டு வீட்டின் மாடியில் தன் தனி அறைக்குச் சென்றாள் ஷைலஜா. புத்தகங்களைப் பொத்தென்று மேஜை மீது போட்டாள். ஃபானை முழுவதுமாகச் சுழல விட்டாள். ரப்பர் மெத்தையுடன் கூடிய ஸ்பிரிங் கட்டிலில் விழுந்தாள். அது அவளை ஒரு முறை உயரத் தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடியது.

''ஷைலஜா! நீ காலேஜுக்குப் போகலே?'' என்று கேட்டுக் கொண்டே வந்தாள் தாயார்.

''இல்லேம்மா! ஒரே தலைவலியா யிருக்கு: நாளைக்குப் போறேன். மாத்திரை முழுங்கிட்டுப் படுத்திருக்கேன்!'' என்றாள் ஷைலஜா.

அம்மா தொட்டுப் பார்த்துவிட்டு, ''நல்ல வேளை! ஜுரம் ஒன்றுமில்லை'' என்றாள்.

அப்புறம் இன்னொரு தடவை மகளை உற்றுப் பார்த்தவிட்டு, ''நிஜமாவே தலைவலியா இல்லே வெறும் சோம்பல்தானா?'' என்று கேட்டாள்.

ஷைலஜா பதில் சொல்லவில்லை.

''உனக்கோ படிக்கப் பிடிக்கவில்லை. காலேஜிலே சேர்க்க வேண்டாம் என்றால் உன் அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. யாராவது நன்றாகப் படிக்கிற பெண்ணுக்கு உன் இடத்தைக் கொடுத்தால் நாடாவது அந்த அளவுக்கு உருப்படும்!'' என்று கூறிவிட்டு அகன்றாள் தாய்.

அம்மா குரல் கேட்டதும் ஒளித்து வைத்த சினிமாச் செய்திப் பத்திரிகையைத் தலையணை அடியிலிருந்து எடுத்த ஷைலஜா அதைப் பிரித்து மேல் வயிற்றில் நிமிர்த்தி வைத்து, பிரதாப்பைப் பார்த்தாள். பிறகு அது அப்படியே மடிந்து தன் நெஞ்சின் மேல் விழச் செய்தாள். திரும்பத் திரும்ப நிமிர்த்துவதும் நெஞ்சின் மேல் கிடத்துவதுமாய் இருந்தாள்.

நிமிர்த்திப் பார்த்த போது அதில் பிரதாப்பின் வண்ணப்படம் பளபளத்தது. அதை அடுத்து இருந்த பக்கங்களில் 'வாழ்வில் ஒருநாள்' என்ற தலைப்பில் பிரதாப் விடிந்து எழுந்ததிலிருந்து இரவு படுக்கும் வரை என்னென்ன செய்கிறார் என்று படங்களாக எடுத்துப் பிரசுரித்திருந்தார்கள். காலை எழுந்ததும் தேகப்பயிற்சி செய்வதில் தொடங்கி இரவு பெட்ரூம் கதவருகே நின்று குறும்புப் புன்னகையுடன் குட்பை கூறுவதுவரை வரிசையாகப் பல படங்கள். குழந்தைகள் மீது பாசத்தைச் சொரியும் படங்கள். கருணை காட்டும் படங்கள்! கடமையில் கண்ணாயிருப்பதை உணர்த்தும் படங்கள்.

ஷைலஜா மறுபடியும் முன்னாலிருந்த வண்ணப் படத்துக்கு வந்தாள். அவள் விரல்கள்

அந்த வழவழ காகிதத்தை இலேசாகத் தடவின. பத்திரிகை மடிந்து அவள் நெஞ்சில் மிதந்தது. ஒரு பெருமூச்சு அலை அதனைச் சந்தித்து உயர்த்தித் தாழ்த்தியது. அவள் கண்கள் மூடிக் கொண்டன. ஏதேதோ இனிய கற்பனைகள்!

4

“ஒரு மணி நேரம் கழித்து எழுப்பச் சொன்னீங்க!'' என்று கணவன் தோளைப்பற்றி உலுக்கினாள் அனசூயா. ஏஸி அறையில் அவர்களைத் தவிர வேறு யாருமில்லை. ''உம்ம்ம்ம்!'' என்று முனகியபடி எழுந்தான் பிரதாப். உள்ளாடைகளை எடுத்துத் தரித்தான். மேலாடைகளைப் புனையும் போது, ''ராத்திரி எப்போ வருவீங்கன்னு சொன்னா டாக்டருக்குத் தகவல் தரலாம்! உங்க ஹெல்த் செக் அப் பண்ணி ஒரு மாசத்துக்கு மேல் ஆச்சுன்னு நினைவுபடுத்தினார். இரண்டு மாசத்துக்கு ஒருதரம் தவறாமல் பிளட் டெஸ்ட் முதலியன செய்துக்கறது நல்லதுன்னு சொல்லச் சொன்னார்!'' என்றாள் அனசூயா உணர்ச்சியற்ற குரலில்.

''டாம் இட்!'' என்றான் பிரதாப். ''டாம் தி டாக்டர்!'' டாம் தி பிளட் டெஸ்ட்! டாம் தி செக் அப், டாம் யூ!''

''என்னைச் சொல்லுங்க முதலில். நான் நாசமாய்ப் போய்த் தொலையலையே என்பது தான் முதல் கவலை. குழந்தைகளுக்காகப் பார்க்கிறேன். இல்லாத போனால் எப்பவோ தற்கொலை செய்துக் கிட்டிருப்பேன்!''

''டாம் யுவர் சில்ட்ரன்! டாம் ரமேஷ்! டாம் சுரேஷ்!'' என்றான்.

''வேண்டாங்க!'' என்று நாத் தழுதழுக்கக் கெஞ்சினாள் அனசூயா. ''என்னை என்ன வேணுமானாலும் சொல்லுங்க. ஆனா நம்ப குழந்தைகளைச் சபிக்காதீங்க!''





''நம்ம குழந்தைங்களா சீ! உன் குழந்தைங்கன்னு சொல்லு!''

பார் கேபினட்டைத் திறந்து அவன் அவசரம் அவசரமாக விஸ்கி எடுத்து நடுங்கும் கரங்களால் ஊற்றிக் கொண்டான்.

அனசூயா பொலபொலவென்று கண்ணீர் உகுத்தாள். விம்மி வெடிக்கும் குரலில், ''ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க? எத்தனை நாளைக்கு என்னை இந்த மாதிரி கொடுமைப் படுத்தப் போறீங்க? ஒரு மணி நேரத்துக்கு முன்னால் உங்க இஷ்டத்துக்கெல்லாம் நான் இந்தக் கட்டிலில் வளைந்து கொடுக்கலையா? அப்போ நான் மனைவியா யிருந்தேன்! இப்போ வேசியாயிட்டேனா? பத்து நாளைக்கு முன்னால் சினிமா செய்திப் பத்திரிகைக்காரங்க வந்த போது குழந்தைகளிடம் அன்பைக் கொட்டுவது போல் நடித்துப் படம் எடுத்துக் கிட்டீங்களே, இப்பே அதே குழந்தைகளைச் சபிக்கிறீங்களே?

''அவங்க வந்திருந்தபோது இந்த டாம் இட் எங்கே போச்சு? இந்த விஸ்கி பாட்டிலை ஏன் ஒளிச்சு வைச்சீங்க? நான் ஊசி போட்டுக்கறதை போட்டோப் படம் எடுக்கச் சொல்லறது தானே? சினிமா மட்டுமில்லாமல் வாழ்க்கையிலும் ஏங்க இந்த டபுள் ரோல் ஆக்ட் பண்ணறீங்க?''

''நான் டபுள் ரோலும் போடுவேன்.. ட்ரிபிள் ரோலும் போடுவேன்! நீ யாருடி கேட்க?''

அவளுக்குத் திடீரென்று கோபம் வந்தது. கண்ணீர் உலர்ந்தது. ''நான் கேட்கத்தான் செய்வேன். நான் கேட்காமல் வேறு யார் கேட்பாங்க? இதை மட்டுமா கேட்டேன்? இதைவிட அதிகமாகவும் கேட்பேன்! உன் குழந்தைங்க, உன் குழந்தைங்கன்னு குத்திக் காட்டறீங்களே, அவை உங்க குழந்தைங்களாகவும் இருக்க வேண்டாம்னு யார் தடுத்தாங்க?''

'பளார்!' என்று அவள் கன்னத்தில் ஓர் அடி விழுந்தது. அந்த அடி உருவாக்கிய வலியைவிட அதிகமாக நெஞ்சத்தில் பொங்கிய வேதனை காரணமாகவே கண்ணீர் பெருக்கெடுத்தது அவளுக்கு. அவன் அறைக் கதவைத் திறந்து கொண்டு வேகமாய் வெளியேறினான். விம்மி விசும்பிக் கொண்டிருந்த அவளுக்குத் திடீரென நினைவு வந்தது: அவன் தூங்கிக் கொண்டிருந்த போது வந்த சினிமாச் செய்தி பத்திரிகையைப் பார்த்து விட்டு அவள் வரவேற்பு அறை மேஜை மீதே வைத்து விட்டு வந்திருந்தாள். அது அவன் கண்ணில் பட்டுத் தொலைத்து அதனால் அவன் ஆத்திரம் மறுபடியும் கிளர்ந்தெழ ஏதாவது விபரீதம் நேரப் போகிறதே!

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு அழுகையை அடக்கிக் கொண்டு வெளியே ஓடினாள். அதற்குள்....



அந்தப் பத்திரிகையின் குறிப்பிட்ட பக்கங்களைப் பிய்த்து எடுத்து, சுக்கல் சுக்கலாய்க் கிழித்துக் குப்பையாகக் குவித்திருந்தான் பிரதாப். திரும்பிப் பார்த்தான்; வாசல்படிகளில் இறங்கிக் காரில் ஏறும் தருவாயில் இருந்தான்.

'போகட்டும்' என்று அனுமதித்தவள் குப்பைக் குவியலை வீட்டில் வேலைக்காரர்கள் யாரும் பார்த்து விடக் கூடாது என்று அஞ்சி அள்ளி, மடியில் வைத்துக் கட்டிக் கொண்டாள். மறுபடியும் படுக்கை அறைக்குள் வந்தாள். நூறு நிமிடங்களுக்கு முன்பு அவன் தன்னை அணைத்துக் கசக்கிய அந்தக் கட்டிலைப் பார்க்கவே அவளுக்குப் பிடிக்கவில்லை. பாத்ரூமுக்குள் சென்று அதன் மறுபுறம் இருந்த மற்றொரு அறைக்குத் — தன் தனி அறைக்குச் சென்றாள். யாரும் உள்ளே நுழையாதவாறு கதவுகளைத் தாளிட்டுக் கொண்டு காகிதத் துகள்களை எடுத்து மறுபடியும் ஒன்று சேர்க்க முயன்றாள். ஜிக்—ஸா புதிர்கள் பலவற்றை விடுவிப்பது போல ரொம்ப நேரம் கஷ்டப்பட்டு ஒவ்வொரு பக்கமாக ஒழுங்குபடுத்தினாள். படத்திலிருந்த குழந்தைகள் ரமேஷ், சுரேஷுக்கு ஆசை தீர முத்தங்கள் கொடுத்தாள். பிறகு அந்தத் துண்டுகளை எறியவோ எரிக்கவோ மனமின்றி ஓர் அட்டைப் பெட்டியைத் தேடியெடுத்து அதில் வைத்து மூடித் தன் இரும்பு அலமாரியில் யாரும் பார்க்க முடியாத இடத்தில் பத்திரப்படுத்திப் பூட்டினாள்.

5

டி.எஸ்.பி. ஞானமுத்து தாம் கையாண்ட ஒரு கேஸின் ரிப்போர்ட்டைத் தயாரித்துக் கொண்டிருந்தான். பேனாவில் மசி தீர்ந்து விடவே மை புட்டியை எடுப்பதற்காக மேஜை டிராயரைத் திறந்தான். உள்ளுக்குள்ளேயே மேலாக இருந்த படம் அவன் கண்களை ஈர்த்தது. இப்போது மட்டுமல்ல, ஒவ்வொரு முறையும் டிராயரை இழுத்துத் திறக்கும் போதெல்லாம் அந்தப் படம் அவன் கவனத்தை, சிந்தனையை ஈர்த்துச் சிலநிமிஷங்கள் செயலற்றுப் போகச் செய்யும்.

'அனசூயா இன்று வேறு ஒருவன் மனைவியாகி விட்டாள். அவளை விரும்புவது தவறுதான். அவளை நினைப்பதுகூடக் குற்றம்தான். அதுவும் போலீஸ் அதிகாரியான தானே அது போன்ற தவறுகளைச் செய்யக்கூடாதுதான்! ஆனால் மனம் என்று ஒன்று இருக்கிறதே, அதற்கு யார் விலங்கு பூட்ட முடியும்? உள்ளத்தை எப்படி லாக்அப்பில் தள்ள முடியும்!'

கல்லூரி நாட்களில் அனசூயாவை அவன் மனப்பூர்வமாக விரும்பினான். அவளிடம் அதை அவன் மனம் விட்டுச் சொல்லவும் செய்தான். 'என் காதல் உண்மையானது, தூய்மையானது, மனப்பூர்வமானது, என்னை ஏற்றுக் கொள்!' என்று ஒரு சந்தர்ப்பத்தில் அவன் சொன்னான். அப்பப்பா! அந்தச் சந்தர்ப்பம் கிடைப்பதற்காக அவன் ஏங்கித் தவித்த நாட்கள்! ஒருமுறை உல்லாசப் பயணம் போனபோது அந்த வாய்ப்பு கிட்டியது. உதகை தொட்டபெட்டா சிகரத்தை அவள் மீண்டும் பார்க்க ஆசைப்பட்டாள். மற்றவர்கள் கடைசி சில மணி நேரத்தை ஏரிக் கரையிலும் ஏரி மீது படகு செலுத்தியும் கழிக்க விரும்பினார்கள். அவன் அவளை டாக்ஸியில் அழைத்துப் போனான்.

அவன் சொன்னதைக் கேட்டபோது அவள் உடல் சிலிர்த்தாள். உதகையின் குளிரால் அல்ல, தொட்டபெட்டா சிகரத்திலிருந்து சுற்றுவட்டாரத்தை அதல பாதாளத்தில் பார்த்ததால் அல்ல, தன் காதலுக்காக ஏங்கி நிற்கும் ஒருவன் இருக்கிறான் என்ற பெருமிதப்பூரிப்பில் அவள் புளகாங்கிதம் அடைந்தாள்.

''எனக்கு உங்களைப் பற்றித் தெரியும்!'' என்றாள் அவள். ''நீங்கள் இந்தச் சிகரத்தை விட உயரமானவர். ஆனால்... ப்ளீஸ்! இவ்வளவு உயர்ந்த உள்ளத்தைப் புண்படுத்துவதற்காக என்னை மன்னியுங்கள்!'' என்றாள்.

ஞானமுத்துவுக்குத் திகைப்பாய் இருந்தது. தனக்கு இப்படி ஓர் ஏமாற்றம் ஏற்படும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. அவ்வளவு தன்னம்பிக்கையுடன் அவன் அவளை அணுகியிருந்தான். ஞானமுத்து நல்ல அழகன், கம்பீரத் தோற்றம், படிப்பிலே கெட்டிக்காரன், விளையாட்டிலே வீரன், எப்படித் தன்னை மறுக்க அவளால் முடிந்தது?

அனசூயாவின் மனம் பிரதாப்பிடம் அடைக்கலம் புகுந்திருப்பதை அவன் வெகு சீக்கிரமே புரிந்து கொண்டான். பிரதாப் கல்லூரி நாடகங்களில் நடிப்பவன். அருமையான கலைஞன். வேறு பல கல்லூரிகளில் நடக்கும் நாடகங்களில் உதவுவதற்காகக்கூட அவனை அழைப்பதுண்டு. அவ்வளவு பிரசித்தம். அவனை 'டூப்ளிகேட் சிவாஜி' என்று மாணவர்கள் அழைப்பார்கள். பாராட்டாகவும் இப்படி குறிப்பிடுவார்கள்; அவனிடம் பொறாமை கொண்டவர்கள் கேலியாகவும் இதையே சொல்வார்கள்.

நடிப்பாற்றல் ஒன்றை விட்டால் பிரதாப்பிடம் வேறு விசேஷமான திறமை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. பிரிதொரு நாள் ஞானமுத்து அனசூயாவை எச்சரித்தான். ''அனு! நான் உன் காதலில் குறுக்கிடுவதாக நினைக்காதே! ஆனால் கண்மூடித்தனமான காதல் யாருக்குமே நல்லதல்ல. பிரதாப் நன்றாக நடிக்கிறான், இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் நடிப்புத் திறனை மட்டும் வைத்துக் கொண்டு முன்னுக்கு வருவது என்பது ரொம்பக் கஷ்டம். திரைப்படத் தொழில் ரொம்ப ரொம்பப் போட்டியும் பொறாமையும் மிகுந்தது. அந்தச் சமுத்ரத்

தில் உலவி வரும் திமிங்கிலங்களிடமிருந்து தப்பிக் கரை சேர்வது அசாத்தியம். பல ஆயிரம் பேருக்கு நடிப்பாற்றல் இருக்கலாம். ஆனால் அவர்களில்ஒருவனுக்குத்தான் அதிர்ஷ்டம் இருந்து திரை உலகில் பிரகாசிக்க முடிகிறது. யோசித்துப் பார், வாழ்க்கையில் ஒரு நல்ல நிலைமையைப் பிரதாப் அடைய முடியுமா? உன்னை வசதியாக வைத்துக் காப்பாற்ற முடியுமா?''

அவள் சிரித்தாள். அவர்கள் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகே பொங்கி அடங்கிய கடலலைகளைப் போல் அலை அலையாகச் சிரித்தாள். சிதறிய நீர்முத்துக்கள் நிலவொளியில் பிரகாசித்தது போல் அவள் மாதுளை இதழ்கள் விலக முத்துப் பற்கள் ஒளிர்ந்தன.

''ஞானமுத்து என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! ஆனால் அஞ்ஞானியாய் இருக்கிறீர்களே!'' என்றாள். ''காதல் என்பது அப்படியெல்லாம் கணக்குப் பார்த்துக் கொண்டு சாதக பாதகங்களை அலசிக் கொண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு எதிர்கால வசதிகளை அளந்து பார்த்துக்கொண்டு தோன்றுகிற விஷயம் இல்லையே! நான் என்ன செய்யட்டும்?''

ஞானமுத்துவின் கண்களில் நீர் திரண்டு விட்டது. அது இருமுத்துக்களாகப் பளபளப்பதை அனசூயா பார்த்தாள். ''அனு! ஐ ஆம் ஸாரி! எனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தால் நான் உளறி விட்டேன். நீ பிரதாப்பை மணந்து கொண்டு சந்தோஷமாக வாழ வேண்டும்.''


அவளுக்கும் மனம் இளகி விட்டது. ''உங்கள் மனசை ரொம்பக் கஷ்டப்படுத்தி விட்ட இந்தக் கொடுமைக்காரியை மன்னியுங்கள்!'' என்றாள். அவளுடைய கரம் ஒன்று நீண்டு அவன் கண்களைப் பூவிதழாய்த் தீண்டியது. துடைத்தது. திரண்டு நின்ற நீரை வடியச் செய்தது. படகு ஒன்று திரையாக அமைந்திருந்த துணிவில் அவள் இரக்கம் மிக எழத் தன் அதரங்களை அவன் கன்னத்தில் ஈர முத்திரையாகப் பதித்தபோது அவனது உவர்ப்புக் கண்ணீரும் இவளது அமுதுச்சுவை நீரும் கலந்தன. ஒன்றை ஒன்று சமன்படுத்தி விட்டன.

''உத்தமமான நீங்கள் அழுதால் அதுவும் என் பொருட்டு அழுதால் என் நெஞ்சே வெடித்து விடும்!'' என்றாள் அனசூயா. ''இனி அழவே மாட்டேன் என்று சத்தியம் பண்ணுங்கள். என்னை மன்னித்ததாய்ச் சொல்லுங்கள்!''

அவன் அவ்வாறே செய்தான். அவள் தன்னை உயர்வாக நினைக்கிறாள் என்பதே அவனுக்குப் பெருமையாக இருந்தது. ஏதோ ஒரு ''கிளாமர்'' அவளைப் பிரதாப்பிடம் ஈர்க்கிறது என்பது அவனுக்குப் புரிந்தது. இந்தக் கிளாமர் எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்றும் யோசித்தான்.

பிரதாப் கடைசி ஆண்டுப் பரீட்சை எழுதி முடிப்பதற்கு முன்பே, ஒரு நாடகத்துக்கு வந்திருந்து அவன் நடிப்பதைப் பார்த்த ஒரு டைரக்டர் அவனைக் கொத்திக் கொண்டு போய் விட்டார். பிறவி நடிகன் என்று பிரதாப்பை வர்ணித்தார். ஏகப் பப்ளிஸிடியுடன் அவன் திரையுலகில் அடியெடுத்து வைத்தான். கொடி கட்டிப் பறந்தது.

இனி பிரதாப் தன் கல்லூரிக் காதலியை மறந்து விடுவான் என்று ஞானமுத்து ஆவலுடன் எதிர்பார்த்தான். அப்படியேநடந்தது! பரீட்சையெல்லாம் முடிந்து விட்டது. அவன் போலீஸ் அதிகாரியாகப் பயிற்சி பெறச் சென்றான். தன் திட்டங்களை அவளிடம் அவன் விவரித்திருந்ததால் அவள்அவனுக்கு ஃபோன் செய்வது சாத்தியமாயிற்று. ''உங்களை விட்டால் எனக்கு வேறு யாரை நம்புவது என்று புரியவில்லை. என்னை எங்காவது ஏகாந்தமான இடத்துக்கு அழைத்துப் போங்கள். மனம் விட்டுப் பேச வேண்டும் எனக்கு'' என்றாள். சொல்லும்போதே குரல் கரகரப்பதை அவன் உணர்ந்தான். விடுமுறையன்று குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பதாக ஏற்பாடு செய்து பின்னர் அவளைத் திருவான்மியூர் தாண்டி மகாபலிபுரம் வரைஉள்ள ஏகாந்தமான கடற்கரைப் பிரதேசத்தில் ஓரிடத்துக்கு அழைத்துப் போனான். மணிக்கணக்காக அவள் தன் ஏக்கங்களை, தாபங்களை வெளியிட்டு அவன் மனத்தில் சுமைகளை ஏற்றினாள். ''என் பெற்றோரை வந்து பார்த்துப் போகுமாறு அவருக்குக் கடிதத்துக்கு மேல் கடிதம் எழுதி விட்டேன். அவர் அசைந்து கொடுக்கக் காணோம். எத்தனையோ விசிறிகளின் கடிதங்களுடன் சேர்ந்துவிடும் போலும் ஃபோன் செய்து பார்த்தால் எப்போது கேட்டாலும் இல்லை என்கிறார்கள்; எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. நேரில் போனால் ஏதாவது அவமானப்பட நேரிடுமோ என்று பயமாகவும் வெட்கமாகவும் இருக்கிறது.'' அவள் நிலைகுலைந்து அழுதாள். அவன் மெல்ல அவள் தோள்களைப் பற்றினான்.. ஆதரவு தேடி அவள் ஒண்டிக் கொண்டாள்.



''சீப்பு இரவல் கேட்கிறாயே! உனக்கு எதற்கு சீப்பு?''
''என் குருநாதர் சடைநாய் வளர்க்கிறார்! அதை வாரிவிட!''



ஆறுதலாக அவளை அரவணைத்தான். அந்தக் கட்டத்தில் அவன் விரும்பியிருந்தால் அவளை அடைந்திருக்கமுடியும். அந்த அளவுக்கு அவள் மென்மையாகி, தளர்ந்து மனம் பேதலித்துப் போயிருந்தாள். ஆனால் அவன் நிதானித்தான். ''நீ இன்னமும் அவனை விரும்புகிறாயா? அதைச் சொல்லு!'' என்றான். ''ஆமாங்க!'' என்றாள் அவள் விம்மலுக்கிடையே. ஞானமுத்து தன் ஆசைகளுக்கு அணை போட்டுக்கொண்டான். ''அவனை உனக்குப் பெற்றுத் தருவது என் பொறுப்பு'' என்று கூறிக் கண்ணீரைத் துடைத்தான்.

அவளுக்காகப் பிரதாப்பிடம் போய்ப் பேசினான். ''உன்னை முழுமையாக நம்பித் தன் உள்ளத்தை அர்ப்பணித்த அவளை நீ கைவிடலாமா?'' என்று கேட்டான்.

தான் செய்தது தவறுதான் என்று ஒப்புக்கொண்டான் பிரதாப். ''இந்த மாய உலகில் நுழைந்ததும் எனக்குத் தலைகால் புரியவில்லை. போலியான விஷயங்களைச் சத்தியம் என்று நம்பி ஏமாந்து போனேன். அனசூயாவைவிட உயர்ந்த உண்மை எதுவுமே இல்லை என்று எனக்கு இப்போது புரிகிறது'' என்றான். முதல் படம் ரிலீஸாகி 'ஓகோ' என்று ஓடிக்கொண்டிருந்த போது அவர்கள் திருமணம் நடந்தது. அவர்கள் படம் வெளி வராத சினிமாப் பத்திரிகை இடையாது. அவர்கள் கல்லூரிக் காதலை வர்ணிக்காத சினிமா எழுத்தாளர் இல்லை.

என்னதான் பிரதாப்பும் அனசூயாவும் அவனுக்கு நன்றி சொல்லி அடிக்கடி வந்து போகுமாறு வற்புறுத்தினாலும் தான் அவர்களைக் காணச் செல்வது உசிதமில்லை என்று உணர்ந்தான் ஞானமுத்து. தவறி விடமாட்டோம் என்ற தன்னம்பிக்கை அவனுக்கு இருந்தது. ஆனால் பிரதாப்பிடம் அவனுக்குச் சந்தேகம். இன்று வா, வா என்றுதான் அழைப்பான். ஆனால் அடிக்கடி சென்றால் எதற்காக இவன் வந்திருக்கிறான் என்பது போல் அவன் பார்வையில் சந்தேக பாவம் குடிபுகாது என்பது என்ன நிச்சயம்?

படிப்படியாகச் சந்திப்பைக் குறைத்துக் கொண்டான் ஞானமுத்து. அவனுக்குப் போலீஸ் அதிகாரி என்ற முறையில் பொறுப்புக்கள் குவிந்தன. அனசூயாவை மறக்க அவை உதவவில்லை என்றாலும் உழைப்பிலே கவனம் செலுத்தியபோது மன உளைச்சல் குறையத்தான் செய்தது. வீட்டிலே திருமணத்தைப் பற்றிப் பேச்செடுத்தாலோ, அல்லது மேஜை டிராயரைத் திறக்கும் போது அனசூயாவின் புகைப்படத்தைப் பார்க்க நேர்ந்தாலோ அவன் நினைவுகள் தறிகெட்டு விடும். அதற்குக் கடிவாளம்போட்டு அடக்கி ஒரு நிலைக்குக் கொண்டு வரச் சற்று நேரமாகும். கல்யாணம் செய்து கொள்வதில்லை என்று அவன் பிடிவாதமாக இருந்தான். ஒருத்தியை மனத்தில் ஏற்றி வைத்துக் கொண்டு வேறு ஒருத்தியுடன் குடும்பம் நடத்துவது துரோகமாகப் பட்டது அவனுக்கு.

''குட் மார்னிங் ஸார்!'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தான் டி.எஸ்.பி. ஞானமுத்து. ஸி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் நின்றுகொண்டிருந்தார். ''உட்காருங்கள் என்ன விஷயம்?'' என்று கேட்டபடியே அனசூயாவின் படத்தை ஒருமுறை பார்த்தபடியே மேஜை டிராயரைத் தள்ளி மூடினான்.

''ஒரு சின்ன மேட்டர்!'' என்றார் இன்ஸ்பெக்டர். ''நேற்று நம்ம கான்ஸ்டபிள் கந்தசாமி டீ குடிக்க ஒரு கடையில் நுழைந்திருக்கிறான். அங்கே ரெண்டு பேர் பில்லா—ரங்கா பற்றிப் பேசிக்கிட்டிருந்திருக்காங்க. பில்லா—ரங்கா ஏமாந்துட்டதாகவும் அதைவிடத் திறமையாகக் காரியத்தைச் செய்து முடித்திருக்கலாம்னும் பேசியிருக்காங்க. கந்தசாமி என்னிடம் ரிபோர்ட் பண்ணினான். அந்த டீக்கடைக்கு அவங்க தினம் வரதா தெரியுது. கடைக்காரர் சொன்னாராம். கண்காணிக்கணுமா? உங்களை அபிப்பிராயம் கேட்க வந்தேன்.''

''இது என்ன பெரிய விஷயம்?'' என்றான் ஞானமுத்து. ''நேற்று பில்லா ரங்கா பற்றிய செய்தியைப் பத்திரிகையில் படிச்சவங்க எல்லாரும் அவர்களைப் பற்றித்தான் பேசியிருப்பாங்க. அத்தனை பேரையும் கண்காணிக்கிறதுன்னு ஆரம்பிச்சா இந்தத் தேசத்திலுள்ள ஒவ்வொரு மனுஷனும் ஸஸ்பெக்ட்தான்! விட்டுத் தள்ளுங்க!''

''எஸ் ஸார்!'' என்று கூறிவிட்டுச் சென்றார் இன்ஸ்பெக்டர்.

6

அடுத்த சில வாரங்களுக்குள்ளாக அவன் மிகவும் மாறுபட்ட ஒரு பிரதாப் என்பது அனசூயாவுக்குப் புரிந்து போய் விட்டது. திரையுலகுக்குள் பிரமாத விளம்பரங்களுடன் புகுந்து, முதல் படத்திலேயே பெரு வெற்றி பெற்று விட்ட அவனைச் சுற்றிச் சதா சில புல்லுருவிகள் இருந்தார்கள். அவனைத் திருப்திப்படுத்தப் பேசிப் பேசி அவனது அற்ப ஆசைகளை நிறைவேற்றத் தயாராயிருந்து அவனை மகிழ்வித்து அதன் மூலம் தாங்களும் பயனடைந்த புல்லுருவிகள்.

பிரதாப் குடிக்கக் கற்றுக் கொண்டிருந்தான். பெண்களுடன் குலாவப் பழகி இருந்தான். அனசூயாவுக்கு ஏற்பட்ட ஏமாற்றம்! பாறையாக இதயம் உறைந்து போயிற்று. ஆனாலும் அவனை மாற்றி விடலாம். தனக்கே உரிய தனது பழைய பிரதாப்பாக அவனை மறுபடியும் உருவாக்கி விடலாம் என்று அவள் தன்னம்பிக்கையுடன் மனப்பால் குடித்தாள். அது தன் கடமையென்றும் உணர்ந்து

செயல்பட்டாள். அவள் முயற்சிகளுக்குப் பலன் இருக்கும் போல் ஆரம்பத்தில் தோன்றிய போது அவளுக்கும் உற்சாகம் கரை புரண்டது. மனத்தை இளக்கிக் கொண்டு அன்பைச் சொரிந்து அவனைத் தன்பால் ஈர்த்துத் திருத்த முயன்றாள். தன் எதிர் காலமே அவனுடைய எதிர்காலத்துடன் பின்னிப் பிணைந்திருக்கும் போது அவன் நலனுக்காகப் பாடுபட்டால் அதுவே தனக்கும் நல்லது விளையச் செய்யுமல்லவா? குடிப்பதை அடியோடு விட்டொழிக்க அவனால் முடியவில்லை. என்றாலும் அவளுக்காக மிதமாக அருந்தினான். அவள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நாலு பாக்கெட் சிகரெட்டை ஒரு நாளைக்கு ஒரு பாக்கெட் என்று குறைத்துக் கொண்டான்; பெண்களை அவன் தொடர்ந்து சந்திக்கிறானா. எந்த அளவுக்கு என்பதை அவளால் கணிக்க முடியவில்லை. ஷூட்டிங் என்று கிளம்பினால் பல மணி நேரம் ஆகும் அவன் திரும்பி வர. எங்கு போகிறான், என்ன செய்கிறான் என்று எப்படி அறிவது? ஃபோன் செய்து விசாரிப்பதோ டிரைவரைக் கேட்பதோ அநாகரிகமாகப் பட்டது. தன் கணவனைச் சந்தேகித்துத் துப்பறிவது போல் தோன்றக் கூடாது அல்லவா?

ஒருநாள் அவளுடைய நம்பிக்கையெல்லாம் சிதறும் வண்ணமாகக் குடி போதையுடன் ஒரு எக்ஸ்ட்ரா நடிகையையும் இழுத்துக் கொண்டு அவன் வீட்டுக்குள் நுழைந்த போது அனசூயா சில்லிட்டுப் போனாள். அவன் திருந்துவான் என்ற எதிர்பார்ப்புடன், திருந்த வேண்டும் என்பதற்காகவே எந்தக் கட்டிலில் அவள் அவன் விருப்பங்களையெல்லாம் பூர்த்தி செய்தாளோ அதே கட்டிலில் இன்று அவன் அந்த எக்ஸ்ட்ரா நடிகையுடன் சேர்ந்து விழுந்தான். தங்களுக்கு மதுவைச் சரியான அளவில் கலந்து கொடுக்குமாறு அவளுக்கு ஆணையும் பிறப்பித்தான். அவளுக்குச் 'சீ' என்று போய் விட்டது.


மறுநாள் அவன் புத்தி தெளிந்து இருந்த போது அவள் சொன்னாள்: ''உங்களைத் திருத்த முடியும் என்ற என் நம்பிக்கைகள் சிதறி விட்டன. ஆனால் இந்த அவமானத்தையாவது எனக்குத் தராமல் தவிர்த்திருக்கக் கூடாதா? உங்கள் லீலைகள் இந்த வீட்டின் எல்லைகளுக்கு அப்பால் எங்காவது நான் காண முடியாத இடத்தில் நடத்திக் கொள்ளக் கூடாதா? வேலைக்காரர்கள், டிரைவர் எல்லாரும் என்னைப் பரிதாபமாகப் பார்த்துத் தங்களுக்குள் பேசிக் கொள்ள வேண்டுமா?''

அவன் வெட்கப்பட்டான். ''தவறுதான். மன்னித்துவிடு!'' என்றான் பிரதாப். அந்த எக்ஸ்ட்ரா நடிகை சவால் விட்டாளாம். உங்கள் மனைவிக்கு எதிரே இன்னொரு பெண்ணுடன் சல்லாபிக்கும் தைரியம் உங்களுக்கு இருக்கிறதா என்று கேட்டாளாம். அதனால் தன் வீரத்தை நிலைநாட்டிக் கொள்ள அப்படிச் செய்ய வேண்டியதாகி விட்டதாம்.

''சீச்சி! இதுவா வீரம்? இதுவா ஆண்மை?'' என்று அவள் அருவருப்புடன் அவனைப் பார்த்தாள்.

''தப்புத்தான் அனு. தப்பு என்று நான் ஒப்புக் கொள்கிறேனே, இனி இப்படி நடக்காது'' என்று அவன் சத்தியம் செய்து தந்தான்.

அவள் மனம் இயல்பாக ஞானமுத்து பற்றி எண்ணியது. அன்றே அவர் செய்த எச்சரிக்கையை மதித்திருக்கலாம் என்று இப்போது தோன்றியது. ஆனால் நடந்தது நடந்து விட்டது. இனி ஞானமுத்துவை அடிக்கடி நினைவுக்குக் கொண்டு வருவது கூடத் தவறு என அவள் உணர்ந்தாள். அப்போதுதான் அவளுக்குத் தோன்றியது: 'ஒரு குழந்தை மட்டும் எனக்கென்று இருக்குமானால் போதும், வாழ்க்கை இன்பமயமாகி விடாவிட்டாலும் அர்த்த முள்ளதாகி விடும். கணவனை, அவனது காமக் களியாட்டங்களை எல்லாம் மனத்திலிருந்து ஒதுக்கி விட்டுக் குழந்தையைக் கண்ணும் கருத்துமாக வளர்த்துச் சிறந்த மனிதனாக உருவாக்குவதிலேயே கவனத்தைச் செலுத்திக் காலத்தை ஓட்டி விடலாம்.'



சிற்பம் வடிப்பது ரொம்ப சுலபம். ஒரு பாறையில் யானை உருவம் செதுக்க வேண்டுமா, உங்கள் கண்களுக்கு, அந்தப் பாறையில் யானை போல் தோற்றமளிக்காததையெல்லாம் வெட்டி எறிந்து விடுங்கள்! யானை தெரியும்.

—மிகாலேலோ —ராமு

ஆனால் அவள் கருத் தரிக்கவில்லையே? அவளுக்கு இந்த விஷயம் மிகவும் கவலையளிக்க ஆரம்பித்தது. ஒருநாள் அவள் அவனிடம் தன்னை டாக்டரிடம் அழைத்துப் போகுமாறு வேண்டினாள்.

''நானே இதைச் சொல்லணும்னு இருந்தேன்!'' என்றான் பிரதாப். ''கல்யாணமாகி ஒரு வருஷத்துக்கு மேலே ஆகிறது. நியூஸ் ஒண்ணையும் காணுமே'' என்று ஸ்டூடியோவில் பேசுகிறார்களாம் மறைவாக. அவன் முதுகுக்குப் பின்னால் சிரிக்கிறார்களாம்! தனக்காகவோ தன் மனைவிக்காகவோ இல்லாவிட்டாலும் வம்பு பேசுகிறவர்கள் வாயை அடைக்கவாவது அவளை டாக்டரிடம் அழைத்துப் போக வேண்டும் என்று அவன் விரும்பினான்.



அனசூயாவைப் பரிசோதித்த டாக்டர், அடுத்து அவனையும் பரிசோதிக்க விரும்பிய போது அவன் 'எதற்கு?' என்று ஒன்றும் புரியாமல் கேட்டான். 'குழந்தை பிறக்கவில்லை என்றால் அதற்கு மனைவி மட்டும் காரணமல்ல. கணவனாகவும் இருக்க முடியும்!' என்றார் டாக்டர். கடைசியில் பரிசோதனைகளை முடித்து. 'குழந்தை பிறக்காததற்குக் காரணம் பிரதாப்தான் என்றும் அவனுக்குக் குழந்தை பிறக்கவே வாய்ப்பில்லை' என்றும் தீர்மானமாகச்சொல்லி விட்டார்.

பிரதாப் ஷூட்டிங்கை ரத்து செய்து விட்டுப் பித்துப் பிடித்தது போல் இரண்டு நாட்கள் இருந்தான். அவனைப் பார்க்க அனசூயாவுக்குப் பரிதாபமாக இருந்தது. ''இதற்காக இப்படி இடிந்து போய் உட்காரலாமா? உங்களுக்குச் சினிமாவில் நடிக்கப் பிடிக்கவில்லையென்றால் தொலைத்துத் தலை முழுகுங்கள். நம்ம ரெண்டு பேருக்கும் வாழ்நாளுக்குத் தேவையான பணம் இருக்கிறது. வேறு ஏதேனும் ஊரில் குடியேறலாம். இரண்டு பேருமே ஏதாவது வேலைகளைத் தேடிக் கொள்ளலாம். பழசையெல்லாம் மறந்து விட்டுச் சந்தோஷமாய் இருக்கலாம்!'' என்றாள்.

அவன் ஒப்புக் கொள்ளவில்லை. ''உனக்கு ஓர் இழவும் புரிய மாட்டேனென்கிறது! நான் திரை உலகில் பிரபலமாகி விட்டேன். லட்சோபலட்சம் கண்கள் என் ஒவ்வோர் அசைவையும் கவனிக்கின்றன. நூற்றுக்கணக்கான கரங்கள் பேனா பிடித்து என்னைப் பற்றி ஏதாவது வம்பாக, சுவையாக எழுதக் காத்திருக்கின்றன. நான் சினிமாவை விடுவது என்றால் என்ன காரணம் சொல்வது? மறுபடியும் ஷூட்டிங்குக்குப் போகலாம் என்றாலோ என் காதுபடவே உரத்த குரலில் கிசுகிசு பேசுகிறார்கள். அவர்கள் வாயை எப்படி அடைப்பது? 'சார்! நீங்க படத்திலே தான் ஹீரோ. வாழ்க்கையிலே ஜீரோ'ன்னு டைரக்டர் பரிமளம் சொல்றார் என்று என்னிடம் ஒரு பத்திரிகை நிருபர் வேண்டுமென்றே சில நாள் முன்பு கூறினான். அவனுக்கு என்ன ஆசை தெரியுமா? நான் கோபமடைந்து அவன் சட்டையை முறுக்கிப் பிடிக்க வேண்டும், கிழிக்க வேண்டும், அவனை அடிக்க வேண்டும்! பக்கத்தில் புகைப்படக்காரரையும் தயாராய் இருக்கச் செய்திருந்தான். நல்லவேளை நான் பல்லை நறநறவென்று கடித்துக் கொண்டு பதில் கூறாமல் அப்பால் போய் விட்டேன். அவன் ஆசை நிராசையாயிற்று. இல்லாதபோனால் நாலு வாரத்துக்கு அந்த நிகழ்ச்சியை அமர்க்களப்படுத்தி எழுதிப் படங்களையும் போட்டு அந்த நிருபரும் புகைப்படக்காரரும் பெரிய ஹீரோக்கள் ஆகியிருப்பார்கள்!''

அனசூயா இதற்குப் பதில் கூறத் தெரியாமல் திணறினாள். திடீரென்று ஒரு நாள் பிரதாப் யோசனை உதயமானவனாக, ''நாம் அமெரிக்கா போகிறோம்!'' என்றான்.

அவளுக்குப் பரபரப்பாக இருந்தது. உலகைச் சுற்றிப் பார்ப்பதென்பது எப்பேர்ப்பட்ட வாய்ப்பு! கணவனும் தானுமாக மட்டும் போகப் போகிறோம். புல்லுருவிகள் யாரும் உடன் வரப் போவதில்லை என்று அறிந்த போது அவளுக்கு ஆனந்தமாய் இருந்தது. தனக்கே சொந்தமானவராக இரு மாதங்கள் பிரதாப் இருப்பார். அப்போது அவரை நல்வழிப்படுத்தி விடுவது சாத்தியமாகலாம் என்று ஆசை மறுபடியும் கிளர்ந்தெழுந்தது அவள் உள்ளத்தில். கிசுகிசுக்களும் வம்புப்பேச்சுக்களும் ஓய்ந்து போக ஒரு வாய்ப்புத் தரத்தான் இந்தப் பயணத்துக்கு பிரதாப் ஏற்பாடு செய்வதாக அவள் எண்ணிக் கொண்டாள்.

படப்பிடிப்பு மும்முரத்தில் இருந்த பிரதாப் திருமணமான பின் ஹனிமூன் போகவில்லை, அப்போது செயல்படுத்த முடியாத 'தேன் நிலவுத் திட்டத்தை இன்று நிறைவேற்றப் போகிறார் என்று சினிமாப் பத்திரிகைகள் எழுதின. வாரப் பத்திரிகைகளின் சினிமாப் பக்கங்கள் தகவல்கள் வெளியிட்டன.

ரோம், நேப்பிள்ஸ், வெனிஸ், ஜெனிவா, ஃப்ராங்க்ஃபர்ட், பாரிஸ், லண்டன் என்று ஐரோப்பிய நகரங்களில் சுற்றிய போது அனசூயா மகிழ்ச்சிக் கடலில் மிதந்தாள், பிரதாப்பும் அவளிடம் ரொம்ப அன்பாக நடந்து கொண்டான். அவளுடைய உள்ளத்தையே புரிந்து கொள்ளாமல் தான் இருந்து விட்டதற்காக வருந்துவதாகச் சொன்னான். இதனால் ஏற்பட்ட கிளுகிளுப்போடு பார்த்த இடமெல்லாம் புதுமையாக இருந்ததால் ஏற்பட்ட பரவசமும் சேர்ந்து கொண்டது. வாழ்க்கை என்பது இவ்வளவு சந்தோஷமானதாக இருக்க முடியும் என்னும் போது ஏன் அதை நாமே நரகமாக்கிக் கொள்கிறோம்? என்று எண்ணினாள். பிறகு, இது மாதிரி சிந்தனைகள் கூட வேண்டாம்; முழுக்க முழுக்க ஆனந்தமாக இருந்து விடுவோம் என்று எண்ணினாள். கணவனுடன் ஒண்டிக் கொண்டாள். அவன் கரங்களை இழுத்து வைத்துத் தன்னைச் சதா அணைத்துக் கொள்ளுமாறு செய்தாள். அயல்நாடுகளில் கட்டிப் பிடித்தவாறு நடப்பதில் கூச்சப்பட அவசியமும் இருக்கவில்லை. பாரீஸ் நைட் கிளப்புகளுக்கு அவனுடன் போனாள். அங்கு நடப்பனவற்றைப் பார்த்துச் சிரித்தாள். பிறகு, 'பூ இதென்ன பிரமாதம். ஹோட்டல் அறைக்குத் திரும்பியதும் இவளைவிடப் பிரமாதமாக நான் ஆடிக் காட்டுகிறேன் பாருங்கள்!' என்று அவனுக்கு ஆசைக் காட்டினாள்.

முதல் பார்வையில் நியூயார்க் நகரம் அவளுக்குப் பிரமிப்பை ஏற்படுத்தியதென்றால் இரண்டாம் நாள் அவளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அங்கே ஒரு டாக்டரிடம் அவளை அழைத்துப் போகப் போவதாகச்

சொன்னான் பிரதாப். செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யும் டாக்டர்.

''இதென்ன அசட்டுத்தனம்!'' என்றாள்.

''இதுதான் புத்திசாலித்தனம்!'' என்றான் அவன். ''நீயோ குழந்தைக்காக ஏங்குகிறாய். எனக்கோ நான் தகப்பனாக முடியும் என்பதை உலகுக்கு நிரூபிக்க வேண்டிய நிர்ப்பந்தம். இங்கு உனக்கு நடக்கும் செயற்கை முறை கருத்தரிப்பு சிகிச்சை இந்தியாவில் யாருக்கும் தெரியப் போவதில்லை. இயற்கையான முறையில் எனக்கே பிறந்த குழந்தை என்றே எண்ணுவார்கள். ஏன் தயங்குகிறாய்?''

''ஐயோ! வேண்டாங்க இது தர்மமில்லை!''

அவன் பொறுமையாக நீண்ட நேரம் விவாதித்தான். ''இதிலே அதர்மம் என்ன? குழந்தை இல்லாமல் குமைகிற எத்தனையோ பேருக்கு விஞ்ஞானம் கண்டு பிடித்துத் தந்திருக்கிற வரப்பிரசாதம். மருத்துவ ரீதியில் இதை அணுக வேண்டும். நீ என்னைத் தவிர வேறு யாரையும் மனத்தாலும் நினைப்பதில்லை, உடலுறவும் கொள்ளப் போவதில்லை. என்னிடம் ஒரே ஒரு குறை. என்னால் போதிய அளவு ஜீவ அணுக்களை உற்பத்தி செய்ய முடியவில்லை. அதை மட்டுமே காசு கொடுத்து வாங்கிக் கொள்ளப் போகிறோம். அவசியம் நேர்ந்தால் பிளட் பாங்க்குக்குப் போய் ரத்தம் விலைக்குப் பெறுவதில்லையா? தயங்குகிறோமா? அது யாருடைய ரத்தம் என்று நமக்குத் தெரிய வருகிறதா? கிடையாது. தெரிந்தால் ஏற்றுக் கொள்ளத் தயங்குவோம்; இல்லையா? அதே போல்தான், இதுவும். டாக்டர் கருவிகளின் துணைக் கொண்டு ஜீவ அணுக்களை உன் உடலில் செலுத்தி விடப் போகிறார். அவ்வளவு தானே. என் மனைவியாகிய நீ கருத்தரித்து விடப் போகிறாய். தாயாகி விடப்போகிறாய். நான் தகப்பனாகி விடுவேன்.''

இந்த உலகச் சுற்றுப் பயணமே இந்த நோக்கில்தான் திட்டமிடப் பட்டிருக்கிறது என்று அனசூயாவுக்குப் புரிந்தது. தேன் நிலவு—உல்லாசப் பயணம் என்பதெல்லாம் பொய்! ''யோசிக்க ஒருநாள் அவகாசம் கொடுங்கள்!'' என்றாள். வெளியே எங்கும் செல்லாமல் ஹோட்டல் அறையிலேயே இருந்து சிந்தித்தாள்.

பிரதாப் என்னமோ திருந்தப் போவதில்லை. இந்தப் பயணத்தின் போது அபரிமிதமான அன்பைத் தன் மீது சொரிந்ததும்கூடக் காரியார்த்தமாகத்தான். அவனுக்குக் குழந்தை தேவையில்லை. ஆனால் தான் தகப்பனாக முடியும் என்பதைத் தன் பல்லாயிரக் கணக்கான விசிறிகளுக்கு நிரூபித்துக் காட்ட அவசியம் நேர்ந்து விட்டது. எனவே தன்னிடம் இப்போது பரிவு காட்டிக் குழைகிறார். ஊர் திரும்பி மறுபடியும் ஷூட்டிங் ஆரம்பமானதும் பழைய பிரதாப்பாக உருமாறி விடப் போகிறார். திரை உலகத்திலிருந்து கொண்டு அவர் ராமச்சந்திர மூர்த்தியாக விளங்கப் போவதில்லை. இதைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு முன்பே யோசித்திருக்க வேண்டும். ஆனால் அப்போது இவருடைய கிளாமர் என்னை ஈர்த்தது. இப்போது வருந்தி என்ன பயன்?

என் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக வேண்டுமென்றால் ஒரு குழந்தை எனக்கு வேண்டும். அது ஒன்றுதான் அபத்தமான, இயந்திரகதியான வாழ்க்கையிலிருந்து என்னை மீட்கக் கூடியது. குழந்தையொன்றை வளர்த்து ஆளாக்கும் போது அது 'வளர்வதைப் பார்த்து ரசிக்கும் போது அதன் ஒவ்வொரு தேவையையும் கவனித்துக் கவனித்துப் பூர்த்தி செய்யும் போது பிறவிப் பயனைப் பெற்று விடலாம். வாழ்க்கை வானவில்லின் வண்ண ஜாலங்கள் காட்டவில்லையாயினும் இருள் விலகி ஒளி பரவும்; நரகத்திலிருந்து மீண்டு சொர்க்கத்துக்கு அவள் சென்றுவிட முடியாதென்றாலும் அவ்வப்போது அந்த நரகத்தின் எல்லைக்கு அப்பால் சென்று அழகிய பூங்காவில் வண்ண மலர்களுக்கிடையே உலவி விட்டுத் திரும்பலாம்.

ஓர் அனாதைக் குழந்தையை அல்லது உறவினர் குழந்தையைச் சுவீகரித்துக் கொண்டு வளர்க்கலாம்தான். ஆனால் அதைவிட நானே ஒன்பது மாதம் சுமந்து பெற்ற குழந்தையென்றால் தாய்ப்பாசம் அதிகமாகத்தானே இருக்கும். ஓர் அணுவிலிருந்து முழு உருவம் படைத்த குழந்தையைப் படிப்படியாகத் தன் வயிற்றில் சிருஷ்டிக்கிற ஆனந்தத்தைத் தான் அடைய வேண்டாமா? பெருமிதத்தை, இன்ப வேதனையை அனுபவிக்க வேண்டாமா? அந்த அளவில் பிரும்மாவின் தெய்விகத் தன்மையைத் தன்னிடமே கண்டு மெய்சிலிர்த்து பக்தி பரவசம்அடைய வேண்டாமா? தனங்களில் பால் சுரக்க அதனைப் பிஞ்சு இதழ்கள் பற்றிப் பருக, அது வயிறு நிரம்பிக் களுக்கெனச் சிரிக்க அதனைத் தான் ரசிக்க ...இந்த அனுபவம் இல்லையெனில் பெண்ணாய்ப் பிறந்து என்ன பயன்?

''...அப்புறம் எதிரி கண்ணி வைக்க எங்களைப் பிடிக்கப் பார்த்தான். நாங்களும் சிக்கிக் கிட்டோம். ஆனா கொஞ்சம் கூட பயப்படலே யில்லை......''



7

அவள் சம்மதித்தாள்.

வைத்தியத்தை முடித்துக் கொண்டு அவர்கள் அமெரிக்காவைக் கிழக்குக் கடற்கரையிலிருந்து மேற்குக் கடற்கரை வரை அலசினார்கள். பல நகரங்களைப்பார்த்துப்



பிரமித்தார்கள் பல அதிசயங்களைக் கண்டு மலைத்தார்கள்.

திடுதிப்பென்று அவளுக்குத் தான் பார்ப்பது எல்லாவற்றிலும் முன்னைவிட அதிக சுவாரஸ்யம் ஏற்பட்டது. பல அற்புதங்களைப் பற்றிய விவரங்களை அறிவதில் நாட்டம் பிறந்தது. ஏதோ பார்த்தோம், மேலே நகர்ந்தோம் என்றில்லாமல் ஒவ்வொன்றிலும் மனம் லயித்தது. நடந்தாலும் அமர்ந்தாலும் உண்டாலும் உறங்கினாலும் அடித்தாலும் யாரையேனும் சந்தித்துப் பேசினாலும் எல்லாவற்றுக்கும் ஒரு காரணம், ஓர் அர்த்தம், ஒரு நோக்கம் இருப்பதாகத் தோன்றியது. இந்தத் திடீர் மனமாறுதலை அவள் முழுமையாக உணர்ந்தாள். முதலில் இது வியப்பைத் தந்தாலும் யோசித்த போது வியப்பதற்கு ஒன்றுமில்லை என்று பட்டது. 'எனக்கென்று ஒரு மகன் பிறக்கப் போகிறான். அவனுக்காக நான் வாழ்வேன். எனக்காக அவன் வாழ்வான்!' என்ற இந்தப் பிரமாணம் ஏற்பட்டதன் விளைவு செய்கிற ஒவ்வொரு காரியமும் அர்த்தமுள்ளதாகிறது.

ஆனால் அதே நேரத்தில் பிரதாப்பின் போக்கு அடியோடு மாறி விட்டது. இந்தப் பயணத்தின் ஆரம்பத்திலிருந்து அவன் காண்பித்து வந்த பரிவு இப்போது இல்லை என்பதோடு சென்னையிலிருந்ததை விடவும் கூட இப்போது அவளிடமிருந்து அவன் உடலாலும் மனத்தாலும் விலகிப் போயிருந்தான். சதா எதையோ பறி கொடுத்தவன் போல் முகத்தை வைத்துக் கொண்டிருந்தான். ஒரு சிரிப்பு, ஒரு புன்னகை எதையும் காணோம். கண்கள் சிவக்கச் சிவக்கக் குடித்தான். பார்க்கிற எதையும் அவன் உள்ளம் ரசிக்கவில்லை. திட்டமிட்டதற்கு முன்பாகவே அவனுக்குச் சென்னை திரும்ப ஆசைதான். ஆனால் அதற்கும் ஏதாவது கதை கட்டி விட்டுக் கிசுகிசு எழுதுவார்கள் என்பதால் பல்லைக் கடித்துக் கொண்டு சுற்றுப் பயணத்தை முடித்தான்.

''ஏன் இப்படித் திடீரென்று மாறி விட்டீர்கள்?'' என்றாள். ''ஒன்றுமில்லையே, நான் எப்போதும் போல்தானே இருக்கிறேன்!'' என்றான் பிரதாப். சென்னை திரும்பிய சில வாரங்களில் அவள் டாக்டரிடம் போய் வரவேண்டும் என்றாள். ''முழுகாமல் இருக்கிறேன். பிள்ளையாண்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டு டாக்டரின் யோசனைகளையும் பெற்று வரலாம். மாதமொரு முறை செக் அப்புக்கு வரச் சொல்லுவாங்க!'' என்றாள்.

டாக்டர் அவளைப் பரிசோதித்து விட்டு உத்தேசமாய்ப் பிரசவத் தேதியும் குறிப்பிட்டார். டானிக் ஒன்றும் எழுதித் தந்தார். இதற்குப் பின் பிரதாப்பின் போக்கு மேலும் கடுமையாயிற்று. 'உடம்பு சரியில்லை' என்று சாக்குப் போக்குச் சொல்லி ஷூட்டிங்கை கான்ஸல் செய்துவிட்டு ஷிவாஸ் ரீகலை ஸிப் செய்தபடி சோபாவில் அமர்ந்து உச்சிமுகட்டைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இப்படி இருக்கிறது உங்களுக்கே நல்லா இருக்கா?'' என்று அனசூயா கேட்டாள். ''பாதிப்படம் பிடிச்சு வைச்சுக்கிட்டு பத்துப் புரொட்யூஸருங்க கியூவிலே கால்கட்டுக்கு நிக்கறாங்க. ஒவ்வொருத்தரும் தினம் இரண்டு தரம் ஃபோன் செய்து என் பிராணனை வாங்கறாங்க. ரெண்டு மாசம் உலகைச் சுற்றி வந்தாச்சு. திரும்பி வந்து ஒரு மாசம் ஆகிறது. அவங்க கஷ்டத்தையும் உணர வேண்டாமா? லாயர் நோட்டீஸ் அனுப்பவான்னு கூட ஒருத்தர் இன்று கோபமாப் பேசிட்டார்.''

''அனசூயா! இப்படி வா!'' என்றான். ''நான் பழையபடி மகிழ்ச்சியாக இருப்பதும், ஷூட்டிங்குக்குப் போவதும் சிறப்பாக நடித்துப் புகழ் பெறுவதும் எல்லாம் உன் கையில்தான் இருக்கிறது'' என்றான்.

''நான் என்ன செய்யணும்?''

''அபார்ஷன் பண்ணிக்கணும்.''

''என்ன!'' அவள் முதலில் திடுக்கிட்டுச் சிலையானாள். அவன் கூறியதன் விகாரம் அவள் உள்ளத்தில் வண்டலாகப் படியப் படியத் தெளிவு பிறந்து ஊடுருவிப் பார்த்துப் புரிந்து கொண்ட போது அவள் உடல் ஆடிக் காற்று அரச இலை மாதிரி நடுங்கியது.

''இது என்னங்க பேச்சு!''

''எனக்குப் பிடிக்கலே, அவ்வளவுதான்!''

''உங்க ஏற்பாடுதானே இது?''

''கரெக்ட். என் ஏற்பாடுதான். என் இஷ்டப்படி கோலு வைக்கப் பார்த்தாச்சு. இப்ப எனக்குப் பிடிக்கலே. கலைச்சுடு!''

''வேண்டாங்க. யோசியுங்க. நான் மாட்டேன் என்ற போது நீங்க எவ்வளவு தூரம் வற்புறுத்தி என்னைச் சம்மதிக்க வைச்சீங்க!''

''அதுதான் தப்புன்னு உணர்ந்துட்டேனே. இப்போ உன் வயிற்றில் வளரும் குழந்தை என்னுடையதல்ல. யாரோ ஊர் பேர் தெரியாத முகமறியாத அமெரிக்கனுடையது என்று ஒரு நினைப்பு சதா என் உள்ளத்தை உறுத்துகிறது!''

''அப்படி பேசாதீங்க. இது நம்ம குழந்தை. என் வயிற்றிலே கையை வைச்சுப் பாருங்க. அது இலேசா நகரக்கூட ஆரம்பிச்சிருக்கு. அமெரிக்க டாக்டர் வைத்தியம் தொடங்கறதுக்கு முன் உங்க கிட்டே கையெழுத்து வாங்கிக் கிட்டாரே எதுக்கு? தகப்பனார் என்கிற முறையில்தானே? இப்ப மறுக்கலாமா? அப்புறம் வைத்தியம் நடக்கறப்போ உங்களைப் பக்கத்திலேயே நின்னு என் கையைப் பிடிச்சுக்கச் சொன்னாரே எதுக்கு? இப்படி என்னையோ குழந்தையையோ கைவிடக் கூடாது என்பதற்காகத்தானே? அப்போ அப்படி நடந்துக்கிட்டு இப்போ மாறலாமா?''

''இதோ பார்! எனக்கு உன் உபதேசமெல்லாம் வேண்டாம். எனக்கு நீ பிள்ளை

பெற்றுக் கொள்றது பிடிக்கலே. என் மனசு கஷ்டப்படுது. உன் வயிற்றிலே வளர்வது ஒரு நீக்ரோவுடைய குழந்தையாகக் கூட இருக்கலாம்னு ஒரு பயம் என்னைப் பிடிச்சு உலுக்குது. இங்கே டாக்டரம்மா தவிர நீ பிள்ளையாண்டிருப்பது இன்று யாருக்குமே தெரியாது. அவளிடம் போய் விஷயத்தை விளக்கி அபார்ஷன் பண்ணிடலாம். பணத்தைக் கொடுத்தா அந்த டாக்டரம்மா ரகசியத்தைக் காப்பாற்றிடுவாங்க.''

''முடியாது!'' என்றாள் அனசூயா ஆணித்தரமாக. ''இதற்கு நான் ஒப்புக் கொள்ள முடியாது. எனக்குள் வளரும் உயிரைக் கொல்லணும்னு என்னைக் கொன்றால்தான் முடியும். அதைச் செய்யுங்க!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டுத் தன் தனி அறைக்கு வந்தாள். அவளுக்கு அழுகை வரவில்லை. கோபம் வந்தது. கணவனை எதிர்க்கத் தனக்கு எப்படித் திடீரென்று இவ்வளவு தைரியம் பிறந்தது என்பதே அதிசயமாய் இருந்தது. வளர்ந்து வரும் மகன் தந்த துணிவா!

தன் யோசனையை அவள் ஏற்கவில்லை என்பதால் ஆத்திரப்பட்டான் பிரதாப். அவளை நிந்தித்தான். ஹிம்சித்தான். எதையும் லட்சியம் பண்ணவில்லை அவள். ''இன்று உங்கள் கை அடிக்கிற இந்தக் கன்னத்தை நாளை என் மகன் முத்தமிடுவான். இன்று ஆபாச வார்த்தையால் என்னை நீங்கள் ஏசலாம். நாளை என் மகன் என்னை அந்த வார்த்தையாலா அழைக்கப் போகிறான்? அம்மா என்று ஆசையோடு கூப்பிடுவான். அது போதாதா எனக்கு?'' என்றாள்.

அடேயப்பா! தனக்கென்று ஒரு குழந்தை பிறக்கும் போது குழந்தை மட்டுமா பிறக்கிறது! எவ்வளவு தன்னம்பிக்கை எவ்வளவு துணிவு எவ்வளவு எதிர்பார்ப்புகள் எவ்வளவு இன்பம் எல்லாம் கூடவே ஜனிக்கின்றன!

பிரதாப் பிரமித்தான். வாதாடிப் பயனில்லை என்று உணர்ந்து தன் அலுவல்களில் மறுபடியும் தொடர்ந்து ஈடுபட ஆரம்பித்தான். ஷூட்டிங்குகளுக்குப் போய் வந்தான். ஒருபக்கம் தந்தையாவதால் தன் ஆண்மையை வீரியத்தை நிலைநாட்டப் போகிறோம் என்ற திருப்தி. இன்னொரு பக்கம் அது எப்பேற்பட்ட மோசடி என்பதால் உள்ளத்துக்குள் ஏற்பட்ட தாழ்வுணர்ச்சி இரண்டுக்கும் இடையில் அவன் தவித்துக் கொண்டிருந்தான்.

அனசூயாவின் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குவது போல் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. டாக்டருக்கு அவள் எழுதினாள்: ''என் கணவர் உங்களுக்கு ஒரு ஃபீஸ் கொடுத்து ஏமாற்றி விட்டார். இரண்டு மடங்காகத் தீட்டி யிருக்க வேண்டும் நீங்கள்!'' டாக்டரிடமிருந்து சீக்கிரமே பதில் வந்தது. ''அந்தப் பணத்தைக் கொண்டு உங்கள் பிள்ளைகளுக்குப் பெரிதாகத் தாராளமாக ஒரு தொட்டில் வாங்குங்கள் எனது அன்பளிப்பாக இருக்கட்டும்!'' எவ்வளவு பெருந்தன்மை! இப்படிப்பட்ட மனிதர்கள் உள்ள உலகில் பிரதாப் போலவும் சிலர்! என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

அவன் குழந்தைகளைப் பார்க்க நர்ஸிங் ஹோமுக்கு வரவேயில்லை. 'ஷூட்டிங்கில் பிஸியாக இருக்கிறார். அவருக்கு ஏது நேரம்?' என்று பெருமையாகச் சொல்வது போல் பேசிச் சமாளித்தாள் அனசூயா.

வீடு திரும்பி, ஒரு குழந்தைக்கென ஒதுக்கியிருந்த தனி அறையில் இரட்டையரை இறக்கினாள்; அந்த அறைக்குள் பிரதாப் வாரத்துக்கு ஒரு தரம் அல்லது பத்து நாளைக்கு ஒருதரம் எட்டிப் பார்ப்பான். அவ்வளவுதான்! ''நீங்க பயந்தபடியா இருக்காங்க நம் பிள்ளைங்க? நல்லா பாருங்க, அப்படியே என் ஜாடையைத்தானே உரிச்சு வைத்திருக்கிறது?'' என்று அவள் அவன் மனமாற்றத்துக்கு உதவும் என்று எண்ணிக் கூறினாள். அது உண்மையும் கூடத்தான். குழந்தைகளைப் பார்க்கையில் யாருக்கும் எந்தவிதமான தப்பபிப்பிராயமும் மனத்தில் எழ வாய்ப்பில்லாமல்தான் இருந்தது.

நாளாக ஆக அவனுடைய வெறுப்பு வளர்ந்தது. மனைவியை, குழந்தைகளை அவன் அடியோடு வெறுத்தான். வெளியுலகுக்காக மட்டும் பத்திரிகையாளர் புகைப்படக்காரர்களுக்காக, சிறந்த குடும்பத் தலைவனாக நடித்தான். அனசூயாவுடன்

ஒரு நாள் அதிக காற்று: மழை அடித்தது. அன்றைய தினம் பள்ளிக்கூடத்திற்கு அதிக நேரம் கழித்துப் போனான். உபாத்தியாயர் கோபங்கொண்டு கேட்க, ''நான் என்ன செய்வது ஐயா, இந்தக் காற்று மழையில் பள்ளிக் கூடத்திற்கு வர ஒரு அடி எடுத்து வைத்தால், இரண்டடி பின்னால் தள்ளுகிறது'' என்று பதில் உரைத்தான். ''அது வாஸ்தவமாயின், இப்பொழுது பள்ளிக்கூடத்திற்கு என்னமாக வந்து சேர்ந்தாய்?'' என்று கேட்க, ''அதற்கு நான் ஒரு யுக்தி செய்தேன், பள்ளிக்கூடத்திற்கு வருவதற்காக வீட்டுப்புறமாக நடக்க ஆரம்பித்தேன். அந்தப் பக்கம் ஒரு அடி எடுத்து வைத்தவுடன், இரண்டடி பள்ளிக்கூடத்தின் பக்கம் தள்ளியது, இம்மாதிரியாகவே நடந்து பள்ளிக்கூடத்தை அடைந்துவிட்டேன்'' என்று பதில் சொன்னான்.

-டாக்டர் இரா. மோகனின் 'துணுக்கு இலக்கியம்' என்னும் நாலிலிருந்து அனுப்பியவர் ஜீ. டி. நிர்மலா



அவன் தேவைக்கு அதிகமாய் ஒரு வார்த்தை பேசுவதில்லை. நேரத்துக்கு வீடு திரும்புவதில்லை. எங்கே போகிறான், எப்போது திரும்புவான் என்பதொன்றும் தெரியாது.

முன்பென்றால் அவள் இதற்காக வருத்தப்படுவாள். அவனுடன் போராட நினைப்பாள். ஆனால் இப்போது அவள் அவனுடைய போக்கை லட்சியம் பண்ணவே இல்லை. அவனைத் திருத்த முடியாது என்பது அவளுக்குப் புரிந்தது. தனக்குரிய லட்சியம் வேறு எனத் தெரிந்தது. தன் கவனம் முழுவதையும் அவள் சுரேஷ் ரமேஷை வளர்ப்பதில் செலுத்தினாள்.

திருவான்மியூர் தாண்டி மாமல்லபுரம் வரையுள்ள கடற்கரைப் பிரதேசத்தில் ஒரு பெரிய சவுக்குத் தோப்பை விலைக்கு வாங்கி அதன் மத்தியில் மட்டும் மரங்களை வெட்டி வெற்றிடம் ஏற்படுத்தி அங்கு பர்ணசாலை போன்ற அமைப்பில் ஒரு கட்டிடத்தை பிரதாப் உருவாக்கி இருப்பதாக அவள் கேள்விப்பட்டாள். பார்ப்பதற்குத்தான் பர்ணசாலை போலிருக்குமே தவிர உள்ளே சகல வசதிகளும் உள்ள சொகுசு காட்டேஜ்தான் அது என்றும் அங்கு வெள்ளி இரவு முதல் ஞாயிறு காலை வரை அவன் நடத்துகிற லீலைகள் சொல்லத் தரமல்ல என்றும் அவளுக்குப் பராபரியாகச் செய்தி எட்டியது. அதையெல்லாம் காதிலேயே வாங்கிக் கொள்ளாதது போல் அவள் நடித்தாள். பார்க்கப் போனால் உண்மையிலேயே அவனைப் பற்றி அவளுக்கு அக்கறை இல்லாமல் போய்விட்டது. சுரேஷும் ரமேஷும் நீந்தித் தவழ்ந்து அமர்ந்து நின்று நடந்து குட்டிக்கரணம் போட்டு, படம் பார்த்து மழலை பேசி நர்ஸரி ரைம் சொல்லி கான்வென்டில் நர்ஸரியில் சேர்ந்து சுளைசுளையாக மார்க் வாங்கி மேல் வகுப்புக்குச் சென்று அவளை மகிழ்வித்துக் கொண்டிருந்த போது பிரதாப் பின்னணிக்குப் போய் விட்டான். கணவனைப் பற்றி அவளுக்கு நினைப்பதற்குக் கூட நேரமில்லாமல் அவசியமில்லாமல் போய் விட்டது. பிரதாப்பிடம் பரிவோ, அக்கறையோ கொண்டு என்ன பிரயோஜனம்? நாய் வால் நிமிரவா போகிறது?

இரகசியம் என்பது நட்புக்குரிய கற்பு.
— ஜெர்மி டெய்லர்.
— திருப்பூர் அகலா

ஒரு டேக்குக்கும் அடுத்த டேக்குக்கும் இடையில், ஏஸி செய்திருந்த மேக் அப் அறையில் ஷிவாஸ் ரீகலை ஸிப் செய்துகொண்டும் டன்ஹில் சிகரெட்டைப் புகைத்துக் கொண்டுமிருந்தான் பிரதாப்.

''ஸார்! உங்களைப் பார்க்கணும்னு ஆசைப்பட்டுச் சில காலேஜ் ஸ்டுடெண்ட்ஸ் வந்திருக்காங்க!'' என்றார் ஸ்டுடியோ அதிகாரி ஒருவர், மேக் அப் அறைக்குள் எட்டிப் பார்த்து.

''வரச் சொல்லுங்களேன்!'' என்றான் பிரதாப். ''கேர்ல் ஸ்டுடெண்ட்ஸா, பாய்ஸா?''


''கேர்ல்ஸ்தான் ஸார்.''

''அப்படின்னா தேவலாம், ஷெட்டிலே கூட அனுமதிக்கலாம். 'அடக்கமா இருப்பாங்க. நமக்கு இடைஞ்சல் ஏதும் நேராது:' டைரக்டர் கிட்டே சொல்லுங்களேன்! பாவம் பார்த்து விட்டுப் போகட்டும்! அவங்களுக்கு இது ஒன்ஸ் இன் எ லைஃப் டைம் சான்ஸா இருக்கும்.''

''சரி ஸார்!''

சற்று நேரத்தில் அவர்கள் வந்தார்கள். எல்லாருக்கும் முன்னால் ஷைலஜா வந்தாள். ''வணக்கம் ஸார்!'' என்றபடியே சற்றும் உடல் வணங்காமல் மலர மலரப் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கறீங்க? மேக்அப் போடு இருந்தா இப்படித்தான் இருக்கும்'' என்றான் பிரதாப். ''என்னோட ஸ்கிரீன் இமேஜைப் பார்க்கணும்னு திரையிலே பாருங்க. இயல்பான ரியல் இமேஜைப் பார்க்கணும்னு. இந்த வாரம் சினிமா செய்தியிலே என் வண்ணப்படம் வந்திருக்கு அதை



பாருங்க. ஸெட்டில் வந்து மேக் அப்புடன் பார்த்தால். ஒரு மாதிரிதான் இருக்கும்.''

''ஒரு மாதிரியும் இல்லே ஸார். மேக்அப் பினால் உங்களுக்கு ஏற்கனவே உள்ள கவர்ச் சியை அதிகரித்து விட முடியாது. உங்க இமேஜைக் கெடுத்துவிடவும் மேக் அப்பினால் முடியாது. மேக்அப் செய்துக்கிறது உங்க ளிடம் உள்ள ஒரு குறையை மறைக்க அல்ல. காமிராவில் உள்ள குறை உங்களைப் பாதிக்கா மல் இருக்க. அது எனக்குத் தெரியும்'' என்றாள் ஷைலஜா.

பிரதாப் நீண்ட விசில் ஒலி எழுப்பினான். ''பார்க்கத்தான் பிரமாதமா இருக்கேன்னு நினைச்சேன். பிரமாதமா பேசவும் செய்ய றியே! உன் பேர் என்ன?''

''ஷைலஜா.''

''கொஞ்சம்கூட ஷையா இல்லையே நீ'' என்று பிர காப் கேட்ட போது மாணவியர் கூட்டம் சிலகலவென்று நகைத்தது. அவன் மன்மதப் புன்னகையை உதிர்த்தான்.

''கையிலே என்ன பிராக்டிகல் ரிகார்ட் புக்கா?''

''இல்லே ஸார்! நீங்க குறிப்பிட்ட சினிமா செய்தி புத்தகம்தான். இதிலே உங்க வண்ணப் படத்தைப் பார்த்ததும் உங் களை நேரே சந்திக்கணும்னு தோணிப்போச்சு. ஃபிரெண்ட்ஸ்களையும் அழைச்சுக்கிட்டுக் கிளம் பிட்டேன்.''

''ஏன் அவங்க உனக்குத் துணையா?''

''எனக்கு எதற்குத் துணை? என்னை நீங்க என்ன முழுங்கிடவா போறீங்க? இவங்களும் உங்களைப் பார்க்க ஆசைப்பட்டாங்க. காரிலே ஏறிக்கிட்டாங்க. சரி, வாங்கன்னு அழைச் சுக்கிட்டு வந்தேன்.''

''கார் அப்பா எடுத்துக்கிட்டுப் போக லையா ஆபீஸுக்கு?''

''அவரை ஆபீஸ் கார் வந்து அழைச் சுப் போய்க் கொண்டு விட்டுடும். நான் வந்தது அவரோட சொந்தக் கார். பெரும்பாலும் எனக்குக் காலேஜ் போகவும், அம்மா ஷாப்பிங் போகவும்தான் பயன்படும்.''

''ஊர் சுற்றவும் பயன் படறாப் போல இருக்கே.''





மறுபடி எல்லோரும் சிரித்தார்கள்.

''அதுக்கென்ன ஸார் ஸ்டியரிங்கை நாம் திருப்பற பக்கம் கார் திரும்பற.''து,

''இன்னிக்குக் காலேஜ். லீவா?''

''இல்லே நாங்க கட்பண்ணிட்டோம்.''

''வீட்டிலே....''

''எக்ஸ்கர்ஷன் போறதா சொல்லிட்டேன். காரும் எடுத்து வந்து உதவும்படி புரொபஸர் கேட்டுக் கொண்டதா சொல்லிட்டேன்!''

''காலேஜிலே....''

''வீட்டுக்குப்போறதாசொல்லிட்டோம்.''

''பேஷ்! வீட்டுக்குத் தெரியாமல் காலேஜிலும் சொல்லாமல் எங்கே வேணும்னாலும் கிளம்பிப் போகிற தைரியமும் சாமர்த்தியமும் இருக்கு.''

''எல்லாம் நீங்க கற்றுத் தந்த பாடம்தான் ஸார்... பூவா காயா என்கிற படத்திலே...''

''ஆளை விடு!'' என்று கையெடுத்துக் கும்பிட்டுப் பயப்படுவது போல் நடித்தான்.

எல்லாரும் மறுபடியும் கொல்லென்று சிரித்தனர்.

''வாய்ப்புக்களை நழுவ விடறவ நான் இல்லே ஸார்!'' என்றவள் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அவளுடைய பார்வை ''வேணும்னு வாய்ப்புத் தந்து பாருங்களேன்!'' என்று வீராப்பு பேசின.

அவளை எந்த விளுடியிலும் தன்னால் அடைய முடியும் என்று பிரதாப்புக்குப் புரிந்தது.

''சந்தர்ப்பங்கள் சில சமயம் தானே வாய்க்கின்றன. சில சமயம் நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டியிருக்கு'' என்றான் மன்மதப் புன்னகையை மலர விட்டு.

''ஒரு ரிக்குவெஸ்ட் ஸார்!'' என்றாள்.

''என்ன?''

''சினிமா செய்தியில் உங்கள் வண்ணப் படம் வந்திருக்கிற பக்கத்தில் நீங்க கையெழுத்துப் போட்டுத் தரணும்.''

''ஓயெஸ்!''

அவன் தன் நெஞ்சிலிருந்து பால்பாயிண்ட் பேனாவை எடுத்துக் கொடுத்தான். சினிமா செய்தி பத்திரிகையைப் பிரித்துக் காட்டினாள். அவன் கையெழுத்துப் போட்டான்.

''தாங்க்யூ'' என்று கூறி அதைப் பெற்றுக் கொண்ட போது வேண்டுமென்றே அவன் கரத்தைத் தீண்டினாள். கரம் குலுக்கக் கையை நீட்டினாள். அவனும் இரு கரங்களாலும் பற்றிக் குலுக்கினான். வரிசையாக ஒவ்வொரு மாணவியும் ஷைலஜாவைப் பின்பற்றிக் கரம் குலுக்கி விட்டுப் பிரிந்தனர். கடைசியாக அவர்களைப் பின்பற்றிய ஷைலஜா ''இன்றைக்கு இந்தப் பத்திரிகையில் கையெழுத்துப் போட்டுத் தந்தீங்க. ஆனா என் நெஞ்சத்தில் நீங்க ரொம்ப நாளைக்கு முன்னாலேயே உங்க முத்திரையைப் பதிச்சுட்டீங்க'' என்றாள்.

''தாங்க்யூ!'' என்றான் பிரதாப். இவளைப் போல் லட்சக்கணக்கான இளம் பெண்கள் என்ற பெருமிதப் பூரிப்புடன் புன்முறுவல் செய்தான்.

ஏதோ ஒரு பெரிய கோட்டையைப் பிடிக்கும் சாதனை புரிந்துவிட்ட வீராங்கனைகள் மாதிரி கர்வத்துடன் கூடிய மகிழ்ச்சி கொப்பளிக்க மாணவிகள் சற்று நேரம் ஷூட்டிங் பார்த்துவிட்டுக் கிளம்பிச் சென்றார்கள்.

8

அஜ்மலும் ஸோனியும் ஒவ்வொரு கட்டத்தையும் திட்டமிட்டார்கள்.


மாம்பலத்தில் பிரதாப்பின் வீட்டைக் கவனித்தார்கள். அங்கிருந்து ஃபியட்காரில் குழந்தைகள் கிளம்பி நுங்கம்பாக்கத்தில் ஒரு கான்வெண்ட் பள்ளிக்கு வருவதைப் பார்த்தார்கள். குழந்தைகளுக்கும் அவர்கள் தாயாருக்கும் மட்டும் அந்தக் கார் பயன்பட்டது. பிரதாப்புக்கு வேறு ஒரு அம்பாஸிடர் கார் தனியே இருந்தது. தனித்தனியே டிரைவர்கள். அம்பாஸிடரில் குழந்தைகள் ஏறுவதில்லை. ஃபியட்டினைப் பிரதாப் பயன்படுத்துவதில்லை. டிரைவர்களும் மாறுவதில்லை. குழந்தைகளைக் கொண்டு விட்டு அழைத்துப் போன டிரைவர் ரொம்ப நல்லவனாகக் காணப்பட்டான். ஒவ்வொரு நாளும் அவன் காரில் குழந்தைகளுடன் கான்வெண்ட் காம்பவுண்டுக்குள் நுழைந்ததும் மற்றவர்களைப் போல் அல்லாமல் காரை விட்டு இறங்குவான். குழந்தைகளுக்குக் கதவைத் திறந்து விடுவான். அவர்கள் இறங்கிய பிறகு ''மூணே முக்காலுக்கு இந்த மரத்தடியில் வண்டியுடன் வந்து நிற்பேன். நல்லாபடிங்க!'' என்பான். 'டாட்டா' சொல்லுவான். மற்றக கார் டிரைவர்கள் காரின் இஞ்சினைக்கூட நிறுத்த மாட்டார்கள். அவசரமாய்ப்போய் விடுவார்கள். இவன் வித்தியாசமாய் இருந்தான். பிற்பகலில் குழந்தைகள் காரில் ஏறக் கதவைத் திறந்து பிடிப்பான். அவர்கள் ஏறியதும், ''கை, காலை நீக்கிக்குங்க. கதவைச் சாத்தப் போகிறேன்!'' என்று எச்சரிப்பான். பிறகு கதவைக் கார் ஃபிரேமுடன் நெருக்கமாக வைத்து அழுத்திச் சாத்துவான். படார் என்று அறைவதே கிடையாது.

'ரொம்ப சாது!' என்று நினைத்துக்கொண்டனர் அஜ்மலும் ஸோனியும்.

அந்த டிரைவருக்கு இன்னொரு பழக்கமும் இருந்தது. பிள்ளைகளை அழைத்து வருவதற்காகப் பிற்பகல் மூன்று மணிக்கே வீட்டை விட்டுக் கிளம்புவான். நுங்கம்பாக்கத்தில் டீக்கடையருகே வண்டி ரோடு ஓரமாக நிற்கும் டீக்கடைக்குள் நுழைந்து ஒரு ஸிங்கிள் டீ நிதானமாய் ரசித்துச் சாப்பிடுவான். ஒரு சிகரெட்டும் கூடவே புகைப்பான். அது தீர்ந்து போகும் சமயம், சரியாக மூன்றரை மணிக்குக்

காரைக் கிளப்பிப் புறப்படுவான். பள்ளி காம்பவுண்டுக்குள் நுழைந்து தோட்டத்தில் காரை வழக்கமான இடத்தில் நிறுத்திவிட்டுக் குழந்தைகள் வரக் காத்திருப்பான்.

டீக்கடையருகே நிறுத்தும் போது அவன் வண்டியைப் பூட்டுவதில்லை. அதன் சாவியைப் பின்னோடு எடுத்துப் போவதில்லை. 'இதோ பக்கத்தில் தானே அமர்ந்து சாப்பிடுகிறோம்!' என்ற எண்ணமாய் இருக்கலாம். அசிரத்தை என்று அதனைக் கூற முடியாது. கார் அவன் கண் பார்வையில்தான் இருக்கும். ஆனால் மேற்குப் பார்த்த அந்த டீக்கடையில் வெய்யில் உக்கிரமாக இருக்கும் நாட்களில் சொந்தக்காரர் திரை தொங்க விடுவதுண்டு. வருகிறவர்கள் கித்தான் படுதாவைச் சுற்றிக் கொண்டு ஓர் ஓரமாக உள்ளே நுழைவார்கள். அப்போது டிரைவர் பார்வையிலிருந்து கார் மறையும். அந்த வண்டிக்கு வாரம் இருமுறை பெட்ரோல் போட்டான் டிரைவர். காரில் பெட்ரோல் எவ்வளவு இருக்கிறது, எவ்வளவு தேவைப்படுகிறது என்பதொன்றும் கணக்குக் கிடையாது. திங்கள் காலையும் வெள்ளி காலையும் பள்ளிக்குப் போகும் போது வழியில் பெட்ரோல் பங்கில் நிறுத்துவான். டாங்கை நிரப்பிக் கொண்டு வருவான். எவ்வளவு பெட்ரோல் பிடித்தது என்று பார்த்து, பில் தொகை சரிதானா என்று கவனித்துக் கையெழுத்துப்போடுவான். முதல் தேதியன்று பில் அனுப்பப்பட மொத்தத் தொகைக்கு செக் வந்துசேரும்போதும் என்று எண்ணிக் கொண்டனர் அஜ்மலும் ஸோனியும். திங்கள் அல்லது வெள்ளிக் கிழமைகளில் காரின் பெட்ரோல் டாங்க் விளிம்பு வரை நிரம்பியிருக்கும்.



சினிமாச் செய்தியையும் வேறுபல சினிமாப் பத்திரிகைகளையும் சிந்தாதிரிப்பேட்டையில் தாங்கள் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருந்த ஓர் அறையில் அஜ்மலும் ஸோனியும் ஆராய்ந்தார்கள். அவற்றில் பிரதாபைப் பற்றி வந்திருந்த செய்திகளைக் கத்தரித்து ஒரு கனமான நோட்டுப் புத்தகத்தில் ஒட்டி ஆல்பம் தயாரித்தார்கள். திரும்பத் திரும்ப அவற்றைப் படித்தார்கள். பிரதாபின் நடையுடை பாவனை, அவனைப் பற்றிய செய்திகள், அவன் இல்வாழ்க்கை, ஸெட்டுகளில் அவன் பேசியது, ஜோக் அடித்தது எல்லாவற்றையும் ஆராய்ந்தார்கள். அவனைப் பற்றிய கிசுகிசுக்கள் அவன் பெயரைக் குறிப்பிடாமல், ஆனால் அவனைப் பற்றித்தான் எழுதப்படுகிறது என்று புரியும்படியாக எழுதப்பட்ட தகவல்கள் அனைத்தையும் திரும்பத் திரும்பப் படித்தார்கள்.

ஒரு திட்டம் வகுத்தார்கள். அந்தத் திட்டத்தைத் திரும்பத் திரும்ப ஒருவருக்கொருவர் சொல்லிப் பார்த்துக் கொண்டார்கள். திருத்தங்கள் செய்தார்கள். திருத்தங்களுடன் திட்டத்தை மறுபடியும் ஒருவருக்கொருவர் சொல்லிப் பார்த்துக் கொண்டார்கள்.

'வெற்றியோ தோல்வியோ திட்டம் இம்மியளவும் பிசகாமல் நிறைவேறுவதில்தான் இருக்கிறது. இரண்டு லட்சமா? சிறைவாசமா? என்பது எச்சரிக்கையாக நடந்து கொள்வதில் தொக்கி நிற்கிறது!'

இரண்டு லட்சம் என்பதிலேயே ஒரு சர்ச்சை கிளம்பியது. ''அது என்ன, இந்த நாளில் இரண்டு லட்சம் ஒரு பெரிய தொகையா? லாட்டரிச் சீட்டில் கூட ஐந்து லட்சம் விழுகிறதே!'' என்றான் அஜ்மல்.

''உண்மைதான்! ஆனால் பெரிய தொகை கேட்டால் சலவை நோட்டாகத்தான் கிடைக்கும். நெம்பர் குறித்து வைத்துக்கொண்டிருப்பார்கள். குறைந்த தொகை எனில் உதிரி நோட்டுக்களாகப் பழைய நோட்டுக்களாகப் பெறலாம். ஒருவேளை பாங்கில் போய் வாங்க வேண்டிய அவசியம் இல்லாமல் பிரதாப் வீட்டிலேயே கூட அத்தொகை இருக்கும். மற்றொன்று, இரண்டு லட்சம் என்றால் சிரமப் படாமல் தயங்காமல் பிரதாப் வீசி எறிந்து விட்டுக் குழந்தைகளை அழைத்துப் போய் விடுவான். ஐந்து லட்சம், பத்து லட்சம் என்றால் யோசிப்பான். போலீஸை அழைக்கலாமா என்று அவனுக்குத் தோன்றக்கூடும். ஐந்து லட்சம் பாங்கில்கூட அவன் கணக்கில் கையிருப்பு இராது. வீடு, எஸ்டேட், ஷேர் என்று எதிலாவது முதலீடு செய்திருப்பான். அதை விற்றுப் பணம் கொண்டு வரத் தாமதமாகும். ஒவ்வொரு வினாடி தாமதமும் ஆபத்தை அதிகரிக்கும். இப்படிப் பலவாறாக யோசித்துக் கடைசியில் ஒரு சமரசமாகமூன்று லட்சம் கேட்பது, ஆளுக்கு ஒன்றரையெனப் பிரித்துக் கொள்வது என்று முடிவுக்கு வந்தார்கள்.

''ஒரு துப்பாக்கி வேண்டும்!'' என்றான் ஸோனி.

''வேண்டாம்! அது கையிலிருந்தால் பயன்படுத்தத் தோன்றும். உயிர் கொலை எதுவும் புரிவது நம் நோக்கமல்ல. தேவையானால் பயமுறுத்த ஒரே ஒரு கத்தி மட்டும் இருந்தால் போதும்!''

ஸோனி தன் பெட்டியைத் திறந்து துழாவி ஒரு ஸ்பிரிங் கத்தியை எடுத்துக் காட்டினான். ஒரு உலோகத் துண்டு மாதிரி இருந்தது. அதை வசமாகக் கையில் பற்றி ஒரு விசையை அழுத்தியதும் உள்ளேயிருந்து 'கிளிக்' கென்ற சத்தத்துடன் கூரிய கத்தி வெளிப்பட்டது.

அம்மா உங்கள் கவனிப்பு கரை கடந்தது.

படுத்தி வைக்கும்
பாப்பாவையும் பாராட்டி
வளர்க்கும் பாசக் கரமே



தீராத விளையாட்டுப் பிள்ளை அவள். எனினும் அவளை சீராட்டி வளர்க்க நீங்கள் எதனையும் செய்வீர்கள்: குளிப்பாட்டி, உடை உடுத்தி, உணவூட்டி, உடல் நலம் பேணிக்காப்பதில் நீங்கள் எடுத்துக் கொள்ளும் கவனம்தான் எவ்வளவு?

கருத்துள்ள அதே கவனம் பளிச்சிடுமே நீங்கள் அவளுக்கு தேர்ந்தெடுக்கும் பிஸ்கட்டிலும். திண்ணம் அதுவே, தீவிர சுகாதார முறையில் கைபடாத் தூய்மையோடு தயாரித்த பிஸ்கட். நீங்கள் அவளுக்கு ஊட்டும் உணவிலே உள்ளதைப் போன்ற நிகரான ஊட்டச்சத்து அதிலே: பால், சர்க்கரை, க்ளுகோஸ், செரிப்பதற்கு எளிதாக இழைய அரைத்த கோதுமை.

கண்மணிக்கென்று உங்கள் கரம் தொடும் அந்த பிஸ்கட், கரகரப்பானது சுவைமிக்கது. கொரித்து ரசித்து மகிழ்வாளே உங்கள் குழந்தை.

எண்ணிப் பாருங்கள்: 7 உலக விருதுகளை வென்ற இந்தியாவின் அதிநவீன பிஸ்கட் தயாரிப்பாளர்களின் படைப்பை.

பாப்பா படம் போட்ட இந்த வண்ணமய உறையை பார்த்து வாங்குங்கள்.



7, உலக விருதுகளை வென்றது.

பார்லே
க்ளுகோ

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தை பராமரிப்பு பிஸ்கட்.



''ஒயெஸ்! இது போதும்!'' என்றான் அஜ்மல்.

''அடுத்து குளோரஃபாரம்!'' என்றான் ஸோனி. ''அதை நான் கொண்டு வருகிறேன்!'' என்றான் அஜ்மல்.

அன்று மாலையே முக்கால் திட்டம் நிரம்பியிருந்த ஒரு பாட்டிலைக் கொண்டு வந்து விட்டான்.

''எங்கேயிருந்து ஸைப்பினே?''

ஒரு கல்லூரியின் பெயரைச் சொன்னான் அஜ்மல். ''கல்லூரி திறந்திருக்கிற சமயம். புதிய மாணவர்கள் பழைய மாணவர்கள் எல்லாரும் இருக்கிறார்கள். நானும் கையில் இரண்டு நோட்டுப் புத்தகங்களுடன் மாணவன் போல நுழைந்தேன். யாரும் சந்தேகிக்கவில்லை. ரசாயன லாபரட்டரிக்குள் சென்றேன். அப்போது லாபில் வேலை நடக்கவில்லை. ஷெல்புகளில் அடுக்கியிருந்த பாட்டில்களில் பெயர்களைப் பார்த்துக் கொண்டே வந்தேன். குளோரஃபாரம் இருந்தது. அட்டெண்டர் வந்தான். 'என்ன?' என்றான். 'புரொபஸரைப் பார்க்கணும். ஒரு நிமிஷம் வரலாமா? கேட்டுச் சொல்லு!' என்றேன். அவன் தலை மறைந்ததும் பாட்டிலை எடுத்து பாண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு வெளியேறி நடந்தேன். காம்பவுண்டைத் தாண்டி பஸ் பிடித்து ஏறி இதோ வந்து விட்டேன்!''

''உன்னை அட்டெண்டர் அடையாளம் கண்டு கொண்டானா?''

''எனக்குத் தோன்றவில்லை. ஆயிரக்கணக்கான மாணவர்களில் நான் ஒருவன். புரொபஸரைப் பார்க்க வந்தவன் மனம் மாறித் திரும்பி விட்டேன் அவ்வளவுதான். பாட்டில் குறைவதையும் அவன் கவனித்திருக்கப் போவதில்லை!''

இதன் பிறகு இருவருமாக அவர்கள் ரமேஷ் கரேஷுடன் சேர்ந்து ஒளிந்து கொள்ளப் போகிற இடத்தை நோட்டம் விட்டார்கள். திருவான்மியூரிலிருந்து பஸ் அந்தப் பக்கம் போயிற்று. எட்டாவதுமைல் கல்லில் இறங்கிக்கொண்டார்கள்.

''ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்புகூட வெள்ளிக்கிழமை இரவிலிருந்து திங்கள் காலை வரை இங்கே ஒரே அட்டகாசமாய் இருக்குமாம், கேள்வி!'' என்றான் அஜ்மல், அவர்கள் தனியே இருந்தபோது. ''இப்போ தெல்லாம் பிரதாப் இங்கே வருவதே இல்லையாம். பூட்டியே கிடக்கிறது. ஏனென்று தெரியவில்லை.''

''காவலுக்கு?''

''வாட்ச்மேன் மட்டும் ஒருவன் இங்கேயே ஒதுக்குப்புறமாய் உள்ள அவுட் ஹவுஸில் குடியிருக்கிறான். சின்ன இடம்தான்; அவனே தோட்டக்காரனும்கூட. மாதம் பிறந்தால் கணிசமாகச் சம்பளம். ஒண்டிக்காரன்தான். மனைவி குழந்தை என்று யாரும் இல்லை. சமையல் சாப்பாடு எல்லாம் சுயம் பாகம்தான். வாரத்துக்கு ஒருதரமோ இரண்டு தரமோ திருவான்மியூர் போய்ச் சமையல் சாமான்கள் வாங்கி வருகிறான். அப்போது தோட்டத்தின் கேட் உள்பட எல்லாவற்றையும் பூட்டிக் கொண்டு போகிறான். மற்ற நேரமெல்லாம் இங்கேதான் போர் அடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்!''

''இருக்கட்டும். அவன் வாழ்க்கையிலும் சற்றுப் பரபரப்பு உண்டாக்குவோம்!''

ஆக ஒரு கார் டிரைவர், ஒரு வாட்ச்மேன்— இரண்டு பேர்களை நாம் சமாளிக்க வேண்டும்.

''அது ஒன்றும் பெரிய விஷயமாக எனக்குத் தோன்றவில்லை!'' என்றான் ஸோனி.

வெள்ளிக்கிழமை பிற்பகல். இன்று காரின் பெட்ரோல் டாங்க் நிரம்பி வழியும் என்ற நம்பிக்கையுடன் அவர்கள் டீக்கடைப் பக்கமாகச் சாலையில் எதிர்ப்புறம் நின்றார்கள். இருவரும் மாறுவேஷத்தில் இருந்தார்கள். ஹிப்பி தலைமுடி, தொங்குமீசை, ஸைட்பர்ன்ஸ் எல்லாம் ஒட்டப்பட்ட தலைகள். கறுப்புக் கண்ணாடி வேறு. வழக்கம் போல் கணக்காக மூன்றே கால் மணிக்குக் கார் வந்தது. ஆனால் என்ன ஏமாற்றம்! டிரைவர் தவிர முன் ஸீட்டில் இன்னும் ஒருவர் இருந்தார். அதிர்ச்சியுற்ற ஸோனி நகத்தைக் கடித்தான். 'போச்சு! நம் திட்டம் பாழாய்ப் போச்சு!' என்றான். 'இருடா! பார்க்கலாம்!' என்றான் அஜ்மல். கார் வழக்கமாக நிற்கும் இடத்துக்குச் சற்று முன்பாகவே நின்றது. அதிலிருந்து இறங்கியவன் நன்றி கூறுவதுபோல் உபசாரமாய் இரண்டு வார்த்தை சொல்லி விட்டு பஸ் ஸ்டாண்டுக்கு நடந்தான். நின்று பஸ்ஸுக்காகக் காத்திருக்கத் தொடங்கினான்.

''ஒரு நண்பனுக்கு பஸ் ஸ்டாப் வரை லிஃப்ட் கொடுத்திருக்கிறான். இதற்குப் போய்ப் பயந்து விட்டாயே?'' என்றான் ஸோனி.

கார் மறுபடியும் கிளம்பிச் சிறிது தூரம் ஊர்ந்து சென்று வழக்கமாக நிறுத்தும் இடத்திலேயே நிலைத்தது. டிரைவர் இறங்கிக் கதவைச் சாத்தி விட்டு வழக்கம் போல் டீக்கடைக்குள் நுழைந்தான். கடைவாசல் படுதா வெய்யிலுக்காகப் பாதி வரைதான் இறங்கியிருந்தது. ''பாதகமில்லை. அது போதும், சமாளிக்கலாம்!'' என்றான் அஜ்மல்.

''அது சரி! ஆனா அவன் இறக்கி விட்ட நண்பன் இதோ பஸ் ஸ்டாண்டில் கூப்பிடு தூரத்தில்தானே நிற்கிறான். நாம் எப்படிக் காரை நெருங்குவது? அவன் கண்ணில் பட்டு விட்டால்....''

''தொல்லைதான்!'' என்று அஜ்மல் பற்களை நறநறவென்று கடித்தான்.

காத்திருந்தார்கள். மணி மூன்று இருபது, இருபத்தைந்து என்று நிமிஷங்கள் ஓடின. பரபரப்பில் ஸோனிக்கு உடம்பு நடுங்க ஆரம்பித்து விட்டது. மூன்று முப்பதுக்கு கரெக்

டாக டிரைவர் மறுபடியும் காரில் ஏறி விடுவான்.

ஒரு பஸ் வந்து புறப்பட்டது. அந்த மனிதன் அங்கேயே நின்றான். 'அவன் தலையில் இடி விழ! நாசமாய்ப் போக!' என்று சபித்தான் ஸோனி. அடுத்த பஸ் அரை நிமிஷத்தில் வந்தது; புறப்பட்டது. அந்த ஆள் இப்போது பஸ் ஸ்டாப்பில் இல்லை. விடுவிடுவென்று அஜ்மல் நடந்து காரின் பின்புறக் கதவைத் திறந்தான். பூட்டப்பட்டிருக்கவில்லை; இமைக்கும் நேரத்தில் ஏறிக் கதவைச் சாத்திக் கொண்டான்.

அந்தக் கார் ஆரம்பத்தில் பிரதாப்பினால் பயன்படுத்தப்பட்ட ஒன்று. அம்பாஸிடர் வாங்கியதும் இதை மனைவி மக்கள் உபயோகத்துக்கு என்று ஒதுக்கி விட்டான். தொடக்கத்தில் பிரதாப் பயன்படுத்தியிருந்த காரணத்தால் கறுப்புக் கண்ணாடிகள் நாலு ஜன்னல்களுக்கும் போடப்பட்டிருந்தன. உள்ளே இருந்து பார்த்தால் வெளியே தெரியும். வெளியே இருந்து உள்ளே ஒன்றும் தெரியாது! தான் சினிமா நட்சத்திரமானதால் இது தேவை என்று கருதினான் பிரதாப். எங்காவது வண்டி நிற்க நேர்ந்தால் கூட்டம் சேராது. மேக்அப் போட்ட முகத்துடன் தன்னைப் பொதுமக்கள் பார்ப்பதையும் அவன் அவ்வளவாக விரும்பவில்லை. அது மட்டுமல்ல. காரில் அவனைத் தவிர வேறு யார் அமர்ந்திருக்கிறார்கள் என்பதும் வெளியே இருப்போருக்குத் தெரியாது. பிரதாப்பின் லீலைகளுக்கு இது வசதியாக இருந்தது. பின்பக்கக் கண்ணாடியை மறைக்க ஒரு திரைச் சீலை இருந்தது. ஒதுங்கி இருந்த அதனை இழுத்து விட்டு மூடினான் அஜ்மல். எல்லா ஜன்னல்களும் உயர்த்தப்பட்டிருந்தாலும் உள்ளே புழுக்கமாக இல்லை.

ஏ. ஸி. சாதனம் இருந்தது. அது இப்போது இயங்காவிடினும் ஏற்கனவே இயங்கியதால் ஏற்பட்ட குளுமை இன்னும் மாறவில்லை.

வெளியே இருந்து யாரும் பார்ப்பதென்றால் காரின் முன்புறமுள்ள கண்ணாடி வழியேதான் பார்க்கலாம். அப்படி கவனிப்பவர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும். அவர்களிலும் சந்தேகிப்பவர்கள் எண்ணிக்கை இன்னும் குறைவாக இருக்கும். காரின் எதிர்ப்பக்கம் வரும் வாகனங்கள் சாலையின் மறுபுறம்தான் நகரும். எனவே, முன்புறக் கண்ணாடி வழியாக இந்தக் காருக்குள் நடப்பதைப் பார்ப்பவர்கள் அபூர்வமாகத்தான் இருப்பார்கள். அதிலும் இங்கே காரியம் சந்தேகிக்க இடமின்றி ஓரிரு கணங்களில் முடிந்து விடப் போகிறது....

ஸோனி வெளியே காத்திருந்தான். சரியாக மூன்று முப்பது மணிக்கு டிரைவர் வெளியே வந்தான். காரின் முன்புறக் கதவைத் திறந்து ஏறி அமர்ந்தான். அதே சமயம் ஸோனியும் அருகில் வந்து நின்று கொண்டான். கதவை அவன் சாத்தப் போகும் சமயம் பக்கத்தில் யாரோ நிற்பதைப் பார்த்து ''யாரப்பா?'' என்றான்.



மனைவி:— ஏங்க!.. என்னங்க [illegible] இருட்டிலே யாரோ திருடன் வரும் சத்தம் கேட்குது, பாருங்களேன்!

கார் கதவு திறக்கப்பட்டதுமே பின் ஸீட்டில் இருந்த அஜ்மல் பஞ்சில் குளோரபாரம் கவிழ்த்துக் கொண்டு பாட்டிலை மூடி வைத்து விட்டுத் தயாராயிருந்தான். 'யாரப்பா?' என்ற டிரைவரின் கேள்விக்கு ஸோனி பதிலளிக்க அவசியம் இருக்கவில்லை. அஜ்மலின் கரம் பின்புறத்திலிருந்து நீண்டு டிரைவர் முகத்துக்கு முன் வளைந்து பஞ்சை அவன் மூக்கருகே வைத்து அழுத்தியது. ஸோனியும் ஒரு கை கொடுத்துத் தூக்கி விட அஜ்மல் டிரைவரை அப்படியே தன் பக்கத்துக்குப் பின்னால் இழுத்துக் கொண்டான். டிரைவர் ஆசனத்தில் ஸோனி அமர்ந்தான். கதவைச் சாத்தினான். கண்ணிமைக்கும் நேரம்தான். எல்லாம் முடிந்து விட்டது. கார் கிளம்பியும் விட்டது.

இடதுபுறம் ஒரு நெடுஞ்சாலையில் திரும்பியது. கொஞ்சதூரம் சென்று மறுபடியும் வலப்புறம் திரும்பியது. ஏற்கெனவே திட்டத்தில் ஓர் அம்சமாக அவர்கள் பார்த்து வைத்திருந்த தெருதான். வெறிச்சோடிக் கிடந்த வீதி. பக்கத்து வீட்டில் கொலை நடந்தால் கூடத் தெரியாத அளவில் அவரவரும் தனித்தனி கோட்டையில் வாழும் பணக்காரர்களின் குடியிருப்புப் பகுதி. சாலையில் நடமாட்டம் இராது — அதுவும் அந்த நேரத்தில். இரண்டே நிமிஷங்கள்தாம் அவர்களுக்குத் தேவை. டிரைவரைப் பின் ஸீட்டிலிருந்து இறக்கி டிக்கிக்கு இடம் மாற்ற வேண்டும்—அவ்வளவுதான்.

ஸோனி இறங்கப் போனான். தெருமுனையில் ஒரு சைக்கிள் திரும்பி முன்னேறுவதைப் பார்த்தான். 'நில்லு! அவசரப்படாதே!' என்று அஜ்மலுக்குக் கூறிவிட்டு சிலையானான். சைக்கிள் ஆசாமி பெரிதாகக் குரல் எடுத்து, ''பழைய டயர் பாட்டரி கார் சாமான் வாங்கறது....!'' என்று கூவினான். சாலை ஓரமாக நின்ற இந்தக் காரைப் பற்றி அவன் விசேஷமாகச்சிரத்தை ஏதும் கொள்ளவில்லை. திரும்பிப் பாராமல் நேரே சென்றான். யாரேனும் வீட்டை விட்டு வெளியே வந்து அவ



னுடன் வியாபாரம் பேச ஆரம்பித்து விடக் கூடாதே என்று இவர்களுக்குக் கவலையாய் இருந்தது. அப்படி ஏதும் நடக்கவில்லை. சைக்கிள் தெரு முனை திரும்பிக் கண்ணுக்கு மறைந்து விட்டது.

சரேலென்று இயங்கினான் ஜோனி. கார் சாவியுடன் கீழே இறங்கிப் பின்புறம் வந்து டிக்கியைத் திறந்து வைத்தான். பிறகு சாலை ஓரமாக நடந்து இடப்புறம் கதவைத் திறந்து விட்டான். டிரைவரைக் கீழே இறக்க, காரின் உள்ளே இருந்தபடி அஜ்மலும் உதவினான். இருவரும் மயங்கிக் கிடந்த ஆளைத் தூக்கிப் பெரிய டிக்கியில் வைத்தனர். காருக்கும் காம்பவுண்டு சுவருக்கும் இடையில் அவர்கள் நடந்த போது மறைக்கப்பட்டிருந்தனர். பின்னால் டிக்கியில் வைக்கும் போதுதான் யாராவது பார்த்துவிடும் ஆபத்து அதிகம். அரை நிமிஷ நேரம் கிடைத்தால் போதும், காரியம் முடிந்து விடும். ஜோனி மறைப்பது போல் நின்று கொள்ள அஜ்மல் டிரைவரை டிக்கியினுள்ளே திணித்தான். கஷ்டமாகத்தான் இருந்தது. காலை மடித்து இடுப்பை வளைத்து எப்படியோ உள்ளே வைத்து டிக்கிக் கதவை இறக்கி மூடினான்.

இருவரும் விரைந்து காரின் முன் புறம் ஏறிக் கொண்டார்கள். ஜோனி காரைக் கிளப்பினான். உறுமிக்கொண்டு புறப்பட்டது. வந்த வழியே திரும்ப 'யு' டர்ன் எடுத்த போது, சாலை அகலம் போதவில்லை. ரிவர்ஸ் போட்டு மறுபடியும் ஸெகண்ட் கீரில் செலுத்தித் திரும்பினான்.

வெய்யிலுக்காக உள்ளே தன் கூண்டு அறையில் அமர்ந்திருந்த கூர்க்கா ஒருவன் அப்போதுதான் சத்தம் கேட்டு எழுந்து வந்து எட்டிப் பார்த்தான். நல்ல வேளை தப்பினோம்; இவ்வளவு அருகில் இருந்திருக்கிறானே இவன்? இன்னும் ஐந்து நிமிஷத்துக்கு முன்னால் எழுந்து வந்திருந்தால்....

''அதிர்ஷ்டம் நம் பக்கம் இருக்கிறது!'' என்றான் அஜ்மல். ''டிரைவரை விட்டு விட்டுக் காரை மட்டும் எடுத்துப் போனாலும் பயன்படாது. டிரைவர் வெளியே வந்து பார்த்து விட்டுக் காரைக் காணோம் என்றதும் முதல் காரியமாகப் பக்கத்திலேயே உள்ள கான்வெண்டுக்கு ஓடி வந்து விடுவான்....''

''மயக்க மருந்து இன்னும் எவ்வளவு நேரம் வேலை செய்யும்?''

''யாருக்குத் தெரியும்? கண் விழித்து ஏதாவது தகராறு பண்ணினால் இன்னும் கொஞ்சம் குளோரஃபாரம் கொடுக்க வேண்டியதுதான்.''

சரியாக 3:40-க்கு அவர்கள் கான்வெண்டுக்குள் நுழைந்தார்கள். இந்தக் கார் வழக்கமாக நிறுத்தப்படுகிற இடத்தில்' நிறுத்த வேறு ஒரு வாகனத்தின் டிரைவர் யோசனை பண்ணிக் கொண்டிருந்தான். மின்னல் போல் ஓட்டி வந்து அவனை முந்திக் கொண்டு ஃபியட்டை நிறுத்தினான் ஜோனி. இவர்களை உற்றுப் பார்த்துவிட்டு அந்தக் காரின் டிரைவர் இறங்கி வந்தான். ''என்ன, பாபு வரலீங்களா?''

''இல்லே. உடம்பு சரியில்லேன்னு மத்தியானத்துக்கு மேல் லீவு போட்டு விட்டான்.''

''பிரதாப் வீட்டு வண்டிதானே.... நீங்க அவருக்கு....''

''சொந்தக்காரங்க. பாம்பேலே இருக்கோம். விடுமுறையில் வந்திருக்கோம். டிரைவர் லீவுன்னு சொன்னதாலே பசங்களை நாமே அழைச்சுக்கிட்டுப் போயிடுவோம்னு வண்டியை எடுத்துக் கொண்டு வந்தோம்.''

''பாபு வழக்கமாய் நிறுத்துகிற இடத்திலேயே கரெக்டா நிறுத்திட்டீங்களே!''

ஒரு கணம் தடுமாறினான் ஜோனி. ''அம்மா அடையாளம் சொல்லி அனுப்பிச்சாங்க!'' என்றான் அஜ்மல்.

சொந்தக்காரர்கள் என்று தெரிந்த பிறகு அதிகமாக வாய் கொடுக்கவில்லை அந்த டிரைவர். பெரிய இடம் என்று ஒதுங்கி விட்டான்.

மணி அடித்தது. சுரேஷும் ரமேஷும் ஆடி அசைந்து மெல்ல வந்தார்கள். அவர்கள் ஏதும் தகராறு பண்ணாமல் காரில் ஏற வேண்டுமே, பலவந்தத்துக்கு இடமில்லாது போக வேண்டுமே என்று கவலைப்பட்டான் ஜோனி. சற்றுமுன் பேச்சுக் கொடுத்த டிரைவர் முதலில் கிளம்பிப் போய் விட்டால் தேவலை, இங்கே ஏதாவது குழந்தைகளுடன் வாக்குவாதம் நடக்க நேர்ந்து அது அவன் சந்தேகத்தைக் கிளப்பினால்....?' என்று கவலைப்பட்டான் அஜ்மல்.

அவன் விரும்பியபடியே நடந்தது. அந்த வண்டிக்குரிய சிறுமி முதலில் வந்துவிட அந்த வாகனம் புறப்பட்டுச் சென்று விட்டது. அடுத்த வண்டி சற்றுத் தள்ளித் தானே நிற்கிறது... நிம்மதி பிறந்தது அஜ்மலுக்கு.

சுரேஷும் ரமேஷும் வண்டியை நெருங்கியதும் பின் கதவைத் திறந்து பிடித்தான் அஜ்மல். சுரேஷ் தயங்கினான். ''பாபு எங்கே?'' — அதே கேள்வி.

''அவனுக்கு மத்தியானம் உடம்பு சரியில்லாமல் போச்சு. அம்மா அவனை வீட்டுக்கு அனுப்பிட்டா. உங்களை அழைச்சுவர எங்களை அனுப்பினா'' அதே பதில்.

''நீ யாரு?'' — அதே கேள்வி.

''நாங்க உங்க அம்மாவுக்கு உறவுக்காரங்க. பம்பாயிலிருந்து வந்திருக்கோம். நாங்க வீட்டுக்கு வரச்சே நீங்க பள்ளிக்கூடம் கிளம்பிப் போயிட்டீங்க. பம்பாயிலிருந்து உங்க ரெண்டு பேருக்கும் நிறைய பிரஸண்ட்ஸ் வாங்கி வந்திருக்கோம். வீட்டிலே இருக்கு. வாங்க சீக்கிரமா போய்ப் பார்க்கலாம்.''

சுரேஷ் ரமேஷைப் பார்த்தான். ரமேஷ் சுரேஷைப் பார்த்தான். 'அதே கார்தான்; நம்ம கார்தான். ஆள்தான் வேறே! ஏறினால்

பன்ன? ஆள் வேறுன்னாலும் கார் நம்மதுதானே அதனால் ஏறலாம்' என்றெல்லாம் அந்தப் பிஞ்சு மனங்களில் கேள்விகளும் பதில்களும் பிறந்தன.

''வா, வா நேரமாச்சு! அம்மா டிபன் பண்ணி வைச்சுக் காத்திருப்பா!'' என்று அஜ்மல் மெல்ல சுரேஷைத் தொட்டு உந்தினான். பலவந்தமற்ற வற்புறுத்தல். இந்த இடத்தில் பசங்கள் முரண்டு பிடிக்க ஆரம்பித்தால் ஆபத்து. அப்புறம் வேலை வரும்போது இவர்களைக் கவனிக்கிறபடி கவனித்துக் கொள்ளலாம்.

ஸோனி ஃபைவ் ஸ்டார் ஒன்றை எடுத்து ரமேஷிடம் தந்தான். சுரேஷும் கைநீட்டினான். அவனுக்கும் ஒன்று கிடைத்தது. ''இப்ப இந்த பிரஸெண்ட் மட்டும்தான். பாக்கியெல்லாம் வீட்டுக்குப் போய்'' என்றான் ஸோனி.

ரமேஷ் ஏறினான். சுரேஷும் தொடர்ந்தான். கதவு சாத்தப்பட்டது. ஸோனியும் அஜ்மலும் முன்பக்கம் ஏறிக் கொண்டனர். கார் பெரிதாக ஹாரன் ஒலி எழுப்பியபடி விரைந்தது.

பள்ளியிலிருந்து குழந்தைகள் திரும்ப வில்லையே என்பதைத் தாயார் உணர்ந்து அதற்கான தக்க நடவடிக்கைகளை எடுப்பதற்குள் இவர்கள் வெகு தூரம் தங்கள் இட்டத்தில் முன்னேறிவிட விரும்பினார்கள். எனவே, எவ்வளவு துரிதமாக ஓட்ட முடியுமோ ஓட்டினான் ஸோனி. சிறு விபத்து கூட ஏதும் நேர்ந்து விடக் கூடாது; அப்படி ஏதாவது நேர்ந்தால் காரியம் அடியோடு குட்டிச் சுவராகி விடும் என்பதால் ஜாக்கிரதையாகவும் காரை ஓட்டிப் போனான்.

கிட்டத்தட்ட அடையாறு வரை வந்தாகி விட்டது. சாக்லேட்டைத் தின்று தீர்த்த ரமேஷ் ''எங்களை எங்கே அழைச்சுப்போறே? வீட்டுக்கு வழி தெரியலையா'' என்றான். அவன் முகத்தில் பீதி படிந்திருந்தது.

''இந்தக் காரில் என்ன நாற்றமடிக்கிறது?'' என்று கேட்டான் சுரேஷ். அவன் முகத்தில் சந்தேகம் படர்ந்திருந்தது. குளோரபாரம் வாசனையைக் குழந்தையால் இனம் கண்டு கொள்ள முடியவில்லை.

௭

''என்னங்க, பள்ளிக்கூடத்திலிருந்து குழந்தைகள் இன்னும் வரலே. எனக்குக் கவலையாயிருக்கு'' என்றாள் அனசூயா.

''இதுக்காகவா ஃபோன் பண்ணினே? செட்டிலே நான் இருக்கும் போது தொந்தரவு பண்ணக் கூடாதுன்னு சொல்லியிருக்கேனில்லே?''

''நான் உங்களுக்கு எப்போதாவது எதுக்காவது ஃபோன் பண்ணித் தொல்லை கொடுத்திருக்கேனா? வழக்கம் போல் பாபு மூணு மணிக்குக் காரை எடுத்துக்கிட்டுப் போனான். மணி ஐந்தாகிறது. குழந்தைகள் இன்னும் வீட்டுக்குத் திரும்பலேன்னா கவலையா இராதா? ரமேஷ் சுரேஷுக்குப் பசி தாங்காது. குழந்



''என்னய்யா பழநாசன்.. பேசாம டி.வி. வாங்கிட்டாராம் டி.வி.! கரண்ட் கட் ஆச்சுன்னு டி.வி. பார்க்கறத்துக்கு ஒரு ஜெனரேட்டர் வாங்கி வைக்கக் கூடாதா?''

தைகள் எங்கே போனாங்களோ, என்ன ஆச்சோ தெரியலையே?''

''பாபுதானே போயிருக்கான். பிறகு கவலையென்ன? பார்த்து அழைத்துக் கொண்டு வந்து விடுவான். பசங்களுக்கு ஏதாவது பனிஷ்மெண்ட் கிடைச்சிருக்கும் அல்லது கேம்ஸ், ஸ்போர்ட்ஸ், ஃபங்ஷன்னு நிக்க வைச்சிருப்பாங்க.''

''ஐயோ அப்படி ஏதாவது இருந்தா நான் கவலைப்படவே மாட்டேனே. ஸ்கூலுக்கு ஃபோன் பண்ணி விட்டேன். எல்லா பசங்களும் போயாச்சு. இங்கே யாருமில்லே. ஒரு கார் கூடக் காத்திருக்கலேன்னு சொல்லிட்டாங்க!''

''பிறகு என்ன? பசங்களை பாபு அழைச்சுக்கிட்டுக் கிளம்பிட்டான்னு அர்த்தம். வந்து சேர்ந்துடுவாங்க.''

'எனக்கு என்னமோ பயமா இருக்குங்க. நீங்க வீட்டுக்குச் சீக்கிரம் வந்துடுங்களேன்.''

''பார்க்கலாம்'' என்று சொல்லி ஃபோனை வைத்தான். எக்ஸ்டென்ஷன் ஒயர் போட்டு செட்டுக்குக் கொண்டு வரப்பட்ட டெலிஃபோன் திரும்ப எடுத்துச் செல்லப்பட்டது.

''என்ன விஷயம்?'' என்றார் டைரக்டர்.

''மிஸஸ் ஃபோன் பண்ணினா. பசங்க பள்ளிக்கூடத்திலிருந்து இன்னும் திரும்பலையாம். இரண்டும் சரியான வாலுங்க. டிரைவரை வற்புறுத்தி எங்காவது பீச், ஓட்டல், ஃபிரண்டு வீடுன்னு அழைச்சுப் போகச் சொல்லியிருப்பாங்க. இவ இங்கே கிடந்து பதறுகிறா.''

''பேக் அப் சொல்லிடட்டுமா?''

''உங்க சௌகரியம் ஐ ஆம் ஓகே'' என்றான்.

டைரக்டர் தயாரிப்பாளரிடம் ஒரு நிமிஷம் கலந்தாலோசித்தார். ஷூட்டிங்கைத் தொடர அவர்கள் மனிதாபிமானம் இடம் தரவில்லை.



வாசலிலேயே நின்று கொண்டிருந்த அனசூயா கணவனைப் பார்த்ததும் அவன் கையைப் பிடித்து உள்ளே அழைத்துப் போனாள். வரவேற்பு அறையில் அவன் நெஞ்சில் முகம் புதைத்து அழுதாள். ''எனக்கு பயமா இருக்குங்க, பயமாயிருக்குங்க'' என்று திரும்பத் திரும்பச் சொன்னாள். ''ஏதாவது ஆக்ஸிடெண்ட் ஆகியிருக்குமோன்னு நினைக்கிறேன்.''

''எதுவானாலும் என்னைக் கட்டிக்கிட்டு அழுது என்ன பிரயோஜனம்? என் சொக்காயை முறுக்கிப் பிழிந்தால் பசங்க திரும்பி வந்துடுவாங்களா? போலீசுக்கு ஃபோன் பண்ணேன்'' என்றான். ''ஃபோனைப் பண்ணிட்டு ஒரு டிரிங்க் கலந்து எடுத்துக்கிட்டு வா'' என்று கூறி அவளைப் பலவந்தமாய் விலக்கி விட்டுக் குளியலறைக்குள் சென்றான். ஷவரில் நின்று மேக் அப், வியர்வை எல்லாவற்றையும் நீரில் கரைத்து அனுப்பி விட்டு ஒரு டிரெஸ்ஸிங்கவுன் அணிந்து கொண்டு வந்து அமர்ந்தான். டிரிங்க் தயாராயிருந்தது. அதை ஸிப் செய்து கொண்டே, ''ஃபோன் பண்ணினியா?'' என்று கேட்டான்.

''செய்தேன்'' என்றாள் உணர்ச்சியற்ற குரலில். பாதுகாப்பை நாடி கணவனிடம் அடைக்கலம் புகுந்த போது அவன் பட்டுக் கொள்ளாமல் பேசியது அவளை ரொம்பவும் பாதித்திருந்தது. அந்தக் குழந்தைகளை அவன் ஆரம்பத்திலிருந்தே வெறுத்தான். அது அவளுக்குத் தெரியும். அதற்காக இப்படியா? சவு இரக்கம் என்ற சரப்பசையே இவர் இதயத்தில் இல்லையா?

''என்ன சொல்றாங்க?'' என்றான்.

''குழந்தைகளின் பெயர் விலாசம் அங்க அடையாளம் எல்லாம் கேட்டாங்க. சொன்னேன். காரின் நெம்பர், கலர், மாடல் எல்லாம் கேட்டுக்கிட்டாங்க. பாபுவைப் பற்றிய வர்ணனையும் குறிச்சிக்கிட்டாங்க.''

''பின்னே என்ன? கவலையற்று இரு. இனி பொறுப்பு போலீஸோடையது. எப்படியாவது. கண்டுபிடிச்சுக் கொண்டு வந்து சேர்த்துடுவாங்க.''

''தெய்வமே'' என்று இதயத்துக்குள் அலறினாள் அனசூயா. 'போலீஸ்காரர்கள் குழந்தைகளைக் கொண்டு வந்து சேர்த்து விடப் போகிறார்களே என்பதற்காக வருத்தப்பட்டு வெறுப்பு தொனிக்கவல்லவா பேசுகிறார் இவர்! போலீஸுக்குத் தகவல் கொடுத்து விட்டதால் இனி தமக்கு ஒரு பொறுப்பும் இல்லை என்பது போலல்லவா நடந்து கொள்கிறார்!'

அவள் வாசலுக்கும் உள்ளுக்குமாக நெஞ்சம் பதைபதைக்க நடந்தாள். பிரதாப்பை ஸ்டூடியோவிலிருந்து கொண்டு வந்து சேர்த்த டிரைவர் தான் வீடு கிளம்பத் தயாராயிருந்தான். அவனிடம் ''வீட்டுக்குப் போகவேண்டாம். இங்கேயே சாப்பிட்டு விட்டு இரவு இங்கேயே இரு'' என்று உத்தரவிட்டாள். உள்ளே போய்ச் சமையற்காரரிடம், ''குழந்தைகளுக்கு உருளைக்கிழங்குக் கறிதான் பிடிக்கும். எலுமிச்சம்பழம் பிழிந்து பொடிமாஸ் பண்ணுங்க. ரோஸ்ட் காரம் சாப்பிடமாட்டாங்க'' என்றாள். திரும்பி வந்தாள். கணவன் எதிரே உட்கார்ந்தாள், எழுந்தாள். 'பிடித்த சமையலாகப் பண்ணச் சொன்னோமே அவர்கள் வருவார்களா, சாப்பிடுவார்களா?' என்று நினைத்ததும் மனத்தை உலுக்கி எடுப்பது போலிருந்தது.

அவள் படுகிற அவஸ்தையைப் பார்த்து அவன் புன்னகை புரிந்தான். ஒருவித குரூரமான மகிழ்ச்சி அவன் நெஞ்சில் நிறைந்து ததும்பியது. அவளுடைய அவதியை ரசித்த போது அவளுடைய அழகுகளும் அவன் கண்களுக்குப் புலனாயின. 'கல்யாணமாகி எட்டு வருஷங்களுக்கு மேல் ஆகப்போகிறது. 'ஸ்லிம்'மென்றுதான் இருக்கிறாள். இரட்டைக் குழந்தைகளுக்குத் தாயான பிறகும்' என்று நினைத்தான். வயிறு எப்படி ஒட்டினாற்போலிருக்கிறது இவளுக்கு! அதற்கு மேலும் கீழும் படமெடுத்த பாம்பு போல எப்படி உடல் சீறிக் கொண்டு அளவாக அகன்று விரிகிறது! கவலைபடர்ந்த அந்த முகத்திலும் எத்தனை களை! உடம்பு முழுவதும் என்ன பளபளப்பு!

''என்னங்க இப்படி உட்கார்ந்திருக்கீங்க?'' என்று கேட்டாள் அவள் எரிச்சல் தாங்காமல்.

''என்னை என்ன பண்ணச் சொல்லறே?''

''உடம்பு பதறவில்லையா உங்களுக்கு?''

''இல்லையே!'' என்றான் மறுபடியும் டிரிங்க் ஸிப் செய்தபடி.

அவளுக்குக் கொஞ்சநஞ்சமிருந்த சந்தேகமும் தீர்ந்து விட்டது. 'அபார்ஷன் செய்து அழிக்க முடியாத குழந்தைகள் இப்போது ஏதோ ஒரு விதத்தில் அழிந்து போனால் இந்த அரக்கன் சந்தோஷப்படுவான்! ஐயோ! இப்படி ஒரு ராட்சசனையா நாம் மணந்து கொண்டோம்!'

டெலிஃபோன் மணி அலறியது. அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. உடல் அசையவில்லை.

10

திருவான்மியூர் தாண்டி மகாபலிபுரம் நோக்கிச் சென்ற சாலையில் ஃபியட் கார் விரைந்தது.

ரமேஷும் சுரேஷும் மெல்ல விசும்பத் தொடங்கியிருந்தனர்.

''உம்....! மூச்சு விடற சத்தம் கேட்கக் கூடாது!'' என்று அதட்டினான் அஜ்மல்.

குழந்தைகள் இருவரும் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டு பயந்து சுருண்டார்கள். பீதியுடன் கண்களை அகல விரித்து அவனைப் பார்த்தார்கள்.

கார் ஒரு கப்பிச் சாலையில் திரும்பிக் குண்டும் குழியுமான வழியில் சென்றது. "கேட் பூட்டியிருக்கிறது" என்றான் ஸோனி.

"நல்லதாய்ப் போயிற்று. வாட்ச்மேன் வெளியே போயிருக்கிறான் என்று அர்த்தம். திருவான்மியூருக்குத்தான் கடைத் தெருவில் ஏதாவது சாமான்கள் வாங்கப் போயிருப்பான்."

கேட்டில் பூட்டியிருந்த துருப்பிடித்த பூட்டு, சாலையில் கிடந்த ஒரு கருங்கல்லை எடுத்துத் தட்டியதுமே திறந்து கொண்டது. சவுக்குத் தோப்பை ஊடுருவிச் சென்றது பாதை. கார் புழுதியைக் கிளப்பிக் கொண்டு அதன் மீதாக விரைந்தது. வீட்டு வாசலில் நின்றது. நாலு மூலையில் பைல் ஃபவுண்டேஷன் போட்டுத் தூண் எழுப்பி அந்நான்கு தூண்களையும் கான்கிரீட் பீம் இணைக்க, அதன் மேல் கட்டப்பட்டிருந்தது வீடு. மணல் பாங்கு பூமி என்பதால் இந்த ஏற்பாடு. பார்ப்பதற்கு வீடு அந்தரத்தில் நிற்பது போலிருந்தது. படியேறிச் சென்றனர், குழந்தைகளையும் இழுத்துக் கொண்டு. வாசல் கதவு பூட்டை உடைக்க முடியாது. மாற்றுச் சாவி போட்டுத் திறக்க வேண்டியிருந்தது. நிபுணத்துவத்துடன் செய்தார்கள்.

"ஃபிரிஜ், ஏஸி, டன்லப் பில்லோ, ரத்னக் கம்பளம், ரேடியோ ... பலே பலே" என்றான் ஸோனி.

"ஓர் அங்குலத்துக்குப் படிஞ்ச தூசி, ஒட்டடை, சிலந்தி, கரப்பான், பூரான்... பேஷ் பேஷ்..." என்றான் அஜ்மல். "சரி நீ கிளம்பு!"

"வாட்ச்மேன்?"

"அவன் திரும்பி வரும்போது நான் கவனித்துக் கொள்கிறேன்" என்றான் அஜ்மல்.

"தனியாகவா?"

"பரவாயில்லை. அவனுக்கு நான் இங்கு இருப்பது தெரியாது. எனக்கோ அவன் இன்னும் சற்று நேரத்தில் இங்கு வரப்போவது தெரியும். எனவே நான்தான் அவனைச் சுலபமாக வெற்றி கொள்வேன். ஆனால் நீ இங்கு தாமதித்தால் நமது திட்டம் குறித்த காலக் கெடுவுக்குள் நடந்து முடியாது. இதில் நேரம் தவறாமை முக்கியம்."

"சரி, தயக்கம் தாட்சண்யம் காட்டாதே. அசட்டுத் துணிச்சலும் வேண்டாம். காவல்காரனைப் பின்புறமாகச் சென்று தலையில் ஒரு தட்டுத் தட்டு; மயங்கி விழுந்ததும் கை, கால்களை இறுகக் கட்டி வாயிலும் துணி அடைத்துவிடு."

"எல்லாம் எனக்குத் தெரியும். ஒரு சிறு பிசகும் நேராது இங்கு. நீ உன் பங்கைக் கச்சிதமாக நிறைவேற்று."

"குழந்தைகள் ஜாக்கிரதை! கூச்சல் போடுவார்கள் என்று தோன்றினால் அவர்களையும் கட்டிப் போடவோ வாயில் துணிஅடைக்கவோ யோசிக்காதே."

"ஓ.கே. ஆனா அதுக்கு அவசியம் ஏற்படாது. அதுகள் பீதியில் வாயடைத்துப் போயிருக்கின்றன."

"வாட்ச்மேன் தனக்கு ஒரு வாரத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கொண்டு வருவான். அது உங்கள் எல்லாருக்கும் இரண்டு நாளைக்குத் தாராளமாய்க் காணும். ஆனால் ருசியாகத்தான் இராது."



"பவர்கட் இருட்டிலே நீங்க சிரமப்பட வேண்டாம்னு தான் இப்படி!"

"அதனால் என்ன? கிடைக்கப் போகும் பணம் ருசிக்கத்தானே செய்யும்? அதைக் கொண்டு நாக்குக்கு மட்டுமல்ல மற்ற, எல்லாப் புலன்களுக்கும் பிரியமான ருசிகளைப் பெற லாமே!" என்றான் அஜ்மல் கண் சிமிட்டி.

9

"நாளை இரவு சந்திக்கிறேன்!" -ஸோனி

"அதுவரை இங்கே ஒரு பிரச்னையும் எழாது. இங்கே அக்கம்பக்கத்தில் வீடுகள் கிடையாது. தொலைவில் கட்டப்பட்டுள்ள வீக் எண்ட் விடுதிகளும் பெத்த பணக்காரர்களுக்குச் சொந்தம். அவர்கள் சனி, ஞாயிறு குஷாலாகக் கழிக்க வருவார்கள், திரும்புவார்கள். இந்தப் பக்கம் வரப் போவதில்லை. இது சினிமா ஸ்டார் பிரதாப் வீடு. இங்கே யாரும் இப்போதெல்லாம் வருவதில்லை, பூட்டிக் கிடக்கிறது என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் வீடுகளிலிருந்து இந்தப் பக்கம் பார்த்தாலும் சவுக்குத் தோப்பைக் கடந்து பார்வை எட்டாது. இங்கே நடப்பது ஏதும் அவர்கள் கண்ணில் படப் போவதில்லை. நீ கவலைப்படாமல் போய் வா."

"நாளை சனிக்கிழமை இரவு பத்து மணி சுமாருக்கு நான் திரும்பி வருவேன். பதினொரு மணி வரை நான் வந்து சேரவில்லையானால் என்ன செய்ய வேண்டும் என்று உனக்குத் தெரியும்."

"கடைசி பஸ் பத்தேகால் மணிக்கு இந்தப் பக்கமாகப் போகிறது என்றுதான் நாம் ஏற்கனவே பார்த்து வைத்திருக்கிறோமே? அதைக் கோட்டை விட்டு விடாதே!"

"பஸ், பணம் இரண்டையுமே கோட்டை விட மாட்டேன்!" – ஸோனி விரைந்து படிகளில் இறங்கிக் காரில் ஏறினான். திடுமென்று நினைத்துக் கொண்டவனாக அஜ்மல், "ஸோனி! ஒரு நிமிஷம்" என்று அழைத்தான். மறுபடியும் படியேறி வந்தவனிடம், "என்னை ஏமாற்ற நினைக்கமாட்டாயே? பணத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம்; மூன்று லட்சத்தையும் நாமே அடித்துக்



கொன்று போய் விடலாம் என்று நினைக்க மாட்டாயே?''

''உன்னைக் கூட ஏமாற்ற நான் நினைக்க லாம், அஜ்மல்'' என்றான் ஜோனி. ''ஆனால் அந்தக் குழந்தைகளை நான் ஏமாற்ற விரும்ப வில்லை. அவர்களுடைய பெற்றோர் அசட்டுத் தனமாக நடந்து கொண்டு பணம் தராம லிருந்து தங்கள் குழந்தைகளுக்குத் தாங்களே எமனாகலாம். ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் பணம் கைக்கு வந்து சேர்ந்த மறு கணத்திலிருந்து அந்தக் குழந்தைகளை மரணம் அணுகாமல் காப்பதுதான் என் நோக்கமாய் இருக்கும். பதினொரு மணிக்கு முன் நான் இங்கு திரும்பி வந்தால்தானே அவர்கள் உயிர் பிரியாமல் என்னால் காப் பாற்ற முடியும்! இல்லையெனில் உன் கரத்தி லிருக்கும் கத்தி அவர்களைக் காவு கொண்டு விடாதா?''...

ஜோனி வேகமாகக் காரைச் செலுத்த அது, திருவான்மியூர், அடையாறு, மயி லாப்பூர், சேத்துப்பட்டு, அமிஞ்சிக்கரை எல்லாம் தாண்டி பெங்களூர் சாலையில் விரைந் தது. பூந்தமல்லி கடந்து ஐந்து மைல் சென்றதும் காரை நிறுத்தினான். சாலையில் போக்கு வரத்து ஏதும் அந்தச் சமயம் இல்லை. டிக்கியைத் திறந்தான். குளோரஃபாரம் நெடி அடித்தது. டிரைவர் பாபுவை வெளியே இழுத்தான். இழுக்கும் போதே என்னவோ மாதிரி இருந்தது. சட்டென்று இழுப்பதை நிறுத்தி ஏதோ சந்தேகம் தோன்ற நாடி பிடித்துப் பார்த்தான். துடிக்கவில்லை. நெஞ் சில் கைவைத்தான். இருதயம் இயங்கவில்லை. காலைத் தொட்டான் சில்லென்று இருந்தது. ''அடப்பாவி!'' என்று வைதான் ஜோனி. உள்ளேயே மறுபடியும் தள்ளி டிக்கியை மூடி னான். ஒரு டஸ்ட்டரை எடுத்து காரின் கதவு கைப்பிடிகள், ஸ்டியரிங் வீல், டிக்கி கைப்பிடி முதலியவற்றை அவசரமாய்த் துடைத் தான். விரல் ரேகை அடையாளங்கள் மறை யும்படி நன்றாக, போதுமான அளவு எல்லா இடங்களையும் துடைத்தோமா என்பது அவனுக்குச் சந்தேகமாகவே இருந்தது. ஆயினும் பிணத்தை வைத்துக் கொண்டு அங்க்கு தாமதிக்கவும் அவனுக்குத் தயக்க மாய், பயமாய் இருந்தது. மரணம் அவர்கள் திட்டத்தில் இல்லை. மயங்கிக் கிடக்கும் டிரைவரை வெளியே இழுத்துச் சாலை ஓர மாகப் போட்டுவிட்டுப் போவதுதான் திட் டம். சுரேஷ் ரமேஷின் பெற்றோர்களைப் பயமுறுத்திப் பணம் பறிப்பது தான் நோக் கம். அக்குழந்தைகளைக் கொல்லவே நேராது என்று அவர்கள் உறுதியாக நம்பினார்கள். உயிர்க் கொலை என்பது எவ்வளவு பெரிய விஷயம் என்பது அப்போது தனது உடம்பு நடுங்குவதிலிருந்து அவனால் உணர முடிந்தது. அந்த இடத்தை விட்டு நகர்ந்தால் போதும் என்று நெஞ்சு பதைபதைத்தது. பரபரப் புடன் டஸ்ட்டரைக் காரினுள்ளே போட்டு விட்டு அவன் சாலையின் எதிர்ப்பக்கம் சென்று வந்த வழியே திரும்பிநடக்க ஆரம்பித் தான். ஒன்றரை மணி நேரம் நடந்து பூந்த மல்லியை அடைந்தான். அங்கு ஒரு பஸ் பிடித் துச் சென்னை மயிலாப்பூரை அடைந்தான். அவன் நடந்து வரும்போதே அவனைக் கடந்து சில கார்கள், லாரிகள் சென்றன. 'அவர் களில் யாராவது சாலை ஓரமாய் 'அம்போ' என்று விடப்பட்ட காரைப் பார்த்து விட்டு நின்றிருப்பார்களா? அல்லது நமக்கென்ன சம்பந்தம் என்று வேகத்தைக் கூடக் குறைக் காமல் பயணத்தைத் தொடர்ந்திருப்பார் களா? நின்று பார்த்திருந்தால் டிக்கியையும் ஆராய்ந்திருப்பார்களா? வண்டியில் யாரை யும் காணோமே என்பதற்காகவே பூந்தமல்லி போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் பண்ணி யிருப்பார்களா?

'இதைப் பற்றியெல்லாம் இனி நாம் கவலைப்பட்டு ஆவது ஒன்றுமில்லை. நமது திட்டத்தைத் தொடர்ந்தால் போதும்' என எண்ணினான் ஜோனி. வஸ்ஸில் ஒரு டெலிபோன் பூத்தில் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டு பிரதாப்பின் வீட்டுக்கு டயல் செய்தான்.

நாலு முறை மணி அடித்த பிறகு ''ஹலோ'' என்று குரல் கேட்டது.

''அனசூயாவா பேசறது?'' என்றான்.

''ஆமாம்.''

''நான் சொல்றதை கவனமா கேட்டுக்க'' என்றான் ஜோனி. ''இரண்டாவது தடவை சொல்ல மாட்டேன். ஒருவேளை போலீஸார் இந்த லைனை டிரேஸ் பண்ண முயலலாம். அதனாலே மளமளன்னு பேசி வைச்சுடப் போறேன். கவனமாக் கேளு. உன் குழந் தைங்க இப்போதைக்குப் பத்திரமா இருக் காங்க. ஆனா அவங்களை ஆபத்துச் சூழ்ந் திருக்கு. ஆபத்து விலகணும்னா நீ மூன்று லட்சம் ரூபாய் தரணும். எல்லாம் பழைய பழகிய நோட்டுக்களாய் இருக்கணும். நாளை மறுநாள் ஞாயிறு. நாளைக்கும் மத்தி யானத்துக்கு மேல் பாங்கு கிடையாது. நாளைக் காலையிலேயே வாங்கி வைச்சுக்க. அவற்றை அளவான ஓர் அட்டைப் பெட்டி யில் அடுக்கு. பெட்டியைச் சுத்தமா கயிற்றி னால் கட்டி நாளை இரவு சரியாக எட்டாவது மணிக்கு மைலாப்பூர் பீச்சில் காந்தி சிலைக்குப் பின்னாலே வை. வைச்சுட்டுத் திரும்பிப் பார்க் காமல் நடந்து காரில் ஏறி ஒரு வினாடி தாம திக்காமல் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்து விடு. பெட்டியை யார் எடுக்கறாங்க பார்க்கலாம்; அவனைஃபாலோ பண்ணலாம்னு நினைக்காதே. நீ புத்திசாலித்தனமாய் நடந்துக்கிட்டால் ஞாயிறு காலை பத்து மணிக்கு உனக்கு நான் மறுபடியும் ஃபோன் பண்ணுவேன். உன் குழந் தைகளை எங்கே பார்க்கலாம்னு சொல்வேன். நீ அங்கே போய் அவர்களைச் சந்திக்க வீட்டுக்கு அழைத்துப் போகலாம். ஆனால் என்னை ஏமாற்றினாயோ.....?


''எங்ககிட்ட ஒரு துப்பாக்கிகூடக் கிடையாது. ஒரே ஒரு கத்திதான். ஒவ்வொரு குழந்தையாகத்தான் குத்திக் கொல்ல முடியும். அப்போ அந்தக் கொலையை இன்னொரு குழந்தை பார்த்துக்கிட்டு இருக்கும். யோசித்துப்பாரு. போலீஸிடம் நான் ஃபோன் பண்ணியது குறித்து மூச்சு விடாதே. போலீஸை நினைச்சுக் கூடப் பார்க்காதே! நோட்டுக் கட்டின் மேலே கரன்ஸி நோட்டை வைச்சுக் கீழே வெற்றுக் காகிதங்களை அளவாய்க் கத்தரித்து வைக்கிற மாய்மாலமெல்லாம் பண்ணாதே. நாங்க இரண்டு பேர் இருக்கோம். என் சகா குழந்தைகளைக் கண்காணிக்கிறான். நான் பணத்துடன் அவனிடம் நாளை இரவு பத்து மணிக்குள் போய்ச் சேரலைன்னு அவன் குழந்தைகளைத் தீர்த்துக் கட்டிவிட்டுக் கம்பி நீட்டுவான். அதனாலே அசட்டுத்தனமாய் நடந்துக்காதே. புரியுதா? சட்டுன்னு பதில் சொல்லு. புரியுதா?''

கேட்கக் கேட்க, உள்ளமும் உடலும் துவண்டு கொண்டிருந்தன அனசூயாவுக்கு. எப்படித்தான் சுருண்டு விழாதிருந்தாளோ, எவ்வாறுதான் பதில் கூற அவளுக்கு நா மேலெழும்பியதோ! குழந்தைகளைக் காக்க வேண்டும் என்ற ஆர்வம்தான் அவளை மயங்கி விழாமல் காத்து, பதில் பேசவும் வைத்தது.

''நீங்க சொன்னபடியே செய்யறேனுங்க. இம்மியும் பிசகாமல் செய்யறேன். என் குழந்தைகளை ஒண்ணும் பண்ணிடாதீங்க. உங்க காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். என் குழந்தைங்களுக்கு உயிர் பிச்சை கொடுங்க'' என்றாள். அவள் சொன்னது முழுவதும் அவன் காதில் விழுந்ததோ இல்லையோ, தெரியாது. ஃபோன் வைக்கப்பட்டு விட்டது. இனி மறுநாள் இரவு எட்டு மணி வரை காத்திருப்பது தவிர ஜோனி வேறு எதுவும் செய்வதற்கில்லை. மயிலாப்பூரிலேயே ஒரு மூன்றும் தர ஹோட்டலில் அறை எடுத்துக் கொண்டு தங்கினான்.

'நாளை மறு தினத்திலிருந்து இப்படிப்பட்ட அறைகளில் தங்க வேண்டாம். பம்பாய், டில்லி அல்லது கல்கத்தாவுக்குப் பறந்து போய் ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் தங்கலாம். ஏன் நாளைக்கே கூட இரவு எட்டு மணிக்குப் பணப்பெட்டி கைக்கு வந்து சேர்ந்ததும் பஸ் வாக்குக் காத்திராமல் காந்தி சிலையிலிருந்து ஒரு டாக்ஸி பிடித்துக்கூட திருவான்மியூர் வரை போகலாம். பணத்துக்கு என்ன பஞ்சம்? திருவான்மியூரிலிருந்து புறப்படும் கடைசி பஸ்ஸைத் தவற விடாமலிருக்க டாக்ஸியில் போறது நல்லதுதான். ஆனால் கடைசி வரையில் டாக்ஸியில் போகக் கூடாது. பணத்தை விட்டெறிந்தால் டாக்ஸிக்காரன் வருவான். ஆனால் அதில் ஆபத்து இருக்கிறது. டாக்ஸிக்காரன் ஏதாவது சந்தேகிக்கலாம். போலீஸுக்குப் போகலாம்...'

ஜோனி படுத்துத் தூங்க முயன்றான்.. முடியவில்லை. டிரைவர் இறந்து போனது அவனுக்குப் பிடிக்கவில்லை. 'அஜ்மல் இதை அறியும் போது கோபிப்பான். இருந்தாலும் என்ன செய்ய முடியும்? இப்படி ஏதாவது



''பவர்கட் இருட்டிலே நம்ம மானேஜர் நெற்றி நாமம் நம்ம ஸ்டெனோ நெற்றிக்கு மாறியிருக்கு பார்த்தீங்களா?''

எதிர்பாராமல் நடந்துதான் வைக்கிறது. எவ்வாறாயினும் அந்தச் சம்பவம் காரணமாகத் திட்டத்தில் ஏதும் மாற்றம் தேவையில்லை, திட்டம் நிறைவேறாமல் போகப் போவதுமில்லை. கவலைப்பட ஏதுமில்லை... கவலைப்பட ஒன்றுமே இல்லை..'' திரும்பத் திரும்ப இதைச் சொல்லிக் கொண்டு தன்னம்பிக்கையை உருவாக்கிக் கொண்டான் ஜோனி.

11

''யாரு ஃபோன்?'' என்று கேட்டான் பிரதாப். ஜோனி பேசும் போது அவள் அடக்கி வைத்திருந்த அழுகை வெடித்துக் கொண்டு புறப்பட்டது. ''அவன் தாங்க — என் பிள்ளைங்களைப் பிடிச்சுக்கிட்டுப் போயிருக்கிற இருவரில் ஒருவன். மூணு லட்சம் கேட்கிறான். ஐயோ கடவுளே! என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறே, நான் என்ன பாபம் பண்ணினேன்?''

''என்ன பாபம் பண்ணினேன்னு நான் சொல்றேன்'' என்றான் குரூரமாக. ''அந்தப் பாபத்தின் சின்னங்களைத்தானே நீ இழந்து தவிக்கிறே!''

அவளுக்கு வயிற்றில் ஏதோ பகீரென்று தாக்குவது போலிருந்தது. ''ஆண்டவனே! அது பாபம்னு அதுக்காக என் உயிரை வாங்கிக்க. குழந்தைகளை ஒண்ணும் செய்யாதே'' என்று புலம்பினாள். ''நான் கணவன் சொன்னபடிதானே அப்போ கேட்டு நடந்துக்கிட்டேன்!''

''கணவன் சொன்னபடி எப்பவுமே கேட்கலையே, உனக்குப் பிடித்த போதுதானே கேட்டே? அந்தக் குழந்தைங்க வேண்டாம், கலைச்சுடலாம்னு போது மறுத்துட்டியே!''

''என்னால் அதுக்குச் சம்மதிக்க முடியலைங்க. அதை ஒரு தாய் என்கிற நிலையில் நீங்க இருந்து பார்த்தாத்தான் உணர முடியும். உங்களுக்கோ தகப்பன் என்ற உணர்வே ஏற்பட வாய்ப்பில்லாத போது தாய்மை உணர்வை உங்களால் எப்படி உணர முடியும்?



கருச்சிதைவு போன்ற கொடுமைக்கு நான் உட்படாததற்காக ஆண்டவன் என்னைத் தண்டிப்பதுதான் எப்படி நியாயமாகும்? எனக்கு வரமல்லவா தர வேண்டும்!''

''அது சரி, ஆனா அதுக்கு முன் செயற்கைக் கருத்தரிப்புக்கு டாக்டரிடம் போன போது கணவன் சொல்லுக்காக மட்டும்தான் செய்துக்கிட்டியா? உனக்கே குழந்தை வேணும்கிற ஆசை இருக்கவில்லையா?''

''இருந்தது உண்மைதான். ஆனால் அது தப்புன்னு அதுக்கான தண்டனையை நான் நிறைய ஏற்கெனவே அனுபவிச்சாச்சு. உங்களோடு சேர்ந்து வாழறதை விட ரெண்டு நாளைக்கு ஒருதரம் எவர்கு நானே ஊசி போட்டுக் கொள்ளறதை விட வேறு பெரிய தண்டனை என்ன இருக்க முடியும்? இதற்கு மேலும் தண்டனை தரணும்னு ஆண்டவன் என் உயிரைப் பறிச்சுக்கட்டும். என் குழந்தைகளைக் கொல்ல வேண்டாம்.'' அவள் பதில்களில் வேதனையுடன் இப்போது சீற்றமும் இருந்தது. கணவன் மீது, குழந்தைகளைக் கடத்திக் கொண்டு போனவர்கள் மீது, அநியாயமாய்த் தன்னைச் சோதிக்கும் ஆண்டவன் மீது — எல்லார் மீதும் அவளுக்குக் கோபம்.

அவளை வாதத்தில் வெற்றி கொள்ள முடியாமல் ஆனால் பேசும் நிரூபிக்க விரும்பி, ''அந்த ராஸ்கல் ஃபோன் பண்ணினது பற்றிப் போலீஸுக்குத் தகவல் கொடுப்போம்'' என்றான்.

''ஐயோ கூடாதுங்க!'' என்று பதறினாள். அனசூயா. ''நான்தான் சொன்னேனே, அவர்கள் குழந்தைகளைக் கொன்று விடுவார்கள்! பேசாமல் பணத்தைக் கொடுத்து விடவேண்டியதுதான்!''

''அதெப்படி முடியும்?'' என்றான் பிரதாப். ''நான் ஒரு ஹீரோ இமேஜை உருவாக்கியிருக்கேன். இப்போ ஒரு வில்லன் ஃபோனில் பயமுறுத்தியதற்காகப் பணிந்து விட்டால் என் ஹீரோ இமேஜ் என்ன ஆவது? போலீஸ் உதவியுடன் நான் அந்த வில்லன்களை வென்று நான் ஆக வேண்டும். பணம் தர முடியாது!''

''நீங்களும் உங்கள் இமேஜும்'' என்று வெறுப்புடன் சொன்னாள். ''உங்க இமேஜைக் காத்துக் கொள்ளக் குழந்தைகளைக் காவு கொடுக்கப் போறீங்களா?''

''அவங்கதான் என் குழந்தைகளே இல்லையே!''

''ஓ! அதனால்தான் பணம் தர மாட்டீங்க, இல்லையா? உங்கள் சொந்தக் குழந்தையாக இருந்தால் பணம் தருவீர்கள். அப்போது உங்க இமேஜ் கெட்டுக் குட்டிச் சுவரானாலும் பாதகமில்லை! உங்களைப் போய் ஒரு ஹீரோ என்று மக்கள் நினைக்கிறார்களே, எவ்வளவு முட்டாள்தனம்! வில்லன்களிலும் கேடு கெட்ட வில்லன் நீங்கள். மனிதனே அல்ல மிருகம். கொடூரமான மிருகம்; என் பிள்ளைங்களைக் கடத்திக் கொண்டு போன அந்தக் கயவர்களைவிட நீங்கள்தான் மோசமானவர்!''

அவள்குரல் உயரவே, ''எதுக்கு இப்படிக் கத்தறே'' என்று கேட்டான்.

''நான் அப்படித்தான் கத்துவேன்'' என்று அவள் மேலும் இரைந்தாள்.

''சரி கத்து. வீட்டிலே வேலைக்காரர்கள் கேட்கட்டும். அவர்கள் மூலம் வெளியே பரவட்டும். போலீஸும் கேள்விப்படட்டும்''

இப்படி அவன் கூறிக் கொண்டிருக்கும் போதே, ''ஸார்! டி.எஸ்.பி. ஞானமுத்து வாம், பார்க்க வந்திருக்கிறார்'' என்றான் டிரைவர், மிரண்ட நோக்குடன் எட்டிப் பார்த்து.

'ஞானமுத்து!' இருவர் புருவங்களும் நெரிந்தன. ''யார் நம்முடைய கல்லூரி நண்பன் ஞானமுத்துவா?'' என்று இருவரும் ஏக காலத்தில் ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டனர்.

''அவனேதான்; ரொம்ப வருஷங்களாச்சு, பார்த்து'' என்று கூறிக் கொண்டே வந்தார் ஞானமுத்து.

அனசூயாவின் உள்ளத்தைப் பயம் கவ்வியது. 'இவர் எதற்கு இங்கு வந்திருக்கிறார்?' 'போலீசை நினைச்சுக்கூடப் பார்க்காதே' — போனில் கேட்ட எச்சரிக்கை காதில் ஒலித்தது.

ஆனால் என்ன துரதிருஷ்டம்! பிள்ளைகளைக் கடத்திச் சென்றவன், அனசூயாவுக்கு ஃபோன் பண்ணுவதற்கு முன்பே, இவன் 'குழந்தைகளைக் காணோம்' என்று போலீஸில் தகவல் கொடுத்து, கார், டிரைவர், குழந்தைகளின் அடையாளங்களையும் தந்திருக்கிறானே! அதையொட்டித்தானே ஞானமுத்து இப்போது இங்கே வந்திருக்கிறார்!

''முதலில் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்'' என்றார் ஞானமுத்து. அடுத்து, ''போலீஸில் எங்களால் முடிந்ததையெல்லாம் செய்து வருகிறோம் என்ற செய்தி உங்களுக்குத் தெம்பு தரும் என்று நம்புகிறேன்'' என்றார்.

''ஐயோ! நீங்க ஒண்ணும் செய்யாமலிருந்தாலே போதுமே?'' என்று மனக்குள் புலம்பினாள் அனசூயா.

''சில தகவல்களை உங்களுக்குத் தரவேண்டியிருக்கிறது'' என்று ஞானமுத்து தொடர்ந்தார். ''நீங்கள் மனசைத் தைரியமா வைச்சுக்கணும். பூந்தமல்லி தாண்டி ஐந்தாவது மைலில் ஒரு கார் சாலை ஓரமாகக் கேட்பாரற்று விடப்பட்டிருக்கிறது என்று ஒரு லாரிக்காரன் தகவல் கொடுத்ததன் பேரில் பூந்தமல்லி இன்ஸ்பெக்டர் போய்ப் பார்த்து விட்டுத் திரும்பி எனக்கு ஃபோன் செய்தார். கார் உங்களுடையதுதான். டிரைவர் இறந்து விட்டான். மயக்க மருந்து அளவுக்கு அதிகமாகி இறந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. டிக்கியில் அவன் உடல் மடிந்து கிடந்தது.

''உங்கள் குழந்தைகளைக் கடத்திப் போனவர்கள் அந்த இடத்தில் கார் மாறியிருக்க



Dr. S. R. சிவராஜ்

வாலிபர்கள் ! **மணமானவர்கள் !!**

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி,
தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ,
இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்'
ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'

'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில் நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

- **குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்**
- **கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்**

சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?

விரைவில் பலன் காண விசேஷ 1 மாத சிகிச்சை ★ குறைந்த ஸ்பெஷல் 1 மாத சிகிச்சை

A-வகுப்பு	B-வகுப்பு	C-வகுப்பு	மீடியம்	ஸ்பெஷல்	1-ம் நெம்பர்	நேரில் பெறலாம்
ரூ. 350-00	250-00	175-00	115-00	90-00	75-00	V.P.P.யிலும் பெறலாம்

மாதாந்திர சுற்றுப் பயண விவரம்: ஒவ்வொரு ஆங்கில தேதிகளிலும்

பிரதம வைத்தியர் தங்குமிடங்கள் :

சென்னை-600002, 1 முதல் 5ந் தேதி வரை: ராமச்சந்திரா லாட்ஜ், போன்: 846526. 6 அத்திப்பட்டன் தெரு; அண்ணாசாலை சமீபம். P ORR. & Sons — பெட்ரோல் பங்க் மேற்புறம் ரோடு. காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை.

சேலம் தலைமை அலுவலகம்: 6, 7, 8, 11, 16, 17 18, 19, 20, 27, 28, 29, 30 தேதிகள்.

திருச்சி: 9, 10 தேதி: அசோக் பவன், ஜங்ஷன் ரோடு. போன்: 25783, காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

கோவை: 12, 13ந் தேதி. ஸ்ரீ லக்ஷ்மி லாட்ஜ், ராஜ வீதி, போன்: 33330.

பொள்ளாச்சி 14ந் தேதி: மாடர்ன் லாட்ஜ், தாலுகா ஆபீஸ் எதிர் சந்து, காலை 8 மணி முதல் 12 மணி வரை.

திருப்பூர் 14ந் தேதி: ராமகிருஷ்ணா லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. மாலை 3 மணி முதல் 5 மணிவரை.

ஈரோடு 15ந் தேதி: ஆனந்த் லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

மதுரை 21, 22 தேதி: மணீஸ் கேப். (டவுன் ஹால் ரோடு) போன்: 22019. காலை மணி முதல் இரவு 7 மணி வரை.

தூத்துக்குடி 23ந் தேதி: ராதா லாட்ஜ், ஜி. சி. ரோடு, காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை.

திருநெல்வேலி: 23, 24ந் தேதி: நெல்லை லாட்ஜ். காலை 7 மணி முதல் இரவு 8 வரை.

மதுரை 26ந் தேதி: மணீஸ் கேப், டவுன் ஹால் ரோடு, போன்: 22019. காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை.

திண்டுக்கல் 26ந் தேதி: ஆரியபவன் லாட்ஜ் பழனி ரோடு. மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை.

உதவி வைத்தியர் தங்குமிடங்கள் :

விழுப்புரம் 3ந் தேதி: வாசவி விஹார் ஹோட்டல், எம். ஜி. ரோடு. காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

கடலூர் என்.டி. 3ந் தேதி: ஹோட்டல் பிருந்தாவன். மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை.

சிதம்பரம் 4ந் தேதி: ஜெயராம் லாட்ஜ், (மேல வீதி) காலை 7 மணி முதல் பகல் 3 மணி வரை.

கும்பகோணம் 5ந் தேதி: தாஜ்மஹால் லாட்ஜ் பொற்றாமரைக் குளம் (போன்: 1423) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

தஞ்சாவூர் 6ந் தேதி: அசோகா லாட்ஜ், (ராஜா கலை அரங்கம்) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

கம்பம் 21ந் தேதி: யூனிவர்சல் லாட்ஜ், காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை.

தேனி 21ந் தேதி: பாண்டியன் லாட்ஜ், மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

விருதுநகர் 23ந் தேதி: ஹோட்டல் ஆந்ச நேயா. காலை 7 மணி முதல் 12 மணி வரை.

இராஜபாளையம் 23ந் தேதி: அசோகா லாட்ஜ், மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

நாகர்கோவில் 24ந் தேதி: உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண பவன், போஸ்டாபீஸ் ஜங்ஷன் ரோடு, காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

தென்காசி 25ந் தேதி: பார்வதி லாட்ஜ், காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

கோவில்பட்டி: 25ந் தேதி சரஸ்வதி லாட்ஜ், மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

தலைமை அலுவலகம் :

சிவராஜ் சித்த வைத்தியசாலை

C-56, தமிழ்ச் சங்கம் ரோட் பின்புறம்
(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)
காந்தி ஸ்டேடியம் – சேலம்-636007

சுற்றுலா அழைத்து செல்வதாக
ரூ.7 ஆயிரம் மோசடி!

போலி பஸ் அதிபர் கைது!!

பஸ் அதிபர்

ரூ. 700 முன்பணம்

மேலே உள்ள செய்தியைப் படித்தீர்களா?
நீங்களும் இதுபோன்ற மோசடிக்காரர்களிடம் சிக்கித் தவிக்க வேண்டாம்.



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் சிக்கன சுற்றுலாக்களில் குடும்பத்துடன் கலந்து கொண்டு இனிய அனுபவம் பெறுங்கள்.

குறைந்த செலவில் நிறைந்த வசதியுடன் கூடிய சுற்றுலா மாளிகையில் தங்கி தென்னகத்தின் தலை சிறந்த பல சுற்றுலாத் தலங்களைக் காண ஓர் அரிய வாய்ப்பு.

தேர்ந்த வழிகாட்டியுடன் புத்தம் புதிய சொகுசு பேருந்துகளில் பயணம் செய்து பல்வேறு இடங்களின் சிறப்புகளையும் நன்கு அறியுங்கள்.

- **தமிழ்நாடு சுற்றுலா:**

ஒவ்வொரு சனிக்கிழமையும் சென்னையிலிருந்து புறப்படும். எழு நாட்களில் தமிழகத்தை வலம் வாருங்கள்.
சென்னை—பாண்டிச்சேரி—சிதம்பரம்—கும்பகோணம் தஞ்சாவூர்—மண்டபம்—இராமேசுவரம்—திருச்செந்தூர் கன்னியாகுமரி—குற்றாலம்—மதுரை—ஸ்ரீரங்கம்—திருச்சி சென்னை.

கட்டணம்:
பொதுத் தங்கும் இட வசதியுடன்	ரூ. 425
இரட்டைப் படுக்கை கொண்ட அறை வசதியுடன்	ரூ. 525
தனியறை வசதியுடன்	ரூ. 600

- **தென்னிந்தியச் சுற்றுலா:**

ஒவ்வொரு சனிக்கிழமையும் சென்னையிலிருந்து புறப்படும். ஏழே நாட்களில் தென்னாட்டின் சிறப்புகளைக் கண்டு அனுபவியுங்கள்.
சென்னை—திருவண்ணாமலை—ஒகேனக்கல் உதகமண்டலம்—முதுமலை—மைசூர்—பிருந்தாவனம் சீரங்கப்பட்டினம்—பெங்களூர்—திருப்பதி—திருமலை காஞ்சீபுரம்—சென்னை.

கட்டணம்:
பொதுத் தங்கும் இட வசதியுடன்	ரூ. 475
இரட்டைப் படுக்கை கொண்ட அறை வசதியுடன்	ரூ. 575
தனியறை வசதியுடன்	ரூ. 650

- **தினசரி சுற்றுலாக்கள்:**

(1) சென்னை நகர் வலம் — சென்னை நகரின் பல்வேறு முக்கிய இடங்கள் அனைத்தும்
கட்டணம்: ரூ. 15

(2) சென்னை—காஞ்சீபுரம் திருக்கழுக்குன்றம் (பட்சி தீர்த்தம்)—மாமல்லபுரம் — சென்னை
கட்டணம்: ரூ. 35

பயணச் சீட்டுகள் கிடைக்கும் இடங்கள்:
- எங்கள் தலைமை அலுவலகம்
- எக்ஸ்பிரஸ் பேருந்து நிலையம், சென்னை
- புகழ்பெற்ற ஹோட்டல்கள் மற்றும் டிராவல் ஏஜண்டுகள்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
143, அண்ணா சாலை,
சென்னை 600 002. போன்: 89581/2/3

றும். அவர்களுடைய கூட்டாளி ஒருவன் வேறு காரில் அந்த இடத்துக்குக் குறிப்பிட்ட நேரத்துக்கு வந்து காத்திருந்திருப்பான். அதில் எல்லாருமாகச் சேர்ந்து பெங்களூர் போயிருக்கலாம் என்று நம்புகிறேன். பெங்களூருக்கு ஃபோன் போட்டு அங்கு வந்து சேரும் கார்களையெல்லாம் எல்லையிலேயே மடக்கி ஆராயச் சொல்லி இருக்கிறேன். சந்தேகம் கிளம்புகிற மாதிரி யாராவது நடந்து கொண்டால் உடனே துரத்திப் போய்ப் பிடிக்கணும்னு கூறியிருக்கிறேன். ஒருவேளை பெங்களூர் போலீஸுக்கு டிமிக்கி கொடுத்து விட்டு அவர்கள் பெங்களூர் நகரில் நுழைந்து விட்டால் அங்கிருந்து அவர்கள் எஸ்.டி.டி.யில் ஃபோன் பண்ணலாம். அல்லது இடையில் வேறு ஏதாவது ஊரிலிருந்தும் அவர்கள் ஃபோன் செய்யலாம். நீங்கள் ஃபோனில் அவர்களுடன் பேச்சுக் கொடுத்துத் தாமதப்படுத்தப் பாருங்கள். நாங்கள் அந்த ஃபோன் காலை டிரேஸ் செய்ய முயலுகிறோம். அது முடியாது போனாலும் பாதகமில்லை. அவர்கள் பணம் கேட்பார்கள். எங்கே, எப்போது பணத்துடன் சந்திப்பது என்று கேட்டுச் சொல்லுங்கள். பணம் கொடுக்கும் சமயம் ஃபாலோ பண்ணிப் பிடித்து விடுகிறோம்!''

''நீங்கள் ஒன்றுமே செய்ய வேண்டாம்'' என்று கையெடுத்துக் கும்பிட்டாள் அனசூயா. ''நான் போலீஸில் கொடுத்த புகாரை வாபஸ் பெற்றுக் கொண்டு விடுகிறேன்.. என் குழந்தைகள் காணாமல் போகவே இல்லை! போய் வாருங்கள்!''

திகைத்தார் ஞானமுத்து. ''காணாமல் போகவில்லையா? என்ன உளறுகிறாய்? கார் சாலையோரம் கேட்பாரற்று விடப்படுகிறது. டிரைவர் கொல்லப்பட்டிருக்கிறான்...''

''அதையெல்லாம் மறந்து விடுங்கள். பாபு ஓர் அனாதை. உற்றார் உறவினர் கிடையாது. அவனுக்காக நான்தான் அழ வேண்டும். அழுது விட்டுப் போகிறேன். குழந்தைகளைக் காணோம் என்று நான் போலீஸில் புகார் செய்திருக்கிறேன் என்பது கடத்தல்காரர்களுக்குத் தெரிய வந்தால் உடனே என் குழந்தைகளைக் கொன்று விடுவார்கள். எனக்குப் பயமாயிருக்கிறது. நீங்கள் எல்லாவற்றையும் மறந்து விடுங்கள். ஒரு நடவடிக்கையும் எடுக்க வேண்டாம்.''

''ஓ! அப்படியானால் ஏற்கனவே ஃபோன் வந்து விட்டது என்று சொல்லுங்கள்!''

''இல்லையே? இல்லை! இல்லை!'' என்றாள் அனசூயா பதறித் துடித்து.

பிரதாப் சிரித்தான், பெரிதாக. அந்தச் சிரிப்பே உண்மையை உணர்த்தியது. 'இப்படிப்பட்ட சூழலில் இவனால் எப்படி சிரிக்க முடிகிறது?' என்று வியந்தார் ஞானமுத்து. அவர்களுடைய குடும்ப வாழ்க்கை பற்றி ஏதோ சில உண்மைகளையும் உணர்த்துவது போலிருந்தது அந்தச் சிரிப்பு. அந்த இரண்டாவது அம்சத்தை ஒதுக்கிவிட்டுத் தமது கடமையான முதல் அம்சத்தை மட்டும் தொடர்ந்தார்:

''இதோ பார் அனசூயா! நீ சட்டவிரோதமான செயல்களுக்கு உடந்தையாக இருக்கக் கூடாது.''



''இவர் அதிகாரம் என்னிடம் செல்லலேன்னு இவருடைய அம்மா வந்திருக்காங்க போலிருக்கு! பவர் கட்டைச் சமாளிக்க ஜெனரேட்டர் மாதிரி!''

அவள் சரேலென நிமிர்ந்தாள். கண்களில் தீப்பொறி பறந்தது. ''நீங்கள், கள்ளம் கபடமறியா இரு குழந்தைகள் கொல்லப்படக் காரணமாய் இருக்கக் கூடாது'' என்றாள்.

''நான் அப்படி காரணமாக மாட்டேன். அவர்கள் கொல்லத் துணிய மாட்டார்கள். சும்மா உங்களை மிரட்டுகிறார்கள், அவ்வளவு தான். டிரைவரின் மரணம்கூட அவர்கள் எதிர்பார்க்காமல் நடந்துவிட்ட அசம்பாவிதம் தான் என்று நம்புகிறேன்!''

''அதை இன்னொரு தரம் சொல்லுங்கள்'' என்றான் பிரதாப். ''யாரோ ஒரு ராஸ்கல் ஃபோன் பண்ணி மிரட்டி மூணு லட்சம் பணம் கேட்டால் நாம் பணிந்து போவதா? தைரியமாய் இருக்க வேண்டாம்?''

''நான் கோழையாகவே இருந்து விட்டுப் போறேங்க'' என்று அவள் விசித்தாள். ''நீங்க போயிட்டு வாங்க'' என்று ஞானமுத்துவை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

''என்னிடம் மூணு லட்சம் கேஷாக இல்லை. வீட்டிலும் இல்லை, பாங்கிலும் இல்லை. இருந்தாலும் தரப் போவதில்லை'' என்றான் பிரதாப்.

''அதுதான் சரியான முடிவு'' என்றார் ஞானமுத்து. ''பணத்தை எங்கு, எப்போது கொண்டு வந்து தரச் சொன்னான்?''

''அதை இவள் என்னிடம் இன்னும் கூறவில்லை'' என்றான் பிரதாப்.

''சொல்லவும் போவதில்லை'' என்றாள் அனசூயா. ''என்னைச் சித்திரவதை செய்தாலும் சரி, வாய் திறக்க மாட்டேன்.''

''இப்போது நீ பணம் கொடுத்து உன் குழந்தைகளை மீட்டுக் கொள்ளலாம். ஆனால் கதை இத்துடன் முடியாது. அவர்கள் கொஞ்ச நாட்கள் கழித்து இன்னொரு ஊரில் இதேபோல் வேறு ஒரு பணக்காரன் வீட்டுக் குழந்தையைக் கடத்திப் போய் மிரட்டுவார்கள். நீ இப்போது படும் அவதியை மறுபடியும் வேறு ஒருத்தி அனுபவிப்பாள்!''



''என்னை இம்சிக்காதீங்க. எனக்கு என் குழந்தைகள்தான் முக்கியம். அப்புறம்தான் மற்றவையெல்லாம்.''

அவள் தீர்மானமாக இருக்கிறாள். அசைந்து கொடுக்க மாட்டாள் என்று அவள் குரல் உணர்த்தியது. ஞானமுத்து அதைப் புரிந்து கொண்டு ஒரு பெருமூச்சுடன் எழுந்தார். ''உன் மனசு மாறினால் எனக்கு ஃபோன் பண்ணு'' என்று கூறி விஸிட்டிங் கார்டை நீட்டினார். வீட்டு விலாசம் ஃபோன் நம்பர், ஆபீஸ் விலாசம் ஃபோன் நம்பர் எல்லாம் இருந்தன அதில்.

ஞானமுத்து போன பிறகு அவள் மறுபடியும் கணவனிடம் மன்றாடினாள். ''தயவு செய்து எனக்குப் பணம் கொடுங்க. உங்களைக் கெஞ்சுகிறேன். குழந்தைகளைக் காப்பாத்துங்க. உங்களிடம் கோடிக்கணக்கில் சொத்து இருக்கு. மூணு லட்சம் உங்களுக்குப் பெரிய விஷயமில்லே.''

அவள் தன் காலடியில் விழுந்து உருகி உருகிப் பிச்சை எடுப்பதைப் பார்க்க அவனுக்குப் பரமானந்தமாய் இருந்தது. குடித்து விட்டு அரை மயக்கத்தில் இருந்தவனுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. கண்ணாடிக் கோப்பையை மேஜை மேல் வைத்து விட்டுச் சோபாவில் தன் பக்கத்தில் தட்டிக் காட்டி, ''இங்கே வா, இப்படி உட்கார்'' என்றான். அவள் அவன் மனம் இரங்கி விட்டதாக நிஜமாகவே நினைத்து அருகில் வந்து அமர்ந்தாள். அவன் கரங்கள் அவளை அணைத்ததை ஆறுதலுக்காக என்று எண்ணினாள். ''நீ ரொம்ப அழகாய் இருக்கே. அவதிப்படும் போது அழகு இன்னும் சோபிக்கிறது'' என்று அவன் கூறியபோது அவள் துணுக்குற்றாள். அரவணைப்பிலே ஆதரவு இல்லே, ஆசை இருக்கிறது; அவன் விரல்கள் தன்னை நிர்வாணமாக்கப் பார்க்கின்றன என உணர்ந்த போது அதிர்ச்சியுற்றாள்.

சரேலென்று தன்னை விடுவித்துக் கொண்டு அப்பால் சென்றாள்.

''என்ன இது? உங்களுக்கு வெட்கமாய் இல்லையா?''

''ஓ ஸாரி!'' என்றான். ''வரவேற்பு அறையில் வேண்டாம்; படுக்கை அறைக்கே போவோம்.''

''சீச்சீ!'' என்று அருவருப்புடன் அவனைப் பார்த்தாள். ''குழந்தைகளைப் பிரிந்து நான் தவிக்கிற இந்த நிலையில் உங்களுக்கு எப்படி இதைப் பற்றி நினைக்கத் தோன்றுகிறது?''

அவனுக்குக் கோபம் வந்தது. ''எனக்கு நீ தேவை, இப்போது தேவை. என்ன சொல்கிறாய்? முடியுமா முடியாதா?'' என்று சீறினான்.

கசப்பையெல்லாம் ஒன்று திரட்டி, ''நாசமாய்ப் போ!'' என்று சபித்தாள்.

''போகிறேன்; நாசமாய்ப் போகிறேன். நரகத்துக்கு என்னை அனுப்பி விட்டு, நிதானமாக அவசரப்படாமல் நீ சொர்க்கத்துக்குப் போய்ச் சேர்ந்த பிறகு எனக்குக் கடிதாசு போடு!''

அவள் தலையைச் சுவரில் மோதிக்கொண்டு புலம்பினாள். அதைப் பார்க்க அவன் கண்கள் மேலும் பளபளத்தன. உடம்பெல்லாம் கிளுகிளுப்பு பரவியது.

திடீரென்று அவள் ஏதோ நினைத்துக் கொண்டவளாக மெல்லத் திரும்பினாள். குழந்தைகளைக் கருதி அவன் விகாரங்களுக்குத் தீனி போடவும் தயாரானாள். நிதானமாய் நடந்து வந்து அவன் காலடியில் மண்டியிட்டாள். ''என்னை மன்னிச்சுடுங்க. நான் அப்படி பேசியிருக்கக் கூடாது. கணவனின் உரிமைகளை நான் மறுத்திருக்கக் கூடாது. உங்க இஷ்டப்படி நடந்துக்கறேன். பணம் மட்டும் கொடுத்துடுங்க.''

''பார்க்கலாம்; நாளைக்கு ஆகட்டும்.''

''இப்பவே கொடுங்க.''

''இப்ப எது என்னிடம் பணம்? நடு ராத்திரி, பாங்கெல்லாம் மூடியிருக்கு...''

''உங்களிடம் இப்பவே இருக்கு. படுக்கை அறையில் சுவரில் வெளியே தெரியாதவாறு ரகசியமாய் அமைந்துள்ள இரும்பு அலமாரியில் மூணு லட்சமென்ன, ஐந்து லட்சம் கூட இருக்கு. எனக்குத் தெரியும். அந்தப் பிளாக் மணியைத் தர நீங்க பிரியப்படலேன்னு அதிலே எனக்கென்று செய்து வைத்திருக்கிற நகைகளையாவது எடுத்துக்க அனுமதி கொடுங்க. பொழுது விடிந்த பிறகு அதை விற்றுக் காசாக்கினால் கிட்டத்தட்ட மூணு லட்சம் தேறி விடும்.''

''ஆகட்டும் பார்க்கலாம்.''

''அப்படி சொல்லக்கூடாது. இப்பவே என்னிடம் எடுத்துத் தந்துடணும்.''

''அடச் சீ!'' என்று அவளை உதைத்துத் தள்ளினான். ''கணவன் கட்டிலுக்கு அழைக்கும் போது பேரம் பேசறியே, குலப்பெண் தானா, நீ?''

அவள் அதிர்ந்து விட்டாள். அவமானம் தாங்காமல் எழுந்து தன் தனி அறைக்கு ஓடினாள்.

அவன் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்து மயங்கி விழும் வரை குடித்துத் தீர்த்தான். அவள் ஆயாசத்தில் மயங்கி விழும் வரை அழுது தீர்த்தாள்.

12

அன்று காலை நாளிதழ்களைப் பார்த்ததும் ஷைலஜாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது' தன் ஹீரோ பிரதாப்புக்கா இப்படி ஒரு துயரம்! பிரதாப்பை ஸ்டூடியோவில் தான் சந்தித்தது அவள் நினைவுக்கு வந்தது. எத்தனை அழகாகப் பேசினார்! பேச்சு மட்டுமா அழகு!

கரம் குலுக்கிய போது எப்படி ஒரு திரில் பரவியது நம் உடலில்?

பிரதாப்பை உடனே போய்ப் பார்க்க வேண்டும். ஆறுதல் சொல்ல வேண்டும் என்று துடித்தாள். குளித்து அழகாக ஆனால் அடக்கமாக உடை மாற்றிக் கொண்டு புறப்பட்டாள்.

''காலேஜ் உண்டா இன்னைக்கு?'' என்று கேட்டாள் தாய் அவள் தயாரானதைப் பார்த்து.

''உண்டு. சீக்கிரம் சாதம் போடு, டிபன் கட்டு!''

பல சனிக்கிழமைகளில் அவளுக்குக் கல்லூரி இருந்திருக்கிறது. எனவே அவள் புறப்பட்டது தாய்க்கு வியப்புத் தரவில்லை. ''இன்னைக்குக் காரை நான் எடுத்துண்டு போறேனம்மா'' என்றாள் ஷைலஜா.

''காரை எடுத்துக்கிட்டுப் போ. ஆனா ஊர் சுத்தாதே'' என்று அப்பாவின் குரல் ஒலித்தது.

''டோண்ட் வொர்ரி டாடி! உங்களுக்கு ஆபீஸ் விஷயமாகவே கவலைப்பட எவ்வளவோ இருக்கு. ஷைலஜாவைப் பற்றி வேறு உங்களுக்குக் கவலை எதற்கு?'' என்று ஆறுதலாய்ச் சொன்னாள் மகள்.

அடுத்த பதினைந்தாவது நிமிஷம் அவள் காரை லாகவமாக ஓட்டிக் கொண்டு போய்ப் பிரதாப்பின் வீட்டை அடைந்தாள். வாசலில் நின்ற பணியாள் ஒருவன் காரிலிருந்து இறங்குகிறவள் தானே முதலில் பேச மரியாதையுடன் காத்திருந்தான்.

''ஐயா இருக்காங்களா?''

அவன் தயக்கத்துடன், ''உங்களுக்குத் தெரிஞ்சிருக்குமே...'' என்று ஆரம்பித்தான்.

''தெரியும். அதனால்தான் வந்திருக்கிறேன்.''

''அம்மாகூட டி. எஸ். பி.யைப் பார்த்து வரத்தான் போயிருக்காங்க.''

அவளுக்கு இது பிடித்த தகவலாய் இருந்தது. ''நான் ஐயாவைப் பற்றிக் கேட்டேன்'' என்றாள்.

''அவங்க தான் யாரையும் பார்க்கிற நிலைமையிலே இல்லேன்னு சொல்லச் சொன்னாங்க.''

''ஷைலஜா வந்திருப்பதாகச் சொல்லு. பார்க்க மறுக்க மாட்டார்'' என்றாள். ''உன்னைக் கோபிக்கவும் மாட்டார்.''

அவன் தயக்கத்துடன் போய்ச் சொன்னான். உடனே அவளை ஞாபகப்படுத்திக் கொண்டு விட்டான் பிரதாப். ஸ்டுடியோவில் ஷெட்டில் அவள் தன்னைச் சந்தித்த தினம் காண்பித்த துணிச்சல் நினைவு வந்தது. வியப்பாகவும் இருந்தது அவனுக்கு. 'என்ன தன்னம்பிக்கை இவளுக்கு! ஒரே ஒரு நாள் சில நிமிஷங்கள் சந்தித்துவிட்டு இப்போது இந்தச் சூழ்நிலையில் இங்கு வந்ததுமல்லாமல், நான் அவளைப் பார்ப்பேன், சந்திக்காமல் திருப்பி அனுப்ப மாட்டேன் என்று உறுதியுடன் நம்பிக்கையுடன் காத்துமிருக்கிறாளே!'

''வரச் சொல்லு'' என்றான்.

அவள் வந்தாள். வேகமாக நெருங்கி அருகே மிக அருகே நின்றாள். ''நான் பேப்பரில் படித்ததும் பதறிப் போய் விட்டேன்.



''என்னப்பா, பவர் கட் ஆனதுமே பில் பணம் கொடுக்காமே ஓடறே?''
''நான் சும்மா ஓடலே.. அதோ அந்த ஆளும் பில்பணம் கொடுக்காமே ஓடறான்! அவனைப் பிடிக்கத்தான் நான் ஓடறேன்!''

எனக்கே இப்படி இருந்ததென்றால் உங்களுக்கு எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்து ஓடோடியும் வந்தேன். உங்களுக்கு நான் என்ன ஆறுதல் சொல்ல முடியும்?''

''உட்காரு'' என்றான் முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்டு. 'திரையில் மட்டுமின்றி வாழ்க்கையிலும் நடிக்கத்தான் வேண்டியிருக்கிறது. ஒரு சிறுமியிடம் வேறு எப்படி நடந்து கொள்வது?'

அவள் அவன் பக்கத்திலேயே அமர்ந்தாள். அவன் கரங்களைப் பற்றி அழுத்தினாள். ''தைரியமாக இருங்க, எப்படியும் குழந்தைங்க திரும்பி வந்துடுவாங்க. பணம் கொடுத்து மீட்டு வர வேண்டியதுதானே.''

''அங்கேதான் சிக்கல்'' என்றான்.


''என்ன? என்ன?''

''போலீஸில் பணம் தரக் கூடாது. குற்றவாளிங்களை வளைச்சுப் பிடிக்கணும்கிறாங்க. நான் கோழையாக முடியுமா? வீரத்துடன் விளங்க நினைக்கும் போதே குழந்தைகளுக்கு ஏதாவது நேர்ந்து விடுமோன்னு பதைப்பாகவும் இருக்கு. இரவெல்லாம் தூக்கமே இல்லே. ஆறுதல் சொல்வாரும் இல்லே.''

''ஐயோ பாவம்'' என்றாள் அவள். அவன் கரங்களை விட்டுவிட்டுத் தோள்களில் படிந்தன அவள் விரல்கள். அவன் ஆறுதல் வேண்டுபவன் போல் அவள் தோளில் சாய்ந்தான். விசும்பல் ஒலியொன்றை எழுப்பினான்.

''ப்ளீஸ், ப்ளீஸ். அழாதீங்க'' என்று அவள் பதறி அவனை அணைத்து முதுகில் தட்டித் தந்தாள்.

''அழக்கூடாதுதான்; யாராவது வந்து பார்த்தால் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? என் ஹீரோ இமேஜ் என்ன ஆவது? நான் உள்ளே போகிறேன்'' என்று எழுந்தான். அதே நேரத்தில் பற்றிய அவள் கரத்தைவிட மனமில்லாதவன் போல் இருந்



தான். அது மெல்லிய வற்புறுத்தலாய் விளங்கி அவனையும் உள்ளே அழைத்துச் சென்றது.

உள்ளே கட்டிலில் அமர்ந்தான். ''என் மனைவிகூட என்னைச் சரியாகப் புரிந்துகொள்ள மாட்டேனென்கிறாள். நான் என் மனத் துயரங்களைத் தாங்க முடியாமல்தான் அதை மறக்க அவளை நாடினேன். அவள் இந்தச் சூழ்நிலையிலுமா? என்று என்னை வெறுத்து ஏசி ஒதுக்கி விட்டாள். உனக்குப் புரிகிறதா''

''புரிகிறது'' என்றாள் மனம் கரைந்து உருக.

''போலீஸார் பணம் தரக் கூடாது என்கிறார்கள். அதற்கு நான் என்ன செய்ய? இவளோ என் இமேஜ்தான் எனக்கு முக்கியம் குழந்தைகள் அல்ல என்று என்னைக் குத்திக் காட்டுகிறாள். நான் அப்படிப்பட்ட கிராதகனா, நீயே சொல்லு!''

''இல்லை, இல்லவே இல்லை'' என்று ஷைலஜா அவனுடைய முகத்தை இரு கரங்களாலும் ஏந்தினாள்.

அப்புறம் அது எப்படி நடந்தது என்று அவனுக்கே புரியவில்லை. ஏதோ ஒரு கனவில் மிதப்பது போலிருந்தது. பலநாள் கனவு நினைவாவது போலும் இருந்தது. எது கனவு எது நிஜம் என்றே புரியாத ஒரு மயக்க நிலையில் ஆழ்ந்தான்.

அவன் உறங்கிய பிறகு – அல்லல்பட்ட உள்ளத்துக்கு ஆறுதலும் அமைதியும் அளித்தது போன்ற தியாக உணர்வுடன், லட்சக் கணக்கானவர்கள் ஒரு கடவுளை போல் போற்றினாலும் நெருங்க முடியாதவனை வெற்றி கொண்டு விட்ட பெருமிதத்துடன், ஒரு பெரிய சினிமா நட்சத்திரத்தைத் தனக்கு அடிமையாக்கி விட்ட கர்வத்துடன், எதிர்காலம் முழுவதும் ரகசியமாய் நினைவில் இருத்திக் கள்ளத்தனமாய் ரசிக்கக்கூடிய ஒரு சில நிமிஷங்கள் பற்றிய அகந்தை மிக்க ஆனந்தத்துடன் அவள் உடையணிந்து வெளியே வந்தாள்.

அப்போதுதான் வீட்டுக்குள்ளே நுழைகிற அனசூயாவைப் பார்த்துத் திடுக்கிட்டாள். அவளும் இவளைப் பார்த்து ஒரு கணம் திகைத்து விட்டு ''யார் நீ? வாசலில் கார் நிற்கிறதே என்று விசாரித்துக் கொண்டே வருகிறேன். ஷைலஜா என்று பெயர் சொன்னார்கள். சரிதானா?''

''சரிதான். நான் அவருடைய விசிறி.'' இன்னொருடைய மகள் என்பதையும் தைரியமாக அவளை ஏறிட்டுப் பார்த்துக் கூறினாள். என்றைக்கு அவள் எதற்குப் பயந்திருக்கிறாள்!

''என்ன நடந்தது இங்கே?'' என்று அனசூயா கேட்டாள்.

''ஒன்றுமில்லை. பேப்பரில் பார்த்தேன்.. அவருக்கு ஆறுதல் கூறிப் போக வந்தேன்.''

''அவ்வளவுதானே? ஆறுதல் அவருக்குமட்டும்தானா?''

ஒரு கணம் தடுமாறிய ஷைலஜா, ''உனக்கும்தான். குழந்தைகளைத் திரும்பப் பெற்று நாலு பேரும் சந்தோஷமாய் இருங்கள்'' என்றாள்.

''இப்படி வா'' என்று அருகில் அழைத்தாள் அனசூயா. ''ஷைலஜா! என்னிடம் எதையும் மறைக்காதே! உன் நன்மைக்குத்தான் சொல்கிறேன். கொஞ்சம் கவனமாய்க் கேள்!''

அவளுக்கு இது பிடிக்கவில்லை. சிறைப்பட்டது போல் உணர்ந்தவள் ''நான் வருகிறேன், எனக்கு நேரமாகிறது'' என்றாள்.

அவள் கையைப் பிடித்துக் கொண்டாள் அனசூயா. ''இதோ பார், ஆறுதல் சொல்வதற்குப் படுக்கையறைக்கு நீ போயிருக்க வேண்டிய அவசியமில்லை. எப்போ அங்கு சென்று திரும்பி விட்டாயோ நீ அவரைப் பற்றிச் சில உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர் வாழ்க்கையில் ரொம்ப விளையாடியவர். சினிமா உலகில் அது சுலபம், சகஜம். அதிலும் இவர், தான் தகப்பனாக முடியாது என்று டாக்டர்கள் கூறி அறிந்த பின் ரொம்பத் தாறுமாறாகப் போய் விட்டார். சுரேஷும் ரமேஷும் எனக்குச் செயற்கைக் கருத்தரிப்பு முறையில் பிறந்தவர்கள். ஆனால் இப்போதெல்லாம் அவரை அறிந்த பெண்கள் அவரை நெருங்கவே பயப்படுகிறார்கள். ஏன் தெரியுமா? அவருடைய விளையாட்டுக்களின் விளைவாக அவரிடம் குடிகொண்டு விட்ட வியாதிதான் காரணம்!''

சரேலென்று நிமிர்ந்து பார்த்தாள் ஷைலஜா. ''பொய்'' என்று ஆங்காரத்துடன் சொன்னாள்.

''நிஜம் என்று நிரூபிக்கிறேன் வா'' என்று படுக்கை அறைக்குள் மறுபடியும் அழைத்துப் போனாள் அனசூயா. மெல்லிதாகக் குறட்டை ஒலி எழுப்பிக் கொண்டிருந்தான் பிரதாப்.

பிடி, சிகரெட் பிடிக்க முடியாத தமிழ் நடிகர் யார்?

ஒரு விரல் கிருஷ்ணா ராவ்!

—வி.பி.ரங்கராஜன்

இவள் அலமாரியைத் திறந்து காட்டினாள். இன்ஜெக்ஷன் ஸிரிஞ்சுகள், மருந்துக் குப்பிகள் — பெனிஸிலின்.

''அவருக்கும் அவ்வப்போது போடுகிறேன். எனக்கும் தற்காப்புக்காக நானே போட்டுக் கொள்கிறேன். டாக்டர் உத்தரவு. இப்போதெல்லாம் அவர் உலவுகிற அந்த வட்டாரத்தில் எல்லாப் பெண்களும் அவரை ஒதுக்குவதால் என்னை மட்டும்தான் அவர் நெருங்க முடிகிறது. மற்றவர்கள் ஓடி ஒளியலாம். மனைவியாக வாழ்க்கைப்பட்டு விட்ட நான் எப்படி அவரை மறுத்தளிக்க முடியும்? ஒரு காலத்தில் மனம் விரும்பிய பெண்களையெல்லாம் அடைந்து மகிழ்ந்தவர், இப்போது திரும்பத் திரும்ப என்னையே பார்த்து அலுத்திருக்கும் வேளையில் நீ வந்து சிக்கிக் கொண்டிருக்கிறாய். அவர் உள்ளத்தில் உற்சாகத்துடன், ஆனால் வெளிப் பார்வைக்கு சோகத்துடன் காட்சியளித்து நடித்து உன்னைக் காவு கொண்டு விட்டார். நீ ஏமாந்து விட்டாய். அப்படித்தானே? நான் சொல்வது உண்மை தானே?''

அவள் மிரண்டு விழித்தாள். ''எ...எ... எனக்கு என்ன நேரப் போகிறது?'' என்று தடுமாறினாள்.

''ஏற்கனவே வேணது நேர்ந்து விட்டது.'' என்றாள் அனசூயா. ''அவருடைய வியாதி உனக்குத் தொற்றிக் கொள்வதைத் தவிர்க்க இப்போதே ஒரு பெனிஸிலின் ஊசி போட்டு விடுகிறேன்.''

ஷைலஜாவின் கண்கள் பீதியில் அகன்று விரிந்தன. ''ஐயோ! அது முடியாதே! எனக்கு பெனிஸிலின் அலர்ஜி ஆயிற்றே!'' என்றாள். ''எனக்கு வேறு காரணத்துக்காக முன்பு ஒரு முறை டெஸ்ட் டோஸ் கொடுத்துப் பார்த்த டாக்டர், என்னை எச்சரித்திருக்கிறார். பெனிஸிலின் போட்டுக் கொண்டால் நான் செத்தே போய் விடுவேன்!''

''அட துரதிர்ஷ்டம் பிடித்த பெண்ணே!'' என்று அனுதாபம் மிக அலுத்துக் கொண்டாள் அனசூயா. ''போ! போ! உன் தலையெழுத்து எப்படியாகப் போகிறதோ போ!'' என்றாள்.

13

டி. எஸ். பி. ஞானமுத்துவும் அன்று இரவு முழுதும் தூங்கவில்லை. அனசூயாவின் திருமண வாழ்க்கை இன்பமாக இல்லை என்பது அவருக்கு அந்தச் சில நிமிஷங்களிலேயே புரிந்து விட்டது. 'அவள் குழந்தைகளை எப்படிக் காப்பாற்றப் போகிறாள்? அதே நேரத்தில் கடமை தவறாமல் எவ்விதம் இயங்கப் போகிறாள்?' என்ற கவலை ஆட்கொண்டது.

அவள் போலீஸில் முதலில் கொடுத்த தகவல்கள், வர்ணனையின்படி ரேடியோவில் ஒலிபரப்பாகி விட்டது. [அதை அஜ்மல் டிரான்ஸிஸ்டர் ரேடியோவில் கேட்டுப் பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டான். இருப்பினும், 'பாதகமில்லை' யாரும் காரைத் தேடியோ குழந்தைகளைத் தேடியோ இந்தப் பக்கம் வரப் போவதில்லை என்று சமாதானப் படுத்திக் கொண்டான்.]

ஞானமுத்துவுக்கு முன்பு ஒரு டீக்கடைக்காரர் கூறியது பற்றி ஒரு ஸி.ஐ.டி. இன்ஸ்பெக்டர் தம்மிடம் வந்து சொன்னது நினைவு வந்தது. பில்லா—ரங்கா பற்றி விவாதித்த அந்த இருவர் மீதும் ஒரு கண் வைத்திருக்குமாறு அப்போதே உத்தரவிட்டிருக்கலாம்; தவறி விட்டார். அந்த டீக்கடைக்காரரை இப்போது போய்ப் பார்த்தார் ஞானமுத்து. டீக்கடைக்காரர் அந்த இருவரையும் வர்ணித்தார்.

பூந்தமல்லிக்கு அப்பால் சாலை ஓரத்திலிருந்து எடுத்து வரப்பட்ட காரில் விரல் ரேகை அடையாளங்கள் மிகுந்த பிரயாசையின் பேரில் சில அகப்பட்டன. அவற்றை இலாக்காவிலுள்ள ஏராளமான விரல் ரேகைகளுள் சந்தேகாஸ்பதமான முக்கியமான சிலவற்றுடன் ஒப்புநோக்கச் சொன்னார். பிள்ளைகளைப் பிடித்துப் போய்ப் பணம் பறிக்க முயல்பவர்கள் பட்டியல் தனியே இருந்தது. சிறைவாசம் அனுபவித்தவர்கள், கேஸ் ருசுவாகாமல் விடுவிக்கப்பட்டவர்கள், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள், பிற மாநிலங்களைச் சேர்ந்த சிலர் இப்படியாக நீண்ட பட்டியல். இரவோடு இரவாக விழித்திருந்து—பத்து நிபுணர்கள் வேலை செய்ததில் இரண்டு பேர்வழிகளுடைய ரேகை அடையாளங்கள் பொருந்துவதைக் கண்டு பிடிக்க முடிந்தது. அவர்கள் புகைப்படங்களும் ஃபைல்களில் இருந்தன. அப்படங்கள் டீக்கடைக்காரரின் வர்ணனையுடன் பொருந்தவும் செய்தன.

இரவோடு இரவாக அவசரமாக அவற்றைப் பிரதிகள் எடுத்து பத்திரிகைகளுக்கு அனுப்பினார். மறுநாள் காலைப் பத்திரிகைகள் புகைப் படங்களுடன் செய்திகள் வெளியிட்டன. இவ்வளவு துரிதமாக இயங்கிய போலீஸுக்கு ஒரு ஷொட்டு கூடக் கொடுத்திருந்தன, ஓரிரு பத்திரிகைகள். படங்களில் உள்ளவர்களை எங்கேயாவது பார்க்க நேர்ந்தால் போலீஸுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டியிருந்தன.

[அஜ்மல் இப்போதுள்ள இடத்தில் பத்திரிகைகளைப் பார்க்கவாய்ப்பில்லை. ஆனால் காலைக் காப்பி சாப்பிட்டுவிட்டு ஹோட்டல் வாசலில் பெட்டிக் கடையில் நாளிதழ் வாங்கிப் பார்த்த ஸோனி திடுக்கிட்டான். அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இருப்பினும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விட வில்லை என்று சமாதானப்படுத்திக் கொண்டான். நாளிதழில் குறிப்பிடப்பட்டிருந்த பெயர்களே வேறு. அவர்கள் அஜ்மல் என்றும் ஸோனி என்றும் சமீப காலமாகப் பெயரை மாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் காரைத்



திருடுவதையோ குழந்தைகளைக் கடத்துவதையோ யாரும் கவனித்திருக்கவே முடியாது. அப்படியே யாராவது பார்த்திருந்தாலும் பத்திரிகையில் உள்ள படத்துக்கும் இவர்களுக்கும் தொடர்புபடுத்தி எண்ண மாட்டார்கள் — நேற்று பிற்பகல் முதல் இருவரும் மாறு வேடத்தில் இருப்பதால். எவ்வாறெனினும் இருள் கவியும் வரை, பணத்தைப் பெற வேண்டிய நேரம் வரும் வரை எங்கும் போகாமல் ஹோட்டல் அறையிலேயே அடைந்து கிடப்பது நல்லது என்று எண்ணினான் லோனி.]

இரவெல்லாம் காரியாலயத்தில் விழித்திருந்து பணியாற்றி விட்டுக் காலையில் ஞானமுத்து வீடு திரும்பிய போது அங்கே அவர் வருகைக்காகக் காத்திருந்தாள் அனசூயா. ''உங்கள் அறிவுரையைக் கேளாமல் நான் இவரை மணந்து கொண்டதில் பெரிய தவறு செய்து விட்டேன். என் வாழ்க்கையே நாசமாகி விட்டது'' என்று கூறி அழுதாள்.

''சரியோ தப்போ என்றாலும் உன்னை மறக்க முடியவில்லை அனு. அதனால் தான் நான் இன்னும் கல்யாணமே செய்து கொள்ளவில்லை'' என்றார் ஞானமுத்து. ''முன்பு என் கன்னத்தில் இதழ் பதித்து என் கண்ணீரைத் துடைத்தாயே நினைவிருக்கிறதா? அப்படி உன் கண்ணீரை நான் இன்று துடைக்க ஆசைப்படுகிறேன். ஆனால் அது எப்படி முடியும்? நீ இன்று வேறு ஒருவன் மனைவியாயிற்றே!''

''என்றோ நான் உங்களுக்கு ஏமாற்றம் அளித்ததற்காக இன்று என்னைப் பழி வாங்கி விடாதீர்கள். எப்படியாவது மூன்று லட்சத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். அதைக் கொடுக்க நான் போகும் போது என்னை யாரும் பின் தொடர்ந்து வர மாட்டார்கள் என்ற உறுதி மொழியையும் எனக்குக் கொடுங்கள்.''

''உன்னைப் பழிவாங்குவதா? அழகுதான். உன் குழந்தைகளை மீட்டுத் தர துடித்துக் கொண்டிருக்கிறேன் நான். ஆனால் நீ குறிப்பிடுகிற வழிகள் இரண்டுமே சாத்தியமில்லை. நான் போலீஸ் அதிகாரி. நான் எப்படி நீ கேட்பது போன்ற ஒரு வாக்குறுதியைத் தர முடியும்? மூன்று லட்ச ரூபாய்க்கு நான் எங்கே போவேன்? உன் கணவனிடம் பணம் பெறும் முயற்சிகள் தோற்று விட்டன. உன் யோசனை பலிக்கவில்லை. என் வழியில் என்னைப் போக விடு. குழந்தைகளைக் கடத்தியவர்களை எப்போது எங்கே சந்திக்கப் போகிறாய் சொல்லு.''

''அது ஆபத்தான வழி'' என்று தலையசைத்து விட்டாள் அனசூயா. ''நான் மறுபடியும் என் கணவரிடமே யாசித்துப் பார்க்கிறேன்'' என்று கூறிப் பிரிந்தாள்.

அப்போதுதான் அவள் ஷைலஜாவைத் தன் வீட்டில் பார்த்துப் பேசி எச்சரித்தும் அனுப்பியது: அந்த ஷைலஜா இப்படி ஒரு காரியம் பண்ணத் துணிவாள் என்று அவள் நினைக்கவேயில்லை.

அவள் கொடுத்து வரச் சொன்னதாக ஓர் ஆள் கடிதம் தந்த போது ஏதோ மன்னிப்பு கேட்டு எழுதியிருப்பாள் என்று எண்ணித்தான் பிரித்தாள் அனசூயா. ஆனால் அவளிடம் பெரும் பரபரப்பை உண்டு பண்ணியது அந்தக் கடிதம்.

''பிரதாப்பின் வீக் எண்ட் காட்டேஜில் தான் குழந்தைகளை ஒளித்து வைத்திருப்பார்கள் என்று என் உள் மனசு சொல்கிறது. அந்த உள்ளுணர்வு உந்த நான் அங்கே முதலில் போய் அவர்களைக் காப்பாற்ற முயலுகிறேன். போலீஸுடன் பின் தொடரவும். முதலில் போலீஸ் போகாமல் நான் சென்றால் தான் குழந்தைகள் உயிர் பிழைப்பது சாத்தியம். போலீஸை முதலில் பார்த்தால் அவர்கள் ஆத்திரப்பட்டுக் குழந்தைகளைக் கொன்று விடலாம். இந்தக் கடிதம் உங்களிடம் சேர்ந்ததும் நீங்கள் புறப்பட்டால் சரியாக இருக்கும். என் காரியத்தைச் சாதிக்க எனக்கு முக்கால் மணி அவகாசம் கிடைக்கும்.''

அனசூயா பரபரப்புடன் ஞானமுத்துவுக்கு ஃபோன் செய்தாள். அந்த வீட்டை அடையும் வழி சொன்னாள். கணவனையும் உலுக்கி எழுப்பி விஷயத்தை விவரித்தாள். அந்தக் கடைசி விநாடி மீட்பு நிகழ்ச்சியில் ஹீரோவாகி தான் நிச்சயம் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்ற நோக்கில் அவன் உடனே கிளம்பினான். போலீஸ் ஜீப்புகளும் பிரதாப்பின் காரும் — ஒன்றையொன்று துரத்திக் கொண்டு சென்றன....

14

வெறுப்பும் அனுதாபமும் மிக 'போ போ' என்று அனசூயா கூறினாள். ஆனால் ஷைலஜாவுக்கு எங்கே போவது என்று புரியவில்லை. வீட்டுக்கா, கல்லூரிக்கா அல்லது கடற்கரையோரமாக வண்டியை நிறுத்திவிட்டு அலைக் கரங்கள் தன்னை விழுங்குமாறு நடந்து போய்க் கொண்டே இருப்பதா? கடற்கரைச் சாலையில் வண்டியை நிறுத்தியவளுக்கு இறங்கி நடக்கத் தைரியம் வரவில்லை. மரணத்தில் எது சிறந்தது? வியாதியால் வரும் மரணமா? அதைக் குணப்படுத்தப் போட்டுக் கொள்ளும் மருந்தினால் நேரும் மரணமா? அல்லது கடலில் மூழ்கிச் சாவதா? அழுதே அறியாத அந்தப் பெண்ணுக்கு இப்போது விம்மல் வெடித்துப் புறப்பட்டது. அடி உதட்டைக் கடித்துக் கொண்டு கண்ணீரைப் பெருமளவில் கட்டுப்படுத்தினாள்.

'வாழ்க்கையில் நிறைய விளையாடியவன்- அதன் விளைவாக அடைந்த வியாதி — அதை அறிந்த பெண்கள் இப்போதெல்லாம் அவனை நெருங்கவே பயப்படுகிறார்கள்...'

அவனைப் பற்றி என்னவெல்லாம் படித்தோம்! எவ்வளவெல்லாம் தெரிந்துகொண்டோம்! ரகசியமாக ஆல்பம் தயாரித்தோம். வண்டி, வண்டியாகச் செய்திகள் சேகரித்தும்

இந்த ஒரு விஷயம் தெரியாமல் போய்விட்டதே. ஏமாந்து விட்டோமே!

அவன் கட்டியிருந்த வார இறுதி விடுதி பற்றிய ஜெகஜெ செய்திகூட ஒன்று வந்திருந்தது. ஒரு பத்திரிகையில்: ''இப்போதெல்லாம் அங்கு யாரும் போவதில்லை. முன்பு வெள்ளி இரவு முதல் திங்கள் காலை வரை அங்கே நடந்த ஆர்ப்பாட்டமென்ன, அமர்க்களமென்ன இப்போது அந்த விடுதி அம்போ என்று கேட்பாரற்றுக் கிடக்கக் காரணம் என்ன?''

இதைப் படித்த போது அதற்கு இப்படி ஒரு காரணம் இருக்கும் என்று அவனுக்குத் தோன்றியதே இல்லை.

சரேலென்று அவன் சிந்தனையோட்டம் தடைப்பட்டது. திசை திரும்பியது: 'வீக் எண்ட் காட்டேஜ்' - வார இறுதி விடுதி - அங்கு இப்போது யாருமே போவதில்லை. ஒரு சவுக்குத் தோப்புக்கு இடையில் மறைவாகத் தனித்து இருக்கிறது....

'குழந்தைகளை அபகரித்தவர்கள் என்னைப் போலவே பிரதாப்பைப் பற்றி ஆராய்ந்து அவ்விடுதி பற்றி அறிந்தவர்களாய்த் தான் இருப்பார்கள். அவர்களுக்குக் குழந்தைகளுடன் ஒளிய அந்த விடுதியை விடச் சிறந்ததாக வேறு எந்த இடம் அமைய முடியும்? ஓர் அனுமானம்தான். ஆனால் தவறுவிட முடியாத அனுமானம். பிரதாப்புக்குத் தொடர்புள்ள அந்த இடத்திலேயே பிரதாப்பின் குழந்தைகளை மறைத்து வைப்பார்கள் என்று யாருமே சந்தேகிக்க இடமில்லை. அதனாலேயே அவர்கள் அந்த இடத்தைத்தான் தேர்ந்தெடுத்திருப்பார்கள்!

'அந்தக் குழந்தைகளை அங்கு சென்று நான் காப்பாற்றினால் என்ன? அந்த முயற்சியில் நான் செத்தால்தான் என்ன? கடலில் புகுந்து சாக நினைத்தவன் தானே? இறக்கு முன் ஒரு நல்ல காரியத்தைச் செய்து விட்டு பாபத்துக்கு ஒரு பிராயச்சித்தத்தைப் புரிந்து விட்டுச் சாவது!' மௌனமாக இன்னும் சற்று நேரம் யோசித்தான். 'போலீஸ் துணையுடன் போகக் கூடாது. போலீஸ் தலையைக் கண்டால் அடுத்த கணம் குழந்தைகள் உயிருக்கு ஆபத்து நேரும். நான் தனியாகத்தான் போக வேண்டும். துணிந்து செயலாற்ற வேண்டும். காரில் பெட்ரோல் நிறைய இருந்தது. அது தான் அவசியத் தேவை.'

கல்லூரி நோட்டுப் புத்தகத்தை எடுத்து ஒரு தாளைக் கிழித்துக் கடிதம் எழுதினான். கல்லூரிக்குச் சென்றான். அவனுக்கு நன்கு பழக்கப்பட்ட பியூனை அழைத்தான். ''இதோ பார் பத்து ரூபாய் சம்பாதிக்க ஆசையா? ஒரு சின்ன காரியம் செய். லீவு போட்டு விட்டுக் கிளம்பு. பஸ் ஏறி சினிமா நட்சத்திரம் பிரதாப் வீட்டுக்குப் போ. அவர் மனைவி அனசூயாவிடம் இதைக் கொடு!''

அவன் உற்சாகத்துடன் தலையாட்டினான். பத்து ரூபாய். சின்ன காரியத்துக்குப் பெரிய ஊதியமல்லவா அது!

அவன் காரைத் திருப்பிக் கொண்டு போனான். பறந்தது அது. 'கடிதம் போய்ச் சேர்ந்து, பிரதாப்பின் மனைவி டி. எஸ். பி. ஞானமுத்துவுக்கு ஃபோன் பண்ணி, பிறகு

இந்தியில் 'பாசு சாட்டர்ஜி' டைரக்ட் செய்துவரும் ஒரு படத்தின் பெயர் என்ன தெரியுமா?

!!!! ஆம் இதுதான் படத்தின் பெயர்!

—ஃபிலிம்பேர்

—சம்பத்குமாரி

எல்லாரும் கிளம்பி வரக் குறைந்தது அரை மணி நேரம் ஆகும். அவர்களுக்கு அரை மணி நேரம் முன்பாகப் போய்ச் சேர்ந்து விடப் போகிற நான் குழந்தைகளை எப்படியாவது விடுவித்து அனுப்பி விட வேண்டும். போலீஸ் தலைகாட்டு முன் குழந்தைகளைத் தப்பிக்கச் செய்து விட்டால் அவர்களுக்குப் பதில் நான் அந்தக் கொலைகாரப் பாதகர்களிடம் அகப்பட்டுக் கொண்டாலும் பாதகமில்லை.

அவர்கள் எனக்கு என்ன தீங்கு இழைத்தாலும், புதிதாக ஒரு நஷ்டமுமில்லை.'

ஒரு வெறி என்ற அளவில் பிரதாப்பைப் பற்றி எவ்வளவோ படித்து அறிந்திருந்த அவனுக்கு அந்த வார இறுதி விடுதி எங்கிருக்கிறது என்று உத்தேசமாய்த் தெரியும். நெருங்கிய பிறகு யாரையாவது விசாரித்தாலும் சொல்வார்கள்.

அவன் அந்தக் காட்டேஜை அடைந்து படியேற முற்பட்ட போது, ''யார் நீ?'' என்று அதட்டும் குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது.

அவன் புன்னகைத்தான். திக் திக்கென்று அடித்துக் கொண்ட இதயம், 'உன் அனுமானம் சரிதான்' என்று உணர்த்தவும் செய்தது. இவன் வாட்ச்மேனோ அல்லது தோட்டக்காரனோ அல்ல!

''இதற்கு அடுத்தாற்போல் உள்ள வீக் எண்ட் காட்டேஜ் என் அப்பாவுக்குச் சொந்தம். இது பிரதாப்புடைய காட்டேஜ்தானே? அவர் இருக்கிறாரா?''

''இல்லை.''

அவன் படியேறி வந்தான்.

''நில்'' என்றான். ஸ்பிரிங் கத்தியின் விசையை அழுத்த, சடக்கென்று முனை நீண்டது ஆறு அங்குலத்துக்கு.

அவன் சிரித்தான். ''நீ என்னை என்னைப் பயமுறுத்துகிறாயா? அல்லது என்னிடம் பயப்படுகிறாயா? கத்தியை மடக்கு. பெண்பிள்ளை நான் உன்னை விழுங்கி விடவா போகிறேன்! நீச்சல் உடை கொண்டு வர மறந்து விட்டேன். கடலில் குளிக்காமல் வீக்எண்ட் பாழாகி விடும். பிரதாப் பெரிய பிளேபாய் இல்லையா? பெண்களுக்கும் ஆண்களுக்குமான ஸ்விம் சூட்கள் நிறைய இங்கே வைத்திருப்பார். அதில் ஒன்று கடன் வாங்கிப்



போகிறேன். அவ்வளவுதான். நீ யார்? பிரதாப்பின் நண்பனா அல்லது வீட்டின் கேர்டேக்கரா?''

'அவனை நீச்சல் உடையில் பார்த்தால் எப்படி இருக்கும்?' என்று எண்ணினான். அந்த வாய்ப்பு விரைவிலேயே கிட்டும் என்று உணராமலேயே ''நண்பன்தான்'' என்று பதிலளித்தான்.

அவள் சுவாதீனமாகக் குடிலுக்குள் நுழைந்து டிரெஸ்ஸிங் டேபின் இழுப்பறைகளை ஆராய்ந்தாள். ''இதோ!'' என்று ஒன்றை எடுத்துக் காட்டினாள். ''போட்டுப் பார்த்து விடுகிறேன். பொருந்துகிறதா என்று'' — கூறியபடியே மறைவிடம் கருதிப் பக்கத்து அறைக்குள் நுழையக் கதவைத் திறக்கப் போனாள்.

சரேலென்று அவன் குறுக்கே வந்து நின்றான். ''அந்த அறைக்குப் போ! இங்கு வேண்டாம்'' என்று மற்றொரு கதவைச் சுட்டிக் காட்டினான்.

''ஏன்? இங்கே யார்? உன் காதலியை ஒளித்து வைத்திருக்கிறாயா?'' என்று கேலிப் புன்னகையுடன் ஷைலஜா கேட்டாள். அவன் காட்டிய கதவைத் திறந்து கொண்டு நுழையும் போதே அவன் வழிமறித்து நின்ற கதவுக்குப் பின் குழந்தைகளும் வீட்டின் காவல்காரனும் இருப்பது அவளுக்குப் புரிந்து விட்டது. நீச்சல் உடைக்கு மாறினாள். வெளிப்பட்டாள். இங்குமங்கும் சற்று இழுத்து விட்டுக்கொண்டே ''சைஸ் சரியாக இருக்கிறதா, பார்'' என்றாள்.

அவள் அழகு அவனை இறங்க வைத்தது. ஷைலஜாவுக்கோ எப்போதுமே உள்ள துணிச்சல் இப்போது ஒரு லட்சிய வெறி ஆட்கொள்ளப் பல மடங்காயிற்று.

''நன்றாயிருக்கிறதா?'' என்று கேட்டு அவன் எதிரே நின்ற இடத்திலேயே மெல்லச் சுற்றி வந்தாள். அப்படிச் சுழன்ற போது அவள் விழிகளும் சுழன்று, ஜன்னலின் விளிம்பில் கத்தியை அவன் வைத்திருப்பதைப் பார்த்து விட்டன.

அவன் உதடுகளை ஈரமாக்கிக் கொண்டான். 'இவள் விளையாடுகிறாளா, சீண்டுகிறாளா அல்லது நிஜமாகவே தனக்கு அழைப்பு விடுக்கிறாளா?'

அவள் அவனை வேடிக்கை பார்த்துக் கொண்டே, அவன் அவஸ்தையைப்புரிந்து கொண்டே, மெல்ல இயல்பாக நகர்ந்து சென்று சரேலென்று பாய்ந்து ஜன்னல் மேடையிலிருந்த கத்தியை எடுத்துக்கொண்டு அதன் முனை அவனை நோக்கி இருக்கத்தனக்கு முன்னால் ஏந்தியபடியே பின்னும் நகர்ந்து குழந்தைகள் அடைபட்டிருந்த அறையின் கதவைத் திறந்தாள். ''ஓடுங்கடா பசங்களா! தப்பி ஓடுங்கடா!'' என்றாள்.

சிறையிலிருந்து தப்பிய பறவைகளாக இரு இளம் சிட்டுக்கள் ஓடின. படி இறங்கி விரைந்தன.

அவன் அவர்களைத் தடுத்துப் பிடிக்கப் பாய்ந்த போது இவள் கத்தியுடன் குறுக்கிட்டாள். அது பளபளத்துப் பயமுறுத்தியது. தயங்கினான். எப்படியோ அவர்கள் தப்பி ஓட அவகாசம் தர வேண்டும். எங்காவது கண்மறைவாகச் சென்று அவர்கள் ஒளிந்து கொள்ளும் வரை இவனைச் சமாளித்தால் போதும். தேவை ஏற்பட்டால் குத்திக் கொன்று விடவும் தயங்கக் கூடாது! வாசலில் வழி மறித்து கத்தியுடன் நின்று கொண்டாள்.

'போலீஸ்! போலீஸ்! இப்போது வரட்டும் அவர்கள்!' என்று ஆவலோடு எதிர்பார்த்தாள்.

அவன் ஏமாற்றப்பட்டு விட்ட ஆத்திரத்தில் ஆவேச வெறி கொண்டு தயக்கத்தை உதறி விட்டுப் பாய்ந்தான். குத்தோ வெட்டோப் பட்டுக் கொள்ளத் தயாராக அவள் மீது விழுந்தான். அவளால் அந்தச் சண்டமாருதத் தாக்குதலைத் தாங்க முடியவில்லை. போராடிப் பார்த்தாள். சமாளிக்க முடியவில்லை. இரண்டு இடங்களில் கத்தி கீறி அவனுக்கு இரத்தம் பெருக்கெடுத்தது. ஆனால் ஆழமான குத்துக் காயம் ஏற்படுத்த முடியவில்லை அவளால். காயத்திலிருந்து ரத்தம் வெளிப்பட்ட போது அவன் வெறி இன்னும் அதிகரித்தது. அவளுடைய பூக்கரங்களிலிருந்து முரட்டுத்தனமாகக் கத்தி பிடுங்கப்பட்டது. அடுத்து அவனுடைய வெறி கொண்ட உள்ளத்தின் பிரதிபலிப்பாக அக்கத்தி அவள் நெஞ்சில் ஒரு முறை, இரு முறை, மும்முறை பாய்ந்தது. எரிகிற நெருப்புத் தழலாகக் கத்தி ஊடுருவிய போது அவள் 'ஓ'வென்று அலறினாள். அடுத்து பொங்கு புனலாகக் குருதி பாய்ந்து ரணத்தை நனைத்தது. எரிச்சல் அடங்கியது. எரிச்சல் மட்டுமா? உயிரும் கூடத்தான்.

வாசலில் ஜீப்கள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து நின்றன. டி.எஸ்.பி. ஞான முத்து பாய்ந்து படியேறி வந்தார். அஜ்மல் இனி ஆட்டம் போட்டுப் பயனில்லை என்று உணர்ந்தவனாகக் கத்தியைக் கீழே போட்டு விட்டுச் சரண் புகுந்தான். விலங்கு மாட்டி அவனைச் சகாக்களிடம் ஒப்படைத்தார். வேறு சிலர் வாட்ச்மேனின் முனகல் சத்தம் கேட்டுக் கட்டுக்களை அவிழ்த்து அவனை விடுவிக்கச் சென்றனர்.

கீழே இறங்கி வந்தார் ஞானமுத்து. அதே சமயம் பிரதாப்பின் கார் வெகு வேகமாக வந்து நின்றது. 'அனசூயா பதறிக்கொண்டு இறங்கினாள். அடுத்து பிரதாப்பும் இறங்கினான். ''அம்மா! அம்மா!'' என்று கூவி அழைத்தபடியே தோட்டத்துச் செடிகளுக்குப் பின்னால் பயந்து ஒளிந்து கொண்டிருந்த குழந்தைகள் ஓடி வந்து தாயைக் கட்டிக் கொண்டனர்.

''என் கண்மணிகளா!'' என்று அவைகளை அணைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள் அனசூயா.

திருமலை-திருப்பதி
தேவஸ்தானம்
திருப்பதி

கோயில் பிரசாதம் விற்பனை

திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் பங்குக்குரிய அன்னப் பிரசாதங்கள் அத்தனையையும் நைவேத்தியத்துக்குப் பிறகு தரிசனத்துக்கு வரும் அனைத்து சேவார்த்திகளுக்கும் இலவசமாக விநியோகிக்கப்படும்.

பாதுலா பிரசாதங்கள்(லட்டுகள், வடைகள் முதலியவை) கோவிலுக்குள்ளே உள்ள கௌண்டர்களிலும் சேவார்த்திகளுக்கு விற்கப்படும். கோவிலுக்கு வெளியே உள்ள ஆயிரங்கால் மண்டபம் ஹாலிலுள்ள ஆந்திரா வங்கி கௌண்டரிலும் பிரசாதங்கள் கிடைக்கும்.

உண்மையான தரமான தேவஸ்தானப் பிரசாதங்கள் இந்த இரண்டே இடங்களில் **மட்டும்** சேவார்த்திகளுக்கு விற்கப்படுகின்றன என்று தகவல் தெரிவிக்கிறோம்.

P.V.R.K. பிரசாத் I.A.S.
எக்ஸிக்யூடிவ் ஆபீசர்
திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

நிலைமையை உணர்ந்த பிரதாப், ''ஷைலஜாவின் உடலை அவள் பெற்றோரிடம் சேர்ப்பிக்கும் பொறுப்பை நான் ஏற்கிறேன்'' என்றான். 'அவளுடைய தவற்றையும் கூடவே தன் தவற்றையும் மறைத்து, அவளுடைய தியாகத்தைப் பற்றி மட்டும் அவளுடைய பெற்றோரிடம் பிரதாப் பேசுவான். இன்னொரு நாடகத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்டுவான்' என்று அனசூயாவுக்குப் புரிந்தது. 'அதுவும் நல்லதுதான். இறந்து போனதம் மகளைப் பற்றிப் பெற்றோர் உயர்வாகவே எண்ணிக் கொள்ளட்டுமே? யாருக்கு என்ன நஷ்டம் அதில்?'

''கிளம்பலாம். இனி திட்டத்தின் அடுத்த கட்டத்தைக் கவனிக்க வேண்டும். அது முடிந்தால்தான் முழு நிம்மதி'' என்றார் டி. எஸ். பி. ஞானமுத்து.

''அஜ்மலைக் கைது செய்தாகி விட்டது. ஷைலஜாவின் உடலை அவள் பெற்றோரிடம் சேர்ப்பிக்கும் பொறுப்பை பிரதாப் ஏற்றுக் கொண்டாகி விட்டது; குழந்தைகள் பத்திரமாகத் தாயிடம் போய்ச் சேர்ந்தாகி விட்டது.

''இனிமேலாவது அந்த மற்றொரு ஆசாமியை எங்கே எப்போது சந்திக்க இருந்தாய் என்று தயக்கமின்றிச் சொல்லலாம் இல்லையா?'' என்று ஞானமுத்து கேட்டார்.

''இரவு எட்டு மணி, காந்தி சிலைக்குப் பின்னால்'' என்றாள் அனசூயா.

''எட்டு மணிக்கு அந்த நாடகம் நடந்து முடியும் வரை இதையெல்லாம் ரகசியமாகவே வைத்திருப்போம்'' என்றார் ஞானமுத்து.

குறிப்பிட்ட நேரத்தில் சரியாக அனசூயா ஒரு பெட்டியை காந்தி சிலைக்குப் பின்னால் வைத்தாள். திரும்பிவந்து காரில் ஏறிப் புறப்பட்டுப் போவது போல் பாவனை செய்தாள். பெட்டியை எடுக்கப் போன ஜோனியை மஃப்டியில் இருந்த சி.ஐ.டி.கள் வளைத்துப் பிடித்துக் கொண்டார்கள்.

''பெரிய தவறு செய்து விட்டீர்கள். என் சகாவால் குழந்தைகள் கொல்லப்படுவார்கள்'' என்றான் ஜோனி நிதானமாக.

''அவனை ஏற்கனவே கைது பண்ணியாகி விட்டது'' என்றார் டி.எஸ்.பி. ஞானமுத்து. ''அவனோடு சேர்ந்து நீயும் கம்பி எண்ணலாம். குழந்தைகளைக் கடத்திய குற்றம், டிரைவர் பாபுவையும் ஷைலஜாவையும் கொன்ற குற்றம் ஆகியவற்றுக்கு நீதிமன்றத்தில் உரிய தண்டனை பெறலாம்.''

அவன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போலீஸாருடன் போனான்.

ஜோனிக்காக — கண் துடைப்புக்காகக் காரில் ஏறிப்போன அனசூயா திரும்பி வந்தாள். குழந்தைகளோடு காரிலிருந்து இறங்கி டி.எஸ்.பி.யை அணுகினாள். ''தாங்க்யூ'' என்றாள், கண்ணீர் மல்க.

''ஷைலஜாவுக்குச் சொல்லு. நன்றி'' என்றார்.

திடுமென அவள் தாங்க முடியாமல் அவன் நெஞ்சில் முகம் புதைத்து அழுதாள்.

''அசடே! எல்லாம்தான் முடிந்து விட்டதே. இன்னும் என் அழறே?'' என்று முதுகில் தட்டிக் கொடுத்தான் ஞானமுத்து.

''இது மட்டுமில்லீங்க; என்னோட இந்த அவல வாழ்க்கைக்கே ஒரு முடிவு ஏற்படணும்; புதுசா ஓர் அத்தியாயம் ஆரம்பமாகணும்னு நினைக்கிறேன்'' என்றாள்.

''அது நடக்கும்; தைரியம்தான் தேவை'' என்றான் ஞானமுத்து. காந்தித் தாத்தா புன்னகை புரிந்து கொண்டிருந்தார்.

யாரைப் பற்றியும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் அவர்கள் அங்கே ஒருவருக்கொருவர் ஆறுதலாக அரவணைத்து நின்று கொண்டிருப்பதைக் காரிலிருந்தபடி மெர்குரி விளக்கு வெளிச்சத்தில் பிரதாப் பார்த்தான். அவர்களை இனி எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது என்று அவனுக்குத் தோன்றியது. இன்னும் சில தினங்களில் விவாக ரத்து கோரி அவளிடமிருந்து வக்கீல் நோட்டீஸ் வரும் என்று அவன் உணர்ந்தான்.

''வீட்டுக்குப் போ'' என்றான் டிரைவரிடம்.

''அம்மா... குழந்தைங்க...''

''அவங்க அப்புறம் வந்துப்பாங்க.''

கார் சென்ற போது திடுமெனத் தனிமை அவனை ஆட்கொண்டது. அவனுக்குத் தன் இழப்புக்கள் இப்போதுதான் பெரிதாகத் தெரிந்தன. பணமும் இமேஜும் விசிறிகளும் நட்சத்திர பதவியும் எத்தனை நாள் நீடிக்கும்? ஏற்கெனவே முகம் நோயினாலும் ஒழுங்கற்ற வாழ்க்கையாலும் சுருக்கங்கள் விழுந்து பாழாக ஆரம்பித்திருந்ததைக் காரின் முன்புறம் இருந்த நிலைக்கண்ணாடி அவனுக்கு உணர்த்தியது. நிலையானவற்றை, நிரந்தரமானவற்றை எல்லாம் இழந்து, தாற்காலிகங்களை மட்டுமே உடும்புப் பிடியாகப் பற்றிக் கொண்டிருந்திருக்கிறோம் என்பது அவனுக்குப் புரிந்தது.


ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான். முதல் தடவையாக அவன் கண்களில் நீர் படர்ந்தது.


கடற்கரைச் சாலையில் அனசூயா கார் கிளம்பிப் போவதைப் பார்த்தாள். ஞானமுத்துவும் கவனித்தான். கனமான மௌனத்தைக் கலைத்து அனசூயா, ''வாருங்கள் சற்றுதூரம் மணலில் நடந்து விட்டு வரலாம்'' என்றாள். ஞானமுத்து ரமேஷையும் அனசூயா சுரேஷையும் பிடித்துக் கொண்டு காலாற நடந்தார்கள். சற்று நேரத்தில் குழந்தைகளைப் பிடித்துக் கொண்டிருந்தது போகச் சுதந்திரமாக இருந்த அவர்களுடைய மற்ற இரு கரங்களும் சுதந்திரம் இழந்து ஒன்றை ஒன்று பற்றிக் கொண்டன.

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran

சிறந்த டிவி வாங்க சீரானதோர் வழி

முதலில் மற்ற டிவி விளம்பரங்களை விடாது படிக்கவும். பின் பாரத் டிவியில் ஒரே ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கவும்.





அருமையான, கண்கூடாக உணரவல்ல சிறப்புகள் ஆறு அமைந்தது—

பாரத் டிவி

ஹெச்.ஏ. எல்லின் நிபுணத்துவம்:
நாட்டிலேயே நிகரில்லாதது. மிகவும் முன்னேற்றமான ஐ.ஸிக்கள், பாரத் டிவியின் துல்லிய ஒளி வடிவங்களுக்கும், நிகரில்லா நாதத்துக்கும் முக்கியமானவை.



துல்லியமான ஒளிபரப்பு:
150 கிலோ மீட்டர் தொலைவில்கூட வேலூர், சிதம்பரம், புதுவையிலும் சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ரசிக்க உங்களுக்குத் தேவை பாரத் டி.வி.



நாதபோகம்:
ஒலிபரப்புக்கு மட்டுமே ஒரு ஐ.ஸி. அதிக ஒலி அளிக்கும் சிறப்பான இரு ஸ்பீக்கர்கள்.



நீடித்த நல்லுழைப்பு:
ஒளிபரப்புக் கருவி (பிக்சர் டியூப்), மற்ற உறுப்புகளும்கூட நீடித்த நல்லுழைப்பிலே உருவானவை. "காண்ட்ராஸ்ட் கண்ட்ரோல்" ஸ்விச்சை 30-35% அளவில் உபயோகித்தாலே போதும்! மின் விநியோகத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் பாரத் டி.வி.யை பாதிக்கமுடியாது. மின் கட்டணமும் மிகக்குறைவு — மாதத்திற்கு ரூ. 5/- தான்.

பரவசமூட்டும் புற அழகு:
"நிர்மல்" மற்றும் "மித்ரி" கைவினை கொத்துக் மரக்காபினெட்டுகள். புற எழிலே இந்தளவு சிறப்பென்றால், உள் உறுப்புகள் ஒப்புயர்வற்றவைகளாகத்தானே இருக்க முடியும்.

சீர்செப்பணி (சர்வீஸ்):
சிறப்பான பிரிண்டெட் சர்க்யூட்; தொழிற்சாலையிலே சிறப்பான பயிற்சி பெற்ற இஞ்சினீயர்கள். எமது நம்பிக்கையான சர்வீஸிங்கின் இரகசியம் இதுவே.



பாரத் டிவி

தலை அலுவலகம் &
சர்வீஸ் சென்டர்:
பாரத் டெலிவிஷன்
லிமிடெட்
(APSSIDC-ன் கூட்டு நிறுவனம்)
6, நுங்கம்பாக்கம் ஹைரோடு,
சென்னை-600 034.
போன்: 86527

பதிவுபெற்ற அலுவலகம் &
தொழிற்சாலை:
பாரத் டெலிவிஷன்
லிமிடெட்
1-10-63, ராக்லேண்ட்ஸ்
பேகம்பட், ஹைதராபாத்-16.
போன்: 77040, 73621

அருகிலுள்ள டீவி டீலரிடம் பாரத் டிவியில் ஒரு நிகழ்ச்சியைப் பாருங்கள்!

ACIL BT 28/79 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lenka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 60 மலேசியக் காசு

